[illegible]

[illegible]

மகுணநாகநாதப

ணடாதுமமெபக்க

[illegible]

[illegible]

உ

சிவமயம்.

அருணாசலபுராணம்.

இஃது

சைவ - எல்லப்பநாவலர்

செய்த கவி கருத்துக்கிசைய

மழவை

மகாலிங்கையர்

அவர்களாற்செய்யப்பட்டபுதிதானவுரையை

சிதம்பரம்

கருணானந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

சிந்தாத்திரிப்பேட்டை

நெல்லுமண்டி

வெங்கட்டராமமுதலியாரவர்கள்

குமாரராகிய


கேசவமுதலியாரவர்களது

பிரபாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி௵ - ஆடிமீ.

மோப்பேர் - சாமிநாயக்கர் வீதியில், நெம்பர்-௫௫.



சிவமயம்.

அருணாசலபுராணம்.

பாயிரம்

(விநாயகர் காப்பு- கலிவிருத்தம்)

மிக்கவேத வியாசர் விளம்பிய... ... .*
இக்கதைக்கிணை யின்றருள் செய்திட......... ...*
முக்கண்வெற்பினை மும்மத வாரியைக்............*
கைக்களிற்றினைக் கைதொழு தேத்துவாம்.........*

(இதன்பொருள்.)

அநேகவேதங்களை இயல்பாகவே உணர்ந்த வியாசரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்தில் ருத்திர சங்கிதையி லிருக்கும் இந்த அருணாசல சரித்திரத்தை இக்காலத்தில் தமிழினாற் செய்ய அநுக்கிரகம் பண்ணுகிறதற்கு மூன்றுகண்களையுடைய மலைபோன்றவனா சமுத்திரம்போன்ற மும்மதத்தையும் தும்பிக்கையினையுமுடைய யானைமுகம்பொருந்திய விநாயகரைக் கையினாற்றொழுது ஸ்தோத்திரஞ் செய்வோம்—என்றவாறு. எடுத்த நூல் இடையூறில்லாமல் இனிதுமுடிதற்பொருட்டு.

(கலிவிருத்தம் - சபாபதிஸ்துதி.)

முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விரகன்புகழ் ...*
பதிகம்புனை பவனம்பினர் பவபஞ்சன னமலன்கதி... ....*
ருதிரும்படி பகிரண்டமு முடையும்படி யிலகும்படி... ......*
அதிரும்படி நடனம்புரி யதிருங்கழ லதிருங்கழல... ... ...*

(இதன்பொருள்.)

மிகுந்தமதுரரசமுண்டாகப் பாடுகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளால்- ஸ்தோத்திரம்பண்ணப்பட்ட பதிகமாகிய மாலையைத்தரிக்கின்றவராகியும், தம்மையடைந்தவர்கள் பிறவியைக் கெடுப்ப

வராகியும், மலரகிதராகியுமிருக்கின்றசபாபதியினுடைய சூரியனுதிரவும், [illegible]வும், விளங்குகின்றபூமியதிரவும், நடனஞ்செய்யாநின்ற மிகவுஞ் சப்திக்கின்ற வீரகண்டையைத்தரித்த பாதத்தை வணங்குவோம்—என்றவாறு. இச்செய்யுளுக்குப் பயனில்லை வருவிக்கப்பட்டது. (க)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.)

(ஸ்தலமகிமை.)

இரவிகள்சந்திரர் வயிரவர்விஞ்சைய ரிமயவரெண்டிசையோ......*
ருரகரருந்தவர்முனிவரர்பங்கய ருவணனெடுங்கொடியோர் ......*
பரவிநெருங்கலினுலகநிறைந்தவர் பணியுமிடங்கிடையா...... ...*
தரகரவென்பதுகடலின்முழங்கிய தருணைவளம்பதியே............*

(இதன் பொருள்.)

சூரியரும், சந்திரரும், வயிரவரும், வித்தியாதரரும், தேவரும், அட்டதிக்குப்பாலகரும், நாகலோகத்தாரும், அரியதபசிகளும், முனிவரும், பிரம்மாக்களும், கருடக்கொடியையுடைய விஷ்ணுக்களும், பறந்துநெருங்குதலினால் உலகநிறைந்து அவர்கள்வணங்குதற்கு இடங்கிடையாததாயவர்களாலே சொல்லப்பட்டஅரகரவென்கிறசப்தமானது சமுத்திரத்திலும் அதிகமாகமுழங்கும்வளப்பத்தையுடையது அருணாசலமென்னும் ஸ்தலமாம்—என்றவாறு. (உ)

இளமுலைமங்கையர்முகமுநெருங்கிய விருகுழையுப்பகலே ... ...*
யொளிரொருசந்திரனுடனிருசெங்கதி ருதயமெனுந்தனியூர்......*
தளையவிழுந்தொடைமகபதிதன்பதி தனபதிதன்பதியா... ... ...*
மளகைவளம்பதிதனிலும்வளம்பதி யருணைவளம்பதியே ....*

(இதன்பொருள்.)

இளமையாகியஸ்தனங்களையுடையபெண்கள்முகங்களும், அவர்களணிந்தஇரண்டுஇரத்தினகுண்டலங்களும், பகலிலேபிரகாசிக்கின்ற ஒருசந்திரனுடனே இரண்டுசூரிய ருதயமானார்களென்று சொல்லும்படியாகிய ஒப்பற்றவூர் முறுக்கவிழ்ந்த கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுடைய பட்டணமாகிய அமராபதியையும், குபேரனுடைய நகரமாகிய அளகாபுரியையும்பார்க்கிலும் வளப்பத்தையுடையது அருணாசலமென்னும் ஸ்தலமாம்—என்றவாறு. (ங)

காலனெதிர்த்திடமார்பிலுதைத்தவர் காமனுருப்பொடியா........ *
ராலமிடற்றினர்மாலைமதிக்குறை யாடரவப்பணியார்..... ....*
நாலுமுகத்தவன்ஞாலமளிப்பவ னும்மெட்கரியார்................ ...*
சூலமெடுப்பவர்மேவுதிருப்பதி சோணகிரிப்பதியே... ... .*

(இதன்பொருள்.)

யமனெதிர்க்க மார்பிலுதைத்தவராகியும், மன்மதனுடையதேகத்தைப் பொடியாகச் செய்தவராகியும், விஷத்தைக் கண்டத்தில் தரித்

துவராகியும், மூன்றாம்பிறையைச் சடையின்கண் தரித்தவராகியும், ஆடுகின்ற சருப்பத்தை ஆபரணமாகப் பூண்டவராகியும், பிர்ம்மாவும் விஷ்ணுவும் தேடுதற் கரியவராகியும், சூலத்தைக் கையி லெடுத்தவராகியும், விளங்குகின்ற பரம சிவன் வாசஞ் செய்கின்ற அழகாகியபதி அருணாசலமென்னும் ஸ்தலமாம்—என்றவாறு. (௪)

(சந்தக்கலிவிருத்தம்.)

பரசிவவணக்கம்.

உறவொடுபகையறு மொருமுத லெவனெவன் ....*
இறுதியிலுலகரு ளிறையவனெவனெவன்............*
மறைமுடி வினிநடம் வளர்பவனெவனெவன் ....*
அறிவினி லறிபவ னடியிணைதொழுதனம்...........*

(இதன்பொருள்.)

உறவும் பகையுமில்லாத ஒப்பற்ற முதன்மையானவ னெவன், சர்வசங்காரமான பின்பு உலகத்தை உண்டாக்குகிறவ னெவன், வேதமுடிவிலே நடனஞ்செய்கிறவனெவன், தன்னியற்கையறிவினாலே சகலத்தையு மறிகிறவனெவன், அப்படிப்பட்ட தன்மையை யுடைய பரமசிவனது திருவடிகளை யாம்வணங்கினோம்—என்றவாறு. (௫)

(கலிநிலைத்துறை.)

(அருணாசலேசர்ஸ்துதி.)

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளருந் திருமாலு மறையினானும், பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து மீதலத்தும் பார்ந்து தேட, வணிகொண்ட பிர்ம்மாண்ட கோளகைபொற் கோளகையா யழகுகாட்டக், கணிகொண்ட வொருவனாயா மொருவனாயா மகலாது கருத்துட்சேர்ப்பாம். ... ... *

(இதன்பொருள்.)

இரத்தினங்களிருப்பிடமாகிய நீண்டகடலிலே நித்திரைசெய்கின்றவிஷ்ணுவும்,பிர்ம்மாவும்,நாகங்கள்வாசஞ்செய்கின்றபாதாளத்திலும் பூமியிலும் மேலுலகத்திலும் வருந்தித்தேட, அவர்களால் எட்டப்படாமல் அழகாகிய பிர்ம்மாண்ட கோளகையானது பொன்னாற் செய்யப்பட்ட கோளகை போலாகி அழகு காண்பிக்க எண்ணங் கொண்ட ஒப்பற்ற அக்கினிமலையாகிய பரமசிவத்தை நீங்காது இருதயத்திற் சேர்த்துக்கொள்வோம்—என்றவாறு. (௬)

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச் சிரத்தினில்வைத் துலகமேழுந், தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப் பவள நெடுஞ் சயிலம்போல, வருமானை முகத்தானை யளித்தானைப் பொருமானை மகிழவேறும், பெருமானை யருணைகிரிப் பெம்மானை யடிபணிந்து பிறவிதீர்ப்பாம்.

(இதன்பொருள்.)

தாருகாவன ரிஷிகள் வரவிட்ட மானைக் கையிலே வைத்தும், ஒருமான் போன்ற கங்கையைச் சிரசில்வைத்தும், எழுலகத்தையும் பெற்ற உமாதேவியை வாமபாகத்தில் வைத்தும், அடியார்க் கருள்செய்கிறவரும், பவளமலைபோல்வருகின்ற யானைமுகத்தையுடைய கணபதியைப்பெற்றவரும், போர்செய்கிற ரிஷபவாகனத்திலெழுந்தருள்கின்ற ஆண்டவருமாகிய (அருணாசல ஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற) பரமசிவன் பாதத்தை வணங்கி இனிமேலவரும் பிறப்பைத் தீர்த்துக்கொள்ளுவோம்—என்றவாறு. (எ)

(உண்ணாமுலையம்மைஸ்துதி.)

காரொழுகுங் குழலாளைக் கருணைவழித் தொழுகுமிரு கடைக்கண்ணாளை, மூரலிள நிலவொழுகப் புழுகொழுக வழகொழுகு முகத்தினாளை, வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித் தெரியாத மருங்குலாளைச், சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணாமுலையாளைச் சிந்தைசேர்ப்பாம். ... ... *

(இதன்பொருள்.)

மேகம்போன்ற கூந்தலையும்; கிருபைவழிந் தொழுகாநின்ற இரண்டுகடைக்கண்களையும், தந்தங்களின்காந்தி இளமையாகிய சந்திரிகைபோல் பிரகாசிக்கப் புழுகுவாசிக்கின்ற அழகுபொருந்திய முகத்தையும், இரவிக்கைதரித்த ஸ்தனங்களையும், அதிகவழகையுடையதாயொருவருக்குந் தெரியாத இடுப்பினையும். சிறப்புப்பொருந்திய பாதங்களையுமுடைய அருணாசல ஸ்தலத்தில் வீற்றிருக்காநின்ற உண்ணாமுலையம்மனை மனதில நினைத்துக்கொள்ளுவோம்—என்றவாறு. (அ)

(யானைதிறைகொண்டவிநாயகர்ஸ்துதி.)

மதமூன்று மாறுக வருங்களிற்று முகத்தானை மனத்திலே தான், பதமூன்று மருந்தவர்க்குப் பதமூன்று கடந்தபதம் பாலிப்பானை, விதமூன்று புரங்கடிந்தாரளித்தருளுமொருமுதலை வேரோடேசஞ்சிதமூன்று பிறப்பொழிக்கு மானைதிறை கொண்டவனைச் சிந்தைசேர்ப்பாம்... ... ... *

(இதன்பொருள்.)

மும்மதங்களும் ஆறுகி ஓடிவருகின்ற யானைமுகமுள்ளவரும், மனதில தம்முடைய பாதங்களைச்சிந்திக்கின்ற அரியதவத்தை யுடையவர்களுக்கு நான்காம்பதமாகிய சாயுச்சியத்தைகொடுப்பவரும், முப்புரத்தை நீறுசெய்த சிவனாலேபெறப்பட்டவரும், ஒப்பற்ற முதலாகிய சஞ்சிதவினையையுடைய பிறப்பைக் கொடுக்கின்ற வருமாகிய யானைதிறை கொண்டவரென்னும் விநாயகரை மனதிற்சேர்த்துக் கொள்வோம்—என்றவாறு. (க)

(சுப்பிரமணியர்ஸ்துதி.)

கொந்தாருமலர்ச்சோலையருணைநெடுங்கோபுரத்திற் குமரவேளை *
வந்தாரைவாழ்விக்கவடவீதிதனி லுறையு மயிலேறியைக் ... ... *
கந்தாருங்கடக்களிற்று மகவாற்குத் தருநிழலுங்கனகநாடும் ... ... *
தந்தானையலர்கடப்பந் தாரானைப்பணிபவர்தா டலைமேற்கொள்வாம்.

(இதன்பொருள்.)

பூங்கொத்துகளையுடைய சோலை சூழ்ந்த அருணசலத்துக் கிழக்குக் கோபுரவாசலுக்கடுத்த மேல்புறத்து மண்டபத்தி லிருக்கின்ற வரும், தம்மையடைந்தவர்களைப் பிழைக்கச்செய்ய வடவீதியிலே வாசஞ்செய்கிற மயில்வாகனக்கடவுளும், தறியிற் கட்டப்பட்ட மதம் பொருந்திய அயிராவதத்தி லேறுகின்ற தேவேந்திரனுக்குத் தெய்வ லோகத்தையும் கற்பகவிருட்சத்தி னிழலையுங் கொடுத்தவரும் கடப் பமாலையைத்தரித்தவருமாகிய சுப்பிரமண்ணியக்கடவுளை வணங்குகிற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல்வைத்துக் கொள்ளுவோம். என்றவாறு. ... ... (௰)

(சைவசமயாசாரியர்கள்ஸ்துதி.)

வாதுகொண்டபரசமயக் கோளரியை யடிவணங்கி வன்கற்றூணா
ற் - றீதுகொண்ட கருங்கடலைக் கடந்த செழுந் தமிழ்க் கடலின்
றிருத்தாள் போற்றி- காதுகொண்ட விழிப்பரவை திருமனைசெம்
பெருமானைக்காலினோவத் - தூதுகொண்டசுந்தரனைத் தம்பிரான்
றோழனையாந் துதிசெய்வோமே... ... ... *

(இதன்பொருள்.)

வாதுகொண்டு ஜயிக்கவந்த சமணர்களாகிய யானைகளுக்குச் சிங் கமாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளது பாதத்தை வணங்கி வலிய கருங்கல்லோடு சேர்த்துக்கட்டிச் சமணர்கள் சமுத்திரத்திற் போட அக்கல்லினாலேதானே அச்சமுத்திரத்தைக் கடந்த செந்தமி ழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பர்சுவாமிகளது பாதத்தைவண ங்கிக்காதளவுந்தாவிய கண்களையுடைய பரவைநாச்சியாருடைய திரு மனைக்கு இரண்டு பாதங்களுநோக எமதாண்டவரைத் தூதாக வனு ப்பிய தம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளை வணங்கு வோம்—என்றவாறு. ... ... (௰௧)

அத்தனார் பெருந்துறைபுக் கரியவினைகடல்கடந்து .... *
புத்தனார்மதங்கடிந்து வினிதமாகியசிவன் .... *
முத்தனார்மாணிக்கவாசகனார்முத்திக்கு .... *
வித்தகனார்வாதவூர்வித்தகனார்தாள்போற்றி... .... *

(இதன்பொருள்.)

பரமசிவன் குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்த திருப்பெ ருந் துறைக்குப்போய் அந்தச் சுவாமியி னுடைய அனுக்கிரகம்

பெற்று அரிதாகிய தீவினைக்கடலைத்தாண்டி அந்தக்காலத்தில்வியாபித்திருந்த பௌத்தர்களுடைய மதத்தைக் கண்டனஞ் செய்து பரிசுத்தமாகிய சீவன்முக்த்த தசையடைந்தவரும், அம்முத்தியாகிய நிலத்திற்கு வித்தையாகியும், திருவாதவூரிற்பிறந்த ஞானசொரூபராகிய மிருக்கிற மாணிக்கவாசக சுவாமிக ளுடைய பாதத்தை வணங்கி—என்றவாறு. (௰௨)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

திருத்தொண்டர்கள் ஸ்துதி.

மனையாளை பரர்களித்து மனங்களித்த வியற்பகையார் மலர்த்தாள்போற்றித்- தனையாளும் பெருமானுக் கெச்சிலிடுங் கண்ணப்பர் சரணம்போற்றி- வினையாளரறியாத திருநீலகண்டரடி விரும்பிப் போற்றி - எனையாளுமிளையான்றன் குடிமாறரிணையடியை யிறைஞ்சுவோமே.......... *

(இதன்பொருள்.)

பரமசிவன் அடியார்வேடம் பூண்டுவந்து பெண்சாதியை யெனக்குக் கொடுத்துவிடென்று கேட்க அதற்காக அதிக சந்தோஷத்தையடைந்து சுவாமிக்குத் தன்மனையாளைக் கொடுத்து அதனால் அதிகமகிழ்ச்சி பொருந்திய இயற்பகை நாயனாருடைய மலர்போன்றபாதங்களை வணங்கித் தன்னையாட் கொண்ட சுவாமிக்குத் தான்தின்று ருசிபார்த்த எச்சிலைக்கொடுத்த கண்ணப்ப சுவாமிகளது பாதத்தைவணங்கி வினையையுடையவர்க ளறியாத திருநீலகண்ட நாயனாருடைய பாதத்தை மகிழ்ந்து வணங்கி அடியேனை ஆட்கொண்டருளும் இளையான்றன் குடிமாற நாயனாருடைய பாதத்தை வணங்குவோம்—என்றவாறு. (௰௩)

ஐயடிகட் காடவர்கோ னீரடியை வணங்கிமக வறுத்தெம்மாற்கு-நெய்யடிசி லுடன்படைத்தார் திருவடியைத் தொழுதுதிரு நீற்றுச் சோழன்- மெய்யடியைப் புகழ்ந்துதெய்வ வுலாச்சொன்ன சேரனடி விரும்பியேத்திப் - பொய்யடிமை யில்லாத புலவர்முத லனைவரையும் போற்றுவோமே... ... ... *

(இதன்பொருள்)

ஐயடிகட் காடவர்கோ னாயனாரது இரண்டு பாதத்தையும் வணங்கி எமது சுவாமிக்குப் பிள்ளையை அறுத்துச்சமைத்த கறியை நெய்யிட்ட அன்னத்துடன் படைத்த சிறுத்தொண்ட நாயனாருடைய அழகியபாதங்களைத் தொழுது திருநீற்றுச்சோழனாருடைய மெய்ம்மையாகிய பாதத்தை வந்தித்துத் தெய்வீகம் பொருந்திய உலாப்பிரபந்தம்பாடிய சேரமான் பெருமாணாயனாருடைய பாதத்தை

பாயிரம்.

ஆசையுற்றுப்பணிந்து மெய்யடிமையையுடையபுலவர்கள்முதலாகிய ஸர்வத்திரளையும் வணங்குவோம்—என்றவாறு. (௧௪)

(நந்திகேசுரர்-துர்க்கை-கௌதமர்- சண்டேசுரர்ஸ்துதி.)

நந்திதிருவடியிறைஞ்சிவிந்தையடிபுகழ்ந்துமறைநான்கினுக்குந்தாயாய், வந்தருளுங்கௌதமனார் மலரடியென்முடிக்குமுடிமாலையாக்கித், தந்தையிருபதந்துணித்துச்சிதையாதபதத்திருந்தசண்டிதாளைச், சிந்தைமிசைக்குடியிருத்தியருணகிரிநினைப்பவர்தாழ்சென்னிசேர்ப்பாம்.. *

(இதன்பொருள்.)

நந்திகேசுரருடைய அழகிய பாதங்களைத்தொழுது துர்க்காதேவியினுடைய பாதத்தைவணங்கி நான்குவேதத்தினின்றும் ஐந்தாம்வேத சொரூபமென்று சொல்லப்பட்ட கௌதமருடைய தாமரை போன்ற பாதத்தை என்சிரசுக்குத் தரிக்கப்பட்ட மாலையாகச்செய்து தம்முடையதகப்பனாரது-இரண்டுபாதங்களையும்வெட்டி அதனால் கெடாதமோக்ஷபதத்திலிருந்த சண்டேசுரருடையபாதத்தை இருதயத்திற் குடியிருக்கச்செய்து அருணாசலஸ்தலத்தைநினைப்பவருடைய பாதத்தைச் சிரசிற்சேர்த்துக்கொள்ளுவோம்—என்றவாறு. (௧௫)

(அவையடக்கம்.)

தேறுகின்றபாடலகலையுந் தெளிந்தசுவை யிருநான்குந்திகழும்பாடல்-கூறுகின்ற புலவர்முன்னே தமியேனுஞ் சிலபுகல்சொற்குறித்தவாறு-வீறுகின்றமறைவிரிஞ்சனேறிவருமனத்தின்முன்னும்விரிஞ்சன்றனை-யேறுகின்ற கருடன்முன்னு மொருமசகம் பறவைகொடுத்திமுதல்போலும் ... ...*

(இதன்பொருள்.)

பலநூல்களைக்குறைவறக்கற்று எட்டுச்சுவையும் பொருந்தியதமிழ்ப்பாடல்களைச் சொல்லுகின்ற வித்துவான்கள் முன்னே ஒன்றுமறியாத யானுஞ் சிலபாடல்களைபாடநினைத்தது விளங்கிய நாலுவேதங்களையுடைய பிரமனவனேறிநடாத்தும் அன்னவாகனத்தின்முன்னும் அவன்தகப்பனாகிய விஷ்ணு ஏறும்படியான கருடன்முன்னும் ஒருசிறியகொசுகுபறந்திடுதலைக் காண்பித்ததுபோலும்—என்றவாறு. எட்டுச்சுவையாவன-சிங்காரம்-வீரம்-பெருநகை-கருணை-ரௌத்திரம்-குற்சை-அற்புதம்-பயம். (௧௬)

நீரிருக்குந்தெனைப்பழித்து விடுவரோவதுபாலினிகழுமாறால், நாரிருக்குந்தெனக்கறித்து விடுவரோலதுமலரினன்னுமாறு, வாறிருக்குஞ்சடைமுடியார் விடமிருக்குந்திருமிடற்றாரருணநாதர், பேரிருக்குந்தகைமையினாலெனதுரையையிகழுவரோபெருமையோர்........ *

(இதன்பொருள்.)

பாலொடுகலந்திருக்கின்ற நீராச்சகவாசமே போக்கியத்தால் தள்ளாமலிலவித்துக்கொள்ளுவார்கள். புஷ்பமாலையோடு சேர்ந்த நாரையும் அப்படியே கொள்ளுவார்கள். ஆத்திமாலையைச்சூடிய சடைமுடியையும் ஆலகாலமிருக்குங்கண்டத்தையுமுடைய அருணாசலேசுரரது நாமமிருக்கிற பெருமையினாலே என்னாற்செய்யப்பட்ட புன்பாடலையும் பெரியோர்கள் ஒப்புக்கொள்ளுவார்களேயன்றி இகழார்கள்—என்றவாறு. (௰௭)

அழகு ஈரக்கனிந்தநச்சுமரம்பழைப்பதெனினுமதிலமுதுண்டாமோ-
விழைவுதருசுவைக்கரும்புபுதியதுவேயெனினுமது விரசம்பாமோ-
இழிவுடையதுவுமுயர்வுதங்கப்பசெய்யினுமவைபோலிருக்குமாகில்- ப
ழமையெனநலந்தருமோ புதுமையெனவிகழப்படுமோ பயன்கொள்
வோர்க்கே ... ... *

(இதன்பொருள்.)

அழகாகிப்பசிவப்புநிறம்பொருந்தப்பழம்பழுத்த எட்டிமரம்வெகுநாளையமரமாயிருந்தபோதிலும், அதிலமாதுரியமுண்டாகாது சர்வத்திராலும்இச்சிக்கப்பட்டதுமாகியகரும்பு கொஞ்சநாளையதாகவிருந்தாலும் அதனில்கசப்பு உண்டாகாது, அப்படிபோல் குற்றத்தோடுகூடிய செய்யுள் பழமையாயிருந்ததினாலேயே ஒருநன்மையை கொடுக்காது யாதொருதோஷமுமில்லாமல் உயர்வுபொருந்திய பாடல் சிலநாளைக்குமுன்னுண்டாயிருந்ததினாலேயே இகழப்படாதுபிரயோசனத்தைக் கொள்ளுவோர்களுக்குயென்றவாறு. (௰௮)

இளையவளவுந்தமிழ்மிடியற்றதிமதுரம்பிறந்தகல்வித்திறமையோரு
ம், நிலையுமியற்சுவையறியாமூடர்பதவறிவின்முன்னேநிற்கலாமோ,
மிளையடருங்குவளைவிழியனிச்சமலரனையதிருமேனிமாதரார், பனைவின்
மதன்மலர்க்கணையைப்பொறுப்பதலாலமரினம்புபொறுத்திடாரோ *

(இதன்பொருள்.)

இளையவளவுகூடச் செந்தமிழ்ச்சரித்திரமின்றி அதிகமதுரம்பிறந்த கல்விவல்லவர்களும் இலக்கணரசமே அறியாத மூடர்களதுமிகுந்த அறிவையுடைய கலவிப்பிரசங்கத்தின்முன்னிற்காரகள் கொல்லுந் தொழிலடைகின்றநீலோற்பலம்போன்ற கண்களையும்அனிச்சப்பூவையொத்தஉடம்பினையுமுடைய பெண்கள் கருப்புவில்லைத் தரிக்கின்றமன்மதனால்விடப்பட்ட புஷ்பபாணத்தைப் பொறுப்பார்களேயல்லாமல் கொடூரமாகியயுத்தத்திலவிடுகிறஅம்பைப்பொறுக்கார்கள்அதுபோல —எ-று. (௰௯)

(நூல்வரலாறு.)

கருத்துருகவிறைவனந்திக் கருள்புரியநந்தியுமார்க் கண்டற்கோது, விருத்திமறைவியாசமுனிக்கவனுரைக்கச்சூதனுக்கு வியாசன்சொல்லப், பொருத்தமனவிருடியருக் கருட்சூதன்மொழிந்தசிவபுராணங் கோடி, யருத்திரசங்கிதையுரைத்த வருணைகிரி வளத்தினையா னுரைக்கலுற்றேன். ... ... *

(இதன்பொருள்.)

மனதுருகப் பரமசிவன் நந்திகேசுரருக்கு அருள்புரிய நந்திகேசுரரும் மார்க்கண்டேயருக்கருள்செய்ய, மார்க்கண்டேயர் வேதங்களையொழுங்குசெய்த வியாசருக்கு அருள்செய்ய, அவர் பெருமையையுடையவனத்திலிருக்குமிருஷிகளுக்கருள்செய்த சிவபுராணங் கோடியாகும் அவைகளில்முக்கியமாகியஸ்காந்தத்தில் ருத்திரசங்கிதையிற்சொல்லிய அருணாசல ஸ்தலமகிமையைச் சொல்லத் தொடங்கினேன்— என்றவாறு. (௨௰)


அருணைநகர்வளமையுமா லயனகந்தை விடவழல்வெற் பானவாறும், பொருவில்மகமழித்ததுவு மரனுமையைமணந்ததுங்கண்புதைத்தவாறும், வருமகிடற்செகுத்ததுவு மிறைவியிடங்கலந்ததுவும் வயிரப்பூணு, னிருவினையையகற்றியதும் வடகலைதென்கலைவிதியாலிசைக்கலுற்றேன். ... ...*

(இதன்பொருள்.)

அருணாசல ஸ்தலமகிமையும், பிர்ம்மா விஷ்ணுவினுடைய கர்வங்கெட அக்கினிமலையானதும், ஒப்பில்லாத தக்கனுடைய யாகத்தைஅழித்துப்போட்டதும், பரமசிவன் பார்ப்பதியைக் கலியாணஞ் செய்ததும், அப்பார்ப்பதி சுவாமியினுடைய கண்களைமூடியதும், மகிடாசுரனை உமாதேவி கொன்றதும், அப்பார்ப்பதி வாமபாகத்திற்சேர்ந்ததும், வச்சிராங்கத பாண்டியனுடைய பாவத்தைநீக்கினதுமாகிய சரித்திரங்களைச் சொல்லுகின்ற கிரந்தத்தைத்தமிழ்மொழியினாலே சொல்லத் தொடங்கினேன்—என்றவாறு. (௨௧)

பாயிரம்
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௨௧



சிவமயம்.

திருநகரச்சருக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.)

துங்கமழு வுழைபிரம்பு சுரிகையகலாதகையான் றுகிர்க்குன் றூடே, திங்களுமிழ்நிலவனைய வெண்பொடியாஞ் சடைமுடியான் செறி முக்கண்ணான், பொங்குதிருவரையகலாப் புலித்தோலான் புயநாலான் புரிமுந்நூலான், கங்கைமதிதவழ்சடையான் றிருவாணைசெலுத்திவெள் ளிக் கயிலைகாப்பான். ... ... *

(இ-ள்.) உயர்வாகிய மழுவும்மானும்பிரம்பும்உடைவாளும் நீங்காத கையையுடையவர், பவளமலையில் சந்திரன்பொழிகின்றநிலவுபோலத் தேகத்தில் அணிந்தவிபூதியையுடையவர், சடைமுடியையுடையவர், நெருங்கியமூன்றுகண்களையுடையவர், விளங்குகின்ற இடுப்பில்நின்று நீங்காத புலித்தோலையுடையவர், நான்குபுஜங்களை யுடையவர், மூன்று புரியாகிய பூணூலையுடையவர், கங்கையும் சந்திரனும் தவழாநின்ற சடையையுடைய பரமசிவனது கட்டளையைச்செலுத்திக்கொண்டு கைலாயகிரியைக்காக்கிறவர்—எ-று. (க)

கொய்வனசமலர்நிறத்தான் மைவளருந்திருமிடற்றான் குலவெள் ளேற்றான், சைவமெனும்பயிர்தழைக்கக் கருணைமழை பொழிமேகந் தன்னையொப்பா, ஐவரையுமகத்தடக்குஞ்சிலாதரர்க்குப் புறத்துலவு மாவிபோல்வான், தெய்வமெல்லாந்தொழச்சிவந்தமலர்ப்பதத்தானந் தியெனுந்திருநாமத்தான். ... ... *

(இ-ள்.) கொய்யப்பட்டதாமரைமலரொத்தநிறத்தையும், விஷம்பொருந்தியகண்டத்தையும், நல்லவெண்மையாகிய ரிஷபவாகனத்தையும், உடைய பரமசிவன் சம்பந்தமாகிய சைவசமயமென்னும் பயிரானது தழைப்பக் கருணையாகிய மழையைப்பொழிகின்ற மேகம்போன்றவர் பஞ்சேந்திரியங்களையும் அகத்தில் நின்றும் புறத்தில் தீமையா

யெப்பொருள்களிற்போகவொட்டாமல் அடக்கியசிலாதர ரிஷிக்குப்பு த்திரர் சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவர் விஷ்ணுமுதலாகிய தெய்வங் களெல்லாம் வணங்க அதனாற் சிவப்பேறிய தாமரைப்பூவொத்த பாத ங்களையுடையவர்- இப்படிப்பட்ட தன்மையையுடைய நந்திகேசரெ ன்கிற அழகியநாமத்தைப்பெற்றவர்—எ-று. (உ)

ககனநதிமதியுந் திருவுருவுந் திருவுருவி லிசைந்த நீறுந் ... *
தேசுமெவண விளங்குமொரு கயிலாயச் சிலம்புளதச் சிலம்பின்மீதே *
வாசவனே முதலிமையோர் நெருங்குதலான் மகுடமொடு மகுடந்தா
க்கி யோசையுடன் கனகமணிப் பொடியுதிர்ந்து கனகமலைக் குவமை
யாகும் ... ... *

(இதன்பொருள்.)

பரமசிவன் தரிக்கின்றகங்கையும் சந்திரனும் மேற்சொன்னசுவாமி யினது வெண்மையாகியதிருவுருவமும் அவ்வுருவத்திலணிந்ததிருநீறு மாகிய இந்நான்கினுடைய காந்திபோலப் பிரகாசிக்கும் கைலாயமெ ன்று ஒருதிருமலை புண்டு, அந்தத்திருமலைமேல் வணங்குதற்காகத் தே வேந்திரன் முதலாகிய தேவர்கள் நெருங்குகிறபடியினாலே கிரீடத் தோடு கிரீடம் இடிபட்டுச் சப்தத்துடனே சொர்ண பொடிகளும் ரத் நப்பொடிகளும் உதிர்ந்து மகாமேரு கிரிக்குச் சமானமாகக் குவியும் —எ-று. (ங)

இந்திரநீலச்சிலையா லிசைத்தகடந்தெரியாமலெழுதிச்சேர்த்து *
மந்தரமாமெனவயிரத்தூணிறுத்திமாணிக்கமதலைகூட்டி ... ... *
செந்துகிராற்போதிகையுமரகதத்தாலுத்திரமுஞ்செறித்துமீதே.. *
சந்திரகாந்தத்தகடுபரப்பியமண்டபமுளதச்சயிலமீதே ... ... *

(இதன்பொருள்.)

இந்திரநீலக்கல்லினாலே ஒன்றோடொன்றுசேர்த்த சந்துதெரியாம ல் சித்திரமெழுதிச் சுவர்வைத்து மந்திரகிரிபோல் வயிரத்தூண்களை நிறுத்தி மாணிக்கத்தினாற்செய்த கொடுங்கைசேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாலே போதிகையும் மரகதத்தி லுத்திரமுஞ்சேர்த்து மே லேசந்திரகாந்தத்தகடுமேய்ந்த மண்டபம் ஒன்றுண்டு அந்தமலையின் மேல்—எ-று. (ச)

இருமருங்குந்தரளமணி யிழைத்தவரியாசனத்தி லிருந்து நீலப் *
பருமணியாலிழைத்ததொருபாதபீடிகையின்மலர்ப்பதத்தையூன்றி *
மருவுபெருங்கயிலையின்மீதிருந்துமுயலகன்முதுகில்வலத்தாளூன்றி,
யருமறையமுனிவரருக்குரைக்குமிறையெனவிருந்தானந்தவேலை *

(இதன்பொருள்.)

அந்த மண்டபத்தில் இரண்டுபக்கமும் முத்துக்களிழைத்த சிங்கா தனத்திலிருந்து பரிய நீலரத்தினத்தினாலே இழைக்கப்பட் டிருக்கின் ற பாதக்குறட்டின்மேலே மலர்போன்றபாதங்களைவைத்துக்கொண்டு

நந்திகேசுரர் சிவகணங்களாலே மருவப்பட்ட பெருமையாகிய கைலாயகிரியில் எழுந்தருளியிருந்து முயலகன்மேல் வலப்பாதத்தைவைத்து அரிதாகியவேதப்பொருளைமுனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிய பரமசிவம்போல் இருந்தார் அந்தவேளையில—என்றவாறு. (ரு)

குற்சனுரோமசன்குமுதன் குமுதாக்கன்சகடாயன்கும்பசாதன் *
வற்சனைவசம்பாயனர்கணுசிமுனிபுலிக்காலன்வாமதேவன் ... ...*
நற்சனகன்சனற்குமரன்வாதராயணன்மதங்கனடனத்தாளை ... *
அர்ச்சனைசெய்பனந்தமுனி முதலனந்தமுனிவரர்தம்மருகிற்சூழ...*

(இ-ள்.) குற்சர், ரோமசர், குமுதர், குமுதராட்சர், சகடாயர், அகத்தியர், வற்சர், வைசம்பாயனர், கணுசி, வியாக்கிரபாதர், வாமதேவர், சனகர், சனற்குமாரர், வியாசர், மதங்கர், சுவாமியினது நடனம்பொருந்தியதிருவடிகளில் அர்ச்சனைசெய்கின்ற பதஞ்சலிமுதலாகிய அனந்தமுனிவர்கள்தம்முடைய பக்கத்திற்சூழ—எ-று. (சா)

மன்னியமார்க்கண்டமுனியுடனெழுந்துபணிந்துயிர்கண் மழைமின்போல, விந்நிலத்திற்பிறப்பதுவு மிறப்பதுவமிருவினையு மெமக்குத்தோன்றச, சொன்னவொருதனிமுதலே முத்திபெறும்பரிசெமக்குச்சொல்வாயென்று, மன்னவுரைசெவிப்புகலு நந்தியருள்சுரந்தம்முனிக்கருள்வதானான் ... ... *

(இதன்பொருள்.)

நிலைபெற்றவயதினையுடைய மார்க்கண்டேயமுனியானவர் சீக்கிரத்திலெழுந்திருந்து நந்திகேசுரரைவந்தனஞ்செய்து சுவாமிமேகத்தில் தோன்றி அதிசீக்கிரத்தில் அழியு மின்னல்போல் உயிர்களானவை இவ்வுலகத்தில் பிறக்கிறதும் இறக்கிறதும் இவைகளுக்குக் காரணமாகிய நல்வினை தீவினைகளாகிய இரண்டும் எங்களுக்கு விளங்கும்படியாக அருளிச்செய்த ஒப்பற்றகடவுளே, நாங்கள் மோட்சத்தை யடைகிறதற்குத் தக்கவழியைக்கிருபைசெய்யவேண்டுமென்றுகேட்க, அந்தவார்த்தையைக்கேட்டவுடனே மிகுந்தகிருபை யுண்டானவராகி நந்திகேசுரர்மார்க்கண்டேயருக்கருளிச்செய்யத்தொடங்கினார்—.எ-று. (எ)

கம்பைநதிகும்பநதி காவிரிகோதாவேரி கண்ணவேணி ... ... *
பம்பைநதி வேகவதி வேதவிதி சரயுநதி பரமாங் கங்கை ... ... *
செம்புநதிபொன்முகிநல்யமுனைநதி நருமதைமேற்செப்புஞ்சோணை
அம்புவியின்மிகவுளவங்காடினர்தம்வினையகற்றுமதுவல்லாமல் ... *

(இதன்பொருள்.)

கம்பைநதி, கும்பநதி, காவேரி, கோதாவரி, கிருஷ்ணவேணி, பம்பைநதி, வேகவதி, வேதவிதி, சரயுநதி, எல்லாநதிகளுக்கு மேலாகிய, கங்காநதி, தாமிரபன்னி, பொன்முகி, யமுநாநதி, நர்மதாநதி, மேன்

மையாகச்சொல்லப்பட்ட சோணநதியென்று அழகுபொருந்திய பூவு
லகத்தில்அநேகநதிகளுண்டு அவைகள்தம்மிடத்திலேஸ்நானஞ்செய்தவ
ர்களுடையபாவத்தைநீக்கும் அதுவல்லாமல்—எ-று. (௮)

காசியெனுமொருதலமிக் கயிலையினுஞ் சிறப்புளது கங்கைநீத்த
ம், வீசுதிரைக் கொழுந்தோட்டிப் பரகதிக்கு வேரோட்டும் வியந்து
மூழ்கின், மாசிலுடலதிலிறந்தான் மரமேனும்விலங்கேனு மனிதரே
னு, மீசனருளுபதேசஞ்செவிப்புகலாலிறைவனெனவிருக்கலாமே*

(இதன்பொருள்.)

காசியென்கிற ஒருதிவ்வியஸ்தலமானது இந்தக்கைலாயத்தைப்பார்
க்கிலும் சிறப்புள்ளது அக்காசியில் வருகின்ற கங்காப்பிரவாகமான
து எறிகின்ற அலைகளைக்கொழுந்தாகஓடச்செய்து அவ்விடத்தில் வி
ரும்பி முழுகினால் அவர்களுக்கு மோட்சத்துக்கு வழிகாட்டும் களங்
கம்பொருந்திய தேகம் அவ்வூரில் விட்டால மரமாவது மிருகமாவது
மனிதராவது பரமசிவனது தாரகப்பிரமோபதேசம், செவியிற்சேர்
தலால் சிவசாரூப்பியத்தையடைந்திருக்கலாம்—எ-று. (௯)

போகியொருபுற்றிடங்கொண் டிருப்பதுகண் டிதலல்லாற் பு
ளிதன்போற்றும், யோகியொருபுற்றிடங்கொண் டிருந்ததலங்கண்ட
துண்டோ வுரைப்பக்கேளு, நாகமிசை நடித்தவருக் குயிர்வேண்டி
த் திருதவஞ்செய் நளினக்கோயில், சேருமனத்தவரான மருவாரூர்
தனையெரித்தார் திருவாரூரே ....*

(இதன்பொருள்.)

சர்ப்பமானது புற்றையிடமாகக்கொண்டிருந்ததைப் பார்த்ததே
யல்லாமல் ஞானிகள்போற்றுகின்ற யோகியானவர்புற்றினிடத்திலே
யிருந்த தலத்தைப்பார்த்ததுண்டோ அதுயாதெனிற் சொல்லக்கே
ளுங்கள் காளிங்கனென்னும் பாம்பின்மேலேறி நடனஞ்செய்த வி
ஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சைவேண்டி லட்சுமியானவள் பூசைசெய்து
கொண்டிருந்த கமலாலயமென்னும் தலமாகி வஞ்சம்பொருந்திய
மனத்தையுடைய திரிபுராதிகளை யெரித்த சிவன் வாசஞ்செய்கின்ற
ஊராகிய திருவாரூர் என்னுந் திவ்வியஸ்தலந்தான்—எ-று. (௰)

தக்கவிராட் புருடன்மனத் தலமெனுமோர் தலமுளதத் தலத்தின்
மீதே - முக்கணனார் நடிப்பரவர் மூர்த்தியிலா யிரத்திலொரு மூர்
த்திதானே- யிக்கயிலையிடத்துறைவ மதன்னிலதின் பெருமை நம்மா
லிசைக்கலாமோ - அக்கனகசபைகண்டா ரரியயன் காணாத முத்தி ய
டைகுவாரோ ... ... *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்தியவிராட்புருஷனுடைய இருதயஸ்தலமாகிய
சிதம்பரமென்று ஓர் ஸ்தலமுண்டு அதிலுளதாகிய கனகசபையில்

மூன்றுகண்களையுடைய பரமசிவன் ஆனந்த தாண்டவஞ் செய்வார். அவருடைய மூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன்றுதான் இக்கைலாயபதத்திலிருக்குமென்றால் அந்த ஸ்தலத்தினது பெருமையை நம்மாற்சொல்லக்கூடுமோ அப்படிப்பட்ட அழகு பொருந்திய கனகசபை கண்டவர்கள் விஷ்ணுவினாலும் பிர்மாவினாலும் காணப்படாத மோட்சத்தையடைவார்—எ-று. (யக)

தாங்காழியவன்சிவனை வழிபடுமூதுவளாபந்சத் தலத்தைப்பார்க்கி
ஓங்காரவடிவதிலேயுபிரிழந்தா லுடலழியாதொளிகெடாது ... [ல்
வீங்காது நெகிழாது பிறவுயிரால் வருந்தாது வெடித்திடாது ... *
தீங்கான மணங்கிருமி பிறவாது கிடக்கும்வலச் செவிமேலாக......*

(இதன்பொருள்.)

சக்கரத்தைக் கையில் தரிக்கின்ற விஷ்ணுவானவர் பரமசிவனைப் பூசைபண்ணிய விர்த்தாசலமென்று ஒரு ஸ்தலமுண்டு, அந்த ஸ்தலத்தைப்பார்த்த இடத்தில் அதுபிரணவசொரூபமாயிருக்கும், அந்த ஸ்தலத்தில உயிர்விட்டால் தேகமழியாது, நிறங்குன்றாது, வீங்கமாட்டாது, கட்டுநழுவாது, மற்றப்பட்சிமிருகங்களால் பின்னமாகாது, வெடிபடாது, அதில் துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல் வலதுகாதுமேலாகக்கிடக்கும்—எ-று. (யஉ)

பொய்ம்மகிட முகனை வென்ற வம்மையிடமகலாத புனிதமூர்த்தி,
செம்மையிட மென்றிருந்த கருமகிட முகமாகச் செறிகேதார,
இம்மையிடர் மறுமையிடர் ஞானமில்லாச் சிறுமையிட ரெல்லாந் தீ
ர்க்கு, மும்மையிடம் பெறுமுலகுக் கெளிதாகத்தனியிருந்த முத்தி
போலும்... ... ... *

(இதன்பொருள்.)

மெய்ம்மையாகிய எருமைமுகத்தினையுடைய மகிடாசுரனை ஜயித்த பார்ப்பதி வாமபாகத்தில் நீங்காத பரிசுத்தராகிய பரமசிவனானவர் செம்மையாகிய இடம் இதுதானென்று எழுந்தருளியிருக்கிற கறுப்பாகிய எருமையினதுமுகம்போல் விளங்கிய திருக்கேதாரமென்னும் ஸ்தலமானது இந்தஜன்மத்தில்வருகிற துக்கமும் மறுமையில் வருகிற துக்கமும் ஞானமில்லாததனாலே உண்டாகிற துக்கமுமாகிய எல்லாத்துயரத்தையும் தீர்க்கிறதற்கு மூன்றுலகத்தாருக்கும் எளிதாகித் தனியேயிருந்த முத்திஸ்தானம்போல் இருக்கின்றது—எ-று.

இருப்பனத்தன் பருப்பதத்திற் பிரமராம் பிகையுட னென்றிர
ண்டு போதும்-விருப்பனத்தன் பணிந்திமையோ ருலகுமுக லனைத்
துலகும் விதித்தான்மற்றைத் - திருப்பதிக்கே யிருப்பவனுந் தேவ
ர்களுஞ் சராசரமாச் செனித்தவ்வூரி- லிருப்பதற்கு முயல்வரென்று
வெத்தலமுமத்தலத் துக் கிணையதாமோ .. .. *

(இதன்பொருள்.)

மல்லிகார்ச்சுனமென்கிற பர்வதத்தில் பிரமராம்பிகையுடனே பரமசிவனானவர் எழுந்தருளியிருக்கிறாரென்று அன்னவாகனத்தையுடைய பிர்ம்மாவானவர்வந்து பத்தியோடு இரண்டுவேளையும்வணங்கி அவருடைய அருள்பெற்றுத் தேவலோகமுதல் எல்லாலோகத்தையும் படைக்கார், மற்ற திருப்பதியிலிருக்கிற வேங்கடாசலபதியும் தேவர்களும் அந்தஸ்தலத்தில் சரமாகவும் அசரமாகவும் பிறந்திருப்பதற்குத் தவஞ்செய்வார்களென்றால் எப்படிப்பட்ட ஸ்தலங்களும் அந்தக்ஷேத்திரத்திற்குச்சமானமாகுமோ—எ-று. (௰௪)

விருப்படியார் சொரிந்தவூறு கல்லுடனேவிழியிடந்த வேடர்காலிற் - செருப்படியு முகந்தபிரான் காளத்திநகரமெனுந் தெய்வபூமி - பருப்பதமாகியும்விளங்குந்தண்ணறுக்கொழிக்குமலர்ப்பதுமையோடு - மருப்படியுந் துழாய்மார்பன் வடமலைமேலிருந்துகண்டு வணக்கமாதோ... ... ... *

(இதன்பொருள்)

திருக்காளத்தியென்னுந் தெய்வீகம்பொருந்தியஸ்தலத்தில் ஆதிசைவப்ராமணராகிய சிவகோசாரியார் என்பவர் பத்தியோடு மிகுதியாக அர்ச்சனைசெய்த அருகுடதீபங்கள் இவையுடனே கண்ணைப்பிடுங்கிப்பதித்தகண்ணப்பசுவாமிகளது காற்செருப்பையும் விருப்பமாயேற்றுக்கொண்ட லிங்கசொரூபமாகியசிவன்தானே குளிர்ச்சிபொருந்திய தேனைச்சொரிகின்ற தாமரைமலரிலிருக்கிற லட்சுமியோடு வாசனையுற்ற துளசிமாலையையணிந்த மார்பினையுடைய விஷ்ணுவானவர் வேங்கடமென்னுந் திருப்பதியில்நின்றுகொண்டு தரிசனஞ்செய்துவணங்குப்பொருட்டு அந்தக்காளத்தியில் மலையாகியும்விளங்குகிறார்—எ-று. (௰௫)

தேக்குநா லிருதிசையும் புகழ்ந்ததொண்ட நாடெனுமோர் தெய்வநாட்டி - னேக்கினார்வினையகற்றுமொருதலமுண் டதன்பெயரை நுவலக்கேளும் - வாக்குநாயகிகணவன் படைத்தபுவி தழைக்கவறம் வளர்த்தெந்நாளுங் - காக்குநாயகியுடனே கம்பநாயகருறையுங் கச்சிமூதூர் ... ... *

(இதன்பொருள்.)

அகன்ற எட்டுத்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கிற தொண்டமண்டலமென்னுந்தெய்வீகம்பொருந்தியநாட்டில் தரிசனஞ்செய்தவர்களுடைய பாவத்தைப்போக்குகின்ற ஒருஸ்தலமுண்டு அதன்பேரைச் சொல்லக்கேளுங்கள் சரஸ்வதியின்கணவனாகிய நான்முகன்படைத்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படிக்கு முப்பத்திரண்டு தர்மத்தையும் பரிபாலனஞ்செய்து எந்நாளும் காக்கின்ற

காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசுரர் எழுந்தருளியிருக்கிறகாஞ்சீபுரமாகும்—எ-று. (௰௬)

பழுதறவேயெழுகடலுமெழுகிரியுமெழுதலமும்படைத்தவேதக் *
கிழவனறியாமுடியையொருபாலனறிந்தபதிகிளர்த்தக்கேளும் *
அழகுதரநடம்புரியுமிறைவருக்கம்பிகைபூசையயனார்பூசை... ... *
விழைவுதருமரிபூசைகரன்பூசைபுரிந்ததிருவிரிஞ்சைமூதூர்.. .. *

(இதன்பொருள்.)

யாதொரு பழுதுமில்லாமல் எழுசமுத்திரத்தையும் எழுமலையையும் ஏழுலகத்தையும்படைத்த பிர்ம்மாவினால் அறியக்கூடாதசிரசை ஒரு ஆதிசைவப்பிராமணப்பிள்ளையானது அறிந்த ஸ்தலத்தைச்சொல்கிறேன் கேளுங்கள் ஆனந்ததாண்டவஞ்செய்த சுவாமிக்குப் பார்வதியாரும்பிர்ம்மாவும் சிவனைசமிருந்தவிஷ்ணுவும்கரனும்பூசித்தவிரிஞ்சிபுரமென்னும் ஸ்தலமாம் (என்றவாறு) சுவாமியினது சிரசைப்பாலன் அறிந்ததாவது, அபிஷேகமுதலியவைசெய்கிறதற்குச்சுவாமியினுடைய திருமுடியானது ஒருகுருக்களுடைய பிள்ளையின்கைக்கு எட்டாமையினாலே அந்தப்பிள்ளையானது பூசாகாலந்தவறுகிறது என்னசெய்வேனென்று விசனப்பட அப்போது லிங்கவுருவாயிருந்த பரமசிவன் சிரசைவளைத்தருளினதால்—எ-று. (௰௭)

பொய்யாதுபுனல்பெருகுங் காவேரிநதிக்கரையிற் பூந்தராயு......*
மையாருமிடைமருதுந் திருக்குடந்தைவளநகருமானைக்காவு... ...*
மையாருமிடற்றர்திரிசிரமலையுமாணிக்கமலையுந்தோன்று... ...[னே
மெய்யாகவவற்றினதுபெருமையெல்லாம் விரித்துரைக்கும்வேதந்தா

(இ-ள்.) பொய்க்காமல் பெருகிவருகின்ற காவேரிநதியினிருகரையிலும் சீர்காழி திருவையாறு - திருவிடைமருதூர் - வளம்பொருந்திய கும்பகோணம் திருவானைக்காவல்-விஷம்பொருந்தியகண்டத்தையுடைய மாதுருபூதேசுரர் எழுந்தருளியிருக்கின்ற-திரிசிரபுரம் - ரத்தினகிரி - இவைமுதலாகிய ஸ்தலங்கள் விளங்கிக்கொண்டிருக்கும் அந்தத் திவ்வியக்ஷேத்திரங்களினுடைய பெருமையெல்லாம் வேதமானதுதான்மெய்ம்மையாகவிரித்துச்சொல்லும்—எ-று. (௰௮)

பருவளையார்ப்பரிக்கும்வையை நதிக்கரையின் மதுரையறுபத்து
நாலு, திருவிளையாட்டிறைவனியற் றியதலமா மதன்பெருமை செப்
பலாம்மா - கருவிளையாட்டகற்றுமிரா மேச்சுரந்தென் கடற்கரையி
ற் காணுமங்கே- செருவிளையாட்டிராகவனு ரிராவணனைத்தொலைத்த
பழிதீர்த்திட்டாமோ ... ... *

(இதன்பொருள்.)

பெரியசங்குகள் முழங்குகின்ற வைகையாற்றின் கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல் செய்தருளிய மது

ணையென்று ஒருஸ்தலமுண்டு, அந்தஸ்தலத்தின்பெருமை யாவராலுஞ் சொல்லப்படாது தெற்குச்சமுத்திரத்தின்கரையில் ஜனனதுக்கத்தை ப்போக்குகின்ற ராமேச்சுரமென்று ஒருஸ்தலமுண்டு, யுத்தத்தைவி ளையாட்டாகச்செய்கின்ற இராமரானவர் இராவணனைக்கொன்றதனால் வந்ததோஷத்தை அந்தஸ்தலத்தில் சிவனைப் பூசித்துத் தீர்த்துக்கொ ண்டார்—என்றவாறு. (௰௯)

அத்தகையதலங்கடமிற் பிறக்கவுடலிறக்கவிழிபமையக்காணச்.. *
சுத்தவெளிதனிலாடுஞ் சுடரொளிக்குமணங்களிக்கத்தூய்நீராட்ட ...*
வித்தமதையெடுத்திறைத்துச்சிவாலயமும்விரிபொழிலுமிகவுண்டாக்
க, வுத்தமமாகியபரமகதியுளதென்றுனைக்குமுனியுரைப்பதானான்...*

(இதன் பொருள்.)

அப்படிப்பட்ட தன்மையையுடைய ஸ்தலங்களிலே யாவராகிலும் பிறந்தாலும் இறந்தாலும் போய்த்தரிசித்தாலும் பரிசுத்தமாகிய சிதா காசத்தில் நிர்த்தனஞ்செய்யும், மிகுந்தபிரகாசமே சொரூபமாகிய சி வனுக்குத் திருவுள்ளமானதுகளிக்கும்படி தூய்மையாகிய நீரினால் அ பிஷேகஞ்செய்தாலும் திரவியங்களைச் செலவுசெய்து சிவாலயங்கட் டுவித்தாலும் விரிந்தபூஞ்சோலைமிகவைத்தாலும் உத்தமம்பொருந்தி ய பரகதியுண்டாமென்று நந்திகேசுர் அருளிச்செய்யக்கேட்டு மார்க் கண்டேயர் சொல்லத்தொடங்கினார்—என்றவாறு. (௨௰)

இந்திகராநதிதோறுந்தலந்தோறுமிப்படியேயியற்றவென்றான் *
முன்னியசிரமருக்குஞ்சித்தருக்குமுனிவருக்குமுடிவருது ... ...*
மின்னிகருஞ்சிறுவாழ்க்கைமனிதர்தமக்கெளிதாமோமேவினாலும் ...*
மன்னியமாம்பிறவுயிர்க்குமரத்தினுக்குங்கிடையாதேயமலவென்றான்.

(இதன் பொருள்.)

இப்படிப்பட்ட தன்மையையுடைய நதிகள்தோறும் ஸ்தலங்கள் தோறும்போய்த் தேவரீர்கட்டளையிட்ட விதமாகவே தீர்த்தமாடி வழி பாடு முதலானவைகளைச் செய்யவேண்டுமென்றால் மிகுந்தசிறப்புப் பொருந்திய தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும் முடி யாது அப்படியாக மின்னல்போல்தோன்றி க்ஷணத்தி லழியுஞ் சிறி யவாழ்நாளையுடைய மனிதர்களுக்கும் எளிதில் முடியுமோ அப்படி முடிந்தாலும் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் விருட்சங்களுக்கும் கிடைக்கமாட்டாதே சுவாமியென்றுசொன்னார் மார்க்கண்டேயர்—எ ன்றவாறு. (௨௧)

ஆடுமந்தநதிதோறுமினிதெனுமத்தலந்தோறுமனந்தகாலந் ... *
தேடுகின்றபயனுதவுஞ்சிவஞானம்வருந்தாமற்சிறிதும்பாதி... ...*
ளுறுகின்றவுறுப்பிலர்க்குமறிவிலர்க்கும்புலையருக்குநாகாள்வார்க்கு *

மோடுகின்றவிலங்கினுக்குமற்றெவைக்குத் தருமூமொன்றுனாப்பாயெ ன்றான்... .... *

(இதன் பொருள்.)

மனிதர்கள் ஆடுகின்ற அந்தநதிகள்தோறும் இனிசாகிய அந்தஸ்த லங்கள்தோறும் அநேககாலமாக ஸ்நானஞ்செய்து தரிசனமுதலிய வைகளைச்செய்ததனுல் உண்டாகியபிரயோசனமாகிய சிவஞானத்தை வருத்தப்படாமல் கொஞ்சகாலத்தில்தானே பிரதக்ஷணஞ்செய்தல் கும்பிடுதல் தரிசனஞ்செய்தல்முதலியவற்றிற்கு உதவாகிய-கைகால்க ண்களற்றவர்களுக்கும்,விவேகமுரியர்களுக்கும்.நீசர்களுக்கும், நரகத் தில்வீழத்தகுந்த பாவஞ்செய்தவர்களுக்கும்,சஞ்சரிக்கின்ற மிருகங்க ளுக்கும் மற்றுமுள்ள எல்லாச்சீவராசிகளுக்கும் கொடுக்கின்ற ஒருஸ் தலம் அருளிச்செய்யவேண்டுமென்று கேட்டார் மார்க்கண்டேயர்— என்றவாறு. (உஉ)

இப்படியே நமனைவென்ற பெருந்தவனு மிருந்தவரு மிப்பிமே த்திக், கைப்பதும மலர்கொடுதன் காற்பதுமந் தீண்டிகலும் கருணை யாகி, அப்படியேமுத்திதரு மொருதலமுண்டுரைக்குதுமென் றமைத் தால்பின்னை,மைப்படியுங் கண்டத்தா னருணகிரி நினைந்துபர வசத்த ஞனன் ... ... *

(இதன்பொருள்.)

இயமனை ஜயித்த பெருமையாகிய தவத்தினையுடைய மார்க்கண்டே யரும் மற்றுமுள்ளமுனிவர்களும், இந்தப்பிரகாரமாகச் சொல்லி ஸ் தோத்திரஞ்செய்து தாமரைமலர்போன்றகைகளால் நந்திகேசுரருடை ய தாமரைமலரொத்த திருவடிகளை ஸ்பரிசித்து வந்தனஞ்செய்த அ ளவில் அவர்கிருபையுள்ளவராகிநீங்கள்சொன்னபடியேமோக்ஷங்கொ டுக்கின்றஸ்தலம் ஒன்றுண்டு அதைச்சொல்லுகிறோம் என்று கையமர் த்திப் பின்பு விஷந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவன் எழுந்தரு ளியிருக்கிற அருணசலமென்னும் தலத்தைநினைத்து பரவசமானர்நந் திகேசுரர்—என்றவாறு. (உ௩)

அங்கமெல்லா மயிர்பொடிப்ப நடுநடுங்கி விழியிரண்டு மருவிபா யச்-செங்கையினி மலர்குவிய மொழிதளர நெடும்போது தெளிவில் லாமற்- கங்கையணி சடையானே யருணகிரிப் பெருமானே கனற்க ண்ணனே-எங்களையாளுடையானே யெனதுதித்துவிழித்ததற்பின் னி சைப்பதானுன் ... ... *

(இதன்பொருள்-)

தேகமெல்லாமயிர்க்குச் செறியக் கம்பிதங்கொண்டு இரண்டுக் ண்களிலும் நின்று அருவிபோல் ஆனந்த பாஷ்பம்வர மலர்போன்ற இரண்டுகைகளும் ஒன்றாய்க்குவிய வார்த்தைதடுமாற அநேகநாழிகை ஞாபகமில்லாமல் கங்கையைத்தரித்திருக்கின்ற சடையையுடையவனே

அருணகிரியில் எழுந்தருளியவரோ அக்கினிக்கண்களை யுடையவரோ எங்களையாட் கொண்டவரோ என்று ஸ்தோத்திரஞ்செய்து விழித்துக்கொண்டு அதன்பின்பு சொல்லத்தொடங்கினர் நந்திகேசுரர்—என்றவாறு. (உச)

(எழுசீரடிஆசிரியவிருத்தம்.)

சத்தியமதாமொழிவன் முத்திதருமோரா தனைக்குரிய நாமமிகவுண், டத்தனையு நான்மொழிய வெத்தனை வலேனதிலோ ரற்பவளவே புகலுவேன்- சித்தியுதவுங்கவுரி தேசுநகரொன்றுபெயர் தென்னருணையென்றுபெயர்சீர் - வைத்தசிவலோகநகரென்றுபெயர் நீடுசதுர்வாயினகரொன்றுபெயரே ... ... *

(இதன்பொருள்.)

அப்படி ஸ்தோத்திரம் செய்தபின்பு நந்திகேசுரர்சொல்வார்கேளும் மார்க்கண்டேயரே சத்தியமாகச் சொல்லுகிறேன் மோக்ஷத்தைக் கொடுக்கிற ஸ்தலமொன்றுண்டு அதற்குரிய நாமங்களோ அநேகம் அத்தனையேயுடனுஞ் சொல்லுகிறதற்கு நான் எவ்வளவு சத்தியுடையவன் ஆகிலும் அவைகளில் சிலநாமமாத்திரஞ்சொல்லுகிறேன் சித்திகளைக்கொடுக்கிற கௌரிநகரமென்றும், தேசுநகரமென்றும், அழகிய அருணாசலமென்றும், சிறப்புப்பொருந்திய சிவலோகநகரமென்றும் நாகரிகமிகுந்த வாயினகரமென்றும், நூல்களிற்சொல்லப்பட்ட திருநாமங்களையுடையது—எ-று. (உரு)

சத்தபுரியேமுதலெடுத்ததலம் யாவுமொரு தட்டுமொரு தட்டதனிலே, யத்தலமுமிட்டெதிர் நிறுக்கவவைகட்கதிக மானதொளிரத்தநகரம், முத்திநகரொன்றுபெயர் ஞானநகரொன்றுபெயர் மூத்தியதலேச்சுரமெனுஞ், சுத்தநகரொன்றுபெயர் தென்கயிலையென்றுபெயர்சோணகிரியென்றுபெயரே ... ... *

(இதன்பொருள்.)

பின்னும் நந்திகேசுரர்சொல்வார் சத்தபுரிகளென்கிற, அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சிபுரி, அவந்தி, துவாரகை, முதலாகிய எல்லா ஸ்தலங்களையும் ஓர்தட்டிலும் அந்த அருணாசலஸ்தலத்தை ஓர்தட்டிலும் வைத்துநிறுக்க அந்தஸ்தலங்களுக் கெல்லாம் அதிக கனத்தையுடைத்தாயிருந்து பிரகாசிக்கின்ற அந்தஸ்தலத்துக்கு முத்திநகரமென்றும், ஞானநகரமென்றும், தட்சிண கைலாயமென்றும், சோணகிரியென்றும், பெயராம்—எ-று. (உசா)

வாதமிகுகாலவழ லூழியிலேயேறுபுயல் வாதைபுரி யாதநகரஞ், சீதமுதலானபிணி தீமையுடைநூறுபசி சோரவரி தானநகரம், மாதவர்கண் மாதவர்கள் பூசைபுரி மாநகர மாதவர்கணம்மலராட், போதினுறைவேதியர்தொழூறுபெயரோடறுவர்பூசைபுரிதேவநகரம் ... *

(இதன்பொருள்.)

இறுதிக்காலத்திலுண்டாகிய பிரசண்டவாயுவினாலும் ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினாலும் பொங்கிவரும்சமுத்திரப்பிரளயத்தினாலும் யுகமுடிவில் பொழிகின்ற ஏழுமேகங்களினாலும் யாதொருவாதையும் அடையாதஸ்தலம் சைத்திய முதலான பிணிகள் தீமையாகிய யிடையூறுகள் பழியிவைகள் சேராதஸ்தலம் மகத்தாகியதவசிகள் அநேகம் விஷ்ணுக்கள் பூசைசெய்தஸ்தலம் அப்படிப்பட்ட விஷ்ணுக்களுடைய நாபிகளாகிய தாமரைமலர்களில் உண்டாகிய தொண்ணூற்றாறு பிர்மாக்கள் பூசித்ததெய்வீகம் பொருந்தியஸ்தலம் அருணாசலமென்னும் ஸ்தலமாம்—எ-று, (உஎ)

ஒன்றுளது பூமிதனிலின்றுபுதி தன்றுலகு மும்பருமுயர்ந்தவெளி யு,மென்றுளதந் தாருளதுவேதமுடி மீதினி லிருப்பதகலாமலதிலோ ர், குன்றுதலிலாதவொரு வெற்புளது புண்டரிக கோளகையுமூடுருவி யே- நின்றுளது தென்றிசையி லென்றுமழி யாதுநெடு நீருலகு வாழ்வுபெறவே. ... ... *

(இதன்பொருள்.)

இப்படிப்பட்ட தன்மையை யுடைய ஸ்தலம் ஒன்றுண்டு அந்தஸ்தலம் இன்றைக்குப் புதிதாகவந்ததல்ல - இந்தபூவுலகமும் - மேலுலகங்களும் - ஆகாயவெளியும் என்றைக்கு உண்டான துகமோ அந்தநாளிலேதானே உண்டாயிருக்கின்றது நீங்காமல் வேதத்தின்முடிவிலுள்ளது அந்தஸ்தலத்தில்கெடுதலில்லாத ஒருமலையுண்டு அது தென்திக்கில் என்றும் நிலைபெற்றுப் பிர்மாண்ட கோளகையையூடுருவி நிற்கின்றது நெடியகடல்சூழ்ந்தபூமியிலுள்ளவர்கள்வாழும்படிக்கு—எ-று.(உஅ)

(கலிவிருத்தம்.)

ஆரிடமிராக்கத மசுரந் தேவதந் ... ... *
தாருடையமாதிடஞ் சம்பு வென்னுநாம் ... ... *
பேரிடும்லிங்கமே பிறங்கு மெங்கணு ... ... *
மேருடைப்பருபத மிலிங்கமாவது ... ... *

(இதன்பொருள்.)

ஆரிஷமென்றும்- ராக்ஷசமென்றும்- ஆசுரமென்றும் - தைவதமென்றும்- மாலையைத் தரிக்கின்ற மானிடமென்றும்- நாமங்கள் பெற்ற லிங்கங்கள் எந்தஸ்தலங்களிலும் பிரகாசிக்கும் இந்தஸ்தலத்திலோவென்றால் மலையேலிங்கமாயிருக்கின்றது—எ-று, ரிஷிகளாலே பூசைசெய்யப்பட்டது ஆரிஷலிங்கம்ராக்ஷசர்களாலேராக்ஷதலிங்கம்தேவர்களாலேதைவதலிங்கம்மானிடராலேமானிடலிங்கம். (உகூ)

செங்கனன்முதல்யுகந் திரேதைமாமணி... ... ... *
பொங்கிய துவாபரம் பொலிந்தபொன்னிறந் ... *
தங்கியகலியுகந் தன்னிலேசிலை ... ... *
யங்கமாமதன்பெய ரருணபூதரம் ... ... *

(இதன்பொருள்.)

முதல்யுகமாகிய கிர்தயுகத்தில் சிவப்பாகிய அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் மிகுந்தபிரகாசத்தையுடைய பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும், திருவுருக்கொள்ளும் அந்தமலைக்கு அருணாசலமென்னும் திருநாமம்—என்றவாறு. (௯௰)

கருவியாமுகக்கடைச் சொரியுங்காரின... ... ... *
முருவமேழன்றியொவ் வொன்றுகோடியாய்ப்... ...*
பருவமாயிரந் துளி பனையிற்பெய்யினு... ... ... *
மருவியாயடங்குபவ் வசலமீதினில... ... ... *

(இதன்பொருள்.)

எல்லாச்சீவராசிகளும் கருவறும்படி யுகாந்தகாலத்திற் பொழிகின்றமேகங்கள் ஏழென்கிற எண்ணிக்கையில்லாமல் ஒவ்வொன்றுங்கோடியாகிஆயிரம்வருஷம் ஒவ்வொருதுளி பனையின்கனிபோலப் பருமனாகப்பெய்தாலும் அந்தமலையின்மேலசிறிய அருவியாய்ச்சுவறி அடங்கிப்போமல்லாமல் புறத்தில்வரமாட்டாது—எ-று. (௯௧)

அரியயனளவிடா தனந்தகாலமாய்த்... ... ... *
திரிதரினதற்கிணை செப்பலாகுமோ ... ... *
சுரநதிபரவதிற் சுனையினீருண ... ... *
விரவிதன்புரவிமே லேறிச்செல்லுமே... ... ... *

(இதன்பொருள்.)

விஷ்ணுவும், பிரமாவும், பன்றியாகியும், அன்னமாகியும், அநேககோடிகாலமாய்த்தேடி அடிமுடிகாணமல் வருந்துவார்களானால் அந்த அருணாசலத்துக்கு ஒன்றைச்சமானமாகச் சொல்லக்கூடுமோ அதுவன்றி ஆகாயகங்கையானது நம்மை இரக்ஷிக்கவேண்டுமென்று ஸ்துதிசெய்கின்ற அந்தமலையிலிருக்கிற சுனையின்மேலே நீருண்ணச் சூரியன்தேரிற்கட்டியகுதிரையானதுகள் ஏறிநடக்கும்—எ-று. (௯௨)

வெண்மைசேர்புயலவ னடியின்மேவுத ... ... *
வெண்மகிழ்கயிலைமீ திருப்பதொக்குமா... ... ... *
றண்மைசேர்கார்த்திகை விளக்குசாற்றுதன்... ... *
மண்மகண்மகுடமா மணியிற்றோன்றுமே ... ... *

(இதன்பொருள்.)

வெள்ளைநிறமாகியமேகங்கள் அந்தமலையடிவாரத்திற்சேர்ந்தாலப்பாலும் எண்ணப்பட்டகைலாயகிரிமேல், அந்தமலையிலிருக்கிறதுபோ

லாம் குளிர்ச்சிபொருந்தியகார்த்திகைமாதத்தில் கிர்த்திகாதீபம் அந்த மலைமேல் ஏற்றினால் பூமிதேவியினுடைய கிரீடத்தில்பதித்த ரத்தின ம்போலாம்—எ-று. (௯௩)

அன்றுமாதிசைமுக னளவிடாமுதன் ... ...*
மன்றல்சேர்த்திடுமலை வடிவுகொள்கையா ... ... *
னன்றுநம்மருகனு நாமுமோர்குல... ... ...*
மென்றுளமகிழ்ந்ததே யிமையபூதரம்... ... ... *

(இதன்பொருள்.)

முன்காலத்தில் பிரம்மாவினாலும், விஷ்ணுவினாலும், அறியப்படாத பரமசிவன்கீர்த்திபொருந்திய அந்தமலையுருவங் கொண்டதினாலே இமவத்பர்வத ராஜனானவன் இத்தனைகாலம்வரைக்கும் வேறுசாதியாயிருந்தநம்முடையமருமகன் நம்முடையசாதியாய்ப்போய்விட்டானென்று மனதுசந்தோஷித்தான்—எ-று. (௯௪)

பன்னிருதிங்களும் பரிதியானது ... ... *
மன்னியமதியமும் வலமதாய்வரு ... ...*
மன்நிலையுரைக்கவென் னறிவுபோதுமோ... ... *
வுன்னியவாசையா லுரைக்கலுற்றனன் ... ...*

(இதன்பொருள்.)

பன்னிரண்டுமாதமும் சந்திரசூரியர்கள்மகாமேருவை வலஞ்செய்ததுபோலப் பிரதக்ஷிணஞ்செய்து வருவார்களென்றால் அந்தஅருணாசலத்தினது பெருமையைச்சொல்வதற்கு அற்பமாகிய என்னுடையபுத்திபோதுமோ ஆனாலும் சொல்லவேண்டுமென்று நினைவுகொண்ட பத்தியென்பதே சொல்லத்தொடங்கியது—எ-று. (௯௫)

அர்க்கமாமலையுளதடுத்தகீழ்த்திசை... ... ... *
நற்கணாயிரத்தவனண்ணிவாழ்த்துவன்... ... *
தெற்கிலேயுளதுபுத்தேளிர்மாமலை .. ..*
பொற்கையந்தகன்றினம்புகழ்ந்துபோற்றுவான்... *

(இதன்பொருள்.)

அருணாசலமென்னு மலைக்கு அடுத்த கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலையென்றொருமலையுண்டு, அதில்ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரன் இருந்துகொண்டு சுவாமியைத் தோத்திரஞ்செய்வான் அவ்வருணகிரிக்கு அடுத்த தென்பாரிசத்தில் தெய்வமலையென்று ஒன்றுண்டு அதில் சிவந்தகைகளையுடைய இயமன்புகழ்ந்துகொண்டுவணங்குவான்.

மேற்றிசைத்தண்டமாவிலங்கலுண்டதிற் ... *
சேற்றிசைவருணன்முன்செங்கைகூப்புவன் ... *
தோற்றிடும்வடதிசைச்சூலமால்வரை... ... ...*
போற்றியவளகைபான்பொருந்திவாழ்த்துவார்... *

(இதன் பொருள்.)

அந்த அருணாசலமென்னுந் திருமலைக்கு மேல்பாரிசத்தில் தண்டமலையென்று ஒருமலையுண்டு அதில் மகரவாகனத்திலேறுகின்ற வருணராஜன் சிவந்தனையைக்கூப்பி அந்தமலையைவணங்குவான் வடபாரிசத்தில் சூலமலையென்று ஒருமலையுண்டு அதில் எல்லாராலும் போற்றப்பட்ட குபேரனானவன் இருந்துகொண்டு ஸ்துதிசெய்வான்.— என்றவாறு. (௰௭)

மற்றுநால்வரைகனில்வாயுதீயவ ... ... *
னெற்றிசேர்விழியவ னிருதிபோற்றுவன் ... ...*
சுற்றுளமலைதொறுஞ் சுரருஞ்சித்தரு .. .. *
முற்றசீர்வசுக்களு முறைந்துபோற்றுவார் ... ... *

(இதன்பொருள்:)

மற்றநான்குதிக்குகளிலும்இருக்கிற மலைகள்நான்கிலும் இருந்துகொண்டு, வாயு, அக்கினி, ஈசானன், நிருதி, இந்த நால்வர்களும்வணங்குவார்கள் அவைகளைச்சுற்றியிருக்கிற மலைகளிலெல்லாம் தேவர்களும் சித்தர்களும் சிறப்புப்பொருந்திய அஷ்டவசுக்களும் இருந்துகொண்டுவணங்குவார்கள் — எ-று. (௰௮)

தன்னையேநிகருமத்தலத்திலேபுவிக்... ... ... *
கன்னைமாதவம்புரிந்ததிகமாகவே... ... ... *
யென்னையாளுடையவனிடங்கலந்தனள் ... ... *
பின்னையுமதினலம் பேசலாகுமோ... ... ... *

(இதன்பொருள்.)

தனக்குத்தானே ஒப்பாகிய அந்தஸ்தலத்தில்பூலோகத்திற்குத்தாயாகியபார்ப்பதியம்மை மகத்தாகிய அரியதவஞ்செய்து என்னையாட்கொண்டபரமசிவனுடைய இடபாகத்திற் சேர்ந்தாள் ஆனபடியினாலே அந்த அருணாசலத்தின் பெருமையைச் சொல்லவேண்டுமோ.— என்றவாறு. (௰௯)

தன்னிகர்மந்திரம் புவனந்தத்துவம் ... ...*
வன்னமாய்விலங்குமவ்வரையைமாலயன் ... ... *
அன்னமுமேனமு மாகிநாடினர் .. .. *
இன்னமுமவாவிடா திடைநீங்கினார்... ... ... *

(இதன்பொருள்.)

தனக்குத்தானேசமானமாகிய மந்திரம், புவனம், தத்துவம் இவைகளினுருவமாய்விளங்கும் அருணாசலத்தை விஷ்ணு, பிர்ம்மா, இருவரும் பன்றியும் அன்னமுமாகித்தேடி இருந்தவிடத்தையுடையதென்று அறியக்கூடாமையினாலே தங்களுடைய கர்வத்தை நீங்கினார்கள் — எ-று. (௨௰)

மருவியபெரும்புகழ்வச்சிராங்கத ... ...*
னருணையைவலம்புரிந் தமலனையினான்... ... ... *
கருவியகலாதரன் காந்திசாலியென்... ... ...*
றிருவரும்பரகதியெய்தினாரதில்... ... ... *

(இதன்பொருள்.)

மகத்தாகிய கீர்த்திபொருந்திய வச்சிராங்கதபாண்டியன் அருணாசலத்தைப்பிரதட்சிணம் வந்ததினாலேதன்னுடையபாவத்தை நீங்கினான் பெருமைபொருந்திய கலாதரன், காந்திசாலி, இந்தஇருவரும் அந்தஸ்தலத்தைவலம்வந்தும்மோட்சத்தையடைந்தார்கள் — என்றவாறு. (சக)

எழுசீரடிஆசிரியவிருத்தம்.

ஆதிபாமிவர்கடொடங்கி யின்றளவுக் கநேகருண் டருணையை நினைத்துங், காதலானுரைத்துங்கேட்டுமுன்கண்டுங் காலகளால்வலஞ்செய்தும்அதிலே, நீதியாயிருந்துநெறியினானடந்துநெடுங்கயம்படிர்தறம்புரிந்துஞ், சோதிதானொழுதும்பணிவிடைசெய்துந் துளக்கிலாமுத்திபெற்றிருந்தார் ... ...*

(இதன்பொருள்.)

முன் சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத்தொடங்கி அன்றுமுதலின்றைவரைக்கும் அநேகம்பேர் அருணாசலத்தைநினைத்தும்ஆசையோடுஸ்தோத்திரஞ்செய்தும் கேள்விப்பட்டும் தரிசனஞ்செய்தும் கால்களாலேபிரதட்சிணஞ்செய்தும் அதில்நீதிபொருந்திய வேதமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டிருந்தும் மகத்துவம்பொருந்திய தீர்த்தங்களிலேமுழுகியும் தர்மங்களைச்செய்தும் சோதிசொரூப மாகிய சிவனைத்தொழுதும் திருப்பணிசெய்தும்கெடுதலில்லாத மோட்சத்தைப் பெற்றிருந்தார்கள் — எ-று. (சஉ)

அப்பதிதமிழ்நாட்டுளதிடைபெண்ணை யாறுசெய் யாறுபிங்கலையாகுஞ், செப்பியகயிலைநதிசுழிமுனையாஞ் செய்கதொன்றாயிரம்பலமா, முப்பத்துமூன்றுகோடிதேவர்களுமுனிவருந்தவஞ்செய்வாரதற்கோரொப்புவேறில்லை யிம்பர்நாட்டிடத்து மும்பர்நாட்டிடத்துமென்றுரைத்தான்... ... ...*

(இதன்பொருள்.)

அந்தஅருணாசலஸ்தலமான துதமிழ்நாட்டின்கண்ணிருக்கின்றது, அந்தப்பதிக்குவலப்பக்கத்தில் வருகிறபெண்ணையாறு இடையென்னுநாடியாகும், இடபக்கத்தில்வருகிற செயாறு பிங்கலையென்னுநாடியாய், கமலையென்கிறநதி சுழிமுனையென்னு நாடியாகும், அந்தநதிகளிலஸ்நானஞ்செய்தால் ஒன்றுக்கு ஆயிரம்பங்குபலன்வரும், முப்பத்துமுக்கோடிதேவர்களும் முனிவர்களும் அந்தஸ்தலத்திலே தவஞ்செய்வார்கள் — அதற்குச்சமானம் இந்தலோகத்திலும்மேலுலகங்களிலும் இல்லையென்றுசொன்னார் நந்திகேசுரர் — எ-று. (சங)

அற்றமிலவன்சொ லருணையின்சிறப்பா கேட்கப்பெற்றுருகியமுனிவன், மற்றுளதலத்திலதிகமென்றுரைத்த வாய்மையைமனங்கொளா துரைப்பான், சிற்றறிவுடையேனுதலா லெ சொற்றெளிர்ந்தே ன்னன சொனுனதனை, முற்றுமுணர்ந்தான் மொழியென மொழிந்தான் முனிவனுமவர்க்கிவைமொழிவான். ... ...*

(இதன்பொருள்.)

சிவபக்தியிற் சோர்வில்லாத நந்திகேசுரராற்சொல்லப்பட்ட அருணாசலத்தின்மகான்மியத்தினைமேலே இருதயமகிழ்ந்து உற்கத்தையடைந்தமார்க்கண்டேயர் மற்றச்சிவஸ்தலங்களைப்பார்க்கிலும் அருணாசலம் அதிகமென்று சொன்னதை மனதில் ஒப்புக்கொள்ளாமல் சொல்வார், சுவாமி நான்சிறிய அறிவையுடையவனானபடியினாலே நீங்கள்திருவுளம்பற்றியது நன்றாய்த் தோன்றவில்லையென்று சொல்ல, அதுகேட்டுச் சகலத்தையும் உள்ளத்திலுணர்ந்த நந்திகேசுரர் உடக்கண்டான அந்தச்சந்தேகத்தைச் சொல்லுமென்றுகேட்க மார்க்கண்டேயர் அவர்க்குச்சொல்வார்—எ-று. (சச)

தில்லையைக்காணக்காசியிலிறக்கச் சிறக்குமாரூர்தனிற்பிறக்க-வெல்லையில்பெருமையருணையைநினைக்க வெய்தலாமுத்தியென் றுரைத்தி, தொல்லையிற்றலங்களுந்தம்மிலொக்குமென் றுரைத்திடாதடிகே, எல்லிருணருணையதிகமென்றுரைத்த தருளென வருள்செய்வானவனும்... ... ... *

(இதன்பொருள்.)

சிதம்பரத்தைத்தரிசனஞ்செய்தாலும், காசியில்தேகத்தை விட்டாலும், சிறப்புள்ளதிருவாரூரிலேபிறந்தாலும், அளவில்லாத பெருமையையுடைய அருணாசலத்தை நினைத்தாலும், முத்திகிடைக்குமென்று அருளிச்செய்தீர். இந்தநாலுஸ்தலங்களையும் ஒன்றுக்கொன்று சமானமென்று திருவுளம்பற்றாமல் சுவாமி அல்லிமலர்களையுடையதடாகஞ்சூழ்ந்த அருணாசலத்தைமாத்திரம் அதிக[illegible] அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயர்கேட்க, அந்த நந்திகேசுரரும் அருளிச்செய்கிறார்—என்றவாறு. (சரு)

இறந்திடிற்றொழிலும்பிறந்திடிற்றொழிலு மெண்ணியபடிசெயமுடியா, பறந்திடுமவைக்குஞ் சிலசில[illegible] பதவோருயிர்க்கு, நிறைந்தபுண்ணியசந்தகர்தமக்கு நி[illegible]டந்திடுந்தொழு நேரா, தறந்திகழ்பயனுற் சிலர்சிலர்க்கொள்ளா மல்லவர்க்கரியதாமுமேவே... ... ... *

(இதன்பொருள்.)

கேளும்-மார்க்கண்டேயரே-ஒருவன் இறக்குந்தொழிலும் பிறக்குந்தொழிலும் நினைத்தபடிமுடியாது, அது இருக்கட்டும் பட்சிசாதிக

ளுக்கும், மிருகங்களுக்கும், விருட்சமுதலாகிய ஓரறிவுயிருக்கும், புன்மைநிறைந்த நீசருக்கும், குருடருக்கும், சடாபதியினது நிர்த்தசபையைத் தரிசனம்பண்ணக்கூடாது. பூர்வசன்மபுண்ணியத்தினாலே அந்தச்சபைக்குட்போய்க் காணத்தக்க அருந்தவர்களாகிய சிலர்க்குமாத்திரங்கிடைக்கும்-மற்றவர்களுக்கு அரியதாகும் அந்தஸ்தலம்—எ-று. (சசா)

குண்டகர்பதிதர்கோளகர்பழியர்கொலைவினைபுரிப்பினிற்றுறைந்தோர், கண்டகர்நெறிதூரத்தினிலிருப்போர் கருணைசேரருணபூதரத்தை, யெண்டகவொருகாலினைத்திடமுத்தி யிவரலால்விலங்குபண்மரங்கள், முண்டகமுதலா யினவுமுன்காண முளைத்திட முத்திசேர் பெறுமால் ... ...*

(இதன்பொருள்.)

ஸ்திரீயானவள் தன்கணவனுக்கன்றி வேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டகர்களுக்கும் பாவிகளுக்கும், விதவைபெறப்பட்ட கோளகர்களுக்கும், நீசருக்கும், கொலைசெய்கிறவர்களுக்கும், பாபவினைநிறைந்தவர்களுக்கும், தீமைசெய்கிறவர்களுக்கும், நெறிதூரத்திலிருப்போர்களுக்கும், கிருபைபொருந்தியஅருணசலஸ்தலத்தை நன்றாகவொருதரம் நினைக்கமுத்தியுண்டாகும் இவர்களல்லாமல் மிருகங்கள், பட்சிகள், மரங்கள், தாமரைமுதலாகிய கொடிபூண்டுகளும் அந்தவூரில்முளைத்தால் முத்தியையடையும்—என்றவாறு. (சஎ)

சிலையெலாமிலிங்க மதுசிவலோகந் தேவர்பாதவங்கள்பாதவங்க, ளலையுலாம்புனல்கள் சடையுலாங்கங்கை யருந்துமூணமரருண்ணமுதா, மலைவிபேவருதல் புவிவலம்வருத லுரைத்தசொல் சுருதியாமுறங்கல், மலைவறுசமாதியாகுமத்தலத்தை மானுமோமற்றொருதலமே... ...*

(இதன்பொருள்.)

அந்தஸ்தலத்திலிருக்கிற சிலைகளெல்லாம்லிங்கங்களாம், ஆனபடியினாலே அதுசிவலோகமாகும், அந்தஸ்தலத்திலிருக்கிற விருட்சங்களெல்லாம் கற்பகவிருட்சங்களாம், அந்தஸ்தலத்திலிருக்கிற அலைபொருந்திய நீரெல்லாம் சுவாமியின்சடையிலிருக்கிற கங்கையாகும், அந்தஸ்தலத்திலிருக்கிறவர்கள் சாப்பிடுகிற உணவுகளெல்லாம் தேவாமிர்தமாகும், அந்தஸ்தலத்திற் சஞ்சரித்தல் பூப்பிரதட்சிணஞ் செய்தலாகும், அவ்வூரிற்சொல்லும்வார்த்தைகள் வேதமாகும், அந்தஸ்தலத்தில நித்திரைசெய்தல் நிஷ்டைகூடிச் சமாதியிருத்தலாம், ஆனபடியினாலே அதற்குமற்றொருஸ்தலஞ்சமானமாகுமோ—என்றவாறு. (சஅ)

முத்தழல் புரிந்தோர் நான்மறை தெளிந்தோ ரைவகை வேள்வியு முடித்தோ, ரொத்தவம் புரிந்தோ ரெவ்வறஞ்செய்தோ ரெண்வகை

யோகியரெனினு - மத்தலநினையாதவர்க்கில்லைமுத்தி யாதலாலமரர்வா
னிருந்தும் - சுத்தமானிடராய்ப்பிறந்ததை நினைத்துந் துளக்கிலாமுத்
திபெற்றிருப்பார். ... ... *

(இதன்பொருள்)

காருகபத்தியம் - ஆகவனீயம் - தக்ஷிணாக்கினியம் - என்கின்ற மூன்றக்கினியைவளர்த்தவர்களும், ருக்கு, எசுர், சாமம், அதர்வணம், என்னும் நான்கு வேதங்களை யுணர்ந்தவர்களும் - பிரமயாகம், தெய்வயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானிடயாகம், என்கின்ற ஐவகையாகங்களையும் நிறைவேற்றினவர்களும், எத்தன்மையாகிய தவஞ்செய்தவர்களும், எப்படிப்பட்ட கருமஞ்செய்தவர்களும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படுகிற அஷ்டாங்கயோகஞ் செய்தவர்களும் ஆகிய இப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அந்த அருணாசலத்தை நினைக்காவிட்டால் அவர்களுக்கு முத்தியில்லை. ஆனபடியினாலேதான் தேவர்களாய்-சொர்க்கலோகத்தி லிருந்தவர்களும் ஞானமுள்ளமானிடராகப் பூமியிற்பிறந்து அந்த அருணாசலத்தைத் தியானஞ்செய்து கெடுதலில்லாதமுத்தியை அடைந்திருப்பார்கள்—எ-று. (சகூ)

பொருவிலாச்சுவர்க்கத் தமிர்தமுண்டிருப்போர் போகபூமியைத்
தனிபுரப்போராருணைமாநகரிற் கிருமியாய்ப்பிறப்ப தநிகமென்றாதர
ங்கொள்வார், மருவுமப்பதியிற் பிறப்பது நூறு மகம்புரிந்தவர்க்க
லாற்கிடையா - திருவருள்படைத்தார்க் கெளிதலான்மற்றத் தேவர்யா
வருக்குமதரிதே. ... ... *

(இதன்பொருள்.)

ஒப்பில்லாதசொர்க்கலோகத்தில் - நரை - திரை - மூப்பு - உண்டாகாதபடி அமிர்தமுண்டிருப்போர்களாகிய தேவர்களும் போகத்தையநுபவித்தற்குரிய அந்தச்சொர்க்கமுதலானலோகங்களைத் தனித்தனியாளுகின்ற தேவேந்திரன் முதலாகிய திக்குப்பாலகர்களும் அருணாசலஸ்தலத்தில கிருமியாய்ப்பிறக்கிறது சொர்க்கத்தினிடத்தை அநுபவித்தலைப்பார்க்கிலும் அதிகமென்றுபிறப்பதற்கு ஆசைப்படுவார்கள். தெய்வத்தன்மைபொருந்திய அந்தப்பதியில்பிறக்கிறது நூறுயாகம்செய்தவர்களுக்கு அல்லாமற் கிடையாது கடவுளினுடைய கிருபையைபெற்றவர்களுக்குக் கிடைக்கும். அவர்களன்றிமற்றத்தேவர்கள் முதலான மகத்துவம் பொருந்தியயாவர்க்கும் அப்படிப் பிறக்கிறது கிடைக்கமாட்டாது—எ-று. (ருய)

வெற்றிரும்பிடத்திற் செம்பில்வெண்கலத்தில் வெள்ளியில் வெ
ள்ளியபொன்னிற், குற்றமொன்றில்லாக் குயிற்றியமணிபோற் குல
வியசிவனிருந்திடுவன், மற்றைத்தலத்தி லருணையென்னூராக்குத்வளம்

பதிதனிலெழுந்தருள்வன், பொற்றகட்டிடத்துமணியெனவுரைத்தான்
புனிதனாகியவருணந்தி .. .. *

(இதன்பொருள்.)

சொற்பவிலைபெற்ற இரும்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளைப்பொன்னிலும், பதிக்கப்பட்ட யாதொருதோஷமுமில்லாத மாணிக்கரத்தினம்போல் மற்றஸ்தலங்களில் எங்கும் நிறைந்த பரமசிவன் எழுந்தருளியிருப்பார். பொன்னினாற்செய்த தகட்டில் பதிக்கப்பட்ட அந்தரத்தினம்போல் அருணாசலமென்று சொல்லப்பட்ட வளம்பொருந்திய ஸ்தலத்தில் எழுந்தருளியிருப்பாரென்று பரிசுத்தமாகிய நந்திகேசுரர் திருவுளம்பற்றினார் ஆனபடியினாலே எல்லாஸ்தலத்திற்கும் இது அதிகமாம்—எ-று. (௫௧)

கண்ணினால்விளங்குந்திருமுகமுகத்தாற்கரியகண்விளங்குமவ்விரண்டின் - பண்ணினால்விளங்குமுடலெலா மவைபோற் பரமனால்விளங்குமவ்வருணை, யண்ணமூன்விளங்கு மருணைமா நகரா லமலனாருணைமா நகரா, லெண்ணிலாப்பதிக ளவைகளும்விளங்குமெவற்றினுஞ்சிறந்ததென்றிசைத்தான். ... ... *

(இதன்பொருள்.)

கேளும்பார்த்தண்டேயமோ கண்களிருக்கின்றதினால் முகம்பிரகாசிக்கிறது முகத்திலிடத்திலிருக்கிறதினால் அந்தக்கண்கள் விளங்கிக்கொண்டிருக்கும் இந்தஇரண்டினுடைய சேர்க்கை அழகினாலே தேகமெல்லாம் விளங்கும் இவைபோல் பரமசிவனாலே அருணாசலம்சிறப்படைந்திருக்கும் அந்த அருணாசலத்தால் சுவாமியும் அதிக அமிசையுடையவராய் விளங்குகிறார் அந்தஸ்தலத்தினாலும் அதில் எழுந்தருளியிருக்கிறசுவாமியினாலும் எண்ணிக்கையில்லாத எல்லாக்ஷேத்திரங்களும் சிறப்பாய்விளங்கும் ஆனபடியினாலே யெல்லாஸ்தலங்களிலும் அது சிறந்ததென்று திருவாய்மலர்ந்தருளினார்—எ-று. இதனால் எல்லாஸ்தலங்களும் உடலாகவும் அருணாசலஸ்தலம் முகமாகவும் அதில்சுவாமி கண்ணாகவும் சொல்லப்பட்டது. (௫௨)

வீசலரிலை மெய்குளிர்ந்திடும் கொடியின் வேரினீர்சொரிந்திடினதும்போற், பூசையருணை நகரிலேசிறிதும் புரையறநடக்குமேயாகிற், காசிமேய முதலெத்தலமெலாம்பூசை கனம்பெற நடந்ததாமிலையே, லீசாவாழந்தத் தலமெலாம்பூசை யியற்றியே னியற்றிடாதிருந்தேன் ... ... *

(இதன்பொருள்.)

ஒருகொடியினதுவேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற மலரும் வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும் குளிர்ச்சியையடையும் அதுபோல் அருணாசலஸ்தலத்தில சுவாமிக்கு எவ்வளவாகிலும் பூசை குற்றமில்லாமல் நடக்குமானால் காசிமுதலாகிய எல்லாஸ்தலங்

களினும்மேன்மையாகப்பூசைநடந்தாலும் அந்தத்திருவண்ணாமலையில் பூசைநடவாவிட்டால் மற்றஸ்தலங்களில் நடந்தாலென்ன நடவாவிட்டாலென்ன ஒருபயனுமில்லை—எ-று. (௫௩)

நிலந்தொழுமருணா சலந்தனிலிருந்து நெஞ்சினிலையமாய்ப்பிரிந்
தோர், தலந்தனைவிரும்பிநடந்தவர்முன்செய் தவங்களுமறங்களுந்தவ
ருங், குலந்தனிலுதித்தோராயினும்புலையர் குணத்தவராயினுங்கொடி
ய, நலந்தவருயிரோ டிருக்கினுமதற்கோ ருவமைசொன்னவர்க்குமீ
தொக்கும்... ... ...*

(இதன்பொருள்.)

உலகத்தார்போற்றுகின்ற அருணாசலஸ்தலத்திலிருந்து இதைவிட உயர்ந்த ஸ்தலங்களிருக்குமென்று மனதிலசந்தேகங்கொண்டுபிரிந்து ஒருக்ஷேத்திரத்தைநாடி நடந்தவர்களுக்கும் அவர்கள்அதற்குமுன் செய்யப்பட்டதவங்களும் தருமங்களும்பிரயோசனப்படாதுகள், அவர்கள் நல்லகுலத்திற்பிறந்தவர்களானாலும் நீசராவார்கள், நல்லகுணத்தையுடையவர்களானாலும் கொடியகுணத்தவராவார்கள், அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள், அந்தஅருணாசலத்துக்கு வேறொரு ஸ்தலங்களைச் சமானமாகச்சொன்னாலும் இந்தத்தோஷங்களெல்லாம் உண்டாகும்—எ-று. (௫௪)

என்றுஞானருணைச் சிறப்பெலாமுனிவர்க் கேதுவோடெடுத்தினிதிய
ம்பிக், கன்றுமான்மழுவுஞ் சுரிகையுந்தரித்த கடவுணந்திருந்தன னவ
னை, சென்றுசென்றிறைஞ்சி நெக்குநெக்குருகிச் சென்னிமேற்செ
ங்கைகள்கூட்டி, யொன்றுமானந்தப் பெருங்கடலிடைப்புக் குணர்ச்சி
யாய்முனிவனிருப்பான்... ... ...*


(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் அருணாசல ஸ்தலத்தினதுபெருமையை ஏதுவோடு முனிவர்களுக்கு இனிதாக எடுத்து அருளிச்செய்து, மான், கன்று, மழு, உடைவாள், இவைகளைத்தரித்த நந்திகேசுரரானவர் வீற்றிருந்தார். அந்தநந்திகேசுரரைப் பலவாறு வந்தனஞ்செய்து நெக்குவிட்டுருகி சிரசின்மேல் சிவந்தகைகளை நெடுநேரங்கூட்டி ஒன்றுபட்டவராய்ஆனந்தசமுத்திரத்தில் முழுகித்தன்னைமறந்தவராகிப்பின் புணர்ச்சியடைந்து இதனைசொல்வார் மார்க்கண்டேயர்—எ-று. (௫௫)

முதலாவது

திருநகரச்சருக்கம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௫௫.



சிவமயம்.

திருமலைச்சருக்கம்.

(கலிநிலைத்துறை.)

எந்தையே யருணந்தியே யடியவர்க் கெளியாய்...........*
சிந்தையான் றுமகிழ்ந்தன னருளையின் சிறப்பா... ...*
வந்தமாநக ரிடத்திலே சிவனழல்வடிவாய்..................*
வந்தவா றுடன் மலையாகிய வகையும்..........................*

(இதன்பொருள்.)

அருணாசலஸ்தலத்தினது மகிமையைக்கேள்வியுற்ற மார்க்கண்டேயர்சொல்வார், எம்முடைய ஆண்டவரே, அடியேனுக்கு அருள் செய்த நந்திகேசுரசுவாமியே, அடியார்களெளியவரே, நீர் அருளிச்செய்த திருவண்ணாமலையென்னும் ஸ்தலத்தினது மகிமையினால் மனங்களிப்படைந்தேன். அப்படிப்பட்ட ஸ்தலத்திலிடத்திலே பரமசிவனானவர் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும்-அதன்பின்பு மலையுருவமானதும்—என்றவாறு. (க)

அம்மலைச்சுட ரடிதலை தெரிகலா தயன்மால்... .. *
விம்மலுற்றது மவர்க்கருள்செய்ததும் விளம்பாய்... *
கைம்மலக்கடக்கரியுரி புனைந்திடுங் கயிலை... ... *
செம்மலைத்தொழுஞ் செல்வனேயெனவவன் செப்பும் *

(இ-ள்.) அந்த அக்கினிமலையினது அடியும்முடியும் அறியக்கூடாமல், பிர்மாவும், விஷ்ணுவும், வருத்தப்பட்டதும்-பின்பு சுவாமி அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்ததும், திருவுளம்பற்றவேண்டும் கைபொருந்தியமலைக்கு ஒத்ததாய் மதத்தையுடையயானையினது சர்மத்தைத்தரித்தருளிய கைலாயவாசராகிய, பரமசிவனை வணங்கும்படியான செல்வத்தையுடையவரேயென்று சொல்ல, அந்த நந்திகேசுரர்சொல்லத்தொடங்கினர்—என்றவாறு. (உ)

பஞ்சபாதக மொருவனப் பதியிலே பண்ண ... *
நெஞ்சினுள்ளினைத் திடனுற நினைத்ததே பரமாய்த் ... *
தஞ்சமாகிய முத்தியா மெனமறை சாற்று ... ... *
மஞ்சொலாலது மொழிந்தவர்க்கெனைபெறரிதே ... *

(இதன்பொருள்.)

ஒருவன்அந்த அருணசலஸ்தலத்திலே பஞ்சபாதகங்களைச்செய்யவேண்டுமென்று நினைத்தாலும், அப்படிநினைத்ததேமேற்பட்டபுண்ணியமாகி அதனால் பற்றுக்கேடாகிய முத்தியுண்டாகுமென்று வேதங்கள் முறையிடும், அஃதையுண்டாக்கும் நல்லசொற்களினாலே ஸ்தோத்திரஞ்செய்தவர்களுக்கு என்னபேறுகிடைக்கமாட்டாது.எ-று.

ஆகையாலுமக்கன்றியே யெமக்குமுண்டதிசஞ் ... *
சோகமோகங்கள் தவிர்ப்பவனொருபரஞ் சுடராய் ... *
மாகமூடறவளர்ந்தது மாலயர்க்காகப் ... ... *
போகலிங்கமென் றனைத்து மொருவகை புகல்வேன் ... ...*

(இதன்பொருள்.)

ஆனபடியினாலே மார்க்கண்டேயரே, இந்தமகாத்மியத்தைக்கேட்கிற உமக்கேஅல்லாமல் எனக்கும்அதிகபலனுண்டாகும், துக்கத்தையும் மோகத்தையும் நீக்கிவிடுகிற சிவன் ஒப்பற்ற பெரியசோதிசொரூபமாய்ப் பிர்ம்மா, விஷ்ணு, இவர்களுக்காக ஆகாயம் அளாவி வளர்ந்ததும், சர்வத்திராணுக்கும் போகத்தைக்கொடுக்காநின்ற லிங்கமென்றுசொல்லும்திருவுருக்கொண்டதும், எனக்குத்தெரிந்தஅளவில்கொஞ்சம் சொல்லுகிறேன்—எ-று. (௪)

ஒடுங்குநாளினிலயனரி யுருத்திரன் மகேச ... *
னெடுஞ்சதாசிவன் விந்துநாதஞ்சத்தி நெறியே ... *
யடங்கிடும்பர சிவத்தினிற்பரசிவ மனைத்துங் ... ... *
கடந்தகத்துவ முடிவிலேநின்றது கருதி ... ... *

(இதன்பொருள்.)

சர்வசம்மாரகாலத்தில் முறைப்படிச் சகலவுயிர்களும் பிர்ம்மாவினிடத்திலே ஒடுங்க, பிர்ம்மா விஷ்ணுவினிடத்திலே ஒடுங்குவார், விஷ்ணு மகேசுரனிடத்திலே ஒடுங்குவார், மகேசுரன் சதாசிவனிடத்தில் ஒடுங்குவார், சதாசிவன் விந்துவினிடத்தில் ஒடுங்குவார், விந்து நாதத்தினிடத்தில் ஒடுங்கும், நாதம் - சத்தியினிடத்திலே ஒடுங்கும், சத்தி பரமசிவத்திலே ஒடுங்கும், அந்தப்பரமசிவம் திருவுளங்கொண்டு எல்லாங்கடந்த தத்துவமுடிவிலே நின்றது—எ-று. (௫)

பரசிவத்தினில் வருபராசத்திபாற் குடிலை ... *
விரவியப்பால தத்துவமனைவிலே விரிந்த ... ... *

மாறுவாமைவரு மொடுங்கிய முறையிலே வந்சா ... *
ரிமகன்படைத் திடுவது நினைந்தன னகத்தில் ... *

(இதன்பொருள்.)

அப்படியெல்லாம் ஒடுங்கினகாலத்தில் தனியாகிநின்ற பரமசிவம் உலகம் உண்டாகவேண்டுமென்று திருவுளங்கொண்டருளியபோது அந்தச் சிவத்தினிடத்திலேதோன்றிய பராசத்தியினிடத்தில் குடிலையென்னுஞ் சத்திதோன்றியது. அதில் பெருமைபொருந்திய மற்றத்தத்துவங்கள்முறைமையே உண்டானதுகள். பஞ்சகிர்த்தியங்களுக்குரியபிர்ம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுரன், சதாசிவன், என்னும் ஒடுங்கிய முறையே உண்டானார்கள்- விஷ்ணுவினுடையபுத்திரனாகிய பிர்ம்மாவானவர்உலகத்தைச் சிருஷ்டிக்கிறதற்கு மனதிலெண்ணினார்—எ-று

மரீசியங்கிரன் புலத்தியன்புலகனுன் மறையோர் ... .. *
கிருதுவத்திரி சனபதியெழுவருங் கிளைத்தா ... .. *
ருரியதக்கனும் வலப்பகப்பெருவிர லுதித்தான் ... *
பிருகுமார்பினு மறத்திறைமுகத்தினும் பிறந்தார் ... *

(இதன்பொருள்.)

அப்படிப் பிர்ம்மா நினைத்தவுடனே, மரீசி, அங்கிரர், புலஸ்தியர், புலகர், கிருது, அத்திரி, சனபதி, என்கிற எழுரிஷிகளும் பிறந்தார்கள். தக்கன்வலதுகாற் பெருவிரலிற்பிறந்தான், பிருகு-மார்பினிடத்திற் பிறந்தான், தருமதேவதை முகத்திற்பிறந்தது—என்றவாறு.

உன்னுமைந்தரின் மரீசிபாற்காசிப னுதித்தான் ... ... *
பன்னுதக்கனு மைம்பதுபெண்களைப் பயந்தா ... ...*
னன்னகாசிப னகர்பதின்மூவரை யணைந்தான் ... ... *
முன்னளாகிய வதிதியாலிமையவர் முளைத்தார் ... ...*

(இதன்பொருள்.)

பிர்ம்மாவினிடத்திற்பிறந்தபிள்ளையாகியஎழுவரில்-மரீசிரிஷியினிடத்திற்காசிபரிஷிபிறந்தார், தக்கனென்பவன் ஐம்பதுபெண்களைப்பெற்றான், அந்தஐம்பதுபெண்களிலே பதின்மூன்றுபெண்களைக்காசிபர் விவாகஞ்செய்தார், மூத்தவளாகிய அதிதியிற்றில்முப்பத்துமுக்கோடிதேவர்களும் பிறந்தார்கள்—எ-று. (அ)

இருமைசேர்ந்திதி யிரணியவிரணியாக்கர்களைத் ... ... *
தெரியவீன்றனள் சிறப்புறுந்திதியெனு மிளையாள் ... *
தருணமைந்தரி லிரணியன்பிரகலா தனையே ... ... *
மருமைமைந்தர்களைவரைப்பயந்தன னவருள் ... ... *

(இதன்பொருள்.)

அதன்பின்பு அதிதிக்கு இளையவளாகிய சிறப்புப்பொருந்திய திதியென்பவள், இரணியன், இரணியாட்சன், என்கிற இரண்டுபேரை

யும்பிரசித்தமாகப்பெற்றாள். அந்த இருவரில் இரணியன்,பிரகலாதனை
ன்முதல்ஐந்துபிள்ளைகளைப்பெற்றான்—எ-று. (கூ)

பிரகலாதனன் றவத்தினால் மூவரைப்பெற்று ... *
னருளுமைந்தரில்விரோசனன்மாவலியளித்தான் ... *
பரவுமாவலிவாணனென்றொருவனைப்பயந்தா ... *
னரனருச்சனைபுரிந்தவனயன்றொழவிருந்தான் ... *

(இ-ள்) அந்தப்பிரகலாதனன்தவத்தினாலே மூன்றுபிள்ளைகளைப்பெ
ற்றான்; அந்த மூவரில் விரோசனனென்பவன் - மாவலியென்பவனை
ப்பெற்றான், மாவலி - வாணாசுரனைப்பெற்றான், அந்தவாணாசுரன் ப
ரமசிவனைப் பூசித்துப் பிர்ம்மாதொழும் படியாக வாழ்வுபெற்றிருந்
தான்—என்றவாறு. (ய)

. தனுவளித்தவன்சம்பரன்முதலினோர்பதின்ம ... *
ரனையகானவரப்பெற்றனன்சிங்கிகையணங்கும் ... *
பணியிராகுவேமுதலொரு நால்வரைப்பயந்தாள் ... *
பிணையளாங்கொருமூன்றுபேரசுரரைப்பெற்றாள் ... *

(இதன்பொருள்.)

மலைகளினுடைய சிறகையறுக்கிற தற்குத் தேவேந்திரனுக்குத் த
ன்முது கெலும்பைக் கொடுத்துத் தேகத்தை விட்டவராகிய ததீசி
ரிஷியென்பவர் சம்பரன்முதலாகிய பத்து அசுரர்களைப் பெற்றார்,
அந்தப்பத்துபேரில் சிங்கிகை யென்பவள் இராகுமுதல் நாலுபிள்
ளைகளைப்பெற்றாள், அவளுக்கு இளையவள் மூன்றுபேர் அசுரரைப்
பெற்றாள்—என்றவாறு. (யக)

காலகேயர்களறுவரைப்பயந்தனள்காலை... ... *
சாகநீள்சிறைக்கருடனுமருணனுந்தவிர ... *
நாலுபாலரைப்புதல்வரா வினதையுநயந்தாள் ... *
ஆலநோவிழிக்கத்துரு பணியெலா மளித்தாள் ... *

(இதன்பொருள்.)

காலையென்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும் பெற்றாள், மிக
வும் நீண்டிருக்கிற சிறகினையுடைய கருடன் அருணனோடுகூட நாலு
பிள்ளைகளை வினதையென்பவள் பெற்றாள், விஷத்தை யொத்த கண்
களையுடைய கருத்துருவென்பவள் பாம்புகளெல்லாவற்றையும்பெற்
றாள்—என்றவாறு. (யஉ)

அரிட்டையென்பவ ளிடத்திலே அரம்பையேமுதலாய்த் ... *
திரட்டிமங்கையர் பிறந்தனரிலங்கிளை முனித
னருட்டவத்திலெண் ணிரட்டிகந்தருவரா யளித்தா ... *
ளுருட்டுவாள்விழிக்கபிலைபாற்பதின்மர்வந்துதித்தார் ... *

(இதன்பொருள்.)

அரிட்டையென்பவளிடத்தில் அரம்பையூர்வசி முதலான பெண்கள்பிறந்தார்கள். இலங்கிளை யென்பவள் முனியினுடைய கிருபையினாலே பதினாறு வகையாகிய கந்தருவர் களைப் பெற்றாள். வாள் போன்ற கண்களையுடைய கபிலையினிடத்தில் பத்துப்பிள்ளைகள் பிறந்தார்கள்—என்றவாறு. (௰௩)

அங்கிரர்சனபதிகள்காந்தருவனையளித்தார் ... ... *
தங்குமத்திரிகதிர்பதிபுலத்தியன் றனையர் ... *
பொங்கிராக்கதர் வானரர்கின்னரர்புலக ... ... *
னங்குமைந்தர்கிம்புருடர்பின் விலங்கையுமளித்தான் ... *

(இதன்பொருள்.)

இங்கிரர் - சனபதி - யென்கிற இருவரும் காந்தருவனைப் பெற்றார்கள். அத்திரியென்பவர் - சூரிய- சந்திர ரிருவரையும் பெற்றார். புலத்தியர் - இராட்சதர்- வானவர்- கின்னரர் - இவர்களைப் பெற்றார். புலகாரிஷியென்பவர் கிம்புருடரையும் மிருகங்களையும் பெற்றார்-என்றவாறு. (௰௪)

தருணராகியவசுக்களைச்சனபதிதந்தான் ... ... *
பிருகுவென்பவன்கவியுடன்சவுனரைப்பெற்று ... *
னிருவரோடுசெந்திருவையும் பிருகுபெற்றெடுத்தான் ... *
பருவமைந்தரிற்கவியுமோவெள்ளியைப் பயந்தான் ... *

(இதன்பொருள்.)

சனபதியென்பவர் பின்னுந்தருணம் பொருந்திய அஷ்டவசுக்களைப்பெற்றார். பிருகுவென்பவர் கவியென்பவனையும் சவுனகரையும்பெற்றார். இந்த இருவரைப்பெற்றது மல்லாமல் பின்பு லட்சுமியையும்பெற்றார். அந்தப்பருவம்பொருந்திய பிள்ளைகளில், கவியென்பவர் சுக்கிரனைப்பெற்றார்—எ-று. (௰௫)

பரியதானதன் றேவிமூக் கிரண்டினும் பரிதி ... *
புரியவாண்பரியாகியிந்திரியத்தையூற்ற ... ... *
வரிசை பற்றிய மருத்துவ ரிருவரும் வந்தார் ... *
விரிசராசரம்பிறந்தன பலபலவிதமாய் ... ... *

(இதன்பொருள்.)

சூரியன் மனைவியைச் சேருகிறதற்கு யத்தனப்பட்டபோது அவளதற்குப்பொருந்தாமல்பெண்குதிரையாயோடினாள் சூரியன் ஆண்குதிரையாய்த் துரத்த அவள்திரும்பிப்பார்த்தாள். அப்போது சூரியன் றனது பெண்சாதியினிரண்டுமூக்கிலும் இந்திரியத்தைஊற்றவரிசையாகிய அசுவனி தேவர்களிருவர் பிறந்தார்கள். அதன்பின்பு விரிந்த சரமும் அசரமும் அநேகவிதமா யுண்டாயின—எ-று. (௰௬)

(கலிவிருத்தம்.)

கண்டுலகெலாநமதுகற்பனைகளென்றே ... ... *
புண்டரிகவேதியன்மதத்தரிபுரத்தில் .. ... *
தண்டியெதிர்கொண்டுபகைதங்கவிசைவண்டார் ... *
வண்டுளபமாயவனைவைதுரைவழங்கும் ... ...*

(இதன்பொருள்.)

இப்படிச்சகலமும்உண்டாக்கிய பிர்ம்மதேவர்இந்தவுலகெல்லாம்நம்முடைய சிருஷ்டியினாலல்லவோ உண்டாயினவென்று அகங்காரங்கொண்டு அதனால் வைகுண்டத்தில் வலுவிற்போய் எதிர்த்துப்பகைகொள்ளும்படி சங்கீதம்பாடாநின்ற வண்டுகள்சூழ்ந்த துளசிமாலையைத்தரித்த விஷ்ணுவைப்பார்த்து அவமதித்துச் சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௰௭)

ஏழுலக மேழுபிலமேழுபுய லோமே ... ... *
பூழிமுத லேழுகிரி யாம்வகையியற்றி ... *
வாழுமுயிர் யாவையும் வருத்திட மனத்தார் ... ... *
பாழிகொண் மரீசிமுதன் மைந்தர்கள் படைத்தேன் ...*

(இதன்பொருள்)

வாராய் விஷ்ணுவே, பதினாலுலகங்களையும் கறுத்த மேகங்களையும் சத்தசமுத்திரங்களையும் முதன்மையாகிய சத்தகுலபருவதங்களையும் உண்டாகும்படி மனத்தினால்படைத்து இப்பொழுதுவாழ்கின்ற எல்லா உயிர்களையும் உண்டாகக்கவலிமைபொருந்திய மரீசிமுதல் ரிஷிகளைப்பெற்றேன்—எ-று. (௰௮)

மைந்தரது மைந்தர்கள் குருக்களுடன் வானோர் ... ..*
சந்திரன் முதற்பெரியகானவர்க ளானோர் ... ...*
கந்தருவர் கிம்புருடர் சித்தர்கணநாத ... ... *
ரிந்திரன் முதற்றிசைக ளெட்டினு மிருப்போர் ... ..*

(இதன்பொருள்.)

வாராய் விஷ்ணுவே, என்னுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள்குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாத்தேவர்களும் சந்திரசூரியர்களும் அசுரர்களும் கந்தருவர் கிம்புருடர் சித்தர் கணநாதர்களும் தேவேந்திரன் முதலாகிய திக்குப்பாலகர் எட்டுபேருமாயிருக்கிறார்கள் இவர்களெல்லாரும் என்னாலல்லவோ உண்டானார்களென்றுபின்னுஞ்சொல்வார் பிர்ம்மதேவர்—எ-று. (௰௯)

எஞ்சுதலி லாவிறைவ னென்பதனையென்பேர் ... ...*
கஞ்சனெனு மைந்தனை மறந்திடு கரத்தா... ... ...*
வஞ்சலில் படைப்பொழியி லெப்படி யளிப்பாய்... *
செஞ்சுவரிலா தெழுது சித்திரமு முண்டோ ... ... *

(இதன்பொருள்.)

குறைவில்லாத சகலத்துக்கும் நானே கர்த்தனென்பதையும், என்பி ள்ளைதான் பிர்ம்மாவென்பதையும், மறந்துவிட்டு-நான் கையினாலேஉல கத்தைப் படைக்காவிட்டால் நீயெப்படிக்காப்பாற்றுவாய் சுவரில்லா மல் எழுதுகிறசித்திரமு முண்டோவென்று பின்னுஞ்சொல்வார் பி ர்ம்மதேவர்—எ-று. (உ௰)

அளித்திடுகளிப்பினை யகத்தினி விடாயேல் ... ...*
வெளிப்படவொருத்தனை யளித்திடவிதிப்பேன் ... *
குளிர்ச்சிபகடற்கிடை குதித்திடதனுள்ளே... ... *
யொளித்திடுசரத்திர னுனைச்சருவு மென்னே ... ... *

(இதன்பொருள்.)

வாராய் விஷ்ணுவே, சகலத்தையும் ரட்சிக்கிறோமென்கின்ற மதத் தைவிட்டுவிடு, நீவிடாமற் போனால் உன் உத்தியோகத்தைநீக்கி ஒருத்த னை உண்டாக்கி ரட்சிக்குந்தொழிலுக்கு நியமித்துப்போடுவேன் நம் முடைய புத்திர பௌத்திரர்களாகிய தேவர் கூட்டங்கள்வந்து உன் னைக்கொல்லும்படி வளைத்துக்கொள்ளுகிறதற்குமுன்னே திருப்பாற் கடலுக்குள்ளேகுதித்து ஒளித்துப்போவென்றுசொன்னார்பிர்ம்மதே வர்—எ-று. (உக)

வித்தகமுனிப்பிருகு விட்டமுனியாலே ... ...*
பத்துருவெடுத்தனை பகுத்தறிவிலாயோ ... ... *
அத்தனையுடற்களு மமைத்தபடியாலென் ... ... *
கைத்தலமுமிப்படி கறுத்தபடிபாராய் ... ... *

(இதன்பொருள்.)

ஞானசொரூபியாகிய பிருகுரிஷியானவரிட்டசாபத்தினாலே பத்து த்தரம்பூமியிலபிறந்தாய், நீ அதைப்பகுத்தறியவில்லையோ அப்படிப் ப்பிறந்தபோதெல்லாம் அவ்வளவுபெரிய உனது உடல்களை யெல்லா ம் படைத்துப் படைத்து என்கைகள் காய்ப்பேறிக் கறுத்துப் போச் சுதென்று பின்னுஞ்சொல்வார்—எ-று. (உஉ)

உந்திமலரோனென விகழ்ச்சியுனையாதே... ... ...*
முந்தவொருதூணிடை முளைத்தனையுனக்குத் .. ... *
தந்தையெனவோவல து தாயதெனவோசொல் ... ...*
செந்தழல்பிறந்துகிளை தீர்ப்பதறியாயோ ... ... *

(இதன்பொருள்)

வாராய் விஷ்ணுவே, நம்முடைய நாபிகமலத்திலேதானேவந்தானெ ன்று நிந்தனைசொல்லாதே, முன்னாலே நீ ஒருதூணினிடத்திலேபிந்தா யே அந்தத்தூணை உனக்குத்தகப்பனென்றுசொலலட்டுமா- தாயென் றுசொல்லட்டுமா- அந்தத்தூண் உனக்குத் தந்தை யானால்எனக்குநீதந் தையாவாய், செந்நிறம்பொருந்தியநெருப்புமூங்கிலினிடத்தேபிறந்து

ழுங்கிலேத்தானே கொளுத்திப்போடுகிறதை அறியாயோ, அப்படி உன்னிடத்திலேநான்பிறந்தாலும் உன்னை அழித்துப்போடுகிறேனெ ன்றார் பிர்ம்மதேவர்—எ-று. (௨௩)

வேதனிவைசொற்றன கொடும்படைவெதும்பிக் ... ... *
காதிடைதுளைத்தனல் புகட்டினகடுப்பக்... ... ... *
கோதமொடெழுந்துபுகை கொண்டநகை கொண்டே .. *
மாதவன்மதித்தனன் மறுத்திவை யுரைப்பான் ... ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மாஇப்படிச்சொன்னவார்த்தைகள்விஷ்ணுவுக்கு இரண்டுகாதி லும் வேலாயுதத்தைப் பழுக்கக்காய்ச்சித் துளைக்கவிட்டு உள்ளேயெ ழுத்திய நெருப்புப்போலத்தகிக்க,மிகுந்தகோபங்கொண்டு புகையெ ழும்பும்படியாக நகைத்து இவனுக்கு இந்தஅகங்காரம்வந்தது எந்த விதத்தினாலே யென்று ஆலோசித்துச் சிலவார்த்தைகளைச்சொன்னார் விஷ்ணு—எ-று. (௨௪)

வந்தவழிதன்னையு நினைத்திலைமனத்தென் ... ... *
னுந்தியெனதன்னையென வுன்னுதலையில்லாய் ... ... *
தந்தைசிறுமைந்தர்பிழை தன்னையுணராரென்... ... ...*
றிந்தவுரைசொல்லினை யிழந்ததுபொறேனே ... ... *

(இதன்பொருள்.)

வாராய்பிர்ம்மாவே, நீவந்தவழியையும்நினைத்தாயில்லை, என்னுடை ய நாபியைத்தாயென்று ஆலோசிக்கவும்இல்லை, தந்தைகளாயிருக்கிற வர்கள் பிள்ளைகள்செய்தபிழையை ஒருகுற்றமாக நினையார்களென்று இந்தவார்த்தைசொல்லினையோ, இனிமேல் இப்படிப்பொறுக்கமாட் டேனென்று பின்னுஞ்சொல்வார் விஷ்ணு—எ-று. (௨௫)

கன்றுமதவுங்கையிட வப்பகடுதானு ... ...*
மென்றனையராகவு மிகழ்ந்துயிர் குடித்தேன் ... ... *
மன்றவொருதீமைசெயுன் மைந்தனெனவுண்டோ ... ... *
வன்றியுடனேயையு மறுத்தெறிகி லாரோ ... ... *

(இதன்பொருள்.)

கர்பத்தையுடையமதுவும், யானைபோன்ற கைடவனும்,எனக்குப் பிள்ளைகளல்லவா, என்னையிகழ்ந்து எதிர்த்தபடியினாலே கொன்றுவி ட்டேன் நிலைபெற்ற ஒரு தீங்குசெய்தால மகனென்று பார்க்கக்கூடு மோ, அதுவல்லாமல் தேகத்திலே ஒருகட்டிகண்டால் அதையறுத்தெ றிந்து சொஸ்தப்படுத்திக்கொள்ளாம லிருக்கிறார்களோ மாந்தர்கள் —என்றவாறு. (௨௬)

பித்தனுனதோர்தலை பிடுங்கியெறிபோதி ... ... *
லத்தலைநமக்கெனவமைக்கவிதி யில்லா ... ... *

யெத்தலைவனென்பதுனை யித்தகைமை கொண்டோ … *
வைத்தலை யராமுடிகொள் பாரிடம்விதித்தாய் … *

(இதன்பொருள்.)

வாராய் பிரம்மாவே, பிரத்தியக்ஷராகியசிவன் உன்னுடையதலைக ளிலொன்றைப்பிடுங்கி எறிந்தகாலத்தில் அந்தத்தலையை மறுபடியுண் டாக்கிக்கொள்ளவகையில்லை, உன்னை எதற்குத்தலைவனென்றுசொல்லு கிறது இந்தத்தலையைக்கொண்டு தானோபடத்தையுடைய ஆதிசேடன் முடியிலிருக்கிற பூமியைப்படைத்தாயென்றார்விஷ்ணு—எ-று. (௨௭)

மச்சவுருவங்கொடு மறைத்தொகுதி தந்தேன் … *
விச்சையுளதானவனை வென்றுயிர் குடித்தே … *
னச்சுமரமாமெனினும் வைத்தமர மென்றே … … *
யச்சமுறுகின்றனை னழிக்கவரிதென்றே … … *

(இதன்பொருள்.)

வாராய் பிரம்மாவே, சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்களைப்பி டுங்கிக்கொண்டுபோனபோது நான்மற்சாவதாரங்கொண்டு அந்தஅசு ரனைக்கொன்று வேதங்களை வாங்கித்தந்தேன். அதுவல்லாமல்சாமர்த்தி யமுள்ள அநேக அசுரர்களைக்கொன்று தேவர்களோடு உன்னையுங்கா ப்பாற்றினேன், எட்டிமரமானாலும் தான்வைத்தமரமாக இருந்தால் வெட்டார்கள். அப்படிப்போல பிள்ளையான உன்னைக்கொல்லக் கூடா தென்று பயப்படுகிறேனென்றார்விஷ்ணு—எ-று. (௨௮)

என்றொருவருக்கொருவ ரெத்தனையுரைத்தார் … *
கன்றினர்புயத்தின்மிசை கைத்தலமடித்தார் … … *
நின்றுலகுதித்தனர் நெருக்கினர்நிமிர்ந்தார் … … *
குன்றியகனற்பொறி சுருக்கெழவிழித்தார் … … … *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் ஒருவருக்கொருவர் எத்தனைவார்த்தைகளையோ சொல்லிக்கொண்டிருந்தார்கள், கோபித்துக்கொண்டு புஜத்தின்மேல் கைகளாலே அடித்துக்கொண்டார்கள், நின்றுகுதித்தார்கள், நெருக்கி னார்கள், நெருப்புப்பொறி நெருக்கமாய்விழச்சுருக்கெனக் கண்களை விழித்தார்கள்—எ-று. (௨௯)

வெற்புகள்பொடித்தன வெடித்தனகடாகம் … *
பற்பலசுடர்க்கதிர் பனிக்கவொளித்த … … *
சர்ப்பமுநெளித்தது தலைச்சுமைபொறாதே … … *
கற்பமுடிவென்றமரர் கண்களையிமைத்தார் … *

(இதன்பொருள்.)

பிரம்மதேவரும், மகாவிஷ்ணுவும், சண்டைசெய்கிறபோது மலைக ளெல்லாம் பொடியாய்ப்போனதுகள், அண்டகடாகம்படீரென்றுவெ டித்து, பல்பல கிரணங்களையுடைய சந்திரசூரியர்கள் ஒளித்தார்கள்—

ஆதிசேடன் தலைசுமைபொறுக்கமாட்டாமல் உடல்நெளித்துக்கொண்டான், கற்பகாலம்வந்து உலகம் அழிடப்போகிறதென்று கண்களை யிமைத்துக்கொண்டார்கள் தேவர்கள் — எ-று. (௧௰)

உடுக்கணமுகிற்கண முதிர்ந்தவுலகெல்லாம் ... ... *
மிடுக்கினில்விழுந்தன வெழுந்தனபராக ... ... *
மடக்கினபகீரதிமுன் னானநதியெல்லாந் ... *
திடுக்கொடுமுழங்கின திசைக்கரிகளெட்டும் ... ... *

(இதன்பொருள்.)

நட்சத்திரக்கூட்டங்களும்-மேககூட்டங்களும்- உதிர்ந்ததுகள், உலகமெல்லாந் துன்பங்களோடு அடுக்குக்குலைந்துவிழுந்தன தூளெழும்பியதுகள், கங்கைமுதலான நதிகளெல்லாம் தண்ணீரில்லாமல் வற்றிப்போனதுகள், அட்டதிக்குமிருக்கிறயானைகள் திடுக்கிட்டுப்பயந்தன — என்றவாறு. (௧௧)

மேலினிமெடுத்தெறிவர் வீழ்வர்கடிதோடிக் ... ... *
கோலியெதிர்குத்தெனநின்றிவர்குத்திச் ... *
சாலமடிதொட்டளவில் சாரிகைதிரிந்தார் ... ... *
மாலையுமிருட்டும்வல மாய்வருதன்மான ... ... *

(இதன்பொருள்.)

ஒருவரையொருவர் மேலேஎடுத்தெறிவார்கள், கீழேவிழுவார்கள், மறுபடியெழுந்து விரைவில் ஓடிவளைந்து எதிராகநின்று குத்து என்று சொல்லுவார்கள், அப்படிக்குத்திக்கொண்டு மிகவும்மடியைப்பிடித்துக் குறைபோல அநேகவிசைசுழன்று திரிந்தார்கள், அந்திநேரமும் இருளும் வலமிட்டமாக வருதலையொத்திருக்கும்படி — என்றவாறு. (௧௨)

ஊருவனதத்துவன செல்வனவிண்ணேடே ... ... *
சேருவனநின்றன திரிந்தனதிரட்டார் ... ... *
தாருவகையிற்றன தழைந்ததிருளெங்கு ... ... *
மேருவகையுக்கதெழு வேலையளறுக ... ... *

(இதன்பொருள்.)

அந்தவேளையில் உலகத்தில் ஊர்ந்துபோகின்ற சீவன்களும், தவழ்கின்ற சீவன்களும், நடக்கின்றவைகளும், பறக்குஞ்சீவராசிகள்போல் ஆகாயத்திற்பறந்ததுகள், நிலையாகநின்றவிருட்சம் மலைகள் திரிந்ததுகள், திரளாகநிறைந்த ஐந்துவகையாகியதேவதருக்கள்பொடிப்பொடியாய்ப்போனதுகள், எவ்விடமும் அந்தகாரம்நிறைந்தது மகாமேரு அசைந்தது சத்தசமுத்திரங்களுஞ் சேறுனதுகள் — எ-று. (௧௩)

அந்தமுடிவெல்லைதனி லஞ்சியியையோர்தா ... ... *
மிந்திரனெயெய்தினர்களெய்திய துரைக்கு ... *

ஞூந்தியவனுற்றதுயர் யாவையுமொழிந்து ... ... *
வந்தவரவேதென வருத்துரைசெய்கின்றார் ... *

(இதன்பொருள்.)

சர்வசங்காரகாலம்வந்ததென்று சொல்லும்படி இருவருஞ்சண்டை செய்யும் அந்தவேளையில் தேவர்களெல்லாரும்பயப்பட்டுத் தேவேந்திரனிடத்திற்போய்ச்சேர்ந்து தங்களுடைய துக்கத்தைச் சொல்கிறதற்கு முன்னே தேவேந்திரன் தான்பட்ட துன்பங்களெல்லாஞ்சொல்லிப்பின்பு நீங்கள்வந்தகாரியம் ஏதென்றுகேட்கத் தேவர்கள்சொல்லுகிறார்கள்—என்றவாறு. (௫௪)

ஆரணனு நாரணனு மாணவிருவோருந் ... ... *
தாரணியிலேமிகு சமர்த்தொழில்விளைத்தார் ... ... *
ஏரணியவேறுகதி யில்லையெவருக்குங் ... ... *
காரணனையேதொழுதல் காரியமிதென்றார் ... ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மாவும் விஷ்ணுவுமாகிய இருவரும்பூமியில் மிகுந்தயுத்தத்தைச்செய்கிறார்கள் எங்களுக்குப் பிழைக்கத்தருந்தமார்க்கம் வேறேயில்லை, எல்லாருக்குங்காரணமாயிருக்கிற பரமசிவனைத்தொழுது இந்தாபத்தைச்சொல்வதேகாரியமென்று சொன்னார்கள் தேவர்கள்.—என்றவாறு. (௫௫)

நாயகனிசைந்துபினர் நாகவுலகத்தோர் ... ... *
தூயமலர்போலடி துதித்தரிவைபாகா ... *
மாயமுடன்மாலயன் வருத்தமதுதீராய் .. ... *
தாயலதுமைந்தர்துணை தாரணியிலுண்டோ .. *

(இதன்பொருள்.)

இப்படிச்சொல்லத் தேவேந்திரனும் சம்மதித்துப் பின்பு அவனோடு தேவர்களெல்லாரும்போய்ச் சிவனுடையபரிசுத்தமாகிய தாமரைமலர்போன்ற பாதத்தைத்தொழுது மங்கைபாகனே? மாயஞ்செய்கின்ற விஷ்ணுவும், பிர்ம்மாவும் சண்டைசெய்வதினால் வருந் துக்கத்தைத்தீர்க்கவேண்டும், பிள்ளைகளுக்குத்தாயே துணையல்லாமல்மற்றொரு துணை பூமியிலுண்டோவென்று சொன்னார்கள்—எ-று. (௫௬)

உருட்படுசகட்டைநிக ருற்றுலகின்மீதே... ... *
யிருட்படுபிறப்பினை யிறப்பினையுறாதே ... *
பொருட்பெறவுனக்கடிமை புக்கவிலாவுன் ... *
னருட்கடல்குளித்திட வடைக்கலமதானோம்... .. *

(இதன்பொருள்.)

உருண்டுகொண்டுபோகாநின்றவண்டியினுடையசக்கரம்போல் அஞ்ஞானம்பொருந்திய பிறப்பையு மிறப்பையு மாறிமாறி யடைந்து வருத்தத்தை அநுபவியாமல் மோட்சத்தைப்பெற உனக்கடி

மையாகப்புகுந்து உன்னுடைய அளவில்லாத கிருபைக்கடலில் குளிக்க அடைக்கலமானோமென்றார்கள்தேவர்கள்—எ-று. (௫௭)

புழுக்குடையுடற்சுமை பொறுக்கமுடியாத ... ... *
விழுக்குடையவிச்சைகெடவிச்சையருள்வானே ... *
முழுக்கடலிடைத்தினமுழுக்குறினுமாறு... ... ...*
வழுக்குமலமற்றிடவடைக்கலமதானோம் ... ... *

(இதன்பொருள்.)

அனேகம் புழுக்கள்குடைந்து கொண்டிராநின்ற உடற்பாரத்தைப் பொறுக்கமுடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெடப் பிரியத்தினாலே கிருபை செய்கின்ற சுவாமியே, பெரிய சமுத்திரத்தினிடத்தில் தினமுழுகினாலும் போகாத மும்மலமாகிய அழுக்கு அற்றுப்போகஅடைக்கலமாயும்மைச்சேர்ந்தோமென்றார்கள் தேவர்கள்—எ-று. (௫அ)

எண்ணமினிவேறிலையெமக்கருள்செயென்றே .. ... *
கண்ணுதலை விண்ணவர்கள் கற்றுமொழிபோதி ... *
லண்ணலுமுணர்ந்தன னனைத்துயிரினுள்ளே ... ...*
யெண்ணெயெனநிற்குமவ னிதறிகிலானோ ... ... *

(இதன்பொருள்.)

இனிமேல்வேறே ஆலோசனையில்லை எங்களுக்கு கிருபை செய்யுமென்று சிவனைத்தேவர்கள்புகழ்ந்து ஸ்தோத்திரஞ்செய்யும்போதில் சுவாமியும் அவ்விருவருக்கும்வந்த சண்டையின் மூலத்தை யறிந்தார். எல்லா உயிர்களினிடத்தும் எள்ளினிடத்து நெய்போல் நிற்கும் சுவாமி இது அறியமாட்டாரோ அறிவார்—எ-று. (௫௯)

(அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

நடுக்கமுறுமுனிவரொலாமமரரெல்லாம்பயந்தவிரநாகமீது... ...*
படுக்கைபுரிதிருமாலும்பங்கயத்திலுறுமயனும்பகைமைதீர ... ...*
வடுக்கியிடும் புவனமெலா மழிக்கழியா திருக்கமனத் தருள்வதாகித் *
தடுக்கரியத்தழலுருவத் தொருவனாயா யிருவரையுந்தடுப்பதானான்...*

(இதன்பொருள்.)

நடுக்கமடைந்த முனிவர்கள் தேவர்களெல்லாரும் பயத்தை நீங்கும்படி சர்ப்பசயனத்தில் நித்திரைசெய்கின்றவிஷ்ணுவும், தாமரைப்புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற பிர்ம்மாவும், ஒருவருக்கொருவர்பகையைநீங்கவும், அடுக்கடுக்காயிருக்கும் அண்டங்களெல்லாம் அடுக்குக்குலையாமலிருக்கவும்கிருபைசெய்வதாய்த்தடுத்தற்கரியஅக்கினிசொரூபத்தோடு கூடிய ஒருமலையாகிய இந்த இருவரையுந் தடுக்கும்படி எழுந்தருளினார்பரமசிவன்—எ-று. (௬௰)

பாதலத்திற்பணிகளெல்லாப்விழுதாகதன்கீழிற்பருவேரோடிப் .. *
பூதலத்திற்கிளைத்திலைபோருலகெல்லாமலர்ந்துமலர்ப்பண்டரீகன் *
மீதலத்துமுகடுடைத்துக்கடாகவெளிகடந்துமேற்பருவெளிக்குமேலா *
மாதலத்துக்கிதுவுமொருகனல்மேருவடுத்ததெனவளர்ந்தமாதோ .. *

(இதன்பொருள்.)

பாதாளலோகத்தி லிருக்கிற பாம்புகளெல்லாம் அந்தமலைக்குச்சல்லிவேராகும், அதின்கீழ்ப்பருத்தவேரோடி பூமியிற்பெரிதாய்க்கிளைத்துத் தேவலோகங்களெல்லாந் தாண்டிப்பிரம்மலோகத்து முகட்டையுடைத்து அண்டகடாக வெளியைக்கடந்து அதற்கு அப்பாலிருக்கிற பெரியவெளிக்கு மேலாயிருக்கிற இடத்துக்கும் அக்கினி சொரூபமாகிய மகாமேரு அடுத்ததென்று சொல்ல வளர்ந்தது—எ-று. (௪௧)

மூளைக்குநெடுஞ்சுடரிரவி புரவியுல வாவுலகமுழுதுமோடிக் ...*
கிளைக்குமணியிருளகற்றவேற்றிவைத்தவிளக்கெனவேகளர்க்கையாலே
யளக்கவொலாமலைப்பரிய வடவையழல் பறந்ததெனவுரித்தயானைத்.. *
திளைக்குமெழு கிரிகளெல்லா மதுசொரிந்த செம்பொற்போற்சிவந்த
மாதோ... ... ...*

(இதன்பொருள்.)

உதயமாகி நெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடைய தேரிற்கட்டியகுதிரைகள்சஞ்சாரஞ்செய்யக்கூடாத உலகமெல்லாம் ஓடிக்கிளைத்தநீலமணிபோலுங்கரியஇருளையோட்டுகிறதற்கு ஏற்றிவைத்தவிளக்குப்போல் பிரகாசிப்பதினால் சமுத்திரமெல்லாம் சொல்லுதற்கரியவடவாமுகாக்கினி பறந்ததுபோலச் சிவப்புநிறத்தைப் பொருந்தச் சத்தகுலபர்வதங்களெல்லாம் அந்தப்பிரகாசத்தினாலே அந்த அக்கினிமலைசொரிந்தஅக்கினிப்பொறிகள்போலச்சிவந்ததுகள்—என்றவாறு

(கலிநிலைத்துறை.)

வானக்கண்ணழலாயதுகண்டமலரோனும் ... ... *
கானக்கண்ணனுமஞ்சியகன்றார்களாகாணார் ... ... *
ஞானக்கண்ணினர் காணுவதல்லாலனைவம்சரு ... *
மானக்கண்ணினருக்கெளியானேயெம்மானே ... *

(இதன்பொருள்.)

இப்படி ஆகாச பரியந்தம் அக்கினி சொரூப மானதுகண்ட பிரம்மாவும், வேணுநாதத்தைச்செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவும், பயப்பட்டு ஒதுங்கிநின்றார்கள். ஞானக்கண்ணை யுடையவர்கள்காணுவதல்லால் குற்றம்பொருந்திய ஈனமாகியமுகத்திற் கண்ணுடையவர் காணுகிறதற்கு எளியவனோ நம்முடையபரமசிவன்—எ-று. (௪௩)

(அறுசீரடி-ஆசிரியவிருத்தம்.)

கண்ணிலளவிடவரிய சுடரிணைக்கண் டிருவருமாய்க்கவலையாறு...*
றெண்ணிலிதினடிமுடியையறிபவரோ பெரியவரென் றிசைத்தாரிந்த,
மண்ணினடியறிவனெனப் பணிவிடையிற்றூக்கமிக்கோன் வராகமா
னான், விண்ணின்முடியறிவனென வெகினவடி வெடுத்தயனும் விரைந்துபோனான் ... ... *

(இதன்பொருள்.)

கண்களாலே இவ்வளவுதூரம் இந்தமலைபோயிருக்கிறதென்று அறியக்கூடாத பிரகாசமான மலையைப்பார்த்து இரண்டுபேருந் துன்பத்தை அடைந்தவராய், இந்தமலையினது அடியையாவது முடியையாவது அறிபவரோ பெரியவரென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். அப்போது சர்ப்பத்தில நித்திரை செய்கிறவராகிய விஷ்ணு இந்தமலையினடியை நானறிந்துவருகிறேனென்று வராகரூபமானார், இந்தமலையின்சிகரத்தைக்காணுகிறேனென்று பிர்ம்மாவும் அன்னப்பட்சியாகி ஆகாயத்தில்பறந்தார்—எ-று. (௪௪)

மெத்துமனைக்கணத்தினுக்கா யிரங்காதம்பறந்தயனார் விரைந்து
போனார், முத்திபாரவெடுத்தபுவி கணத்தினுக்காயிரங்காலந் துளைத்
துப்போனா, ரத்தகைபோர்செயலுரைக்கிற் கனகமணி நெடும்பூட்டு
க்கருகிலொடு, நித்திலப்பொற் குண்டிகையு நீலமணிக்குண்டிகையு
நிகர்த்தமாதோ. ... ... *

(இதன்பொருள்.)

சொல்லப்பட்ட அரைக்ஷணத்தில் ஆயிரங்காதவழிபறந்து பிர்ம்மா மேலாகப் போனார். படத்தையுடைய ஆதிசேடன் சுமந்த பூமியைஅரைநொடியிலே ஆயிரங்காததூரம் துளைத்துக் கொண்டு விஷ்ணு கீழாகப்போனார். அதுஎப்படியிருந்ததென்றால், அந்தமலைதங்கமயமாகிய ராட்டணப்பூட்டைபோலவும் அதில்இறைக்கிறதனுக்குக்கட்டிவிட்டிருக்கிற நீலரத்தினத் தோண்டிபோலவும் முத்துக்களிழைத்திருக்கிற அழகியதோண்டிபோலவும் இருந்தனுகள்—என்றவாறு. (௪௫)

பூவுலகையரிபகன்றுகீழுலகின்முறைமுறையே புகுந்துபோந்து,
காவலுறு மாவலிதன்போகவதியெனும்புரமுங்கடந்துமேவித் ... [றி
தேவர்தொழும்பரஞ்சுடர்வா ளாடகேசுரங்கரத்துஞ் சிரத்தும்போற்
றுமுலகைமுதலுள்ளார்தோனேமுலகமளந்துமதன்முடிவுகாணான் .. *

(இதன்பொருள்.)

வராக அவதாரம் எடுத்த விஷ்ணுவானவர் பூலோகத்தைக் கடந்து அதின்கீழிருக்கின்ற ஏழுலகத்தையும் முறைமையே துளைத்துக் கடந்துபோய் மாவலி சக்கிரவர்த்தி காவலிலே இருக்கிற போகவதிப்பட்

டனைத்தைத்தாண்டி அப்புறம் தேவர்கள்வணங்குஞ் பிர்ம்மசொரூபம் விளங்காநின்ற ஆட்கேசுரத்தைக்கண்டு கைகளினாலுஞ் சிரசினாலும் வணங்கி முன்னே மூன்றுலகத்தையு மளந்தவர் இப்போது ஏழுலகங்களை அளந்தும் அந்தமலையினடியைக் காணமற்போனார் — எ - று.

வளர்ப்புடையபிறைபோலவளர்மருப்புந் தேய்பிறைபோன்மழுங் கிப்போகக், குளப்படியுமுகநுனியும் பினைத்தேடுமாசையைப்போ ற் குறைந்துபோத, வளப்பரியதுயரின்விழுந்தொருநூற்ண் டொழிந்தத்தற்பி னரனைவாழ்த்தி, யிளைப்பதுவுஞ் சலிப்பதுமற்றெழுசலமு மிடர்க்கடனு மேறினானே. ... ... *

(இதன்பொருள்.)

அப்படிமகாவிஷ்ணு வராகரூபங்கொண்டு தேடுகிறபோது வளர்பிறைபோல் நாளுக்குநாள் வளர்ச்சியற்ற இரண்டு கொம்புகளுந்தேய்பிறைபோல் குறைந்துமழுங்கிப்போகவும், குளம்புகளும் முகத்தினுனியுந்தேடுமாசை பின்பு எப்படிக்குறைந்து போயிற்றோ, அப்படித் தேய்ந்துகுறைந்து எண்ணக்கூடாத துக்கசமுத்திரத்தில்விழுந்து நூறு வருஷகாலந் தேடியுங்காணமல் பின்பு தெளிவுவந்து இதுசிவனுடையசெயலென்றறிந்து அவரைத்தியானஞ்செய்து இளைப்புஞ்சலிப்புநீங்கித் தன்னுடையதுக்கசமுத்திரத்தையும் ஏழுதலத்தையும் தாண்டிவந்தார்—என்றவாறு. (சஎ)

தம்போரை முதற்றடுக்கத் தழற்பிழம்பா யெழுந்தவந்தத் தலத்தைச்சார்ந்தா, னப்போத னிதன்முடியி னளவறியா னெனமனத்திலையந்தீர்ந்தா, னம்போருக்கரியானைச் சேயானைத் தனதுவிழி நயனத்தோடே, பைம்போதைப் புனைவானைப் பலகாலும் பணிந்துருகிப்பரவிநின்றான். ... ... *

(இதன்பொருள்.)

தனக்கும் பிர்ம்மாவுக்கும் வந்த கலகத்தை நீக்கும்படிக்கு அக்கினிசொரூபமாயெழுந்த தலத்தைச்சேர்ந்து அழகிய தாமரைப்பூவி லிருக்கிறபிர்ம்மா இந்தமலையின் முடியைஅறியமாட்டானென்று நிச்சயஞ்செய்துகொண்டு நம்பாத மனிதர்களுக்கு அரியவரை எப்படிப்பட்டவர்களுக்குந் தூரமாக இருக்கிறவரைத்தப்புடைய கண்ணாகிய புஷ்பத்தோடு அழகிய புஷ்பங்களைத் தரிக்காநின்றவரைப் பலதரமும் வந்தனஞ்செய்து உள்ளமுருகிப்பரவினார் விஷ்ணு—எ-று. (சஅ)

(கலிவிருத்தம்.)

இன்னதாமிவன்செய லிருக்கவிங்கிதன் ... ... *
முன்னமேயழற்கிரி முடியைத்தேடவே ... ... *
யன்னமாய்ப்பறந்தவ னளாக்கணத்திலே ... ... *
மன்னுமோ ராயிரக் காதம்வாவினான் ... ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் இந்தவிஷ்ணு இருக்க, இதற்குமுன்னே அக்கினிமலையின் முடியைத்தேட அன்னப் பட்சியாகிப் பறந்த பிர்ம்மா அரைக்ஷணத்திலே ஆயிரங்காதவழி தாண்டினார்—எ-று. (சகூ)

கிழிபடவண்டகோ ளகையுங்கீழுற ... ... *
வேறினூறாயிர மாண்டுமேவினா ... ... *
னூறுநூறாயிரக் காதநோக்கினு ... *
மீறிலாதிருந்ததவ் வெரியின் றூணமே ... ... *

(இதன்பொருள்.)

அண்டகோளகையுங் கிழிபடகிழித்துப்பறந்து நூறாயிரம்வருஷந்தேடினார். அப்படி அநேகநூறுநூறாயிரக்காதந் தாண்டிப்போய்ப் பார்த்தாலும் முதல்பார்த்தது போலவே இருந்தது அக்கினித்தூண்—என்றவாறு. (ருய)

சிறையெலா முதிர்ந்தன விசையுந் தீர்ந்தன ... *
நிறைவதாமிடுக்கணு முயிர்ப்பு நீண்டன ... ...*
குறையெலாம் வளர்ந்திடத் தனிமைகூர்தலான் ... *
மறையினானிவையிவைமனத்தினெண்ணினான் ... *

(இதன்பொருள்.)

அப்படி பிர்ம்மா அன்னமாய்ப்பறந்து போகிறபோது சிறகெல்லா முதிர்ந்துபோயின, விசையும் அடங்கியது, குறைவில்லாத துக்கமும் பெருமூச்சும் அதிகப்பட்டன, மனக்குறைகளா, ஒருவருமில்லாமல் தானொன்றியானபடியினால் பிர்ம்மா சிலவற்றைமனதிலெண்ணினார்—என்றவாறு. (ருக)

அரியமாலிதனடி யறிந்து மீளுமோ ... ... *
தெரிவுறா திடையிலே திரும்புமோவென... ... *
வரியதாகியதுய ரூசலாடினு ... ... *
னெரியுறுமெழுகுமா விளகுஞ்சிந்தையான் ... *

(இதன்பொருள்.)

அரியமகாவிஷ்ணு இந்த அக்கினிமலையினுடைய அடியை அறிந்துதிரும்புவானோ, கொஞ்சதூரந்தேடி இனிமேல் தேடக்கூடாது என்றுதிரும்பிவந்து விடுவானோ, என்கிற துக்க மாகிய ஊஞ்சலிலிருந்தாடினார்- நெருப்பிலேயிட்ட மெழுகுபோல் இளகியமனத்தையுடையவராகிய, பிர்ம்மதேவர்—எ-று. (ருஉ)

மற்றிது சிவனென மனத்தி லெண்ணிலே ... ... *
னுற்றரி தன்னைய முறவு கொண்டிலே ... ... *
னிற்றைநாள்வரைக்குமிவ் விடர்க்குண் மூழ்கினேன் ... *
சிற்றறி வுடைமையோ செய்ததீமையோ ... ... *

(இதன்பொருள்.)

இந்தமலையைச் சிவனென்று அறியாமற்போனேன், பகைத்துக் கொள்ளப்பட்ட விஷ்ணுவையாவது உறவு கொள்ளாமற் போனேன், அன்றுமுதலின்றைவரைக்கும் வெகுகாலமாய்த் துக்கசமுத்திரத்திலழுந்துகிறேன், என்னுடையசிறியபுத்தியினாலேயோ? பூர்வகாலத்திலே நான் செய்த பாவத்தினாலேயோவென்று விசனத்தை யடைந்தார் பிர்ம்மா—என்றவாறு. (ருங)

எய்தினேன் முடியறிந் தேகிலேனெனும் ... ... *
பொய்களையுரைக்கினும் பொருந்தவேயுரை... ... *
செய்துணை பிறிதிலை யென்று தேம்பினான் ... *
கைதையின் மடல்வரப் பின்புகண்டனன் .. ... *

(இதன்பொருள்.)

இவ்வளவு தூரம் தேடிவந்து முடியை யறியாமற் போனேன், ஆகிலும், இனிமேற்போய் விஷ்ணுவினிடத்திற் பார்த்தேனென்று பொய் சொன்னாலும், கூட ஒத்தாசை யாகப் பார்த்தா னென்று பொய் சாக்ஷி சொல்லுகிறதற்கு ஒரு துணையும் இல்லையே என்று விசனப்பட்டார் அந்தச்சமயத்திலே, தாழம்பூ மடலொன்று மேலேயிருந்து இறங்கப்பார்த்தான் - பிர்ம்மா—என்றவாறு. (ருச)

இம்மடலெங்குற்று வருவதென்றுமுன் ... *
னம்மடலணைந்தசங் கசனையற்றனன் ... *
செம்பரன் முடியில்வீழ் செம்மலாகையால் ... *
மெய்ம்மைசேருயிர்ப்பதாய் விடுமிலையன்றதே ... *

(இதன்பொருள்.)

இந்தத்தாழை மடல் எங்கேயிருந்து வருகிறது என்று ஆலோசித்து முன்னேதாழம்பூ பிர்ம்மாவுக்குச் சமீபத்தில்வர அதைக்கையினாலேபிடித்தான், அது பரமசிவனுடைய சிரசிலிருந்து தவறிவிழுந்த தாழம்பூவானபடியினாலே மெய்ம்மையான பெருமூச்செறிந் தென்னைச்சக்கரத்திலேயிட்டு விடுவாயென்று சொல்லியது—எ-று. (ருரு)

எரணிகைதையே இங்குநீவருங் ... ... *
காரணமேதெனக் கமலன்கூறினான் ... *
ஆரணன்றரை வளவிடாமுத ... *
பூரணி முடியினுந் தவறி வீழ்ந்தனன் ... *

(இதன்பொருள்)

அந்தத்தாழம்பூ சொல்லியதுகேட்டு, அழகு பொருந்திய தாழம்பூவே, எங்கேயிருந்து இங்கேவந்தாயென்று பிர்ம்மாகேட்கப் பிர்ம்மாவினாலும் விஷ்ணுவினாலும் அறியக்கூடாத பரமசிவனுடைய சிரசிலேயிருந்து தவறிவிழுந்தேனென்று சொல்லியது—எ-று. (ருகூ)

தார்ப்பொலி முடியினுந்தவறிவீழ்ந்தயின் ... *
னாற்பதினாயிரம் வருடநண்ணினேன் ... *
மேனற்பதுவிடுக வென்றிசைப்பவெந்தையைப் ... *
பார்ப்பது விடுத்தயன் பகாவதாயினான்... *

(இதன்பொருள்.)

கொன்றைமாலை பிரகாசியாநின்றசுவாமியினது திருமுடிமேல் நின்றுவிழுந்ததும், நாற்பதினாயிரம் வருஷங்களாகவந்தேன் இன்னும் நான்பூமியிற் போகவில்லை, வருத்தத்தோடு வருகின்றேன் என்னைப் பிடிக்கவேண்டாம்விடென்று தாழம்பூ சொல்லப் பிரமா சுவாமியைத் தேடுகிறதை வெறுத்துச சிலவார்த்தை சொல்லத் தொடங்கினான் — என்றவாறு. (௫௭)

துன்னிபகைதையே துணையுமாய்நமக் ... *
கின்னமுடலைவுறா திடுங்கணீக்கினை ... *
னுன்னிலுமுயிர்த்துணை யுறவுவேறிலை ... *
யன்னிய னல்லனா னனமு மல்லனே ... *

(இதன்பொருள்.)

எஞ்சமீபத்தி லடைந்த தாழம்பூவே, நீ யெனக்குத் துணையா யிருந்து, நான் இன்னமும் கேடியலையாமல் என்வருத்தத்தை நீக்கினால் உன்னைப்பார்க்கிலும் உயிர்போன்ற துணையும் - உறவும் - வேறில்லை, நானும் - அன்னியனல்ல அன்னப்பட்சியும் அல்லஎன்று சொன்னான் பிரமதேவன் என்றவாறு. (௫௮)

நாமமோநான்முக னனுமாலுமா ... *
மேமமாமிதற்கள விசைக்கவெண்ணினோம் ... *
பூமிகீழிடந்தவன் போயினான்மனத் ... *
தீமையேன்றிருமுடி தேடிக்காண்கிலேன் ... *

(இதன்பொருள்.)

என்பேரோ பிர்ம்மா, நானும்விஷ்ணுவும்கூடி அக்கினிசொரூபமாகிய இந்தமலையினளவைத் தெரிந்துகொள்ள வெண்ணினோம் பூமியின் கீழிடத்தைப்பிளந்துகொண்டு அடியை அவன்தேடப்போனான், பாவியாகிய நான் முடியைக்காண வெகுநாள்தேடியுங்காண்கிலேன் — என்றவாறு. (௫௯)

அடிதலைவரவிது வதுகொண்டென்பய ... *
னெடியநின்வரவினைநினைத்ததெய்தினாற் ... *
படியளந்தவனுடன் பரவையாமிவன் ... *
முடியறிந் தாமெனை மொழிதல்வேண்டுமே ... *

(இதன்பொருள்.)

ஆதியந்தமாகநடந்த சமாசாரமிது- அதைக்குறித்துப் பேசவதினாற் பயனென்ன, பெருமை பொருந்திய உன்னுடைய நல்வரவி

னுலே நினைத்தகாரிய முடிந்தால்தான்பயன், பூமியையளந்த விஷ்ணுவினிடத்தில் பட்சியாயுருவெடுத்த இந்தப்பிர்ம்மா சிவனுடைய முடியை அறிந்தானென்று நீ சொல்லவேண்டும் என்று பின்னும் சொல்வான் பிர்ம்மதேவன்—என்றவாறு. (சுய)

வஞ்சமென்றிகழ்ந்திடேல் வருந்தினார்க்குயிர்த் ... *
தஞ்சமாமெனிற் பெரும் பொய்யுஞ் சாற்றலா ...*
மஞ்சியே சொலத்தகா மொழியுமன்றிது ... *
நஞ்சமுண்டமைவரோ நண்புவேண்டினார் ... *

(இதன் பொருள்.)

தாழம்பூவேகேள், இதுவஞ்சனைத்தொழிலென்று தள்ளாதே, யாதோரொருதுன்பத்தை யடைந்தவர்க்கு உயிர்க்குச்சேதம் வருமாயின் அதுபிழைத்தற்குப் பெரியதாகிய பொய்யைக்கூடச் சொல்லலாம். பயப்பட்டுச்சொல்லக்கூடாதவார்த்தையுமல்ல, இதுசிநேகம்வேண்டினவர்கள் தம்முடையநண்பன் விஷத்தைத்தின்னு என்றாலுந்தின்று சிநேகிதன் பேச்சைத்தட்டாமல் கீர்த்தி நிலைக்கச் செய்வார்கள் —என்றவாறு. (சுக)

கண்ணுதன் முடியில்வாழ் கைதையேபிறி ...*
தெண்ணுவதொழிதென விசைந்துபோந்தது ... *
விண்ணெனு மிருந்துகீழ் விரைந்துவேதியன் ...*
மண்ணுலகளந்தமான் மருங்குறநண்ணினான் ... *

(இதன்பொருள்.)

பரமசிவனுடைய முடியில்வாழ்கின்றதாழம்பூவே, வேறேயொரு ஆலோசனையும் செய்யவேண்டாம், இதற்குடன்படென்று சொல்லத்தாழம்பூ அதற்கு இசைந்துவந்தது, ஆகாயத்தில் நின்று சீக்கிரத்தில் பிர்ம்மாமண்ணளந்தவிஷ்ணுவினிடத்தில்வந்துசேர்ந்தான்—எ-று.

சீதராகேட்டியென் வரவின் செய்கைக் ... *
காதநூறாயிரங் கணத்திலேகடந் ... *
தாதியான் முடியறிந் தணுகினேனென ... *
வோதினன் கைதையு முள்ளதென்றதே ... *

(இதன் பொருள்.)

விஷ்ணுவே, என்னுடைய நல்வரவைக்கேள், ஒருநொடியிலே நூறாயிரங்காதம்பறந்து எல்லாருக்கும் ஆதியாகிய சிவனுடைய சிரசைப்பார்த்தேனென்றுசொன்னான், தாழம்பூவும் நிசந்தான் பிர்ம்மாபார்த்தானென்று சொல்லியது—என்றவாறு. (சுஉ)

(எழுசீரடி ஆசிரிய விருத்தம்.)

அக்கணமழற்கிரி வெடித்தது வெடித்தவ ரவத்தனி லரக்க ரிமையோர், ருக்கனர் திகைக்களிறு கக்கின வர்க்கரா யுருக்கிய தெனக்

குருதிநீர், செக்கரொளிமட்கிட முருக்கிதழ் கறுக்குமெய் சிவப்பொளி
வெளுத்த வடிவாய், முக்கண னதற்கிடை மூளைத்தனன் முகத்திலவன்
முப்புரமெரித்த நகையே .. .. *

(இதன்பொருள்.)

அப்படி பிர்ம்மா சொன்ன அந்தக்ஷணமே அக்கினிமலை படீரென்று வெடித்தது, வெடித்தசத்தத்தில்- ராட்சதர்கள், தேவர்கள், திடுக்கிட்டு உயிர்சோர்ந்தார்கள், திக்கில் இருக்கிறயானைகள்-சூரியர்களை உருக்கிச்சாய்த்தாலெப்படியோ அப்படி ரத்தஜலத்தைக்கக்கினதுகள், செக்கர்வானத்துப் பிரகாசமும், மழுங்கிப்போகும்படியாகவும், முருக்கம்பூவிதழ் கறுக்கும்படியாகவும், சிவந்த தமது திருவுருவின் ஒளிவு பொருந்திய நிறமானது, விபூதியினால் வெளுத்தவடிவாய்த்தோன்ற, அந்த வெடிப்பில் நின்றும், பரமசிவன் எழுந்தருளினார். முப்புரத்தைஎரித்த நகைப்பு அவர்முகத்திலேவந்தது—எ-று. (௯௪)

முண்டகவகந்தையின் மொழிந்தவுரைநன்றெனமொழிந்துநகைகொண்டவளவே, அண்டபகிரண்டமு நடுங்கினவொடுங்கின வடங்கினவிடுஞ்சுடரெலாங், கொண்டலுமறைந்தன சிறந்தனவிறைந்தன குறைந்தனநிறைந்தனகுவா, லெண்டிசைதிரிந்தன கரிந்தனபொரிந்தன வெரிந்தன விரிந்ததருவே... ... ... *

(இதன்பொருள்.)

அடே பிர்ம்மாவே, உன்னுடைய அகங்காரத்தினாலே சொன்ன சொல்நன்றாயிருந்ததென்று சொல்லி நகைத்தபோது அண்டபகிரண்டங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கி ஒடுங்கிப்போயின, சூரியர் சந்திரருடைய பிரகாசமடங்கிப்போயின, மேகங்கள்மறைந்ததுகள், சிறந்து நிலைபாயிருக்கிறதுகளெல்லாம் இறைந்ததுகள், இறைந்தபொருள்கள் நிறைந்ததுகள், கூட்டமாகியதிக்குகள் அலைந்ததுகள், மரங்களெல்லாம்கரிந்தும், பொரிந்தும், எரிந்தும்போனதுகள்—எ-று. (௯௫)

(கலிவிருத்தம்.)

அழிந்தனனயனென வமரரஞ்சினார் ... ... *
குழிந்ததுநிலமெனக் கொள்ளையாமலர் ... ... *
பொழிந்தனர்நெடியவற் குவகைபூத்தது ... *
கழிந்ததுமலரவற் கிடும்பைக் கங்குலே ... .. *

(இதன்பொருள்.)

தேவர்களெல்லாரும், பிர்ம்மா இன்றே அழிந்துபோனானென்று பயப்பட்டார்கள், பூமிபள்ளமாகும்படி கொள்ளைகொள்ளையாகப்புஷ்பமாரிபொழிந்தார்கள், விஷ்ணுவுக்குச்சந்தோஷம்வந்தது, பிர்ம்மாவுக்கு முன்னே அகங்காரமென்கிற இருள் நீங்கிப்போயிற்று—எ-று.

பாடினன்பரவினன் பரவசத்தினு... ... ...*
லாடினனோடின னளவிடாமுதல் ... ... *
கூடினனெவ்வரங் கொள்வனேகெனனத் ... ... *
தேடினன்சிவனைத் தெளிந்தசெங்கண்மால் ... ...*

(இதன்பொருள்.)

அப்போது தெளிவையடைந்த விஷ்ணுவானவர், அக்கினிமலையினிடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப்பாடினார், வந்தனஞ்செய்தார், பரவசங்கொண்டு ஆனந்தக்கூத்தாடினார், நான்குதிக்கிலும் ஓடினார், யாவராலுமளவிடக்கூடாத இந்தச்சுவாமியைத்தரிசித்துக்கூடினேன், இனிநானென்ன வரங்கேட்பேனென்று ஆலோசனைசெய்தார் —என்றவாறு. (௬௭)

ஆசையர்வுருகுமவ் வரிதனைப்புகண் ... ... *
டீசனும்பலவர மினிது நல்கினன் .. ... *
வாசமாமலரவ னுனக்கு மண்ணின்மேல்... ... *
பூசையுங்கோயிலும் போகவென்றனன் ... ..*

(இதன்பொருள்.)

இப்படியிருந்தபத்தியினாலே தேகமுருகாநின்ற விஷ்ணுவினுடைய அடிமைத்திறத்தைப் பார்த்துக் கேட்டவரங்களெல்லாம் சிவன் அருளிச்செய்து, பிர்ம்மாவைப்பார்த்து உனக்குப்பூமியில்கோயிலும் பூசையுமில்லாமற் போகக்கடவதென்று திருவுளம்பற்றினார் — எ-று.

கைதையேயிவனொடு கரவுநீயுணா ... ... *
செய்ததால்தீண்டிலே மென்று தீர்த்தன... ...*
னெய்தியமுனிவுகண் டேங்கிநான்முகன் ... *
மெய்தனையுறப்பதம் வீழ்ந்துபோற்றினன் ... ...*

(இதன்பொருள்.)

வாராய் தாழம்பூவே, இந்தப்பிர்ம்மாவினோடுசேர்ந்து பொய்ச்சாட்சி சொன்னபடியினாலே உன்னை இதுமுதற்கொண்டு தீண்டேனென்றுதள்ளினார், அதன்பின்பு சுவாமிக்கு இப்படிப்பட்ட கோபம்வந்தது பார்த்து ஏக்கமெடுத்துப் பிர்ம்மாவானவன் தன்னுடையதேகம்பூமியிலே நன்றாய்ப்படவிழுந்து வந்தனஞ்செய்தான்—எ-று. (௬௮)

(கலிவிருத்தம்.)

பொடியுமேயதழலேநிகர்புலையாணவமலமாஞ்... ... *
செடியுமேகை யாமேயுழல் சிறியே னொருபொருளோ *
வடிவேபெருவெளியேசதுர்மறையேசதுர்மறையின் *
முடிமேவதனிமுதலேயெனமுனிமேயலெனமுனியேல் *

(இதன்பொருள்.)

நீறுமூடிய நெருப்பையொத்தசுவாமியே, சண்டாளத்துவமாகிய ஆணவமலமென்கிற செடிமூடிக் கொண்டிருப்பதினாலே அவிவேகியாய்த் திரியாநின்ற சிறியேனொருபொருளோ உருவமானவரோ, அகண்டவெளியானவரோ, நான்குவேதமாகியவரோ, நான்குவேதத்தினுடைய அந்தத்திலிருக்கின்றவரோ, ஒப்பற்ற முதலாகியவரோ, கோபித்துக் கொள்ளவேண்டாம் கோபித்துக் கொள்ளவேண்டாம்—எ-று.

எந்நீர்களுமொன்றாகிய வெழுவாரியுமனலாகி ... ...*
வெந்நீ[illegible]லுடன்விளவப்புனலுண்டோ ... *
இன்னீர்மை[illegible]யிலிதன்றாலுலகுயிரெப்படிநிகழும் ... *
முந்நீர்விடமுண்டோயெனைமுனியேலெனைமுனியேல்*

(இதன்பொருள்.)

எல்லாநதிகளினீரும் விழுந்து ஒன்றாகிய எழுசமுத்திரமுங்காய்ந்து வெந்நீராய்ச் சுட்டால் அதையாற்றுகிறதற்கு வேறே சலமுண்டோ, உமக்கே இப்படிப்பட்டகோபம்வந்தால் உலகத்திலிருக்கிற சீவராசிகள் எப்படிப்பிழைக்கும்முன்னே சமுத்திரத்திலேபிறந்தஆலகாலவிஷத்தை உண்டமூர்த்தி கோபஞ்செய்ய வேண்டாம் கோபஞ்செய்யவேண்டாம்—எ-று. (௭௧)

பிறையேமுழுமதியேயுறைபெண்ணேபிறவாணே ... *
நறையேநறுமலரேயெனநானாவிதமாலை... ... *
பொறையேதிருவருளேபொழிபுயலேயியலிசையே ...*
முறையேபலமுறையேயெனைமுனியேலெனைமுனியேல்.

(இதன்பொருள்.)

மூன்றாம் பிறையாகியும் பூரணச்சந்திரனாகியும் பெண்ணாகியும் ஆணாகியும் தேனாகியும் புஷ்பமாகியும் மாலைகளாகியும் கிர்பாவருஷித்தைப்பொழிகின்ற மேகமாகியும் சொல்லாகியும் நாதமாகியும், மற்றும்நானாவிதரூபமாகி யிருக்கின்றமூர்த்தியே உமக்குமுறையோமுறை யென்னைக்கோபிக்கவேண்டாம் கோபிக்கவேண்டாம்—எ-று. (௭௨)

வெம்மைச்சரமலராகியவில்வேள்தனுவன்றே ... ...*
கொம்மைத்தலைமதவாறெழு கோடக்களிறன்றே ... *
செம்மைக்கனலன்றேகொலை செயுமந்தகனன்றே ...*
மும்மைப்புரமன்றேயொருபொருளாயெனைமுனியேல்.

(இதன்பொருள்.)

மிகுந்த வெப்பத்தைக்கொடுக்காநின்ற புஷ்பபாணங்களையுடைய மன்மதன்தேகமல்லவே, தாருகாவனத்துரிஷிகள்விட்ட எழும்பின

தலையையும் ஆறுபோன்ற மகத்தையுமுடைய கோபமாகிய பாணையல்லவே, அந்தரிஷிகள் பின்புவிட்டசிவப்பாகிய அக்கினியல்லவே, கொலைசெய்யுந் தொழிலையுடைய யமனல்லவே, திரிபுரமல்லவே, நாமெவ்வளவு உமக்கு என்னை ஒருபொருளாகக் கோபம்செய்ய வேண்டாம் —எ-று. (எரு)

அரிதற்கரிதாமுன்முடியறிவேனெனுமளவே... ... *
பறவைப்படிவானேனினிமேலோவிடர்படுவேன் ... *
சிறுமைப்படுமென்பாலருள் செய்யென்றுரைசெய்தான்
மறுகிக்குளிரனல்போலினைமகிழ்வாயிவைமொழிவான் *

(இதன்பொருள்.)

யாவராலுமறியக்கூடாத உம்முடையமுடியையறிகிறேனென்ற மாத்திரத்திலேபட்சியுருவமானேன். இனிமேலோ துக்கத்தையடைவேன் சிறுமையையடைந்த என்னிடத்தில்கிருபைசெய்யுமென்றுசொல்லிவிசனப்பட்டபோது மறுகக்காய்ந்துகுளிர்ந்தசலம்போலசிவன் சந்தோஷமாய்த் திருவாய்மலர்ந்து சிலதிருமொழிகளை அருளிச்செய்வார் —எ-று. (எசு)

அப்போருகவஞ்சேனினி யவனித்தலமறையோர் ... *
தம்பூசனை யுன்பூசனை யாகித்தப னியமாருந் ... ... *
சம்பூதர வுலகேழையும்விதியென்றருள்செய்தான் ...*
கம்பூர்கடல் விடமுண்டருள் கருணைக்கடலானுன்... *

(இதன்பொருள்.)

வாராய்பிர்ம்மாவே இனிமேல்நீபயப்படாதே பூமியில்பிராமணர்களுக்குச் செய்கிறபூசை உன்பூசையாகக்கொண்டு பொன்னுருவமாயுண்டாகிய மகாமேருமலை தாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும் போல்படையென்று அருளிச்செய்தார். சங்குகள்தவழாநின்றசமுத்திரத்தின் விஷத்தையுண்டகிருபைக்கடலாகியசிவன் —எ-று. (எரு)

(அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

இத்தலத்தையுமக்குவரங் கொடுத்தலினுல்யோசனைமூன் றெல்லைதூரம், சுத்தபவித்திர ஞானத் தலமாகப்பொலிகவிந்தச் சோதிதானுஞ் *
சிற்றுருவ மலையாகி வரமுதவக் கடவதின்பஞ் சிறந்ததான .. ...*
முத்திதனைத்தகையாம லுதவுமிதற்கருணை புரிமொழியு நாமம் ...*

(இதன்பொருள்.)

வாருங்கள் பிர்ம்மாவிஷ்ணுக்களே, உங்களுக்கு இந்தத்தலத்திலே அனுக்கிரகஞ்செய்து வரங்கொடுத்தபடியினாலே இந்தத் தலத்தைச் சுற்றி மூன்றுயோசனை தூரம்வரைக்கும் சுத்தபவித்திரமாக இருக்கவேண்டியது. இந்தச்செந்தீ மலையானது சிறியஉருவத்தோடுங்கூடிய மலையாகக்கடவது பேரின்பஞ்சிறந்த மோட்சதசைத் தடையில்லாமற் கொடுக்கும் இந்தஸ்தலத்துக்கு அருணபுரியென்றுபேராம் — எ-று.

வாதைபடு மிந்திரனு மிமையவரு நினைக்கவவர் வருத்தந்தீர்த்தோம்,
ஆதலினு லித்தலத்தை நினைப்பவர்க்குப் பிறப்பிடும்பை யகற்றுவோ
மிப், பூதரமுமித்தலமும் பிரளயத்துமழியாத பொற்பதாகி, மோதி
யகாற் றடைந்ததிசைச் சராசரங்களெவையுமுயர் முத்திசேர்க்கும் *

(இதன்பொருள்.)

துன்பத்தையடைந்த தேவேந்திரனும் தேவர்களும் நம்மைநினைக்க அவர்களுடைய துன்பத்தைத்தீர்த்தோம். ஆனபடியினாலே இந்தஸ்தலத்தை நினைக்கிறவர்களுக்குப் பிறவித்துக்கத்தை நீக்குவோம். இந்தப்பர்வதமும் இந்தஸ்தலமும் பிரளயகாலத்திலும் நாசமடையாத லட்சணத்தையுடையதாகி மோதுகின்ற வாயு சஞ்சாரம்செய்கின்ற திக்குகளி லிருக்கிற சராசரங்களெல்லாவற்றையும் முத்தியிலே சேர்க்கும்—எ-று. (௭௭)

வையகத்தி லரியதவம் புரிந்தவருக் கினியமுத்தி வழங்கவேண்டிச்,
செய்யவிந்தத் திருநகரி லவதரிக்க வரந்தருவோஞ் செய்ததான,மெய்
பெறவொன் றாயிரமாய் வளருமிதிற் கொடும்பாவம் விளையாதிதை,
யையமென வுணர்வார்க்குப் பரகதிகிட்டாதுதம தாணைதாமென. *

(இதன்பொருள்.)

பூமியில் அரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு இனிமையான மோட்சத்தைக் கொடுக்கவிரும்பிச் சோதிசொரூபமாகிய இந்த ஸ்தலத்தில அவதரிக்கவரத்தைக்கொடுட்டோம். இதில் ஒருதானஞ்செய்தால் ஒன்று ஆயிரமாய் விருத்தியாகும் இந்தஸ்தலத்தில் பாவமேயுண்டாகாது, இதைச்சந்தேகமாக நினைப்பவர்களுக்கு மோட்சங் கிடைக்கமாட்டாது, நம்முடைய ஆணைப்படிக்கு என்றார் பரமசிவன்—என்றவாறு. (௭௮)

அண்ணலிவை மொழியளவி லழற்றூண மதுகுறுகி யசலமாகி,
வண்ணநெடுஞ்சுடர்விரிந்து விளங்குதல்கண்டயன்றிருமால்வணங்கிச்
சொல்வார், விண்ணவர்க்குமெங்களுக்கு மிதின்சோதிக் கெதிர்குறுகி
விழிக்கப்போகா, தெண்ணரியசுடர்களெல்லா முட்கரந்தமலையாகவி
ருக்கவென்றார்... ... ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரஞ் சுவாமி சொன்ன அளவில் அக்கினி மலையானதுகுறுகி ஒருசிறியமலையாய் நிறம்பொருந்திய அநேகப்பிரகாசம்விரிந்து பிரகாசித்தலைப்பார்த்துப் பிர்ம்மாவும் விஷ்ணுவும் சுவாமியை

வணங்கிச் சொல்வார்கள், தேவர்களுக்கும் எங்களுக்கும் இந்தமலையின் சோதிக்கெதிராகப்பார்விழிக்கக்கூடவில்லை, ஆனபடியினாலே எண்ணுதற்கரிய கிரணங்களெல்லாமறைந்து ஒருமலையாயிருக்கவேண்டுமென்றார்கள்—எ-று. (௭௯)

அன்னமிசை வருவானுங் கருடன்மிசைவருவானு மமலமூர்த்தி,
வன்னியொளிமறைத்துமற்றை மலையாகவிருத்தியெனமலையாச்செய்
தார், சென்னியிலேயாருஞ்சோதி யனுதினமுந்தெரியவருள் செய்
வாயென்ற, வென்னுமந்த வடியவர்க்கா விறையவனு மிரங்கியிவை
யியம்பலுற்றான். ... ... *

(இதன்பொருள்.)

அன்னவாகனத்திலேறுகின்ற பிர்ம்மாவும், கருடவாகனத்தில் வருகின்ற விஷ்ணுவும், மலரகிதராகிய சுவாமீ அக்கினிப் பிரகாசத்தை மறைத்து மற்றமலைகள்போல் இருக்கவென்றுகேட்க அப்படியேமலையுருவாகச்செய்தார். இந்தமலையினுச்சியிலே ஒருபிரகாசம், எந்நாளும் தெரியும்படியாகக் கிருபைசெய்யவேண்டுமென்றார்கள். அப்படிச்சொன்ன தொண்டர்களுக்காக இரங்கிச் சுவாமியுந்திருவாய்மலர்ந்தார்—என்றவாறு. (௮௰)

கார்த்திகைக்குக்கார்த்திகைநா ளொருசோதிமலைநுனியிற் காட்டா
நிற்போம், வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்லா துலகில்ம
ன்னிவாழ்வார், பார்த்திவர்க்குமருந்தவர்க்கு மிடையூறுதவிருமிது ப
ணிந்தோர்கண்டோர், கோத்திரத்திலிருபத்தோர் தலைமுறைக்கு முத்
திவரங்கொடுப்போமென்றார்... ... ... *

(இதன்பொருள்.)

வாருங்கள் விஷ்ணுபிர்ம்மாக்களே! கார்த்திகைமாதத்தில்கிர்த்திகைநட்சத்திரத்தில்மலையினுச்சியில் ஒருபிரகாசங்காண்பிப்போம், அப்படிப் பொருந்திய சுடரைக்கண்டால் தரித்திரமும் வியாதியில்லாமல் உலகத்தில்நிலைபெற்றுவாழ்வார்கள். இந்தச்சோதியைக்கண்ட ராஜாக்களுக்கும், அரியதவசிகளுக்கும், இடையூறுநீங்கும், இதைப்பணிந்தவர்கள் தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொருதலைமுறைக்கு முத்திவரங்கொடுப்போமென்றார் அருணாசலேசுரர்— எ-று.

மரணபவமறுக்கநல்ல மருந்தாகுமகற்குமலைமருந்தென்றோர்பே
ரருணவடிவாதலினாலருணகிரியெனுமொருபே ரதனையோர்கால், தர
ணியிலேயுரைத்தவர்க்கு முக்கோடியஞ்செழுத்துச்சரித்ததாமென், றி
ருணிலவு மிடற்றிறைவ னிசைக்கமகிழ்ந் திறைஞ்சியவ ரிசைப்பதா
னார். ... ... *

(இதன்பொருள்.)

இறப்பினையும் பிறப்பினையும் நீக்குவதற்கு மருந்தானபடியினாலே இந்தமலைக்குமலைமருந்தென்றும்பேர் அந்தமலைசிவப்புநிறமானபடியினாலேஅருணகிரியென்றுமொருபேர் அதைஒருதரம் பூமியிலேசொன்னவர்களுக்குப் பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்ததற்குச் சமானமாகுமென்று நீலகண்டத்தையுடைய சிவன் அருளிச்செய்ய, விஷ்ணுபிரம்மாக்கள் சந்தோஷித்தையடைந்து சுவாமியைவணங்கிச் சொல்லத்தொடங்கினார்கள்—எ-று. (௮௨)

அடுத்தருணகிரியானே புனக்குவின்னவி ரலதுட [illegible]லாட்டுவாராய்த், தொடுத்தவுடுத்திரளலது திருமுடிக்கு மணி [illegible]வாரார், கடுத்திகழு மிடற்றும்ன கதிர்களன்றி மனித்தீப [illegible]ரார், எடுத்திறைஞ்சிப் பூசைசெய்ய விதலீமோ ரிலிங்க [illegible]யென்றார்.

(இதன்பொருள்.)

அருணாசலேசுரரே மலையாகி உமக்கு ஆகாயத்[illegible] பெய்யாநின்ற மழையேயல்லாமல் சலங்கொண்டுவந்து [illegible]செய்கிறவர்களார் நட்சத்திரக்கூட்டங்களேயுதித்துமாலை[illegible]றதொடுத்துமாலைசூட்டுகிறவர்களார், சூரியகிரணமே தீபமா[illegible] தீபங்கொண்டுவந்து வேம்றகாட்டுகிறவர்களார், ஆனபடியி[illegible] நாங்கள் அபிஷேகமுதலானதுகள்செய்து பூசைசெய்வதற்கு [illegible]ந்தமலையின்கீழ் ஒரு லிங்கரூபமாக எழுந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்—என்றவாறு. (௮௩)

அன்னதுவாயிருக்குநீர் காமியத்திலருச்சியுமென் றசலம்புக்கா, மென்னிலமும் புகழவங்கோர் சிவனுருவமுளைத்ததுகண் டிறைஞ்சியேத்தி, மன்னியபூமழைபொழிந்து பரவசமாய்மகிழ்ந்தாடி மடனைக்கூவித், தன்னிகரில்கோபுரமு மண்டபமு மணிமதிலுஞ் சமைப்பித்தார்கள்... ... ... *

(இதன்பொருள்.)

அப்படியே லிங்கமாகிறோம் பத்தியுடனேபூசியுங்களென்று அந்தமலையினுள்ளே மறைவுகோலஞ்செய்தார். எந்தத்தேசமும் புகழும்படிஅவிடத்தில் ஒருலிங்கந்தோன்றியது அதைக்கண்டுவணங்கித்தோத்திரஞ்செய்து புஷ்பவருஷம்பொழிந்து பரவசமாய்சந்தோஷித்தையடைந்து ஆனந்தக்கூத்தாடி மயமென்கிற தேவதச்சனைக் கூப்பிட்டு, ஒப்பில்லாதகோபுரங்களும், மண்டபங்களும், அழகுபொருந்திய, மதிலுஞ் செய்வித்தார்கள்—என்றவாறு. (௮௪)

அழியாதவளநகருந்தீர்த்தமுந் நூற்றுப துங்கலுடமுஞ்செய்தார்...*
வழியாதநீர்ச்சுரர்தியுஞ்சுரதருவுங்கேணிகளுமரமுமான..........*

வொழியாமலிமயவருமிருடியரு மனிதரெனவுருவங்கொண்டார்·· *
விழியாலவிடமனையை கணிகையரா யரம்பையருமேவினரோ······*

(இதன்பொருள்.)

ஒருகாலத்தும் அழியாதவளம்பொருந்திய நகரமும், மூந்நூறுவகையாகிய தீர்த்தமும் உண்டானதுகண்டு அழகுசெய்தார். அழியாதசுவத்தையுடைய ஆகாயகங்கையும் கற்பகவிருட்சமும் கிணறுகளும் மரமுமானதுகள் நீங்காமல் தேவர்களும் ரிஷிகளும் மனிதரூபங்கொண்டுவந்துபிறந்தார்கள், விஷம்போன்ற கண்களையுடைய தாசிகளாக ரம்பாஸ்திரீகள் பிறந்தார்கள்—என்றவாறு. (௮௫)

காலையிலேமுழுகிமர வுரியுடுத்துச்சிவந்தசடைகட்டிநீறு ······ *
மேலணிந்துகண்டிகைபூண்டனமுதலா மஞ்சனத்தால்மிகுந்தசாந்தா
ன், மாலையினாற்சிவபூசை புரிந்தண்ணா மலையதனை வலங்கொண்டேத்
தி, யேலவொருபதினாலாயிரவாண்டுகழிந்ததற்பின் னிறைவரானார் *

(இதன்பொருள்.)

பிர்ம்மாவிஷ்ணுக்கள் இருவரும் காலமே முழுகி மரவுரிதரித்துக்கொண்டு சிவந்தசடைகட்டி விபூதியை உடம்பெல்லாம் தரித்து ருத்திராட்சமாலை பூண்டுகொண்டு அன்ன முதலாகிய திருமஞ்சனத்தினாலும், சந்தனத்தினாலும், மாலையினாலும், சிவபூசைசெய்து திருவண்ணாமலையைப் பிரதட்சிணஞ்செய்து வணங்கிப் பொருந்தும்படி பதினாலாயிரம் வருஷம் ஆனபின்பு சுவாமியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள்பதிக்குப்போய்த் தங்கள் அதிகாரத்தைப்பெற்றுக்கொண்டார்கள்—என்றவாறு. (௮௬)

ஆசைதருந்திருவருணைசமைத்ததற்பின் கயிலைமலையாசைபோயிற்,
றீசனுக்கங்கனகமலையிதுவாயின் வெள்ளிமலை யினிமேலென்னாங்,கா
சிமுதலெடுத்துரைக்குஞ் சிறப்புடையதலமேழுங்கனகநாடு, மாசகன்
றகதிர்தோன்ற வொளியிழந்த வடுக்கணம்போல் வளமைமேய்ந்த *

(இதன்பொருள்.)

சுவாமிக்கு ஆசைகொள்ளும்படி திருவருணாசலஸ்தலம்சமைந்தபிறகு கயிலைமலையிலிருக்கும் ஆசைவெறுத்தது. இந்தமலையே பொன்னுருவங்கொள்ளுமாயின் வெள்ளிமலையின்மேலாசை யுண்டாகுமா- காசிமுதலாகச் சொல்லப்பட்ட ஏழுஸ்தலங்களும், தேவலோகமும், குற்றநீங்கிய சூரியன் உதயமாகப் பிரகாசமிகுந்த நட்சத்திரங்கள் போல் ஒளிமழுங்கிப்போனதுகள்—என்றவாறு. (௮௭)

அரியயனுமளவிடற்கரிய மலை நிலையுரைக்க வரிதென்றாலுந், தெரியவுனக்கறிந்தபடி சிறிதுரைத்தேனினியுரைக்குந் திறமேதென்றான், வரிசைபெறுமார்க்கண்ட முனிமகிழ்ந்து பணிந்துமையாள் மலையிற்றோன்றி, புரியசிவனிடங்கலந்த கதையுமுரைத்தருளுகென வுரைப்ப தானன்... ... ... ※

(இதன்பொருள்.)


நந்திகேசுரர் மார்க்கண்டேய ரிஷியைப்பார்த்து விஷ்ணுவும் பிரம்மாவும், அறிதற்கரிதாகிய திருமலையினது சிறப்பையென்றாற் சொல்லுதற்கரிதென்றாலும் எனக்குத்தெரிந்த அளவில் சிறிது உமக்குத் தெரியும்படிச்சொன்னேன், இனிச்சொல்லவேண்டியதென்னவென்றார், வரிசைபெற்ற மார்க்கண்டேயரிஷி சந்தோஷித்துவணங்கிச் சுவாமீ பார்ப்பதியானவள் இமவற்பர்வதத்தில் அவதாரஞ்செய்ததுவும், சுவாமியைநோக்கித்தவஞ்செய்து அவரிடப்பாகம்பெற்றதுவும், சொல்லவேண்டுமென்றுகேட்கச்சொல்லத்தொடங்கினார்—எ-று. (அஅ)

இரண்டாவது

திருமலைச்சருக்கம்

முற்றிற்று

ஆக திருவிருத்தம்- ௱௬௪.



சிவமயம்.

பார்ப்பதியார்

திருவவதாரச்சருக்கம்.

(அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

பன்னிருவர்பதினொருவ ரெழுவரெண்மர் திசைக்கிறைவர்பணி நாட்டுள்ளோர், கின்னரர்கிம்புருடர்சித்த ரியக்கரிமயவர்முனிவர்கிளை யினுள்ளோர், மன்னுமலரவன்றிருமால் கலைமடந்தைமலர்மடந்தைம கிழ்ந்துசூழ, முன்னவனையிகழ்ந்தூதக்கன் முடியாதபெருவேள்விமு டிக்கலுற்றான்... ௧. ... ... *

(இதன்பொருள்.)

கேளும்-மார்க்கண்டேயரே,முன்னாளிலே பிர்ம்மாவினிடத்திற்பிறந்த தக்கனென்பவன் அரியதவஞ்செய்து உயர்ந்தவரங்களைப்பெற்றுக்கொண்டு மிகவும்பிரசித்தனாகி வாழுகிறகாலத்திலே பார்ப்பதியானவள் தன்னிடத்திலேபிறக்க அந்தஅம்மனைச் சுவாமிக்குக் கலியாணஞ்செய்துகொடுத்து மாமனாகும்படி வரம்பெற்று அந்தப்படி செய்த பின்பு-ஒருநாள் இவன் சுவாமியினுடைய சபைக்குப்போனான், அவ்விடத்திற் சுவாமிதனக்கு எழுந்து மரியாதைசெய்யவில்லை யென்கிற கோபங்கொண்டு தன்னுடையவீட்டுக்குவந்து சுவாமியைப்பார்க்கிலும் உயர்வையடையவேண்டுமென்று பன்னிரண்டுசூரியர்கள், பதினொருருத்திரர்கள், சத்தரிஷிகள், அட்டதிக்குப்பாலகர், நாகலோகத்தார், இந்திரர், கிம்புருடர், சித்தர், யக்ஷர்கள், தேவர்கள், முனிவர்கள், நிலைபெற்ற பிர்ம்மா,விஷ்ணு,சரஸ்வதி,லட்சுமி,இவர்கள்யாவர்களும்மிகவும் சந்தோஷத்தையடைந்து சுற்றிக்கொள்ள-எல்லார்க்கும் முதல்வராகிய பரமசிவனை நிந்தித்துமுடியக்கூடாத பெரியயாகஞ்செய்யத்தொடங்கினான்—என்றவாறு. (௧)

எந்தைசெயு மகம்பார்க்க விடைபருளென் றிறைக்கிறவி யிசைத் தாளுந்தை,பந்தியிலா திகழ்ந்தனனென் றுரைத்தனனீ தெனைவேண் டிப் பொறுப்பாயென்று, வந்தனஞ்செய் தனளவளை நகைபுரிந்து கடிதுசென்று வருவாயென் றான், கந்தமலர்க் குழலாளுந் தந்தைம கந் தொடங்குகன தலத்தைச்சார்ந்தாள் .. ..*

(இதன்பொருள்.)

பார்ப்பதி தேவியானவள் தகப்பனாகிய தக்கன் யாகம் பண்ணுகிற தைக்கேட்டு சுவாமீ என்னுடைய தகப்பன் செய்கிற வேள்வியைப் பார்த்து வருகிறதற்கு உத்தரவு கொடுமென்று கேட்க, அதற்குச்சுவா மியானவர் உன்னுடைய தகப்பன் புத்தியில்லாமல் என்னை மிகவும் நிந்தித்திருக்கிறானே நீபோகலாமா வென்று சொல்ல, அதைக்கேட்டு சுவாமி என்தகப்பன் செய்த இந்தக்குற்றத்தை என்னை வேண்டிப் பொறுக்கவேண்டுமென்று நமஸ்காரஞ் செய்தபோது அந்த அம்ம னை நகைத்து நல்லது நீபோய்ச் சீக்கிரத்தில் வந்து சேரென்றுசொல் லப் பார்ப்பதியும் தக்கன் யாகஞ் செய்கிற இடத்திற்குப் போனாள் —என்றவாறு. (௨)

தாயனைக்கண் டடிதொழுதா ளவடழுவா திருந்தனள்தன் றந்தை யான, தீயவனைப் பணிந்தனளங்கவனுமிகழ்ந்தா னிகழ்ந்த செயலை நோக்கிப், பேயிருக்குஞ் சுடலையெனப் பிழைபிறந்து விடுகவுங்கள் பெருவாழ்வென்று, வாய்பிறக்குங் கொடுமைசொலி மறைத்தனளச் செயலறிந்தான் மங்கைபாகன் ... ... *

(இதன்பொருள்.)

பார்ப்பதியானவள் தக்கன் யாகசாலைக்குப்போய்த் தன்னுடைய தாயை வணங்கினாள். அவள் இந்த அம்மனைத்தழுவி உபசாரஞ்சொல் லாமலிருந்தாள், அதன்பின்பு தீமைபொருந்திய தகப்பனைவந்தனஞ் செய்ய அவனும் நிந்தித்தான். அதைப் பார்த்துக் கோபங்கொண்டு உன்னுடைய யாகசாலைவாழ்வு பேயிருந்து விளையாடுஞ் சுடலையாகி ப் போகக்கடவதென்று சபித்து இந்தப்பாவி வளர்த்ததேகம் இருக் கக்கூடாதென்றுயோகத்தினாலே தன்னுடைய தேகத்தைவிட்டாள் அ ந்தச்சமாச்சாரத்தைக்கேட்டார் பரமசிவன்—எ-று. (௩)

(கலிவிருத்தம்.)

உண்ணிலாவுவஞ்சிசொல்ல வொருவனுளியுய்யுமோ ... ...*
தண்ணிலாமுடிக்குனின்று தழலைமொண்டிறைக்கையா ....*
லண்ணலவ்வெப்பிமுனிவுகொள்ளு மாவினெற்றிவிழிதனில்...... ..*
விண்ணமங்கமண்ணைமங்க வீரன்வந்துதோன்றினன்.........*

(இதன்பொருள்.)

எப்பொழுதுங்கூடியிருந்த பார்ப்பதி தேகத்தைவிட்டவுடனே ஒன்றியாயிருந்து பரமசிவனுடைய உயிர் சவுக்கியத்தை யடையுமோ

குளிர்ச்சிபொருந்திய சந்திரன் தம்முடையசிரசிலேதானே யிருந்து நெருப்பைவாரிச் சொரிகிறபடியினாலே அதிகதாபத்தையடைந்து இந்தத்தக்கனாகிய பாவியினாலல்லவோ இந்தவருத்தம் உண்டாச்சுதென்று கோபித்துக்கொள்ளும்போது அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரரானவர் ஆகாயவுலகமும் பூமியும்நடுங்கும்படியாகத் தோன்றினார்—எ-று. (௪)

மஞ்சுபற்றுயுடல்கறுத்து மணிமயூகமுடியுடன்... ... ... *
சஞ்சரிக்குமேருவென்ன விடிமுழங்குதழலின்வாய்... ... ...*
நஞ்சுகொப்பளிக்கநெற்றி நயனமுங்கொதிக்கமே .. .. *
லஞ்சலித்தகையொடெங்க ளையன்வந்துதோன்றினான்... ... . *

(இதன்பொருள்.)

மேகத்தைப்பார்க்கிலும் உடம்புகறுத்து மயிலினது நிறம்போன்ற மரகதரத்தினம்பதித்த கிரீடத்துடனே சஞ்சரிக்கின்றமேருவுக்குச்சமானமாகி இடிபோல்முழங்குகின்ற நெருப்பாகிய சொற்களையுடையவாயானது நஞ்சைக்கொட்டளிக்க நெற்றிக்கண்கொதிக்கச்சிரசின்மேல்வைத்துக்கூப்பிய கைகளோடு எமதுஐயராகிய வீரபத்திரர் வந்துதோன்றினார்—எ-று. (௫)

கழித்தசிங்கவுரிபுயத்தி னுத்தரீயமாகவே ... ... *
ஒழித்தெறிந்தவல்லியத்தி னதளிசைத்தகச்சையாய் ... ...*
விழித்திமைக்குமுன்னம்விண்ணின் வெளியடைத்தமேனியா .. ...*
யழைத்ததென்னவென்னவெம்பெறனையன்வந்துதோன்றினான்... *

(இதன்பொருள்.)

இரணியனைக் கொன்ற நரசிங்கத்தினுடைய தோல் உத்தரீயமாகவும்,தாருகாவனத்து ரிஷிகளால்விடப்பட்டுச் சுவாமியினால் மரணத்தையடைந்த புலியினது சர்மம் இடுப்புக்கச்சையாகவும் விழித்துஇமைக்கிறதற்குமுன்னே ஆகாயமெல்லா மறைத்ததேகத்துடனே என்னையழைத்தது என்னகாரணம் என்னகாரணம் என்று வீரபத்திரர் வந்தார்—என்றவாறு. (௬)

முக்கணத்தனீர்கொடாது கனல்கொடுக்குமுகிலெனத் ... ...*
தக்கன்வேள்வியைத்தகர்த்து மீள்தியென்றுசாற்றின ... ... *
னக்கணத்தினுவகைபொங்கி யடிவணங்கியேகினன்... ... ...*
பக்கநின்றபூதநாதர் பாரிடங்கள்சூழவே ... ... *

(இதன்பொருள்.)

என்னையழைத்தகாரியம் என்னவென்றுகேட்ட வீரபத்திரனைப்பார்த்து மூன்றுகண்களையுடைய பரமசிவன் சலத்தைப்பொழியாமல் நெருப்புகளைக்கக்கும் மேகம்போல் போய்த் தக்கனுடைய யாகத்தை யழித்துவாவென்று அருளிச்செய்ய - அந்தட்சணமே வீரபத்திரர் அதிக சந்தோஷத்தை யடைந்து சுவாமியினது திருவடியைத்

தொழுது பக்கத்தில்நின்ற பூதக்கூட்டங்களும், பேய்களும்- சூழப் போனார்—என்றவாறு. (எ)

நஞ்சுகொப்புளிக்குநாக நாலிரண்டுமாலையா ... ... *
யஞ்சிரட்டிபூதநீல வாலவட்டம்வீசவே ... ... *
குஞ்சரங்கவெட்டையுங்குதம்பையாகவிட்டவெண் ... *
கஞ்சுகத்தர்நால்வர்தூய கவரிநின்றுவீசவே ... *

(இதன்பொருள்.)

விஷத்தைக்கக்குகின்ற அஷ்டமாநாகங்களை மாலையாகத் தரித்துங்கொண்டுபதத்துப்பூதங்கள் நீலவர்ண்ணமான ஆலவட்டம் வீசக்கொண்டுவரத் திக்கிலிருக்கின்ற யானைகளெட்டையும் காதிலேகுண்டலமாகத் தரித்துக்கொண்ட வெள்ளைச்சட்டையணிந்த நாலுபேர்கள் பரிசுத்தமாகிய சாமரம்வீசவும் புறப்பட்டார் வீரபத்திரர்—என்றவாறு. (அ)

தீயிருந்த வுதரவெம்மை விண்பிழிந்துதீர்த்திடும் ... *
பேயிரண்டுநூறு நூறு காகளப்பிடிக்கவே ... ... *
வாயிரண்டு பாலுமாலை மதியிடந்தபூதமோ ... ... *
ராயிரங்கவிக்கமுத்தி ளுதபத்திரங்களே ... ... *

(இதன்பொருள்.)

வடவாமுகநெருப்புக் குடிகொண்டிருந்தவயிற்றினுடைய பசியை மேகங்களைப் பிழிந்துகுடித்து ஆற்றிக்கொள்ளுகின்ற இரண்டாயிரம் பேய்கள் எக்காளம் பிடிக்கவும், சந்திரனை- இரண்டாகப்பிளந்து இரண்டுகடைவாயிலும்வைத்தாலதுபோலிருக்கின்ற ஆயிரம்பூதங்கள் முத்துக்குடைகள் பிடிக்கவும் புறப்பட்டார்—எ-று. (கூ)

மாயுமாயர்தந்தசங்கு கோடிகோடிமறுகவே ... *
தீயின்வாயினூர்திதந்த சிங்கநாதமூதவே ... ... *
சாயுமெண்ணில் காலர்மேதி தந்தகொம்பிசைக்கவே ... *
யாயிரங்களிற்றெருத் தணைத்ததேரிலேறினன் ... ... *

(இதன்பொருள்.)

இறந்துஇறந்து பிறக்கின்ற அநேககோடி விஷ்ணுக்களுடையகையிலிருந்த சங்குகளை அநேகபூதங்கள் வாயில்வைத்து ஊதிவரவும் இறந்த அக்கினிபகவான் வாயுபகவானேறுகின்ற ஆட்டுக்கடாகலைமான் இதுகளுடைய கொம்புகளைவாயில்வைத்து அநேகபூதங்களூதவும், இறந்துபோன யமராசர்களேறிய எருமைக் கடாக்களுடைய கொம்புகளை வாயிலவைத்து அநேகபூதங்களூதவும், ஆயிரம்யானைகள் கட்டியிழுக்கின்றதேரிலேறினார்வீரபத்திரர்—எ-று. (ய)

சிலைகணங்களானயானசிலைகணங்கள்தேரதா ... ... *
புல்லுகின்ற சிலைகணங்க ளோடுகின்ற வாசியாய் ... ... *

மலைவுகொண்டுசிலகணங்கண் மனிதர்தேவராயின ... ... *
வலைகைதானுமலகிலாதலைந்தவேடமானதே ... ... *

(இதன்பொருள்.)

அப்படி வீரபத்திரர் தேரிலேறினபோது சிலபூதங்கள் யானைரூபங்கொண்டதுகள், சிலபூதங்கள்தேரினுருவங்கொண்டதுகள், சிலபூதங்கள்குதிரையாயினதுகள், சிலபூதங்கள் மனிதரும்தேவருமானதுகள், அளவில்லாதபேய்கள் அனந்தரூபங்கொண்டு புறப்பட்டதுகள் — என்றவாறு. (௰௧)

வீரையே மடங்கவுண்டும் விடாய்கெடாதுமீளுமே ... *
பாரமேழு பாருமுண்டு பசிகெடாது படருமே ... *
கூரவேலெறிந்துகாலனூடுகொள்ளைகொள்ளுமே ... *
போரையே விரும்பிமுன் னடந்துசென்றபூதமே ... *

(இதன்பொருள்.)

வீரபத்திரர் புறப்பட்டவுடனே யுத்தஞ்செய்யவிரும்பிஅவர்க்கு முன்னே நடந்த பூதங்கள் எழுசமுத்திரத்து நீரடங்கலும் குடித்தாலும் விடாதீராமல் திரும்பும், பாரமாகிய எழுலோகத்தையும் சாப்பிட்டும்பசிபோகாமல் அலைந்து கொண்டிருக்கும், கூர்மைபொருந்திய வேலாயுதத்தை எறிந்து யமனுடைய நாட்டைக்கொள்ளைகொள்ளும் இப்படிப்பட்டவலிமையையுடையதுகள் — என்றவாறு. (௰௨)

கொண்டலேழையுஞ்சிவந்தகுஞ்சிமீதுசுற்றுமே ... *
புண்டரீகரண்டமும் புகைகொளுத்திமீளுமே ... ... *
யெண்டிசாமுகத்தைநாடியாகசாலைதேடுமே ... ... *
சண்டவாயுவென்னவங்கை தட்டிமோடுபூதமே ... ... *

(இதன்பொருள்.)

எழுமேகங்களையும்பிடித்துச்சிவந்ததலைமயிரிலேசுற்றிக்கட்டிக்கொள்ளும், அநேகபிரம்மாண்டங்களையும புகையுண்டாகநெருப்பினாலே கொளுத்தும், எட்டுத்திக்குந்தேடி யாகசாலையெங்கேயென்றுதேடும் பிரசண்டவாயுபோலக் கைகளைக்கொட்டிக்கொண்டு வீரபத்திரர்பின்னேஓடுகின்றபூதங்கள் — என்றவாறு. (௰௩)

வெள்ளவாழிமதுநுகர்ந்துவீறுகின்றசிலகணந் ... ... *
துள்ளவந்துபுவனமுற்றுஞ்சுற்றுகின்றவிறையையார் ... *
தள்ளுகின்றபேர்களென்றுசாய்க்கநின்றுநகைசெயும் ... *
பள்ளிகொள்ளுமுடனெழுந்துபரிவுகொண்டுபாடுமே ... *

(இதன்பொருள்.)

வெள்ளமாகிய சமுத்திரம் போலே மிகுந்த மதுவைப்பானஞ்செய்த்து அதினால் வீறுப்பு கொண்டு சண்டைக்கு எழுந்ததுகள். சில பூதங்கள் துள்ளிக்கொண்டு லோகமெல்லாஞ் சுற்றிவரும், சிலபூ

தங்கள் நம்முடைய சுவாமியைத் தள்ளுகிறவர்கள் யாரென்று கேட்டு அவர்களைக் கொல்லுகிறதற்காக நின்று வீரநகை கொள்ளும், சிலபூதங்கள் நித்திரைசெய்யும், உடனேயெழுந்து அன்புகொண்டு இவனைக்குதித்துப்பாடும்—என்றவாறு. (௰௪)

வெதிர்சிலம்புமுரசுசங்கம்விருதுயம்பையதிரவே ... *
புதியகண்டை பணிதவண்டை புரிமதங்கமறுகநீள் ... *
கதிகடந்து யாகசாலை கண்டுபூதகணமெலா ... *
மதிதிமைந்தராமேர்களைவாரிவீசினார் ... ... *

(இதன்பொருள்.)

வீரபத்திரசுவாமிபுறப்பட்டவுடனே புள்ளாங்குழல் சிலம்பு முரசு சங்கங்கள் - விருதாகிய உடுக்கை முதலான வாத்திய முழங்கவும், பெரியமணி- தவண்டை - மிருதங்கம் - சத்திக்கவும், வழிமுழுதும் போய்த் தக்கனுடைய யாகசாலையைக்கண்டு எல்லாப் பூதக்கூட்டங்களும் அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகலதேவர்களையும் தூக்கிவாரி வீசினார்கள்—எ-று. (௰௫)

காரிலேறி மையிலேறி கடாவிலேறி யலகைமே ... *
லேறிலேறி மகரமேறி யிரலையேறி யளகையாம் .. *
பாரிலேறி மானேறி பசுவிலேறி யெண்மருந் ... *
தேரிலேறிவந்தவீரர் சேனையாளமோதினார் ... *

(இதன்பொருள்.)

மேகவாகனனாகிய தேவேந்திரனும், ஆட்டுக்கடாவிலேறுகின்ற அக்கினியும், எருமைக்கடாவாகனனாகிய யமனும், பேய்வாகனனாகிய நிருதியும், மகரவாகனனாகிய வருணனும், மான்வாகனனாகிய வாயுபகவானும், அளகாபுரியாண்டு விமானத்தின்மேலேறுகின்ற குபேரனும், எருதுவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுப்பேர்களும் தேரின்மேலெதிர்த்துக் கொண்டுவந்த வீரபத்திரருடைய பூதகணங்களை யெதிர்த்தார்கள்—என்றவாறு. (௰௬)

வாளிசூலம் வேலுலக்கை வச்சிரங் கணிச்சிவாள் ... *
மீளிசேனை காவலாளர் வீழுமாறு வீசினார் ... *
கூளிநா லிரண்டுசென்றுங்கொடியவெண்மர் பரியெலா *
மாளமோடெடுத்தெறிந்தவம்மனைக்குநிகரவே ... *

(இதன்பொருள்.)

திக்குப்பாலகர் எட்டுப்பேரும்-பாணம்-சூலாயுதம்-வேல் - உலக்கை- வச்சிராயுதம் மழு-கத்தி-இதுகளை வீரபத்திரருடைய சேனைத்தலைவர்கள்விழும்படி பிரயோகஞ்செய்தார்கள், அப்போது எட்டுப்பூதங்கள் புறப்பட்டுத் திக்குப்பாலகர்எட்டுப்பேரையும் அவர்ஏறியவாகனங்களெட்டையும், அம்மனைக்குச் சமானமாக எடுத்தெறிந்ததுகள் —என்றவாறு. (௰௭)

அலகைநாலிரண்டுவீழவமர்செய்பூதமோடவே ... ... *
மலைவுகண்டுதிக்குபாலர் வாகைமாலைசூடினார் ... ...*
நலிதல்கண்டுவீரன்வாளிநாலிரண்டையேவினா ... ... *
னுலகபாலருடல்புகுந்து ளமுதமுண்டுவாயதே ... ... *

(இதன்பொருள்.)

முன்னேஎட்டுப்பூதங்களாலேஎறிபட்டுவிழுந்த திக்குப்பாலகரெட்டுபேரும் அந்தஎட்டுப்பூதங்களுங் கீழேவிழவும் மற்றைபூதங்களெல்லாம் ஓடிப்போகவும் யுத்தஞ்செய்து வெற்றிமாலைசூடிக்கொண்டார்கள். அதுகண்டு வீரபத்திர சுவாமியானவர் எட்டுப் பாணத்தை விட்டார். அதுகள்போய் எட்டுப்பேர்களுடலைத் துளைத்து அவ்வுடல்களுள்இருக்கிற அமிர்தத்தைப்புசித்துச் சஞ்சரித்தனகள் — என்றவாறு. (௰அ)

மருங்கிழிந்து குயிலதாகி வச்சிரத்தனேகினா ... ... *
னெருங்குமீசனளகைபாளிநிருதிவாயுவருணனுஞ் ... *
சுருங்கினார்கடாவிலேறி துஞ்சினானழற்பிரான் ... ... *
பெருங்கைமேயழமீசனன்பர் பிறவிபோலறுத்தனன் ... *

(இதன்பொருள்.)

தேவேந்திரனானவன் தன்வாகனத்தைவிட்டுக் குயில்ரூபங்கொண்டு ஓடினான். ஈசானன் குபேரன் நிருதி- வாயு-வருணன் இவர்கள் தோற்று வெட்கத்தை யடைந்தார்கள், யமனானவன் இறந்தான்- அக்கினி பகவானுடைய ஏழுகையும் சுவாமி அன்பருடையபாவங்களை அறுப்பதுபோல் அறுத்துத் தள்ளினார் வீரபத்திரர்—எ-று. (௰கூ)

கச்சமற்ற வச்சமோடு கலையதானவெச்சனை ... ... *
ரொச்சனைக வுயிர்வாரி யுடலுரித்தெறிந்தனன் ... ... *
பச்சைவல்லி யன்னையான பன்னிகாதிரண்டையும் ... *
வச்சிரத்தினாலரிந்து மாமன்முன்பு சென்றனன் ... ... *

(இதன்பொருள்.)

அளவில்லாத பயங்கொண்ட யாககர்த்தாவாகிய கலைக்கோட்டு மகாரிஷி பிராணனுந்தேகமும் வேறாகக்கொன்று உடலை உரித்து எறிந்தார், பார்வதிதாயாகிய தக்கனுடைய பெண்சாதியினுடைய இரண்டு காதையும் அறுத்துத்தள்ளி மாமனாகிய தக்கனிடத்திற்குப் போனார் வீரபத்திரர்—என்றவாறு. (உ௰)

மிக்கருந்துசோமபானம்வீரபானமாகவே... ... ... *
யொக்கநின்றயாகதண்டமொன்றுகொண்டுகுன்றுபோற் ... *
றக்கனெதிர்த்தபோது தலையரிந்துதள்ளினா ... ... *
னக்கணத்திலொன்றுசென் றக்காக்கனைத்தயிலேற்றதே... ...*

(இ-ள்.) தேவர்கள்கூடிச்சோமபானஞ்செய்கிறதை நீக்கித்தனக்குவீரமே பானமாகும்படி யாகசாலையிற்புகுந்து யாகஸ்தம்பத்தைப் பிடுங்

கித் தக்கனுடையதலையை மலைபோல் கீழே அறுந்துவிழும்படி அடித்துத்தள்ளினார்-அப்பொழுது அந்தப்பூதகணங்களி லொன்று அரைநொடியிலேதானே அந்தத்தலையைத் தின்றுவிட்டது—எ-று. (௨௧)

பசுக்களே றுருத்திரப் பசுக்களாவி தன்னையும் ... ... *
வசுக்களாவிதன்னைய மருத்துதேவராவியும் ... ... *
முசுக்கள்போலொளித்திருந்த முனிவராவிதன்னையு... *
மசிக்கவீரன்விட்டசூல மள்ளிபள்ளியுண்டதே... ... *

(இதன்பொருள்.)

மாடுகளிலேறுகின்ற பசுப்போன்ற ருத்திரக்கூட்டங்கள் பிராணனையும், அஷ்டவசுக்களுயிரையும், மருத்துதேவர்கள் உயிரையும், குரங்குகள்போலொளித்துப் பதுங்கியிருந்த முனியீசுரர்களுடையபிராணனையும், பரிகாசம்பண்ண வீரபத்திரர்விட்ட சூலாயுதம் எடுத்து எடுத்துத் தின்றுவிட்டது—என்றவாறு. (௨௨)

விழியினோ டருக்கர்பல்லை வேரறுத்து வாணிமா ... ... *
வெழில்படைத்த துண்டநா விரண்டு துண்டமாக்கினு ... *
கழலமைத்த கான்மிதிக்க வமிர்தமுண்ட கலைநிலா ... ...*
வழலவிக்குமாறுதாளி லப்புவெண்ணெயொத்ததே ... *

(இதன்பொருள்.)

சூரியனுடைய பல்லும், கண்ணும், தெறித்துக்கீழேவிழும்படி அடித்துச்சரஸ்வதியைப்பிடித்து இரண்டாகநாக்கறுத்தார், லட்சுமியை மூக்கறுத்தார், வீரகண்டாமணியைத் தரித்தகாலினாலே சந்திரனை மிதிக்க அவன் நசுங்கித் தக்கனுடைய யாகசாலை நெருப்பையமிதித்தபடியினாலே அந்த வெப்பந்தீர அப்பிய வெண்ணெய்போலானான்—என்றவாறு. (௨௩)

காயமண்ணில் விட்டதேவர் கரியமேனி யலகையாய் ... *
மாயமாகி முன்னையாகம் வந்துதோன்றியமர்செயத் ...*
தாபசேனை யாயபேர் தொடர்ந்துசாக வமர்செய்தார் ... *
பேயதாயிருக்கவும் பிணக்ககன்ற தில்லையே ... ...*

(இதன்பொருள்.)

பூதகணங்களாலே இறந்துபோனதேவர்கள் கரியஉடம்பினையுடைய பிசாசாகி மறுபடியும் முன்யாகத்திலே மாயமாய்த்தோன்றியெழுந்து சண்டைபண்ண,அவர்களை வீரபத்திரர்சேனை அடித்துக்கொன்றார்கள், ஆனபடியினாலே பேயாய்ப்போகியும் துக்கம்நீங்கவில்லை—என்றவாறு. (௨௪)

விதிபுனைந்த வோமகுண்டம் வேறுபட்ட தென்னினும்... *
புதியசோறு மெள்ளினோடு பொரியும்வாய் புகட்டிமுன்... *

குதிகொணெய்க்குடமெடுத் தொழுக்குபோதொர்கூளிதன் *
னுதரகுண்டமனலெழுந்த வோமகுண்டமானதே ... ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மாவினாலே விதிக்கப்பட்ட யாகசாலை நாசத்தையடைந்தாலும் அதற்குபயோகியாகவைத்திருந்த-சோறும், எள்ளும்,பொரியும்,ஒருபூதம் வாயிலேகொட்டிக்கொண்டு நெய்க்குடங்களை எடுத்து மடமடவென்று விட்டுகொள்ளும்போது அதனுடைய வயிறே ஓமகுண்டமாகவும், உதராக்கினியே நெருப்பாகவும் இருந்தது—என்றவாறு.

அட்டதிக்குபாலரும் வசுக்களுங்குருக்களும் ... ... *
மூட்டமூன முப்பதிற்று மூன்றுகோடிதேவரும்... ... *
பட்டபோ தவர்தம்மெய்கள் படுதுகுதுதன்னுளே ...*
யிட்டபூதவுதரமுன்னை யாகசாலையொத்ததே ... ... *

(இதன்பொருள்.)

அஷ்டதிக்குப்பாலகரும், அஷ்டவசுக்களும், தலைவராகவந்த குருக்களும், முப்பத்துமூக்கோடி தேவர்களும், இறந்தபோது அவர்கள் தேகம் வீணாகப்போகாமல் வீரபத்திரருக்கு முன்னே அவருடைய சேனைகள்சாப்பிட்டபடியினாலே அந்தப்பூதகணங்களுடையவயிறுயாகசாலையையொத்தது—எ-று. (உ௬)

கற்பகாலமுங் கெடாத கணமிதிக்க வமரர்தம் ... ...*
மற்பமா முடம்பிரத்த மாவிகார மொத்ததால் ... ... *
யற்பலா ரியக்கர்சித்தர் பண்டிசிந்து குடர்களாற் ... ...*
சர்ப்பயாக மொத்ததன்று தக்கர்செய்த யாகமே ... ... *

(இதன்பொருள்.)

கற்பகாலத்திலும் அழிவில்லாத பூதகணங்கள் மிதித்தபடியினாலே தேவர்கள் அற்பமாகிய உடம்பில் நின்றும்,பீரிட்டரத்தமானது யாகத்திற்கு நெய்யெடுத்துச் சொரிதல்போலிருந்தது, பலபலயக்ஷர் சித்தர்களுடைய வயிறு பிதுங்கப்பட்டு அவர்களுடையகுடல் கொடிகொடியாகச்சிந்திக்கிடக்கிறது சர்ப்பயாகஞ்செய்தலையொத்தது—எ-று.

சிறந்ததிக்குபாலராதி தேவர்சித்தர்முதலினோ ... ... *
ரிறந்திறந்து போகவேத னிறையிலே யியற்றினான் ... *
பிறந்துவந்துவந்துபோர் பெருக்கினர் பிறந்தபேர் ... *
மறந்துவீடவீரன்மோதி மலரினானையண்டினான் ... ...*

(இதன்பொருள்.)

சிறப்புப்பொருந்திய திக்குப்பாலகர் முதலாகிய தேவர்கள் சித்தர்கள் இறக்க இறக்கப் பிர்ம்மாவானவர்நொடிப்பொழுதிலே யாவரையும்படைத்துக்கொண்டேவந்தார், அவர்கள்மறுபடியும் யுத்தஞ்செய்

தார்கள். அவர்கள் பின்னும் பிறக்காமலிருக்கும்படி பிர்ம்மாவைய டித்துபுத்தஞ்செய்யத்தொடங்கினர் வீரபத்திரர்—என்றவாறு.(உஅ)

செத்ததேவர் மீளவுஞ் செருச்செயப் படைத்திடுங் ... *
கைத்தலங்கள் வீழமாறு கமலனைனை மோதினன் ... ... *
மூத்தலைக்கொள் படையெடுத்து மூண்டகத்தர் சிந்தைசேர் *
பத்துமைந்தர் சென்னியும் படிக்குளே பரப்பினன் ... *

(இதன்பொருள்.)

இறந்துபோனதேவர்கள் மறுபடியும் சண்டைசெய்யப் படைக்கும் பிர்ம்மாவினுடைய கைகளை அறுத்துத்தள்ளினர். முக்கவராகியசூலாயுதத்தாலே அவர்மனதில் உண்டாகிய பத்துப் பிர்ம்மாக்களுடைய தலைகளையும் குத்திப் பூமியில்விழத்தள்ளினர் வீரபத்திரர்—எ - று.

அண்டகூடமுண்டுமிழந்த வாதிமாயனமர்செயத் ... ...*
துண்டமேரு வெனவிளங்கு கருடன்மீது தோன்றியே .. *
விண்டவாளி வருடமாக வீரன்மார்பில் வீசினன்... ... *
கண்டதுண்டமாகவீரன் கையின்வாளியேவினன் ... ...*

(இதன்பொருள்.)

அண்டங்களை விழுங்கி உமிழ்ந்த முதல்வராகிய விஷ்ணு சண்டைசெய்ய மூக்கையுடைய மேரு நிகராகவிளங்கிய கருடன்மேலேறிக்கொண்டு அநேகபாணவருஷங்கள் வீரபத்திரர்மார்பில் படும்படியாகப் பொழிந்தார். அப்படிவிட்ட பாணங்களையெல்லாம் கண்டதுண்டமாகத் தங்கைப்பாணத்தினாலே அறுத்தெறிந்தார் வீரபத்திரர்—என்றவாறு. (௩0)

வையமுண்ட மால்வெகுண்டு வாள்விதிர்த்து வீசின ... *
னையனங்கொர் வாளியா லறுத்தெறிந்தொ ரம்பினற்... .. *
பையரா வருந்தியாவி பருகினன்மெய் கருகினன் ... *
கையிலாழியேவினன் பணிந்ததண்ணல்காலிலே ... ...*

(இதன்பொருள்.)

விஷ்ணுவானவர் வில்யுத்தம் பண்ணுகிறதிற் சத்தியில்லாமல் கோபங்கொண்டு ஒருகத்தியையெடுத்துச்சுற்றிவீசினர்.வீரபத்திரர் அந்தக்கத்தியைஒருபாணத்தைவிட்டுஅறுத்தெறிந்து ஒருபாணத்தினாலே பாம்பைக்கொல்லுகின்ற கருடனைக்கொன்றுவிட்டார். அதுகண்டுதுக்கத்தினாலே உடம்பு கருகிப்போய்க் கையிலிருக்கிற சக்கரத்தை வீரபத்திரர்மேற் பிரயோகஞ்செய்தார். அது ஓடிவந்து சுவாமிகாலிலேவிழுந்துபணிந்தது—எ-று. (௩க)

எந்தைமுன் னளித்தவாழி யெந்தைதாளில் வீழவே ... *
யந்தமெய் யொழிந்துயன்றி ரரியின்வேட மாகியே... *

வந்துவந்து போர்தொடங்கி வாளின் வேலின் வவ்வின *
னூந்தியீவெறூர் சேலதாகி வாரிமீ தொளித்தனன்...... *

(இதன்பொருள்.)

முன்காலத்திலே விஷ்ணு ஆயிரந் தாமரை மலரைக்கொண்டு பரமசிவனைப்பூசித்து வருகிறபோது இவர்பத்தியைப் பரிசோதிக்கவேண்டி ஆயிரம்பூவிலே ஒருபூவைச் சுவாமி மறைத்துவைத்தார். விஷ்ணு பூசைசெய்து அர்ச்சனைபண்ணிக்கொண்டு வரும்போது ஒருபுஷ்பங்குறைய அதற்குப் பதிலாகத் தன்னுடைய தாமரைப் பூவொத்த கண்ணைப்பிடுங்கி அர்ச்சிக்கச் சுவாமிக்கு மனது சந்தோஷம்வந்து சக்கராயுதம் கொடுத்தார். அந்தச் சக்கரத்தைத் தாமே சுவாமிமேலேவிட அதுபயந்து காலிலே விழுந்தது, இனிமேல் இந்த ரூபத்தோடேநின்றால் பிழைக்கமாட்டோமென்று அந்த உருவத்தை யொழித்துப் பன்றியாகவும், சிங்கமாகவும், ரூபமெடுத்து வந்து யத்தஞ்செய்ய அந்தந்த உருவங்களை வாளாயுதத்தாலும், வேலாயுதத்தாலும், வீரபத்திரர் கொன்றார் - அதன்பின்பு மிகவும்பயந்து மீனுருவமெடுத்துச் சமுத்திரத்திலே விழுந்து ஒளித்தார் --என்றவாறு. (௫௨)

(அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

புவியுண்ட நெடுமாலும் பழையபடி புவியுண்டு போனான்வேதா *
தவியுண்டு தலைநாலுந் தடியுண்டா ரிமையவர்தந் தடியூனுண்டார்...*
கவியுண்ட கணக்குண்டம் பேயிறைச்சி யருந்துகண கலமேயான *
தவியுண்டு மனமகிழ்ந்தற் கெய்துமுனிவரெல்லா வலியுண்டாரே...*

(இதன்பொருள்.)

மண்ணையுண்ட விஷ்ணுவுந் தோற்று மண்ணை வாயிற் போட்டுக்கொண்டு ஒளித்துக் கொண்டார். பிரம்மாதவித்து நான்கு தலையும் அறுபட்டு இறந்தார். தேவர்களுந் தண்டத்தால் அடியுண்டு இறந்தார்கள். பூதகணங்கள் இறைச்சிசாப்பிடுகிறத்துக்கு ஓமகுண்டப் பாத்திரமானது அவிர்ப்பாகம் சாப்பிட்டுவந்த முனிசிரேஷ்டர்கள் எல்லாரும் வீரபத்திர சுவாமியினால் இறந்தார்கள்—எ-று. (௫௩)

இங்கிதுவாய்முடிந்ததற்பின் வீரனிறைபதம்பரவி யிசைத்தானெல்லா, மங்கணனும்முனிவாறி யருள்சரந்துமகத்திறந்தார்க் காவியீந்து, மங்கியபதங்களெலாம் பழையபடி யதவதலும் வணங்கிப்போனார், சங்கரியை முன்பெற்றானென்பெற்றான் றனக்காட்டுத் தலைபெற்றானே... ... ... *

(இதன்பொருள்.)

இவ்விடத்தில் - இவ்விதமாக யாகசாலையோடு சர்வத்திரபேரும் நாசத்தையடைந்த பிற்பாடு வீரபத்திரர் கைலாயத்திற்குப் போய்ச் சுவாமியினுடைய பாதத்திலேவணங்கி, அங்கேநடந்தசமாச்சாரமெல் ச்சொன்னார், அதுகேட்டருளிய பரமசிவனுங் கோபமாறித் திரு

னைபிரந்து யாகத்திலிறந்தவர்களனைவரையும்பிழைப்பித்துக் கேடில்லாத அவரவரிடங்களை அவரவர்க்குப் பழையபடியே அருளிச்செய்தலும், அவர்கள் சுவாமீ நாங்கள் விவேகமில்லாமையினாலே செய்த குற்றத்தைப் பொறுக்கவேண்டியதென்று நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டார்கள்- பார்ப்பதியைப்பெற்ற தக்கனுக்குமாத்திரம் நிந்தைசெய்தற்கு அபராதஅடையாளமாக ஆட்டுத்தலையை அவனுடலில் வைத்துப்பொருத்தி எழுந்திருக்கும்படி செய்தார்—எ-று. (௫௪)

எந்நாதன்றனையிகழ்ந்தோன் புதல்வியெனவுலகுரைக்கு மிழுக்கண்டரத், தன்னாகந்தன்யோகசாதனத்தால்விடுத்திமவான் றவத்தினாலு,முன்னாகமைநாகன் றனைப்பயந்தமேனையது முயற்சியாலு, மின்னாகவவதரித்தாளமரரெலாங்கற்பகப்பூ வீசினரே... ... ...*

(இதன்பொருள்.)

எமக்குநாதராகஇருக்கிற பரமசிவனை நிந்தித்த தக்கனுடைய குமாரியென்று பழிப்பாக உலகம்சொல்லுமே நம்மையென்று பார்ப்பதி அந்தத்துக்கந்தீரத் தன்னுடையதேகத்தை யோகாக்கினியினாலே நிவர்த்திசெய்து இமவற்பர்வதராஜன் தபோமகிமையினாலும்முன்னே மைநாகனென்கிறபிள்ளையைப்பெற்ற மேனாதேவியினது தவமுயர்ச்சியினாலும், அவர்களுக்குக் குமாரியாக அவதாரஞ்செய்தாள்-தேவர்கள் கற்பகவிருட்சத்தின் புஷ்பங்களை வருஷமாகப்பொழிந்தார்கள்—என்றவாறு. (௫௫)

சித்தாந்தத்தொன்றுசத்தி சிவத்திரண்டாய்ஞானமிச்சை செயலின்மூன்று, கொத்தாகிக்குடிலைதரு நாதவிந்துவிரண்டினுக்குங்கொழுகொம்பாகி; முத்தாகிச்சிவனிடத்தே யுருத்திரன்மாலயன்முதலோர் முளைத்தழல், வித்தாகிநிறைவாளைப்பயந்தவர்க்குமுடிந்ததவம் விளம்பலாமோ... ... ... *

(இதன்பொருள்.)

சித்தாந்தமாகச்சொல்லப்பட்ட சிவனிடத்திலேஒன்றுபட்ட அபின்னசத்தியாய்ப்பின்பு அச்சிவத்தில்நின்றும்- பின்னசத்தியென்று வேறுபட்டுப் பின்பு, ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, எனமூன்றுவகையாகிக் குடிலையினாலுண்டாகிய நாதவிந்துக்களுக்குக் கொழுகொம்பாகியும், சுவாமிக்குமுத்தாகியும், பரமசிவனிடத்தில ருத்திரன்-விஷ்ணு-பிர்ம்மாமுதலானவர்கள் உண்டாகிறதற்கு மூலமாகிய வித்தாகியும், எங்குநிறைந்த பார்ப்பதியைப்பெற்றவர்க்கு முடிந்த தவப்பெருமையைச் சொல்லக்கூடுமோ—எ-று. (௫௬)

கலைவளருமதிபோன்று சிவனைவெல்லமதன்வளர்க்குங் கரும்புபோன்றும், பலகலைபுந்தெளிந்துபட்டுக் கழுங்கூசவியற்றியுமை பயிலுநாளில், மலையரசனிடத்திலமறை நாரதனுமொருநாளின் மகிழ்வாய்மெய்

திருவுலகமெலாங்குடியிருக்குந் திருவயிற்றுளிலக்கணம்பார்த் துரைக்க
லுற்றார்... ... ... *

(இதன்பொருள்.)

பார்ப்பதியானவள் இமாசலராஜனுக்கும், மேனுதேவிக்கும் குழந்தையாகி வளர்பிறைபோல் நாளுக்குநாள்வளர்ந்து மன்மதனானவன் சிவனைவெல்ல வில்வேண்டி அதற்குவளர்த்த கரும்பையொத்துப் பலபலசாஸ்திரங்களையுங்கற்றுப் பந்து-கழங்கு-ஊஞ்சல்-விளையாட்டுமுதலானது செய்துகொண்டு வருகிறகாலத்தில் மலையரசனிடத்தில் வேதமுணர்ந்த நாரதர் ஒருநாள்வந்து உலகங்களெல்லாம்வயிற்றிலேவைத்திருந்த அம்மனுடைய இலட்சணம்பார்த்துச்சொல்வார். எ-று.(௬எ)

நெற்றியிலோர்புறத்திலறைநேத்திரமுண்டாமொருகை நெடியசூலம்
பற்றுமொருதனமறையுமொருபாகமரகதம்போய்ப்பவளமாகும் *
சுற்றைநறுங்குழல்பாதிசடையாகுமொருகைவளைகழன்றுபோகு...*
முற்றுவரவிவைகளெனமலையரசன்மனமுருகியுவகையானான்... ...*

(இதன்பொருள்.)

வாரும்-பர்வதராஜனே, உம்முடையகுமாரத்திக்குச் சிலபொழுதிலே நெற்றியில்ஒருபக்கத்தில்அரைக்கண்தோன்றும், ஒருகையிலே சூலமுண்டாகும், ஒருபக்கத்துஸ்தனம் மறைந்துபோகும், பாதிசரீரம் பச்சைநிறம்போய்ப் பவளநிறமாகும், கூந்தலிற்பாதி சடைகளாகும், ஒருகையிலே வளைகளில்லாமற்போகும், இதுகள் சம்பவிக்குமென்று நாரதர்சொல்லப் பர்வதராஜன் உள்ளமுருகிச் சந்தோஷித்தையடைந்தார்—என்றவாறு. (௬அ)

(வேறு—அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

வையநீர்கங்கைபாயும் பனிவரைமருங்கினந்நாள்... ... ... *
துய்யநீர்ச்சடையான்வந்தங் கோர்தவந்தொடங்கக்கேட்டு... ... *
வையகமளித்தாடாதை வள்ளலைப்பணிந்துமானை... ... ... *
லையநின்றவத்துக்கேவல் கோடியென்றளித்துப்போனான்... ...*

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் நாரதர்சொன்னதைக்கேட்டுப் பார்ப்பதியேநமக்குப் பெண்ணாகவந்தபடியினாலே பரமசிவன் மருமகனாகிவரவேண்டுமென்று பிரார்த்திக்கொண்டிருக்கிற நாளையிலே பூமியிலே கங்கையைச் செலுத்திக்கொண்டிருக்கிற அந்த இமவற்பர்வதத்தில் ஒருபக்கத்திலே பரமசிவன் யாதோவொரு நினைவினாலே யோகத்திலிருக்கிறாரென்கிற வார்த்தைகேள்வியாகித் தன்மகளாகிய பார்ப்பதியையும், சிலதோழிப்பெண்களையும், அழைத்துக் கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்து என்னுடையபெண்ணை உம்முடையதவசுக்காக ஏவல்செய்ய

ஒப்புக்கொள்ளுமென்று அவரிடத்தில் அம்மனைவிட்டுப்போனான்பர்
வதராஜன்—என்றவாறு. (௩௯)

ஓங்குமாலயன்மற்றுள்ளோ ரொழிவிலாத்தவம்புரிந்தால் ... *
தாங்குபேரளிப்பான்றானோர் கருத்தினாற்றவஞ்செய்போதிற் ...*
பூங்குழல்கனியும்போது மஞ்சியும்புனலுங்கொண்டு ... ... *
யாங்கியர்பலருஞ்சூழப் பணிவிடைபலவுஞ்செய்தாள். ... ... *

(இதன்பொருள்.)

எல்லாத்தேவரினுமுயர்ந்தவிஷ்ணு-பிர்ம்மா-மற்றவர்கள் பெருமை
யா யொழிவில்லாத தவஞ்செய்தால் அவர்களுக்கு வேண்டியவரத்தை
க்கொடுக்கிற சுவாமியானவர் யாதோர்ஒருகருத்தினாலே தவஞ்செய்கிற
போது பார்ப்பதி, பழம், புஷ்பம், தர்ப்பை, திருமஞ்சனம் முதலா
னதுகளைக் கொடுத்துத் தன்னுடைய பாங்கிமார்களுடனே பலபணி
விடையுஞ் செய்துகொண்டிருந்தாள்—என்றவாறு. (௪௰)

இங்கிவையிருக்கத்தேவர்யாவருமிமையோர்கோவும் ... *
பங்கயத்தவனையெய்திப் பணிந்தனர்பதுமத்தோனு ... *
மங்கவர்க்கிருக்கையீந்தா னவரவர்முகத்திற்சோர்வுங் ... *
குங்குமக்குழம்புநீத்த புயங்களிற்குழைவுங்கண்டான்... *

(இதன்பொருள்.)

இவ்விடத்தில்இந்தப்பிரகாரமாகயிருக்கஎல்லாத்தேவர்களும்தேவே
ந்திரனுங்கூடிப் பிர்ம்மாவைச்சேர்ந்து தொழுதார்கள்- அந்தப்பிர்
ம்மாவும் வந்தவரிருக்க இடங்கொடுத்துப்பிற்பாடு அவர்களுடைய மு
கஞ்சோர்ந்து இருப்பதையும், குங்குமம்பூசியிருக்கிற தோள்கள் இ
ளைத்திருப்பதையும் பார்த்தார்—என்றவாறு. (௪௧)

வச்சிரமொடிந்தீசானன் கணிச்சிவாய்மடிந்துங்காலன்... *
முச்சிரம்வளைந்துமற்றோர் படையெலாமுறிந்துந்தேவர்... *
மெய்ச்சிறமகுடநீத்து மெலிந்தமைவிளம்புமென்று ... *
ணச்சுரர்தமக்குக்கோமான் தாருகனழித்தானென்றான் ... *

(இதன்பொருள்.)

வச்சிராயுதம் ஒடிந்துபோயம், ஈசானன் மழுவாயுதத்தின் வாய்ம
ழுங்கியும், யமனுடையசூலாயுதம் வளைந்தும், மற்றவர்கள்ஆயுதமுறிந்
தும், தேவர்கள் சிரசிலே இருக்கிறமகுடம் பிடுங்கப்பட்டும், வருத்தத்
தையடைந்தீர்கள். அவ்வருத்தத்தைச் சொலலுங்களென்று கேட்கத்
தேவேந்திரனானவன், தாருகாசூரன் இப்படி அவமானஞ்செய்தானெ
ன்றுசொன்னான்—என்றவாறு. (௪௨)

காலையம்புயத்தோன்சொல்வான் காலனற்கனலாற்காற்றால் ... *
மாலினாலென்னாலுன்னா லவன்வலிதுலைக்கலாமே ... ... *

வாலமாமிடற்றான்பேறா யசலமாதிடத்தேதோன்றும் ... ... *
வேலனார்வெல்வாருங்கள் சிறையெலாம்விடுப்பானென்றான் ... *

(இதன்பொருள்.)

அப்படிதேவேந்திரன் சொல்லக்கேட்ட பிர்ம்மாவானவர்சொல்வார், யமன், அக்கினி, வாயு, விஷ்ணு, இவர்களாலும், என்னாலும், உன்னாலும், அந்தத்தாருகனைக் கொல்லக்கூடுமோ? சிவனுடைய பிள்ளையாய் இமாசலபுத்திரியாகிய பார்ப்பதியினிடமாகச் சுப்பிரமணியர் அவதரிப்பார் அவர் அவனைக்கொன்று உங்கள்சிறையை மீட்பாரென்று சொன்னார்—என்றவாறு. (௬௩)

யோகத்திலிருக்குமீச னுமைக்குநாண் டரிக்குமாறு ... ... *
வேகத்தி லியற்றுமென்றே யயன்விடைகொடுத்தான்மீண்டு ... *
மாகத்தில்னாகித்தேவர் மதனனை நினைத்தார்மாரன் ... ... *
சோகத்தையொழிக்குந்தென்றற் றேருடன்றோன்றிச்சொல்வான் ... *

(இதன்பொருள்.)

யோகத்திலிருக்குஞ்சிவனானவர் பார்ப்பதிக்கு மங்கிலியதாரணஞ் செய்யும்படி சீக்கிரத்தில் முயற்சிசெய்யுங்களென்று பிர்ம்மா சர்வத்திரபேருக்கும் உத்தரவுகொடுக்கத் தேவர்களெல்லாரும் அமராபதிக்குவந்து மன்மதனை நினைத்தார்கள். அவன்விடாய்தீர்க்கத்தகுந்ததென்றலாகிய தேர்மேலேறிவந்துசொல்வான்—என்றவாறு. (௬௪)

எவன்றவமழிக்கமாத ரெவர்களை மயக்கநீவிர் ... ... *
கவன்றதெத்துயராலெம்மை யழைத்ததென்கருமமென்ற ... *
னவன்றனையிறுகப்புல்லி யமரர்கோனருளினோக்கிச் ... *
சிவன்றவமழிக்கவேண்டி யழைத்ததைதெரியச்சொன்னான் ... *

(இதன்பொருள்.)

மன்மதன் தேவர்களைப்பார்த்து எவனுடைய தவத்தை அழிக்கட்டும், எந்தப்பெண்களைமயக்கட்டும், எந்தத்துக்கநிமித்தமாக என்னை யழைத்தீர்களென்று கேட்கத் தேவேந்திரன் அந்த மன்மதனை இரண்டுகையினாலும் இறுகக்கட்டித்தழுவி- உபசாரத்துடனே பார்த்துச் சிவனுடைய தவத்தை யழிக்கும்படி உன்னைவேண்டி யழைத்ததென்று தெரியச்சொன்னான்—என்றவாறு. (௬௫)

விண்ணிலார்மகவான்சொல்ல வெருண்டுவேள்பயந்துகூறும்... ... *
பெண்ணலானலியாணல்லன் பிறப்பிலானிறப்புமில்லான் ... *
கண்ணினாலளவநூலாற் கருத்தினாலளவாவந்தத் ... ... *
தண்ணிலாமுடியான்செய்யுந் தவத்தையார்தவிர்க்கவல்லார் ... *

(இதன்பொருள்.)

தேவலோகத்திலிருக்கும் இந்திரன்சொல்லக் கோபித்துச் சுவாமிக்குப் பயப்பட்டுச்சொல்வான், வாருமையா தேவேந்திரனே சிவன்

பெண்ணுமல்லர் ஆணுமல்லர் அலியுமல்லர் பிறப்பு மிறப்பு மில்லாதவர் காட்சிப்பிரமாணத்தினாலும்,ஆகமப்பிரமாணத்தினாலும்,கருத்தினாலும், இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத ஞானிர்ச்சிபொருந்தியசந்திரனைத்தரிக்கு முடியையுடைய அந்தச்சுவாமியினது தவத்தையழிக்கிறதற்கு யார்வல்லவர்—எ-று. (௪௬)

கன்னிகைகவுரியீசன்கதமிலாப்பிரமசாரி ... ...*
சந்நிதித்தன்மையாலே யுயிரெல்லாந்தழையாய்நிற்கு... ... *
முன்னியவுயிர்கள்போல வொடுங்கிடுமவன்பாற்செல்லு ... ... *
மன்னியபொருளுந்தோன்றி மனதிலேயொடுங்குமாபோல் ... *

(இதன்பொருள்.)

அம்மனே கன்னிகை, சிவனே குற்றமில்லாத பிரமசாரி, இவர்களிரண்டுபேருடைய சந்நிதிமகிமையிலே சகலவுயிர்களும் உண்டாகி விருத்தியாகும்,முன்னெப்படிசுவாமியிடத்திலிருந்து சீவன்களுண்டாச்சுதுகளோ அப்படியே அவரிடத்திலொடுங்கும் மனதிலேதோன்றிய அநேகவஸ்துக்கள் அதிலேயொடுங்குவதுபோல்—எ-று. (௪௭)

தாமதகுணத்தனென்பர் சங்கரித்திடலாலீசன் ... ...*
சேமமாமுயிர்கட்கெல்லா மிளைப்பொழித்தருள்வதாகும் ..... *
மாமலகுணமொன்றில்லை வடிவமுங்கனலாமென்கைப் ... .. *
பூமலர்சொரிந்தக்காலும் புகையெழப்பொரிந்துபோமே ... *

(இதன்பொருள்.)

உலகத்திலே சங்காரத்தொழில்செய்வதனாலே சிவன்தமோகுணத்தையுடையவரென்றுசொல்வார்கள்-அப்படியன்று. அது உயிர்களுடைய இளைப்பையொழிப்பதாகும் மற்றத்தேவர்களுக்குஉண்டாயிருக்கிற மும்மலசம்பந்தமில்லை இவருடையசொரூபமும்நெருப்பாம் அவர்மேல் நான்புஷ்பபாணத்தைவிட்டால் அதுகள்புகையாய்க் கரிந்துபோகும்—எ-று. (௪௮)

உருவெனத்தெரியாதானை யுருவினோடருவாவானை... ...*
யருவெனத்தெரியாதானை யமர்செயிலரிதென்றஞ்சி ... *
வெருவரப்புகும்தானந்த வேளையில்வேளைநோக்கித் ... .. *
தருவனத்திடையில்வாழுஞ் சதமகனுரைப்பனானான் ... *

(இதன்பொருள்.)

உருவென்று யாவராலுந் தெரியக்கூடாதவரை உருவமாகியும், அருவமாகியும், இருக்கின்றசிவன் அருவமென்றுந்தெரியாதவரை மிகவும் யுத்தஞ்செய்து ஜயிக்கப்படாதென்று மன்மதன் பயப்பட்டுத் தன்னுடைய ஸ்தானத்திற்குப்போகப்புறப்பட்டான்.அந்தக்காலத்தில் மன்மதனைப்பார்த்துக் கற்பகதருவினிழலில் வாசஞ்செய்யாநின்றதேவேந்திரன் சொல்லத்தொடங்கினான்—எ-று. (௪௯)

மாயவனுரத்தின்மீது மரலவனுவின்மீது ... ... *
நாயகன்சிரத்தின்மீதும் பொறுத்ததுன்னலமேயன்றோ ...*
காயுநற்கதிரின்மேனி கடைந்ததுமெனக்குமிந்த ... ... *
வாயிரநயனந்தந்த செயலுமுன்னாண்மையன்றோ ... ... *

(இதன்பொருள்.)

விஷ்ணு தம்முடைய மார்பிலே லட்சுமியைவைத்துக்கொண்டதும், பிர்ம்மா சரஸ்வதியை நாவினில் வைத்துக்கொண்டதும், மகா தேவரானவர் தலையிலேகங்கையென்கிறபெண்ணை வைத்துக்கொண்டதும், உன்னுடையசாமர்த்தியமல்லவா? சூரியனைச்சாணையில்கடையச் செய்ததும், எனக்கு ஆயிரங்கண்வந்ததும், உன்னுடைய ஆண்மையல்லவோ வென்றான் தேவேந்திரன்—எ-று. (௫௰)

செல்வநின் றெமக்காயங்கே தருவது தேவர்க் காவி... ... ... *
வெல்வது சிவனைவென்று கொடுப்பது காமவேட்கை ... ... *
சொல்வது மறுக்கவேண்டா மெனச்சொலித் தனைக்கைபற்றி ...*
நல்வரமிதுதாவென்ன மதனவே ணயந்துகூறும் .. .. *

(இதன்பொருள்.)

பின்னுந் தேவேந்திரன்சொல்வான் வாராய்மன்மதா, எனக்காக அங்கேசென்று சிவனைச்சயித்து அவருக்குக் காமலகிரி உண்டாகும் படிசெய்தால் அவர்க்குப் புத்திரனுண்டாகும், அந்தப் புத்திரன் அசுரர்களைக்கொன்று தேவர்களைப் பிழைக்கும்படிசெய்வார்- அதற்கு நீயே காரணமாயிருக்கிறாய் நான்சொன்ன வார்த்தையை மறுக்க வேண்டாமென்று கையைப்பிடித்துக்கொண்டு எனக்கு இந்தநல்லவரத்தைக்கொடுவென்றுகேட்க, மன்மதன் சந்தோஷித்துச்சொல்வான் —எ-று. (௫௧)

அரன்சிலை மலையென்றாலு மடுங்கணை யரியென்றாலும் ... ... *
வரம்புற விசைந்தநாணும் வாசுகி யரவென்றாலும் ... ...*
கரும்பெனுஞ் சிலைபசலைந்து கணையெனு மலரானீலச் ... ... [ன்
கரும்பெனுங்குணத்தால்வெல்வே னெனச்சொலித்தொழுதுபோனா

(இதன்பொருள்.)

வாரும் தேவேந்திரராஜனே, சிவனுக்குவில்லானதுமலையாகிஇருந்தாலும், விஷ்ணுவே பாணமாகி யிருந்தாலும், வாசுகியே நன்றாகவற்றுகின்ற நாணியானாலும், என்னுடைய கரும்பாகிய வில்லினாலும், ஐந்துபுஷ்பங்களாகிய பாணங்களாலும், நீலநிறம்பொருந்திய வண்டென்கிற நாணினாலும், அந்தச்சிவனைச் சயித்துப் போடுகிறேனென்று வந்தனஞ்செய்து சுவாமி யிடத்திற்குப் போனான் மன்மதன்—என்றவாறு. (௫௨)

சந்தனமணமுந்தெய்வத் தமிழ்ப்புது மணமுங் கொண்டு ... ...*
வந்தது மலயத்தென்றல் வசந்தமந் திரியுஞ்சேர்ந்த ... ... *

சிந்துவு நிலவாம்வெள்ளை வலயினை யெறிந்ததெங்கும் ... *
கொந்தலரிளமாவெல்லாங் கோகிலமுழங்கிற் றன்றே ... *

(இதன்பொருள்.)

மன்மதன் சிவனைச் சயிக்கும்படி புறப்படும்போது பொதியமலையிலிருந்து அவ்விடத்தில் தங்கிய சந்தனவாசனையுந் திவ்யமான தமிழ்வாசனையுங்கொண்டு தென்றற்காற்றுவந்தது- வசந்தனாகிய மந்திரியும் வந்துசேர்ந்தான். சந்திரனும் கிரணமாகிய வெள்ளைவலயினை நான்குபக்கமும்வீசினன். புஷ்பக்கொத்துகளையுடைய இளமையுற்ற மாமரத்திலெல்லாம் குயில்முழங்கியது என்றவாறு. (௫௩)

மல்லிகை முகையாஞ்சங்க மதுகரமூழக்கஞ்செய்ய ... *
முல்லைசண்பகமசோகு முளரியேமுதலாயுள்ள ... ... *
வெல்லையில்மலருந்தேனு மிறைத்தனவிரும்படைச் செம்படைக் *
கல்லினையுருக்குஞ்சொல்லார் குருஞ்சியாழ்கரத்திற்கொண்டார்.

(இதன்பொருள்.)

மல்லிகையரும்பே சங்கமாகவும், அவ்வரும்பில் சப்திக்கின்றவண்டுகள் அச்சங்கத்தை வாயில்வைத்து ஊதுகிறவீரனாகவும்,விளங்க முல்லை-சண்பகம்,அசோகு-தாமரை-முதலாகியகணக்கில்லாதபுஷ்பங்களையும் தேனையும் நான்குபக்கமு மிறைத்துக் கொண்டு கடினமாகிய இரும்பு-கல்லு-செம்பு-இதுகள்கூட உருகும்படிச்சொல்லுகிற வார்த்தையுடைய பெண்கள் குருஞ்சியாழென்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டார்கள்—என்றவாறு. (௫௪)

பொங்கியஉடுக்களான புகரணிமுகத்துச்செக்கர் ... *
தங்குசிந்தூரமாகுந் தனியிருட்கரியுங்கிள்ளைப் ... ... *
பைங்குரகதமுஞ்செல்லப் பணைமுலைப் பவளச்செவ்வாய் *
மங்கையரொனும்போர்வீரர்வடிக்கண்வாள்விதித்துச்செய்றார்.

(இதன்பொருள்.)

மன்மதனுமிகுந்தநட்சத்திரங்களாலே முகத்திலிருக்கிறபுள்ளிகளாகவும், செவ்வானமானது ஒருதிலகப்பெட்டாகவும் விளங்குகின்ற ஒப்பற்ற இருட்டாகிய யானையும்,பசுமைபொருந்திய கிளியாகிய குதிரையும், நடக்கப்பருத்தமுலையையும், பவளம்போன்ற வாயையுமுடைய ஸ்திரீகளாகிய சுத்தவீரர்கள் தங்கள் தங்கள் கண்களாகியகத்திகளை அசைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்—என்றவாறு. (௫௫)

கோணியகரும்புமைந்து குலமலர்க்கணையுங்கொண்டு ... *
வானுதலிரதிசெல்ல மகரகேதனத்தினோடு... ... *
தானுமாவனத்தைச்சேர்ந்தான் றவஞ்செய்வான் றனைக்கண்டன்சி
நாணிருமைகால்வண்டு நாலைந்தனடுங்கினேனே ... ... *

(இதன்பொருள்.)

வளைவாகிய கருப்புவில்லையும், புஷ்பங்களாகிய ஐந்துபாணங்களையும், எடுத்துக்கொண்டு ஒளிபொருந்திய நெற்றியையுடைய இரதிதேவியானவள் கூடவர - மீனக்கொடியுடனே பரமசிவன் யோகத்திலிருக்கிற வனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில்தவஞ்செய்கிற அந்தச்சுவாமியைப்பார்த்து இவரைஎவ்வாறு ஜயிப்போமென்று பயந்துவெட்கத்தையடைந்து நடுங்கினான், வண்டை நாணாகவுடைய மன்மதன்—என்றவாறு. (௫௬)

வெளித்தலத்தெதிர்த்தாலென்ன விளையுமோதனக்கென்றெண்ணி *
யொளித்தனன்முன்னேபின்னே யுமையவள்வரவுகண்டு ... *
களித்தனன்மயக்கமாமோ கனத்துகளிறைத்தவில்லை ... ... *
வளைத்தனனணிநாண்பூட்டி வடிக்கணைதொடுத்தான்மாரன் ... *

(இதன்பொருள்.)

நேரேவெளியாகவந்தாயுத்தஞ்செய்தால்- என்னகேடுநமக்குண்டாகுமோவென்றுநினைத்துச் சுவாமியின்பின் தெரியாமல் ஒளித்திருந்து சமயம்பார்த்துக்கொண்டிருந்தபோது பார்வதி அக்கடவுள் முன்னே பணிவிடைசெய்ய வருதலைக்கண்டு பெண்துணை நமக்கிருக்கிறபடியினாலே வெல்லக்கூடுமென்று சந்தோஷித்து மோகத்தை யுண்டாக்கும் புஷ்பராகத்தை இறைத்துவில்லைவளைத்து நாணேற்றிப் பாணங்களைத்தொடுத்தான்மன்மதன்—என்றவாறு. (௫௭)

ஒருகரும்புருவச்சாப மொடியினுமுலகமீன்ற ... ... *
விருகரும்புருவச்சாப முளவெனுமெழுச்சியாலே ... *
பொருகணை தொடுத்தான்சென்று புரஞ்சுடுகணையினானு ...*
மொருகணைவிடுத்தான்மார னுடலெலாங்கொளுத்திற்றன்றே*

(இதன்பொருள்.)

மன்மதனானவன் தானதிக சண்டைசெய்தால் ஒருகரும்புருவமாகிய வில்லானது ஒடிந்தாலும் உலகத்தைப்பெற்றபார்வதியின் இரண்டு கரும்புருவமாகிய வில் உண்டாயிருக்கின்றன. நமக்குயாதொருகுறைவுமில்லையென்கிற செருக்கினாலேபோய் அநேகபாணங்களை விட்டபோது மூன்றுபுரத்தையும் எரித்தநகையாகிய அம்பையுடைய சிவன் நெற்றிக்கண்ணாகிய ஒருகணையைப்பிரயோகஞ்செய்தார். அந்தக்கணை மன்மதனுடைய உடம்பையெல்லாங் கொளுத்தி விட்டது—என்றவாறு. (௫௮)

அருக்கவெண் பஞ்சுபோல வழற்கண்ணா லனங்கனான ... ...*
திருக்குளம் கனலக்கண்டு தேவருந் திசையினோரும் ... ... *
வெருக்கொள வொளித்தார்பூத கணத்துடன்விடையினானும் .....*
பொருக்கனமறைந்துவெள்ளிப் பொருப்பிடைப்புகுந்தானன்றே*

(இதன்பொருள்.)

நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல் மன்மதனாகிய மாறுபாடு பொருந்திய மனத்தையுடையவன்-எரிந்துபோகக்கண்டு, தேவர்களும் அஷ்டதிக்குப்பாலகரும் பயப்பட்டு ஒளித்துக்கொண்டார்கள், அதன் பின் சுவாமி பூதகணங்களுடனே சீக்கிரமாக அந்தவிடம்விட்டுக் கைலாயத்துக்கு எழுந்தருளினார்—எ-று. (௬௯)

சங்கரன்மணத்தைவேண்டி யுமையுநற்றவமேசெய்தா ... ... *
ளங்கதுபுணருமாறேழ் முனிவருக்காலன்சொன்னான்... ... *
மங்கலமுளாக்கவேழ முனிவருமகிழ்வாயெய்தித் .. ... *
துங்கவெற்பிறைபார்க்கிந்தச் சோபனஞ்சொல்லினார்கள்... ... *

(இதன்பொருள்.)

பரமசிவனானவர் தன்னைக்கலியாணஞ்செய்துகொள்ளப் பார்ப்பதி தவஞ்செய்கிறாள், அவள்வந்துசேரச் சத்தரிஷிகளையழைத்துப் பர்வதராஜனிடத்திற்போய்ச் சுவாமிக்கு உன்பெண்ணைக் கலியாணஞ்செய்துகொடுமென்று கேளுங்களென்று அனுப்பினார். அந்தப்படியே அந்த எழுபேரும் பர்வதராஜனிடத்திற்குப்போய் இந்தச்சோபன சங்கதிசொன்னார்கள்—எ-று. (௭௰)

மலையிறைமகிழ்ந்தானந்த மலையிறைபுதல்வன்வள்ளல்... ... *
குலமெதுபயந்தோர்நாமங் குடிப்பெயரோதுவாழுந் ... *
தலமெதுபுகலுமென்றான் றவத்தவர்நகைத்துச்சொல்வா ... *
ரலகிலான்பிறப்புநல்ல கிளையெனவறிவித்தார்கள்... ... *

(இதன்பொருள்.)

ரிஷிகள்போய்ச் சொன்னவுடனே பர்வதராஜன் சந்தோஷித்தான், அவன்பிள்ளையாகிய மைநாகன் ரிஷிகளைப்பார்த்துச் சிவனென்னசாதி அவர்க்குத்தாய்தகப்பன்பேரென்ன- குடிப்பெயரென்ன அவரிருக்கும் ஊரேது சொல்லுங்களென்றுகேட்டான். அதைமுனிவர்கேட்டு நகைத்துச் சிவனோ-அளவிடக்கூடாதவர், அவர்பிறந்தஇடம் மூங்கில், அவர் நல்லசாதியென்று தெரிவித்தார்கள்—எ-று. (௭௧)

பெருத்ததோருவகையாகிப் பிறைமுடியன்பேர்நாளிற்... ... *
பொருத்தமுநாளுந்தேர்ந்து முனிவரைப்புகழ்ந்துபோற்றி ... *
விருத்தியார்வரவுதானுங் குறித்திறைவிடுத்தானன்றோர்... ... *
பரித்தகங்கையினார்க்கிந்தப்படியெலாம்பணிந்துசொன்னார்... ... *

(இதன்பொருள்.)

அப்படி சத்தரிஷிகள் சொன்னபிறகு பர்வதராஜன் முதலாகிய பேர்களெல்லோரும் மகாசந்தோஷத்தையடைந்து சந்திரனைத்தரித்த முடியையுடைய சிவன்பிறந்த நட்சத்திரத்துக்கும் அம்மனுடைய நட்சத்திரத்துக்கும்தகுந்தபொருத்தமும் கலியாணஞ்செய்கிறகாலமும்

அறிந்து நிச்சயம்பண்ணி ரிஷிகள்பாதத்தைப்புகழ்ந்து வணங்கியிருத்தி பொருந்திய கலியாணமுகூர்த்தஒலையும், எழுதிக்கொடுத்தனுப்புவித்தான். அந்த எழுரிஷிகளும் கங்கையைத்தரித்தசுவாமிக்கு நடந்த சமாச்சாரமெல்லாம் வணங்கிச்சொன்னார்கள்—எ-று. (௬௨)

இமையவெற்பிறைவனோலை முகத்தினீலங்கிரிக்குமேருச் ... ... *
சிமையமால்வரைக்குஞ்செம்பொற் றிகிரிமால்வரைக்குமேழு ... *
தமரவான்கடற்குஞ்சித்தர் சாரணர்முனிவோருக்கும் ... .. *
அமரரானவர்க்கும்வஞ்சி மணத்தினையறிவித்தார்கள். ... *

(இதன்பொருள்.)

இமய பர்வதராஜன் பார்ப்பதிகலியாண முகூர்த்தஒலையை அநேகம் தூதர்கையிற் கொடுத்தனுப்பிவிக்க, அவர்கள் சத்தகுலபர்வதங்களுக்கும், கொடிமுடி பொருந்தியமேருவுக்கும், சக்ரவாளகிரிக்கும், ஒளியையுடைய சத்தசமுத்திரத்திற்கும், சித்தர், சாரணர், முநிவர், தேவர், முதலானவர்க்கும், அம்மன்கலியாணத்தைத் தெரிவித்தார்கள்—என்றவாறு. (௬௩)

ஓலைகண்டளவேசேர்ந்த வுநதிகளேழும்பூமி .. .. *
மாலையாய்ச்செல்லுகின்ற மகிமைசேர் நதிகளேழும் ... ...*
நீலமேமுதலாயுள்ள கிரியெலாநெருங்கிச்சென்ற... ... *
கோலமாமுனிவோர்சித்த ரிமயவர்க்குழாங்கொண்டார்கள் ... *

(இதன்பொருள்.)

ஓலையைக்கண்டவுடனேஎழுசமுத்திரத்திற்கும் பூமிதேவிக்குமாலைபோன்று பிரகாசிக்கின்ற மகிமைபொருந்தியஎழுநதிகளுக்கும், நீலகிரிமுதலாகிய சப்தகுலபர்வதங்களுக்கும், அதிஷ்டமானமாகியதேவதைகள் நெருங்கிச்சேர்ந்தார்கள், முநிவர்களும், சித்தர்களும், தேவர்களும், கூட்டங்கூட்டமாகச் சேர்ந்துவந்தார்கள்—எ-று. (௬௪)

அட்டதிக்கனைத்துந்தேராற் கொடிகளாலடைத்தார்விண்ணை ...... *
மட்டறுவிமானந்தன்னுன் மாலையான்மறைத்தார்வீதி... ....*
நெட்டிலையரம்பைபூக நிரைகளால்நிறைத்தார்வெற்பிற்............*
றட்டியபுழுகினாலே மெழுகினார்தனகமெல்லாம்............ .. .. *

(இதன்பொருள்.)

எட்டுத்திக்கும் தேரினாலும்-கொடிகளாலும்-இடமில்லாமல் நிறைத்துவிட்டார்கள், ஆகாயத்தையிடமில்லாமல் விமானத்தினாலும், மாலைகளினாலும், மறைத்துவிட்டார்கள். வீதிகளில்நீண்ட இலைகளையுடைய வாழைகளையும், கமுகுகளையும், நிரைநிரையாகநட்டு அலங்காரஞ்செய்தார்கள். மலையிலிருக்கிற புழுகைக்கரைத்துத் தனகமெல்லாம் மெழுகினார்கள்—என்றவாறு. (௬௫)

தோரணஞ்சமைத்தார் முத்தின் றொடையெலாந் தொடுத்தார் விண்
பூரணகும்பம் வைத்தார் புதுமணிவிளக்குமிட்டார்... ... [ணித்
ஆரணனுலகுமற்றை யளகையு மமரர்நாடு ... ... *
நாரணனுலகும்வந்து காணவே நாணுமாறே ... ... *

(இதன்பொருள்.)

தோரணங்கட்டினார்கள் அதிமுத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள். ஆகாயகங்கையைக் கொண்டுவந்து பூரணகும்பம்வைத்தார்கள். நூதனமாகிய ரத்தினவிளக்கு ஏற்றினார்கள். பிர்ம்மலோகமும்-அளகாபுரியும்-தேவலோகமும்- வைகுண்டமும் - இதைப்பார்த்து நாணும்படி சிங்காரித்தார்கள்—எ-று. (கூகூ)

மணிவிளக்கனையமின்னை மலையறமகளிர்கூட்டி ... *
கணிமலர்க்கங்கையாட்டிக் கலைபுனைமருங்கைவாட்டிப் *
பணிமணி யாரம்பூட்டிப் பரிமளத்தாமஞ்சூட்டி ... *
யணிநுதற் றிலகந்தீட்டி யருமறைச் சடங்குசெய்தார் *

(இதன்பொருள்.)

இரத்தினதீபம்போன்றபார்ப்பதியைமலையிலிருக்கிறபெண்கள்கூடிக்கற்பகமலர் வாசனைசேர்ந்த கங்காசலத்தினாலே ஸ்நானஞ்செய்வித்து இடுப்புத்துவளும்படி சேலைகட்டி, ஆபரணங்களும்- முத்துமாலையும்பூட்டிப் பரிமளம்பொருந்திய மாலைகளைச்சூட்டி, அழகுபொருந்திய நெற்றியிலே திலகம்பொட்டுவைத்துவேதவிதிப்படி சடங்குசெய்தார்கள்—என்றவாறு. (கூஎ)

பூமணக்கோலஞ்செய்த பொடியணி புனிதனாத் ...*
தாமணக்கோலஞ்செய்யச் சதுர்முகன் முதலோ ரீண்டித்
தூமணித் துகில்கள் சாத்திச் சுரதருமாலைசாத்தி ... *
மாமணிப்பணியை நீக்கி மாமணிப்பணிகள்பூட்டி ... *

(இதன்பொருள்.)

வாசனைபொருந்திய புஷ்பபாணங்களையெய்த மன்மதனை நெற்றிக்கண்ணாலே எரித்து அந்தப் பஸ்மத்தைபூசிய சித்தராகிய சிவனை மணக்கோலஞ் செய்யும்படியாகப்பிர்ம்மாமுதலானவர்கள் கூடிப் பரிசுத்தமாகிய ரத்தினமயமாகியவஸ்திரஞ்சாத்திக் கற்பகப்பூமாலைதரித்து முன்னேயிருந்த சர்ப்பாபரணத்தைக் கழற்றிப்போட்டு மாணிக்க ரத்தினங்களாலாகிய ஆபரணங்களைத்தரித்தார்கள்—எ-று. (கூஅ)

சடையிளம் பிறையைத்தங் கணவனைத் தகைந்துசூழ்ந்த *
வுடுக்குலமென்னமுத்தாலொளிவிடுமகுடஞ்சூட்டி ... *
அடைவுடன் விழியாந்திங்க ளாதவர் காதின்மீது ... *
குடியிருந்தனபோற்செய்ய குண்டலமிரண்டுஞ்சாத்தி ...*

(இ-ள்.) சுவாமியினது சடையில்தரித்த பிறையைப்பார்த்து தம்முடைய புருஷனென்று சுற்றிக்கொண்ட நட்சத்திரக்கூட்டங்கள்போல

முத்துக்கள் பிரகாசியா நின்ற கிரீடஞ் சூட்டிப் பொருந்திய கண்க ளாயிருக்கிற சந்திரசூரிய ரிருவரும் காதினிடத்திற் குடியிருந்தாற் போலஅழகாகியஇரண்டுகுண்டலங்களைச்சாற்றினார்கள்-எ-று. (௬௯)

வரம்பெற்றதிருமால்சாத்துமலர்விழிக்கரியசோதி ... *
பரம்பியதனையநீலப் பருமணிச் சிலம்புசாத்தி ... *
விரும்பியகோலஞ்செய்தா ரிறையுமால் விடைமேற்கொண்டா
ரரம்பையர்நெருங்கித்தெண்ணீ ராஞ்சனங்காட்டினார்கள்...*

(இதன்பொருள்.)

விஷ்ணுவானவர் வரம்பெற்றுக்கொள்வதற்காகத் தம்முடைய கண்ணிலொன்றைப்பாதத்திற்சாத்தினாரே, அந்தக்கண்ணினதுகறுப்புச் சோதி காலைச்சுற்றிப் பரவினதுபோல நீலமணிகளா லிழைத்த சிலம்பைத்தரித்து சர்வத்திரராலும் விரும்பத்தகுந்த அலங்காரஞ்செய்தார்கள், பரமசிவன்விஷ்ணுவேயுருவமாகியரிஷபத்திலேறினார். அப்பொழுது ரம்பாஸ்திரீகள் மஞ்சளாலத்தி யெடுத்தார்கள்—எ-று. (௭௰)

குலவுமாலனுகிப்போற்றக் குமுதவாய் மலர்ந்தான்கஞ்ச ... *
மலரினன்வணங்கச்சற்றே மணிமுடியசைத்தான்விண்ணோர் ... *
தலைவனெதிர்நின்றேத்தத் தனிநகை புரிந்தான்மற்றோர் ... *
பலரும்வந்திறைஞ்சியேத்த வவர்க்கெலாம் பார்வையீந்தான் ... *

(இதன்பொருள்.)

விஷ்ணுவானவர் சுவாமியின்முன்னேவந்துவணங்கச் செவ்வாம்பற் பூப்போலுந்திருவாய்மலர்ந்துவாருமென்றார். தாமரைப்பூவிலிருக்கிற பிர்மாவந்துநமஸ்கரிக்கச்சற்றே ரத்தினகிரீடமிழைத்ததிருமுடியை யசைத்தார். தேவேந்திரன் வந்தனஞ்செய்யப் புன்சிரிப்புக்கொண்டார். மற்றத்தேவர்களெல்லாரும் வந்துவணங்கக் கிருபைக்கண்ணினாலே பார்த்தருளினார்—எ-று. (௭௧)

(கலிவிருத்தம்.)

முடித்தகங்கையாற்பிறைகொழுந் தெழுந்துமேன்முகைத்து*
வெடித்ததாமெனத்தவளவான்கவிகைமேலவிளங்க ... *
வடித்தகங்கையி னருவியுமம்புலிக் கொழுந்துந் ... *
தொடுத்து வீழுமா றெனவிரு கவரிக ளிலங்க ... *

(இதன்பொருள்.)

சடையிலேவைத்த கங்காசலத்தினாலே பிறையானது கொழுந்துவிட்டு அரும்பாகிப் புஷ்பித்ததென்று சொல்லும்படியாக வெள்ளைவட்டக்குடைபிடிக்கவும், அலையடிக்கின்றகங்கையினருவியும் சந்திரனும் சேர்ந்துவிழுந்ததுபோலும், இரண்டுசாமரம்வீசவும்—எ-று. (௭௨)

திருவி னாயக னடைப்பைகொண் டொருபுறஞ் சேரத் .. *
தருவி னாயகன் களாஞ்சிகொண் டொருபுறஞ் சார ... ...*
விரவி நான்முக னாலவட் டங்கொடு வீசப் ... *
பரவி நாரதர் தும்புரு விருபுறம் பாட .. ... *

(இ-ள்.) இலட்சுமி காந்தராகிய விஷ்ணு பாக்கு வெற்றிலைமுதலானவை வைத்திருக்கிற அடைப்பை யெடுத்துக்கொண்டு ஒருபக்கம்வரவும், கற்பகத்தருவிற்குநாதனாகிய தேவேந்திரன்படிக்கம் எடுத்துக்கொண்டுவரவும், பிர்ம்மா சமீபத்தில்நின்று ஆலவட்டம்வீசவும், தும்புரு நாரதர் இரண்டுபேரும்வந்தனஞ்செய்து இருபுறத்திலும்நின்று சங்கீதம்பாடவும்—எ-று. (௭௩)

கூற்றனவன் கனகபா துகைகொடு குறுகக் ... .. *
காற்றுமேவந்தனுந் திசையெலா நறும்புகை காட்ட *
வேற்றுவாகனக் கடவுளுந் திறியவா ளெடுப்பத் .. ...*
தோற்றுமாதவர் கலைமதி விளக்கொடு சூழ... ... *

(இதன்பொருள்.)

யமராஜனானவன் தங்கத்தினாலே செய்திருக்கிற பாதக்குறடுகளைக் கையாலெடுத்துக்கொண்டுவரவும், வாயுபகவான் திக்குகளெட்டிலும் அகிற்புகை சாம்பிராணிப்புகை காண்பிக்கவும், ரிஷபத்திலேறுகின்ற ஈசானன் உடைவாளெடுத்துக்கொண்டுவரவும், சூரியர்களநேகரும் சந்திரர்நேகரும் விளக்கெடுத்துக்கொண்டுவரவும்—எ-று. (௭௪)

சுரமடந்தையர் துயிலின்மஞ் சிகைபல சுமப்ப ... *
வரவ மங்கையர் நவமணிப் பணிசுமந் தணுகப்... ...*
பரவுகின்னரர் புகலிம்புரர் வீணையார்ப் பரிக்கப்... *
பொருவினான்மறை நடந்திறை தலைமையைப் புகழ... *

(இதன்பொருள்.)

தேவகன்னியர் அநேகர் வஸ்திரம் வைத்திருக்கிற பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வரவும், நாகலோகப்பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச் சுமந்துகொண்டுவரவும், கின்னரர் கிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும், நான்குவேதங்களுஞ் சமீபித்துச் சுவாமியெல்லாருக்கும்பெரியவரென்றுபுகழ்ந்து முறையிடவும்-எ-று. (௭௫)

கிரகமேழுமெண் வசுக்களு முனிவருங் கிளர ... ...*
வுரகர்வித்தைய ரிமையவர் மகிழ்ந்துகண் டுருக ... *
விருகரங்களா லுருத்திரர் மலர்மழை யிறைப்பத் ...*
திருவுவெண்கலை மடந்தையு மிமசலந் தெளிப்ப... *

(இதன்பொருள்.)

சந்திரசூரிய ரிருவருந்தவிர மற்றை யேழுகிரகங்களும்- அஷ்டவசுக்களும்- முனீசுரர்களும்- களிகூர்ந்துவர நாகலோகத்தார்- வித்தி

யாதரர்கள் தேவர்கள்பார்த்துச் சந்தோஷித்தையடைந்து உருக, ஏகாதச ருத்திரர்களும் இரண்டுகைகளாலும் புஷ்பங்களை வருஷிமாக இறைப்ப இலட்சுமியும்சரஸ்வதியும் பனிநீர்தெளிக்கவும்—எ-று (எசு)

திக்குபாலகர் தெரிவையர் திசைதொறுந் திகழ... ... *
மிக்கமாதர்க ளெழுவருஞ் சோபனம் விளம்ப ... *
விக்குநேர்மொழி நீரர மகளிர்வாழ்த் தெடுப்பத் ... *
தக்கவிஞ்சையர் மகளிர்பல்லாண்டிசை தழங்க ... ...*

(இ-ள்.) திக்குபாலகருடையதேவிகள் அவரவர்திசைகளினின் றுசேவிக்கவும், சத்தமாதர்கள்சோபனம்பாடவும், கருப்பஞ்சாறுபோல்மாதுரியம்பொருந்தியவார்த்தைகளையுடையநீரரமகளிர்வாழ்த்திச்சொல்லவும், தகுந்தவித்தியாதரமாதர்கள் பல்லாண்டுகூறவும்—எ-று. (எஎ)

கண்டைபேரிகை குடமுழா முழவுகா களந் ... ...*
முண்டமல்லரி சல்லரி வலம்புரி யொலிப்ப ... ... *
வண்டகோளகை மடந்தையர் சிலம்பொலி யதிர்ப்ப .. *
வெண்டிசாமுகந் தனினுமெண் பிரம்பொலி யிசைப்ப*

(இதன்பொருள்.)

பெரியமணியிசையும், பேரிகை,குடவாத்தியம்,மத்தளவாத்தியம், காகளம்,சப்திக்கின்ற மல்லரி,சல்லரி,சங்கங்கள்,கோஷிக்கவும், தெய்வப்பெண்கள் காலின்சிலம்பு கலீரென்று சத்திக்க எட்டுத்திக்கிலும் நந்திகேசுரரானவர் வருகிறகூட்டங்களைவிலக்கஅடிக்கிறபிரம்பினது சத்தம் பிரகாசிக்கவும்—என்றவாறு. (எஅ)

எண்ணும் வெள்ளிமால் வரையடி யிறங்கிய திடப ... *
மண்ணல் சேனையின் கொழுந்திம கிரித்தல மடைந்த *
விண்ணு மண்ணுமெள் ளிடமற நெருங்கிய விமானம் *
மண்ணு மால்விடை நெறிகடந் தடைந்தது பதியே ...*

(இதன்பொருள்.)

யாவராலுந் தோத்திரஞ்செய்யப்பட்ட கைலாயகிரி அடிவாரத்தில் ரிஷபவாகனமிறங்கியது, சுவாமியினுடையசேனையின் முன்னணி இமயபர்வதத்தையடைந்தது, ஆகாயமும்-பூமியும்-எள்ளிருக்க இடமில்லாமல் விமானங்கள் நெருங்கியதுகள், அலங்கரித்திருக்கின்ற விஷ்ணுவாகியரிஷபம் சுவாமியைத்தூக்கிக்கொண்டு வழிமுழுதுங்கடந்து இமயபர்வதராஜன் பட்டணத்தில்வந்து சேர்ந்தது—எ-று. (எகூ)

இமகிரிப்பதியடைந்ததுமிமகிரிமடவார் ... ... *
நிமலனார்திருவழகெலாம்விழிகளானிறாத்தர ... ...*
ருமைத்தவத்தினுக்கிழிவிலையெனப்புகழ்ந்துலாத்தா ... *
ரமர்செய்காமனையழித்தகண்ணுதலெனவறைந்தார்.. *

(இ-ள்.)அப்படியே சிவன் இமயபர்வதத்திலே எழுந்தருளினபோது அந்தமலையிலிருக்கின்றபெண்கள் சுவாமியின் அழகைப்பார்த்துப்

பார்த்து, பார்ப்பதி செய்ததவசுக்கு ஒருகுறைவுமில்லாமல் பலஞ்சித்திபாச்சுது என்றார்கள்-அவர்களில் சிலர் யுத்தத்திற்குவந்தமன்மதனை எரித்தகண்ணன்றோவா அந்தக்குரூரமானகண்ணைப்பார்ப்போமென்றார்கள்—என்றவாறு. (அ௰)

ஆகமாரணிங் கிருக்கவு முலகெலா மயர்ந்த ... ... *
போகமீதிவ ரிருக்கையான் மதனுட லொளித்துப் ... *
போகமீதிவர்விருப்புற வுயிர்க்கவைபுணர்ந்த ... *
மோகமாக்கிமுதலிவ ரெனச்சிலர்மொழிந்தார் ... *

(இதன்பொருள்.)

மன்மதன் தேகத்தையுடையவனாயிருந்தபோதும் இவர் யோகத்திலே யிருந்ததனாலே உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் விகாரமில்லாமல் அசத்துகிடந்ததுகள், மன்மதன் தேகம்போயும் இவர்போகத்திலே விருப்பம் உண்டானபடியினாலே சகலருக்கும் போகத்திலாசையுண்டாச்சுது, ஆனபடியினாலே மோகத்தையுண்டாக்குகிறவர் இந்தச்சிவனேயன்றி வேறொருவருமில்லை யென்று ஸ்திரீஜனங்கள் சிலர் சொன்னார்கள்—என்றவாறு. (அக)

மாயவிற்கைவே ளழகிவ ரெழிலிற்கு வடிவி ... *
லாயிரத்திலொன் றிலையெனத் தனைமதித்தவனை ... *
தீயிடத்துடல் கொளுத்திய தவத்தினிற் றிறனே ... *
யாயுமுத்தம ரழிப்பரோ வெனச்சில ரறைந்தார்... *

(இதன்பொருள்.)

மாயஞ்செய்கின்ற கருப்புவில்லைக் கையிலேயுடைய மன்மதன் அழகு இந்தச்சுவாமியினுடையவடிவமாகிய அழகில் ஆயிரத்திலொரு பங்குகாணாது, அதனாலே அவனை இகழ்ந்து தன்னைமதித்துத் தீயினாலே அவனைக்கொளுத்திப்போட்டது தபோமகிமையினாலேயே ஆராய்ந்தெடுக்கத் தகுந்த உத்தமர்கள் ஆனால் அப்படிச்செய்வார்களோ என்று சிலமாதர்கள்சொன்னார்கள்—என்றவாறு. (அஉ)

மாதுலன்பெருங் கிளைஞருமருகனார்திரளும் ... ... *
காதலன்பினு லெதிரெதிர் தழுவினர்கலந்தா ... *
ராதியந்தமு மதனிலையளவிட வரியோன் ... ... *
வேதியன்கரம் பிடித்தினி திழிந்தனன்விடைமுன் .. *

(இதன்பொருள்.)

மாமனாகிய இமவற்பர்வதராஜன்சுற்றத்தார்முதலியசேனைகளும், மருமகனாகியபரமசிவனுடையசேனாசமூகமு மிகுந்தஆசையோடிகூடினவர்களாய், எதிரெதிராகவந்துஒருவருக்கொருவராகத் தழுவிக்கொண்டார்கள். முதலுமீறுமில்லாத அளவிடப்படாதசிவனானவர் பிர்ம்மாகையைப்பிடித்துக்கொண்டுரிஷபவாகனத்தில்நின்று இறங்கினார்— எ-று.

இலகுமங்கைப ரநேகர்நீராஞ்சன மெடுப்ப ... *
வுலகபாலக ரிருமருங்கினு நடந் தொதுங்கத் ... *
திலகமாதவ னிருகைமேலொருகரஞ் சேர்த்திட் ... *
டலகிலாமணி யிழைத்ததோர்மண்டபத் தணைந்தார் ... *

(இதன்பொருள்.)

இப்படி சுவாமியானவர் - ரிஷபவாகனம்விட்டு இறங்கினவுடனே அழகுபொருந்திய அநேகம்பெண்கள் ஆலாத்தியெடுக்கவும், அஷ்ட திக்குப்பாலகர் எட்டுபேரும் சுவாமியி னிருபுறத்திலும் நடந்தொதுங்கிவரவும், எல்லாருக்குந் திலகமாகியவிஷ்ணுவினுடைய இரண்டுகை மேலும் தம்முடைய ஒருகையைச்சேர்த்துக்கணக்கில்லாத ரத்தினங்களாலிழைக்கப்பட்டிருக்கிற மண்டபத்தில்வந்து சேர்ந்தார்— எ-று.

அரியமண்டபத் தணைந்தபீடிகையின்மீ தமர்ந்தார் .. *
வரையிடைப்பிறந் தமைவளர்முலைசொல வருவார் ... *
குருமலர்க்கையி லேந்திவந்தருள்குடி யிருக்கும் ... *
திருமுகத்தினை யிறையவன்வலப்புறஞ் சேர்த்தார் ... *

(இதன்பொருள்.)

சுவாமி அருமையாகிய அந்தமண்டபத்தில் இட்டிருக்கிற ஆசனத்திலெழுந்தருளினார், ஸ்தனங்கள் மலைபோலேயிருப்பதனாலே அந்த ஸ்தனங்களே இவர்கள்மலையிலேபிறந்தார்களென்று காண்பிக்கும்படியாக வருகிறமாதர்கள் தங்களுடைய நிறம்பொருந்திய புஷ்பம்போலும் கைகளிலேந்திக்கொண்டு கிருபையேகுடியாக விருக்கின்ற அழகிய முகத்தையுடைய பார்ப்பதியைச் சிவனுடைய வலப்புறத்திலே உட்காரவைத்தார்கள்—என்றவாறு. (௮௫)

முன்னையாரணன் வதுவையின்சடங்கெலா முடித்து ... *
வன்னிமேற்பொரியிறைத்துநெய்சொரிந்துமந்திரத்தா *
லென்னையாளுடை யிறைவனுமேழல கின்ற ... *
கன்னிசெங்கரம் பிடித்துமூவலஞ்செய்தான் கனலை ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரஞ்சுவாமியும், அம்மனும், கலியாணமண்டபத்திலெழுந்தருளியிருக்க அந்தவேளையில் பிரம்மாவானவர் கலியாண சடங்கை விதிப்படிமுடிக்க, என்னையாட்கொண்ட பரமசிவனானவர் அக்கினியிற் பொரிசொரிந்து நெய்யாகுதிபண்ணி மூன்னமே ஏழுலகத்தையும்பெற்ற அம்மன்கையைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம் வலமாகச்சுற்றிவந்தார்—என்றவாறு. (௮௬)

ஒற்றைவால்வளை யொலித்தது சுருதியு மொலித்த ... *
சுற்றும்வானவ ரிருடியர்மலர்மழை சொரிந்தார் ... *
பற்றியாசனத் திருந்தனனெவரும் பணிந்தார் .. *
பெற்றதாதையோ டன்னையைப்பணிந்தனள்பெதும்பை *

(இதன்பொருள்)

வெண்மைபொருந்திய ஒட்பற்ற சங்கபூங்கவும், நான்கு வேதங்களும் சத்திக்கவும், நான்குப்புறமும் சுற்றிக்கொண்ட தேவர்களும் ரிஷிகளும் புஷ்பமாரியைப் பொழியவும், சுவாமி ஒரு ஆசனத்திலெழுந்தருளினர். அப்போது சர்வேத்திரபேரும் வந்தனஞ்செய்தார்கள். பார்ப்பதியானவ ளவள்தாயையுந் தகப்பனையும் வணங்கினள். எ-று (அஎ)

எரித்த காமனைத் தருதியென் றிமையவ ரயன்மா ... .*
லொருத்த ரன்றியே யிறையவன் மகிழ்ச்சிகன் டுரைத்தார் . *
மரித்த காமனை யழைத்தருள் புரிந்தனன் வள்ளல் ... ...*
பெருந்த வம்பிறு லனைவரும் விடைகொடு பெயர்ந்தார் ...*

(இதன்பொருள்.)

தேவர்களும், பிர்ம்மாவும், விஷ்ணுவும், மற்றச்சர்வேத்திரபேரும் சுவாமி எல்லாரிடத்திலும் வைத்த பிரியத்தைப் பார்த்து சுவாமீ நீர் முன் னெரித்த மன்மதனை எழுப்பித்தரல் வேண்டுமென்று கேட்டார்கள். அப்படியே இறந்துபோன மன்மதனை வரவழைத்துக் கொடுத்தருக்கிருபைசெய்தார் பரமசிவன்—என்றவாறு. (அஅ)

அதற்பி னன்னையுங் கவுரியுருகியொன்றுகி ... *
மதத்த வானையைக் குமரனைப்பயந்தனர் மகிழ்வாய் ... ... *
விதிர்த்த வேலினைக் குமரனுக் களித்திறை விடுத்தான் ... *
கொதித்த தாருக னுயிர்குடித் துவந்தனன்குமரன் ... *

(இ-ள்.) அப்படியேதிருக்கலியாண நடந்தபின்பு சுவாமியும் உமையும் மிகுந்த அன்புகொண்டு ஒருருவமாகச்சேர்ந்து வலிமைபொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுரரையும், சுப்பிரமணியரையும்பெற்றார்கள். அதன்பின்பு சுவாமியானவர் சுப்பிரமணியருக்கு ஒருவேலாயுதத்தை அருளிச்செய்தனுப்புவிக்க, அவர்போய் அந்தத் தாருகாசூரனை வேலாயுதத்தை விட்டெறிந்து கொன்றார்—எ-று.


மயிலெனத்திகழ் மலைமகள் பொருகரி வதன ... *
னயிலெடுத்ததெங் கரனுட னிமயவெற் பகன்று ... . *
கயிலைவெற்பில்வந் திமயவர் முனிவர்கள் களிக்க... ... ... *
வெயிலுடைப்புர மெரித்தவ னிருந்தன னப்பால் ... . *

(இதன்பொருள்)

மயில்போல் விளங்காநின்ற பர்வதராஜன் மகளாகிய பார்ப்பதி யானைமுகத்தையுடைய பிள்ளையார்- வேலாயுதத்தைத் தரித்த சுப்பிரமணியருடன் இமயகிரியை விட்டுநீங்கித் தேவர்கள் முனிவர்களுடைய கண்களிகூரக் கைலாயத்தில் எழுந்தருளியிருந்தார்-முப்புரத்தை எரித்தவராகிய பரமசிவன் அதன்பின்பு—என்றவாறு. (கூ0)

பார்ப்பதியார் திருவவதாரச்சருக்கம்—முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம்—௯0௫௪.



சிவமயம்.

திருக்கண்புதைத்தசருக்கம்.

(அறுசீரடி ஆசிரிய விருத்தம்.)

மின்னனையமுகிறவழு மிமகிரியின் றம்பாபலத்தான் மேனையா
ளென வள்ளையிடத் தென்னம்மை யவதரித்த கதைசிறிதே யறைந்தே
னிப்பால், பொன்னனைய சடையிறைவன் றிருநயன மிருகரத்தாற்
புதைத்தவாறுந், தென்னருணை மாநகரி லல்லவினை தீர்த்ததுவுஞ்
செப்ப லுற்றேன்... ... ...*

(இதன்பொருள்.)

மின்னல்பொருந்திய மேகங்கள் தவழ்ந்து போகாநின்ற இமவற்பருவதத்தின் தம்பாபலத்தினாலே, மேனாதேவி பிடமாக என்தாயாகிய பார்ப்பதி அவதரித்தகதையில் கொஞ்சந்தான்சொன்னேன், அந்தப்பார்ப்பதி பொன்போலும் சடையையுடைய சிவனது அழகிய கண்களை இரண்டுகைகளினாற் பொத்தியதும், அதனால் வரும்வினையைத் தெற்கின்கண் இருக்கின்ற அருணாசலத்தில் அம்மை பூசைசெய்து தீர்த்ததுவும் சொல்லத்தொடங்கினேன்—என்றவாறு. (க)

(கலிவிருத்தம்.)

ஊடுவர்புலவிதீர்ப்ப ரொருவருக்கொருவர்மாலை ... ... *
சூடுவர்மறைநூல்கேட்பர் சொல்லுவர்வீணைநாதம்... ...*
பாடுவர்பலவிநோதம் பயிற்றுவர்பலகாற்கூத ... *
மாடுவர்வெல்வர்தோற்ப ரணிகலம்புனைவரன்பால்... ... *

(இதன்பொருள்.)

சிவனும் பார்ப்பதியும் பிணங்கிக்கொள்வார்கள் - அதை மறுபடியும் தீர்த்துக்கொள்வார்கள் - ஒருவருக் கொருவர் மாலைகளைச் சூடிக்கொண்டு வேதசாஸ்திரங்களைத் தேவர்கள், முனிவர்கள்,

சொல்லக்கேட்டும் அதன்பொருளைச்சிலருக்குச்சொல்லியும்வீணைமுதலியதுவாசித்தும்-மற்றும்பலவிளையாட்டுகள்செய்தும்பலதரச்சூதாடியும் அதனாலவெற்றியையும் தோற்பையும்அடைந்தும்அழகியஆபரணங்களைத்தரித்துக்கொண்டும்இருந்தார்கள்—என்றவாறு. (௨)

(அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

அந்தவேளையிலென்னன்னைபையனையிறைஞ்சியையா . *
விந்துவுமிரவிதானும் யாவதென்றிசைத்தாளந்தை ...*
சுந்தரக்கனிவாய்மின்னேசுடர்களெம்பிருகணென்றார் *
கந்தனைப்பயந்தாளீசன் விழிகளைப்புதைத்தாள்கையால் *

(இதன்பொருள்.)

அந்தச்சமயத்தில் என்தாயாராகியபார்ப்பதிசுவாமியைவணங்கி ஐயா, சந்திரசூரியர்கள்யாவரென்றுகேட்க அதற்குச்சுவாமி அழகியகனிபோலும் வாயையுடைய பெண்ணே? அந்தஇருவரும்நம்முடையகண்களென்றுசொன்னார். சுப்பிரமணியனைப்பெற்றதாயானவள்கேட்டு வேடிக்கையாகச்சுவாமியுடைய கண்களைஇரண்டுகைகளால் மூடினாள்—எ-று. (௩)

(கலிவிருத்தம்.)

பூசனார்விழிபுதைத்தலு மிருட்பிழம் புருக்கி .. ... *
பூசினாலெனவிருண்டன திசைகளும்புவியு ... ... *
மாசினீலமால்வரையெனக்கருகியமலைகள் ... ... *
காசிலாவியநதியெலாம்யமுனைபோற்கறுத்த ... *

(இதன்பொருள்.)

பரமசிவனுடையகண்களைப் பார்ப்பதிபுதைத்தலும்-இருட்கூட்டத்தையுருகச்செய்து பூசினதுபோல் திக்குகளும்பூமியுமிருண்டதுகள்- மலைகளெல்லாம் குற்றமற்ற நீலகிரியைப்போல் கறுத்ததுகள்-மணிகள்பொருந்திய நதிகளெல்லாம் யமுனைநதிபோல் கறுத்ததுகள் —என்றவாறு. (௪)

(வேறு- அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

மறையவனு நாரணனு முனிவர்களும் வசுக்களுநான் மறையும்வானோ
ரு, மிறையவனும் விழியொளிபோய்ப் பிறவிநெடுங் குருடரொக்கவி
ருந்தார்மற்றைக், கறவைநிரை முதல்விலங்குபறவைகளு மொளியிழ
ந்த கண்ணனதான, துறவறமுப்பிறவறமுந் தொலைந்தனமற் றுளதொழி
லுந் தொலைந்ததன்றே. ... ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மாவும்- விஷ்ணுவும்- முனிவர்களும்-அஷ்டவசுக்களும்- நான்கு வேதங்களும்- தேவர்களும்- இந்திரனும்-கண்ணினது பிரகாசமற்றுப்பிறவிக்குருடர்போல இருந்தார்கள் பசு வர்க்க முதலியமிரு

கங்களும்-பட்சிகளும்- கன்றெஞ்ஞியபற்றதுகள். துறவறமில்லறமிரண்டும் ஒழிந்ததுகள் மற்றையெல்லாத் தொழில்களும் கெட்டதுகள்—என்றவாறு. (ரு)

(கலிவிருத்தம்.)

தேவர்மானிடரிராக்கதர் நிறமெனத்திரிந்தார் ... ...*
கோவிலிந்திரன்வெண்கரிகருநிறங்கொண்ட .. ... *
நாவிலம்புயன்கொடிகொடியானசவ்வவையில் ... *
மூவர்தேவனுக்கனைவருமுறைசொலிப்புகன்றார் ...*

(இதன்பொருள்.)

தேவரும்-மனிதர்களும்-ராட்சதர் நிறம்போலக் கறுத்தார்கள், ஆகாயத்தில இந்திரன்வாகனமாகிய வெள்ளையானைகரிபோலக்கறுத்தது, கெடுதலில்லாத பிரம்மாவின்கொடியாகியஅன்னம் காகம்போற்கருகியது, அப்படியெல்லாப்பொருளும் கறுத்துமயங்குகின்றகாலத்தில் மும்மூர்த்திகளுக்கு முதலாகியசுவனிடத்தில் எல்லோரும்போய் முறையிட்டுத் தங்கள்குறையைச்சொல்லிக் கொண்டார்கள்—எ-று.(சா)

(அறுசீரடி- ஆசிரியவிருத்தம்.)

அஞ்சலெனவமைத்தகரத்திறைவனுதல்விழிதிறந்தானவனியேழுந், துஞ்சுமிருளகன்றதுபன்னிருகோடி சூரியர்தந் தோற்றம்போல, வஞ்சியுமையிறைவன்விழிபுதைத்ததிருக்கரமலரை வாங்கிநின்றாள், விஞ்சுமறையவர்வளர்க்குங் கனல்போல விழிமூன்றும் விளங்கிற்றன்றே .. .. *

(இதன்பொருள்.)

சிவன்பயம்வேண்டாமென்று கையமர்த்திப் பன்னிரண்டுகோடி சூரியருதயம்போலத் தம்முடைய நெற்றிக்கண்ணைதிறக்க எழுலகமும் அந்தகாரத்தைநீக்கியது, பார்ப்பதியானவள் பொத்தியகையை வாங்கிநின்றார்கள். பிராமணர்கள்வளர்க்கும் யாகாக்கினிபோல மூன்றுகண்களும் விளங்கியது—என்றவாறு. (எ)

பார்புதைத்த திருவயிற்றாள் பணிந்துரைப்பா ணெடுஞ்சூலப் படையாய்காலன், மார்புதைத்த மலர்பதத்தா யார்புதைத்தசடாடவியா வையமேழுங், கார்புதைத்தவிருளாக விழிபுதைத்தகொம்பாவங் கழலுமாறு, நீர்புதைத்தபாரிடத்திற் றவம்புரிதற்கானவிடநிகழ்த்துமென்றாள்... ... ... *

(இதன்பொருள்.)

எல்லாச்சீவராசிகளும் கருவாகவைத்துக்கொண்ட வயிற்றையுடைய பார்ப்பதி சுவாமியைப்பார்த்து நெடியசூலத்தையுடையவரோ? யமனை மார்பிலே யுதைத்த மலர் போன்ற பாதங்களை யுடையவரோ? ஆத்திமாலையை யணிந்த சடைக்காட்டினையுடையவரோ, எழுலகும்

மேகநிறத்திலும் அதிகநிறமான இருட்டுண்டாக உமதுகண்களைமூடிய கொடியபாவமானது போகும்படியாகச் சமுத்திரஞ்சூழ்ந்தபூமியிடத்தில் தவசுசெய்தற்கு நல்லஇடஞ்சொல்லுமென்று கேட்டாள்—என்றவாறு. (௮)

ஈசனுமங்குரைத்தருள்வா னுனைவினைவந்தணுகாதே யெனினும்பார்க்கும், மாசகலும்படிக்கரிய தவம்புரியவிரும்பினையேன் மதுரைமாயை, காசியவந்திகைதுவரை யயோத்தியினுஞ்சிறப்புடைய காஞ்சிமேவிப், பூசைபுரிந்தரியதவம்புரியென்றான்விடைகொண்டாள் புகழ்ந்தும்போற்றி .. .. *

(இதன்பொருள்.)

அப்படி பார்ப்பதிகேட்கச் சுவாமி-பெண்ணே, உன்னைப்பாவம்வந்துசேராதாயினும் மற்றவர்களுக்குப் பாவநீங்கும்பொருட்டுத் தவசுசெய்ய இச்சித்தாயாகில்,மதுராபுரி,மாயாபுரி,காசி,அவந்தி, துவாரகாபுரி, அயோத்தி, இவைகளுள் சிறந்த-காஞ்சீபுரத்திற்போய் பூசையுடன்அரியதவசுசெய்யென்றுசொல்லச் சுவாமியைவணங்கித் திருவிடைபெற்றுக்கொண்டாள்—என்றவாறு. (௯)

விசையுமகள்குடையெடுப்பச் சயமகள்பொன் னடைப்பைகொடுவிரைந்துமேவ, வசையுமணிக்கவரியிரண் டருந்ததியுங்கமலினியுமருத்துவீசத், திசையிலிளநிலவெறிக்குந்தரளமணிச்சிவிகையின்மேற்சென்றபோது,நசைபெருகுமறம்பெருகப் புனல்பெருகும்புகழ்க்கங்காநதியைச்சேர்ந்தாள் ... ...*

(இதன்பொருள்.)

பார்ப்பதியானவள் வீரலட்சுமி குடைபிடிக்க, ஜயலட்சுமி பொன்னடைப்பைதாங்கிச் சீக்கிரத்தில்வர, ரத்தினங்களிழைத்த சாமரைகளால் அருந்ததியும்- லட்சுமியும்- இரண்டுபக்கங்களில்நின்றும் காற்றுகளைவீச, நாலுதிக்கிலும் சந்திரனைப்போலப் பிரகாசத்தைவீசும்,முத்துப்பல்லக்கின்பேரிலேறி யாவரும்விரும்புகின்றதருமம்பெருகச் சலம்பெருகுகின்ற கீர்த்தியினையுடைய கங்காதீர்த்தத்தில்வந்து சேர்ந்தாள்—என்றவாறு. (௰)

இறந்தவுயிரினிமீளப் பிறவாமலிறவாம லிறைவனார்தஞ், சிறந்த திருவுருவாகுந்திருக்காசித்தலமடைந்து சிவன்றாள்போற்றி, வறந்தமழைக்குருகுமந்தத் தலத்தவர்கள்பிழைக்கவறம்வளர்த்துப்பன்னாள், நறுந்தொடையினரசன்விடை கொண்டுநிற்பத்தொண்டவள நாட்டைச்சேர்ந்தாள் ... ...*

(இதன்பொருள்.)

இறந்துபோனவுயிரானது இனித்திரும்பப் பிறக்காமலும்- இறக்காமலும் - பரமசிவனுடைய திவ்வியசொரூபமாகின்ற காசிப்பதி

ளைச்சேர்ந்து விசுவேசுரருடைய பாதம்போற்றி மழையில்லாமல் வருந்தாநின்ற சீவராசிகள் பிழைக்கும்பொருட்டு அத்தலத்தில் தர்மத்தைப் பலநாள்வளர்த்துத்தேன்பொருந்திய மாலையைத்தரித்த அத்தேயத்துராஜன்விடைபெற்றுநிற்கத்-தொண்டைமண்டலத்தைச்சேர்ந்தாள் பார்ப்பதி—என்றவாறு. (௰௧)

மழைத்தவழுந்தலைப்பலவின் பழமதுவாய்விரிந்தாலுமகரவாழைப், பழமதுவாய் விரிந்தாலும் புதுமதுவாய் விரிந்தொழுகும் பழனநீங்கிக், குழையளவு நடமாடும் விழிமாதர் நடமாடுங் குறிப்புநோக்கிப், பொழிலதனின் மடமயில்க ணடமாடுந் திருக்காஞ்சி புரத்தைச் சேர்ந்தாள்... ... ...*

(இதன்பொருள்.)

மேகங்கள் தவழாநின்ற தலையையுடைய பலாவினதுபழங்கள் வாய்விண்டாலும், மகரவாழையினுடைய பழங்கள் அளிந்தாலும், புதிய தேன்பெருக்கெடுத்து வாய்க்கால்வழியாக ஓடிவிழாநின்ற கழனிகளைக்கடந்து குண்டலம்வரைக்குந் தாவுகின்றகண்களையுடைய பெண்கள் நாட்டியஞ்செய்கிற குறிப்பைப்பார்த்துச் சோலைகளில் இளமையாகிய மயில்கள் நடனஞ்செய்கிற காஞ்சீபுரத்தலத்தைச்சேர்ந்தாள் பார்ப்பதி—என்றவாறு. (௰௨)

தாவரத்தை யறிவாக்கி மனிதரையுள் ளறிவழிக்குந் தடங்கண்மாதர், நூபுரத்தம் புயசரணஞ் சிவப்பேற விழைமருங்கு ளுடங்கவேறு, மாபுரத்தின் மணிமேடை யரம்பையர்க்கு விளையாட மலைகளாகுங், கோபுரத்திநெடுங்கொடிகள் காமவல்லியெனுங்கொடிக்குக்கொழுகொம்பாரும்... ... ... *

(இதன்பொருள்.)

கல்லுகளையும் மரங்களையுமுருகச்செய்து மனிதர்களுடைய உள்ளறிவைக்கெடுக்கின்ற விசாலமாகிய கண்களையுடையபெண்கள் சிலம்பணிந்த தாமரைமலர்போலும் பாதஞ்சிவக்க நூல்போலு மிடைவளையவாறுகின்றஅந்தப்பட்டணத்திலிருக்கின்றரத்தினமிழைத்த உப்பரிகைகள்-அரம்பைமுதலாகிய பெண்களுக்கு விளையாடக்கட்டுமலைகளாகஇருக்கும்- சிவாலயத்தின் கோபுரத்திற்கட்டியிருக்கின்ற கொடிகள் கற்பகவிருட்சத்திற்படர்ந்த காமவல்லியென்னுங்கொடிக்குப் படருகிறதற்கு கொழுகொம்பாயிருக்கும்—எ-று. (௰௩)

பரதநாடகமாடு மயில்போலுங்கயிற்றுவழிப் பாவைபோலுஞ் ... *
சுரதநாடகமாடுந் துடியிடையார்கணவருடன் றுவளும்போது ... *
மரகதாதிகளுறுத்த விழித்துமணிமேடையினும் வாரிவீச... ......*
வரதநாகரமான தன்றுமுதலின்றளவு மாழிதானே... ... ...*

(இதன்பொருள்.)

பரதநாட்டியமாடுகிறமயிலுக்குச்சமானமாகவும்,கயிற்றுவழியுசலாடுகிற சிங்காரம்பொருந்திய பிரதிமைபோலவும், சுரதவிளையாட்டுச் செய்கின்ற உடுக்கைபோன்ற இடையினையுடைய பெண்கள்புருஷர்களோடுபடுத்துப்புரளும்போது மரகதமுதலிய ரத்தினாபரணங்களுறுத்தக் கோபித்து அவ்வுப்பரிகையில் நின்றும் எடுத்து வீசியெறிய அவ்வாபரணங்கள் சமுத்திரத்திலே விழுந்ததினாலேதான் அதுரத்நாகரமென்கிற பெயர்பெற்றது—எ-று. (யச)

அணையமருங்கன்றுவஞ்சி யொருமாவின்கீழிருக்கு மரனைப்போற்றிக், கனலணையவினைகளையுநடுங்குவிக்கநடந்ததிருக்கம்பைமேவிப்* புணையமணற்குவித்துலிங்கவடிவாக்கி யுமைபூசை புரிந்தாளப்போ * தெனையுடையா னவள்தவத்தி னுறுதினினைந்தரியகங்கையேவினானே

(இதன்பொருள்.)

அத்தன்மையையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்ற மாவிருட்சத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனைவணங்கி நெருப்பொத்தபாவங்கள் நடுங்கி ஓடிப்போகவருகின்ற கம்பைநதியருகிற்போய்அலங்காரமாய் மணலைக்குவித்து லிங்கரூபமாக்கி, பார்ப்பதிபூசைசெய்யும்போது எம்முடைய சுவாமி அவள்தவத்தினுடைய உறுதியையறிய கங்கையைப்பிரவாகமாக வரச்செய்தார்—எ-று. (யரு)

பூதலமேற்குறுமுனிவன் குண்டிகையிற் கவிழ்ந்துவரும் பொன்னிதானோ,ஆதியிலே யந்தமுனி யாசமிந்தே யுமிழ்ந்தவலை யாழிதானோ, ஏதமறத்தவம்புரியும் பகீரதற்காச் சன்னுமுனி யிரக்கத்தாலே* காதின்வழியொழுகவிடப் பரவியகங்காநதியே கம்பையாறு ......*

(இதன்பொருள்.)

பூமியில் அகஸ்தியமுனிவர்கமண்டலங்கவிழ்ந்ததினாலேவருகின்றகாவேரியோ, அந்தமுனியானவர் ஆதிநாளையில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின் பெருக்கோ, குற்றமறத்தவஞ்செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனியானவர் இரக்கத்தினாலே காதின்வழியாகவிடப்பெருக்கெடுத்துவந்த கங்காநதியோவென்று சந்தேகப்படவிருந்தது கம்பைநதி—எ-று. (யசு)

(வேறு—அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

மங்காநதியின்மணலிலிங்க மழியாதிருக்கும்வகையுடையாள்... ...*
வெங்காதலினாலணைபவள்போல்வெற்பாரிமையவெற்பாடன் ... *
சங்கார்கரத்தாலிருதனத்தா லிறுகவிறுகத்தழுவுதலுங் ... ... *
கொங்கார்களபத்திருமார்பு முருகியுருக்குழைந்தாரே ... ...*

(இதன்பொருள்.)

பார்ப்பதியானவள் கெடாசகம்பையாறு பெருக்கெடுக்கும்போது மணலாலேசெய்தலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்றுபயந்து காமங்கொண்ட ஆசையினாலே அணைகிறவள்போல்இமவற்பர்வதராஜகுமாரியின் வளையணிந்தகைகளாலும், இரண்டுகொங்கைகளாலும், இறுகியிறுகத்தழுவுதலும் வாசனைபொருந்திய களபசந்தனத்தையணிந்த திருமார்பு உருகிக்குழைந்தார்—எ-று. (௰௭)

மனத்தாணினைந்தபெருந் துயரு மணக்காப்பிரிவுமுடன்றீரத்... *
தனத்தானெருக்கிமுகமழுத்தித் தலைநாட்போலத்தழுவுதலும்....... *
மனத்தால்விளங்குங்கம்பைநதி யருணாசலத்தையொருபொழுது... *
நினைத்தார்வினைகளிரண்டுபோ லிரண்டாய்ப்பகுந்து நீங்கியதே...... *

(இதன்பொருள்.)

தன்னுடையதவத்துக்குப் பங்கம்வராமல்நினைத்திருந்த துன்பமும் சுவாமிகூடாமற் பிரிந்த துன்பமும் தீரும்படி தனங்களிலே நெருக்கி முகமழுத்திமுன்னாள்போல அணைந்தவுடனே அன்னங்கள்சூழ்ந்த கம்பைநதியானது அருணாசல ஸ்தலத்தை ஒருவேளை நினைத்தவர்களுடைய நல்வினை தீவினைபோ லிரண்டாகப் பிரிந்து லிங்கத்தைச்சுற்றிப்போனது—எ-று. (௰௮)

(அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

விடுத்தனள்கரத்தைப்பாங்கர் விளங்கிழையவர்கள்சூழத்... ...*
தொடுத்தபூந்தொடையுஞ்சாந்து மணிந்தவள்தொழுதாளந்த ... *
வடிக்கணாள்தனதுகேள்வன் மார்பினைத்தொடாதுநாணித் ... *
தடுத்திடுங்குறிகள்போல விளங்கியதழும்பரம்மா.... ... *

(இதன்பொருள்.)

பார்ப்பதி சுவாமியைத்தழுவிய கைகளைவிட்டாள், அருகில்பிரகாசிக்கின்ற ஆபரணத்தையுடைய அநேகம்பெண்கள்சூழப் புஷ்பமாலையும் சந்தனமுந்தரித்து வந்தனஞ்செய்தாள், மாவடுப்போன்றகண்களையுடைய அந்தஅம்மை தன்னுடையசுவாமிமார்பை மற்றப்பெண்கள் வெட்கத்தையடைந்துதொடாம லிருக்கும்படிதடுக்கவைத்தகுறிகள்போல் தழும்புகள் விளங்கியதுகள்—எ-று. (௰௯)

அப்பொழுதரனுமாறனடித்தழும்பிருக்குந்தோளு ... ...*
மூப்பொழுதிறைஞ்சுந்தேவர்முடித்தழும்பிருக்குந்தாளு ... *
மைப்பொலிகுழலாள்கொங்கை வளைத்தழும்பிருக்குமார்பு... *
மெய்ப்பொலிநீறுமாகத்தோன்றினார்விடையின்மீது.. ...*

(இதன்பொருள்.)

அந்தக்காலத்தில் பரமசிவனும் பாண்டியராஜன் அடித்தழும்பிருந்த திருத்தோள்களும்- மூன்றுகாலத்திலும் வணங்குகின்ற தேவர்க

ருடையகிரீடங்களின் தழும்பிருந்த திருவடிகளும் மேகம்போலவிளங்குங்கூந்தலுடைய பார்ப்பதி முலைத்தழும்பும்வளைத்தழும்புமிருக்கின்றமார்பும் தேகத்திற்பொலிந்ததிருநீறுமாய்ரிஷபவாகனத்தில்மேலெழுந்தருளினார்—எ-று. (௨௰)

அந்தரத்தமரரெல்லா மலர்மழை சொரியவானிற் ... ... *
றுந்துமிமுழக்கத்தோடே சுருதிகண் முழங்காநின்ற ... ... *
விந்திரன்றிருமால்தேவ ரிறைவியைத் தொழுதுநின்றார் ... *
சுந்தரக்கனிவாய்மின்னு மீசனைத்தொழுதுநின்றாள் ... ... *

(இதன்பொருள்.)

ஆகாயத்தில் தேவர்களெல்லாம் புஷ்பவருஷம்பொழியத் தேவதுந்துமி முழக்கத்தோடு வேதங்கள்முழங்காநின்றன. தேவேந்திரனும், விஷ்ணுவும், தேவர்களும், பார்ப்பதியைத்தொழுதார்கள், அழகுபொருந்திய கனிபோலும்வாயையுடையஅம்பனும் பரமசிவனை வணங்கினாள்—என்றவாறு. (௨௧)

ஒண்ணுதல்விடைமுன்சென்று பணிந்துளமுருகிப்பூசை ... *
பண்ணுதல் புகழ்ந்தலாகிப் பணிந்தன ளவளைநோக்கிக் ... ... *
கண்ணுதலுனக்குவேண்டும் வரமெதுகழறுகென்ன ... *
னெண்ணுதல் பிறிதொன்றில்லை யிடப்புறந் தருதியென்றாள் ... *

(இதன்பொருள்.)

விளங்குகின்ற நெற்றியையுடையஅம்மன் ரிஷபவாகனத்தின்முன்பாகச்சென்று நமஸ்கரித்து மனமுருகிப் பூசைசெய்தல்போல புகழ்ந்து வணங்கினாள், சுவாமி அப்படிப்பட்ட பார்ப்பதியைப்பார்த்து உனக்குவேண்டியவரம்யாதுசொல்லென்றார், அதற்குஅம்மனும்வேறொன்றும் வேண்டியதில்லை, உமது இடப்பாகத்தை அருளுமென்று கேட்டாள்—எ-று. (௨௨)

அத்தனுமொழிவானென்கண் புதைத்ததாலடைந்ததீமை ... *
இத்தலத்தினியபூசை யியற்றலாலகன்றறிந்த ... ... *
மெய்த்தலந் தனக்குத்தென்பா லொருநகர் விளங்கித்தோன்று .. *
முத்திமாநகரந்தன்னை நினைத்தபேர்க்களிக்குமூதூர் ... *

(இதன்பொருள்.)

அதற்குப்பரமசிவன் அருளிச்செய்வார், என்கண்களை மூடியதனாலேஅடைந்தபாவம் இந்தஸ்தலத்திலினிமையானபூசைசெய்தலினாலே நீங்கியது இந்தமெய்மையான ஸ்தலத்துக்குத் தென்பாரிசத்திலொருநகரம் பிரகாசிக்கும் அதைநினைத்தால் முத்தியுண்டாகும்—எ-று. ௨௩

ஆரணன்றிருமால்தேட வடிமுடி யொளித்துஞானப் ... ... *
பூரணவொளியாய்மேல்கீ ழுலகெலாம்பொருந்திநிற்போந் ... *
தாரணியவர்க்குமற்றைச் சயிலமாயிருப்போமங்கே ... *
வாரணிமுலையாட்பாகந் தருகுவோம்வருதியென்றார் ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மாவும், விஷ்ணுவும், தேடப் பாதமும்சிரசும் அவர்களுக்குத் தெரியாமலொளித்துப்பூரணமாகிய ஞானவொளியாகியமேல்கீழுலக ங்களிலெல்லாம் ஒன்றாய்நிற்போம். பூமிகளிலிருப்போர்க்குமலையுருவ மாயிருப்போம். அவ்விடத்தில்வந்தால்கச்சணிந்ததனத்தையுடையபெ ண்ணே, இடப்பாகத்தைத்தருவோம் வாவென்றார்பரமசிவன்—எ-று.

என்னலுமிறைவிசொல்வா ளினிமைசேர்கயிலைகாசி ... *
தன்னிலுமினிதுகாஞ்சித் தலமெனவுரைத்தீரிந்த ... ... *
தன்னிலந்தனக்குச்சோணை நகரமேயதிகமென்றீர் ... *
பின்னையுமுளதோவந்தத் தலத்தினுக்கிணையாம்பேரூர் ... *

(இதன்பொருள்.)

பரமசிவன் இப்படித் திருவுளம்பற்றியஅளவில் பார்ப்பதிசொல் வாள்-இனிமைசேர்ந்த கைலாயம், காசி, இவ்விரண்டு ஸ்தலங்களிலும் இந்தக்காஞ்சீபுரம் அதிகமென்றுஅருள்செய்தீர் இதைப்பார்க்கிலும் அருணசலஸ்தலம் அதிகமென்கிறீர் அந்தஸ்தலத்திற்குச் சமானமாகி ய பெருமை பொருந்திய ஸ்தலம்வேறொன் றுண்டோவென்றாள்— என்றவாறு. (உரு)

அவ்வுரைமறுத்தெங்கோமா னருணுவானமக்கொப்பான ... *
தெய்வமைந்தெழுத்துமானத் திருந்துமந்திரமுமில்லை ... *
சைவமேயனையதான சமயமு மருணைபோல ... ... *
வெவ்வினை தவிர்க்குமூரு மிலையென விளம்பிப்போனுன் ... *

(இதன்பொருள்.)

அப்படிப்பார்ப்பதி சொன்னவார்த்தையைச் சுவாமியானவர் மறு த்து நமக்குச் சமானமாகிய தெய்வமும், பஞ்சாட்சரத்திற் கொப்பா னமந்திரமும், சைவத்திற்குச்சரியானசமயமும், பொல்லாதபாவங்க ளைத்தீர்க்கும் அருணசலஸ்தலத்திற்குச்சரியானஸ்தலமும் உலகத்தில்இ ல்லையென்று திருவாய்மலர்ந்து கைலாயத்துக்கெழுந்தருளினார்-எ-று.

கொம்பனாள்பொறுப்பாயீதென் றிறைவனைக்குவித்துப்போற்றிக் *
கம்பையாரகன்றுகாசித் தலத்தையுங்கடந்துவேலன் ... *
றும்பிமாமுகத்தோன்கன்னி வயிரவர்கணங்கள்சூழச் ... *
செம்பொனூர்கவரிவீசச் சிவிகைமேற்சிறந்துசென்றாள் ... *

(இதன்பொருள்.)

புஷ்பக்கொம்பையொத்த பார்ப்பதியானவள்சுவாமி, நான்தெரியா மல் சொன்னவார்த்தையைப் பொறுத்துக்கொள்ளுமென்று இரண் டுகையுங்குவித்து வணங்கிக் கம்பையாற்றைவிட்டுக் காஞ்சீபுரத்தை யுங்கடந்து சுப்பிரமணியர் - கணபதி - சப்தகன்னிகள் - வயிரவர்

சிவகணங்கள்சூழவும், லட்சுமிகவரிவீசவும் பல்லக்கிலெழுந்தருளினாள்—என்றவாறு. (உஎ)

மண்மகண்மகிழப்பட்டமரங்களுந்தழைத்துவீறிக் ... *
கண்மலர்சொரியக்கல்லு மலைகளுங்கரைந்துசோர ... ... *
வெண்மலர் மடவாள் போற்றக் காவத மிரண்டுநீங்கி ... *
விண்மதிமுகத்தாண்மற்றோர் வெள்ளிடைமருங்கிற்சேர்ந்தாள் *

(இதன்பொருள்.)

பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகப் பட்டுப்போனமரங்களுந்தளிருண்டாக்கித்தழைத்துத் தேனுடம்புஷ்பங்களைச்சொரியப் பாறைங்கல்லுகளும் பெரியமலைகளும் கரைந்துருக வெள்ளைத்தாமரைப்பூவில் வாசஞ்செய்யுஞ்சரஸ்வதி ஸ்தோத்திரஞ்செய்ய-இரண்டு காததூரம்போய்ச் சந்திரனையொத்த முகத்தையுடையபார்ப்பதி ஒருவெளியிடத்திலிறங்கினாள்—என்றவாறு. (உ௮)

வெய்யவனன்னையாரொன்று வினவுகாரணத்தா னீலக் ... ... *
கையவண் மரகதத்திற் கரியவள்கரமுங்காலுஞ் ... *
செய்யவள்வருந்தினளென் றறிந்துயிர்சிதைப்பான்போலப் ... *
பையமேல கடலிற் பாய்ந்தான் குமரவேள் பந்தல்செய்தான் ... *

(இதன்பொருள்.)

சூரியனனவன் தன்னையாரொன்று பரமசிவனைக் கேட்டதனாலேநீலம்போன்ற கையும், மரகதம்போன்ற வடிவமும், தாமரைப்பூப்போன்ற உள்ளங்கையும், உள்ளங்காலும்-பொருந்திய அம்மன் சாபத்தினால் வருந்தினளென்றறிந்து தன்னுயிரை விட்டுவிடுகிறவன்போல் மெள்ளமெள்ளமேற்குச்சமுத்திரத்தில்விழுந்து அஸ்தமித்தான். சுப்பிரமணியர் அம்மனிருக்கிறதற்காக ஒருபந்தல்போட்டுவைத்தார்—எ-று.

அன்னையக் குகனைநோக்கி யரம்பையாற் பந்தல்செய்து... *
பன்னிருகரமுஞ்சாலவருந்தினையெனப்பாராட்டி ... ... *
யின்னுமோர்கருமஞ்சந்தி முடிப்பதற்கினிய நன்னீர் ... *
கைந்நிலைறவேலையேவி யழைத்திடு கணத்திலென்றாள்... *

(இதன்பொருள்.)

அதன்பின்பு பார்ப்பதி யானவள் சுப்பிரமணியரைப்பார்த்து வாழைமரத்தினாலே பந்தல்போட்டுப் பன்னிரண்டு கைகளும்சிவக்க வருத்தத்தை யடைந்தாயென்று பிரியவசனஞ்சொல்லி இன்னும் ஒருவேலையிருக்கின்றது அதேதென்றால் சந்தியா வந்தனஞ் செய்கிறதற்கு நல்லபரிசுத்தமான ஜலம்வேண்டும் உன்கையிற் பிடித்திருக்கிற வேலாயுதத்தை யேவி அழைப்பியென்று சொன்னாள்—எ-று. (௩௰)

காதலாலிறைஞ்சிக்கந்தனேவினன் கைவேல்வ்வேல் ... *
போதவான் புத்திராண்டன் புகழ்புருகூதன்போதன்... ... *

வாதில்பாண்டரங்கன்சோமன் வாமனென்பவரைவாட்டி... *
மீதிலேழ்கிரியைவீட்டிக்கொணர்ந்தது வேலைநீத்தம்... .. *

(இதன்பொருள்.)

அப்படிச்சொன்ன அளவில் அதிகபத்திரியோடு சுப்பிரமணியர் வேலாயுதத்தை யேவினார். அது யோதவான், புத்திராண்டன், புருகூதன், போதன், பாண்டரங்கன், சோமன், வாமன், என்று சொல்லப்பட்ட எழுபேரையும், அவர்களிருந்த ஏழுமலையையும், உருவிநல்ல தண்ணீர்க்கடலுக்குப்போய்ச் சலம் கொண்டுவந்தது—எ-று. (௫௧)

கந்தவே ளழைத்தவாற்றிற் கடனெலாங்கழித்துவாழைப்... ...*
பந்தலிலிருந்தாள்போதுமையைதம்பணிந்தவ்வாற்றிற் ... *
சிந்துநீர்சிவப்ப தேதென் றுரைத்தலுஞ்சிறப்பகர்க ... ... *
வந்தவாறதனையாறு திருமுகற் குரைப்பாள் வஞ்சி ... ...*

(இதன்பொருள்.)

சுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே நீர்க்கடனெல்லா முடித்துக்கொண்டு வாழைப்பந்தலிலிருந்தாள். அப்போது அம்மனைவணங்கி இந்த ஆற்றுநீர்சிவப்பாயிருக்கவேண்டியதென்னென்றுகேட்க அந்த விவரத்தைச் சுப்பிரமணியருக்குச் சொல்லுகிறாள்பார்ப்பதி—எ-று.

அனந்தமாபுரத்திலேழு மறையவரறியாக்காலத் ... *
தனந்தமா வினைகள் செய்தா ரதன்பினல் லறிவுதோன்றி ...*
யனந்தமா வெனவே யேறு மயன்பதக்கருதிப்பன்னா .. *
ளனந்தமாலமதாயுட்கொண்டருந்தவம்புரிந்தாரந்நாள்... *

(இதன்பொருள்.)

அனந்தமா புரமென்ற பட்டணத்தில் எழுபிராமணர்கள் அறியாதகாலத்தில் அனந்தந் தீவினைகளைச் செய்து அதன்பின்பு நல்லவிவேகந்தோன்றி அநமமென்று அன்னத்தைத் தனக்கு வாகனமாகக்கொண்ட பிர்ம்மாவைக்குறித்து இலைகளோடே சோறுகஉண்டு பலநாள்தவசுசெய்தார்கள் அந்தக்காலத்தில்—எ-று. (௫௫)

பதுமனுமவர்முன்சென்றுபாவிகாள்வரைகளேழில் ... *
விதிமுறைதவஞ்செய்வீரேற்குமரவேள்விடுக்கும்வேலாற் ... *
பொதிசடைமுடியுமுங்கள்வினைகளும்பொடியாமென்று ...*
சதுர்முகனுரைத்துப்போனானவருமத்தவமேசெய்தார் ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மா அவ்வேழுபேர் முன்னேபோய் பாவிகளே, நீங்கள் எழுபேரும் எழுமலைகளிலே விதிமுறையாகத் தவசு செய்வீர்களானால் அப்போது அம்மனுக்குச் சலம்வேண்டிய நிமித்தியத்தால் சுப்பிரமணியர்வேல்விடுவார். அதனாலே உங்கள்சடை யோடுங்கூடியசிரசுக

னும்பாவங்களும் பொடியாகப் போமென்று சொல்லி விட்டுப்போன
ர் அவர்களும் அந்தப்பிரகாரம் தவசு செய்தார்கள் — எ-று. (௧௪)

(வேறு - அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

எழுவரையுமதிலிருக்கு மெழுவரையும்பிளந்து நீ யெறிந்தகூர்வே, லழியுமவருதிரமுடன் புனல்கலந்து சிவந்ததுகா லதனையாமே, லழுவிலையிங் குனக்கென்ன வடியணிந்து மகிழ்ந்திருந்தான் மகிமைபட்ட, செழுமுனிவர் குருதியினுற் சிவந்ததும்பாற் சிவந்ததுவே செக்கர்வானம்... ... ...*

(இதன்பொருள்.)

அந்தவேழுபேரையும் அவர்களிருக்குமலையையும்பிளந்தது உன்னுடைய கூர்மைபொருந்திய வேலாயுதமானது அந்தவேல் அழுந்தித்தொழுகிற அவர்களுடைய ரத்தத்தோடே ஜலங்கலந்து சிவந்தும்போயிவிட்டது, உனக்கொருகுற்றமு மில்லையென்றுசொல்ல, அப்பிரகாரத்தில் சுப்பிரமணியர்வணங்கிச் சந்தோஷமாயிருந்த அளவில் மலையிலே தவசுசெய்துகொண்டிருந்த முனிவர்களுடைய ரத்தத்தினுற் சிவப்புநிறத்தை யடைந்ததுபோலச்சிவந்தது செவ்வானம் — எ-று. (௧௫)

வித்தகர்கண் புதைக்கருணம் பரந்தவிருண் மறுமையிற்சூழ் வினையைப்போல, வத்தலத்தி னுமையவளைப் பிடித்தகொண்டபரந்ததுகோர, முத்தமியோகிறுகதலிப் படந்தவென்கீழிருப்பவனென் றும்பரிட்ட, நித்திலப்பந்தரைநிகராய் விளங்கியதுதாரகையா னெருங்குவானம்... ... ...*

(இதன்பொருள்.)

சுவாமியினுடைய கண்களைமுன்னே மூடினதினுலே உலகமெல்லாம்பரவிய இருளானது ஒருவனுக்கு மறுமையில்வந்து பிடித்துக்கொள்ளுகிற பாவத்தைப்போல் அந்தஸ்தலத்தில் பிறகுவந்து அம்மனைப் பிடித்ததுபோலிருண்டது, பார்ப்பதியோ ஒருவரையும்படுத்தவீன்கீழிருப்பாளென்று தேவர்கள் போட்டுவைத்த முத்துப்பந்தலைப் பொத்திருந்தது - நட்சத்திரங்களால் நெருங்கப்பட்ட ஆகாயம் — என்றவாறு. (௧௬)

மாலையெனுங்குமரியிருண் மகுடமுகமகற்றியந்திவானிற்சோரிக், கோலமுடன்படிகலிங்கங் கொண்டதுபோன்மதியெழுந்து சுடபரந்சென்ற, தாலமணி மிடற்றிறைவன் விழிபுதைக்கவலைநந்தவிருளகைத்து நீங்கப், பாலமிசைவெடித்தெழுந்த விழியெனவேயெழுந்ததுசெம் பரிதிதானே... ... ... *

(இதன்பொருள்.)

மாலைக்காலமென்கிற துர்க்கையானவள்- இருட்டாகிய மகிடாசுரன் தலையையறுத்து அதனுல் செவ்வானமென்னுஞ்சாலங்கட்ட ரத்

க்கோலத்தோடு பொருந்திய ஸ்படிகலிங்கத்தைக் கைக்கொண்டது போல மேற்றுத்திக்கில் சந்திரனுதயமாகி அஸ்தமித்தது, நீலகண்டராகிய பரமசிவனது இரண்டுநேத்திரங்களையும் அம்மன்பொத்தஅளவில் நான்குதிக்கும்பரவிய எல்லாவிருளும்போகும்படியாக விழித்த அந்தச்சுவாமியினது நெற்றிக்கண்போலச் செம்மைநிறம்பொருந்திய சூரியன் கிழக்குத்திக்கில் உதயமானான்—எ-று. (௫௭)

(அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

கங்கைநிகராஞ்சேயாற்றிற் காலைசந்திக்கடன்கழித்து ....*
பங்கைகனகசிவிகையின்மேன் மறையோலமிடவழிகொண்டாள் *
மங்கமலந்தீர்வழியடியார் கொடியவினையாம்பஞ்சுமலைக் .. ..*
கங்கிமலையாய்விளங்கியசீ ரண்ணாமலைகண்டடிதொழுதாள்... ......*

(இதன்பொருள்.)

பார்ப்பதி கங்கைக்குச்சமானமாகிய சேயாறுஎன்கிறநதியில் காலைக்கடனைமுடித்துக்கொண்டு பொன்மயமாகியபல்லாக்கிலேறிவேதகோஷிடமுழங்கநடந்துபங்கப்படுத்துமுப்மலங்களைத்தீர்க்கிற அடியார்களுடைய பாவமாகிய பஞ்சுமலைக்கு நெருப்புமலையாய் விளங்கிய திருவண்ணாமலையைப்பார்த்துச் சாஷ்டாங்கமாகச்சேவித்துக்கொண்டாள் —என்றவாறு. (௫௮)

(வேறு- அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

வென்றியினாற் கவர்ந்தபொருள்பகிர்ந்திறைவிபலியாடும் வேனிற்பாலை, குன்றமெலாம்வெறியாடன் முல்லையெலாம்பொதுவர்மின்னார்குரவையாடன், மன்றல்கமழிந்திரற்கு விழாவெடுத்துக் கொண்டாடன் மருதவேலி, முன்றிலெல்லாஞ்சினைச்சுறவு முன்னுணக்கியணங்காமுந்நீர்க்கானல்... ... ... *

(இ-ள்.) வல்லமையினாலே பாலநிலத்தார் வழிச்செல்வோரையடித்துப்பறித்த பொருளைப்பங்கிட்டுஅந்தநிலத்திலிருக்கிற துர்க்கைக்குப்பலிபோடுவார்கள், மலைகளையுடைய குறிஞ்சிநிலத்திலிருப்பவர்கள் ஆடுபலிகொடுக்கிற பூசைபோடுவார்கள், முல்லைநிலத்தில் இடைச்சிகள் குரவைக்கூத்தாடுவார்கள், கற்பகமரலையைத்தரித்த தேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உற்சவம்செய்வார்கள், முற்றங்களில் சுறாமீன்களைக்காயப்போடாநின்ற கடலருகாகிய நெய்தநிலத்திலிருக்கிறவர்கள் வருணனுக்குத் திருவிழாசெய்வார்கள்—எ-று. (௫௯)

சோதிபெறுகரணகமறையவம்புசொரிகையினாற்றூய்மையாய ... *
மாதாரையெலாங்கலந்த மகிழ்ச்சியினாற்பொன்கலந்துமருவுநீராற் *
போதவரிசங்கையைப் பெருகுதலான்மதுவுடையப்பொருதலாலே *
சீதரனைநிகராகத்திருநதிநாற் றிசைகளெலலாஞ்சிறந்ததன்றே... ...*

(இதன்பொருள்.)

திருநதியானது ஒளிபொருந்திய துதிக்கையையுடையயானைகள் மறையச் சலத்தைப் பெருக்கிவருதலாலும்,பரிசுத்தமாகிய பெரிய பூமியெல்லாம் பரவிய சந்தோஷித்தினாலும்,பொன்கட்டியைத்திரட்டிக் கொண்டுவருதலாலும்,மஞ்சள்பொடிகளாயப் பெருகினபடியாலும்,தேனானது கூடுடைந்து மோதலினாலும்,சிலேடைவகையால்-கரனுடைய சேகமறையப் பாணங்களைச் சொரிதலாலும், தூய்மைபொருந்திய கோபிகாஸ்திரீகளைச்சேர்ந்த விருப்பத்தினாலும்,லட்சுமியைச்சேர்ந்திருக்கிறதினாலும், வைஷ்ணவர் உருகத்தயைசெய்கிறபடியினாலும், மதுவென்கிற அசுரன்சாக யுத்தஞ்செய்தலாலும்-விஷ்ணுவுக்குச்சமானமாக நாலுதிக்குகளும் சிறந்தது—எ-று. (௪௰)

மேவுபுனல்பரந்தொழுகக்குளிர்ந்துமயிர்பொடித்தனபோல்விதத்திற்றோன்றிக், காவிதுறைபசுங்கிளியின் சிறகெனவேபசந்துதொண்டைக்கதிராய்முற்றிக், கூவுகுலவாரணத்தின்களம்போலநிமிர்ந்தெழுந்து குறைவில்சாலி, பாவையுடைதவம்புரியுந்தலமிதெனப்பணிந்தனபோற்படிந்தமாதோ... ... ... *

(இதன்பொருள்.)

அந்தத்திருநதியில்வந்த நீர்பரந்து ஒழுகுகிறபடியினாலேகுளிர்ந்து பூமிதேவியினுடையதேகத்தின் மயிர்க்குச்செறிந்ததுபோல் குறைவில்லாத நெற்பயிர்களுண்டாகித் தோப்புக்களில் வாசஞ்செய்கிற பச்சைக்கிளிகளினது சிறகுபோலப்பச்சைநிறத்தையடைந்துதொண்டைக்கதிராய்முற்றிக்கூவுகின்ற கோழிக்கழுத்துப்போலநிமிர்ந்து பார்ப்பதியானவள் தவசுபண்ணுகிறஸ்தலம்இதுவென்றுவணங்கினதுபோல்வளைந்துகிடக்கின்றன—எ-று. (௪௰௧)

சந்ததமுமேருழவர்பதம்பார்த்தம்கரிந்தவரிதடுத்துவாரி .. ...* யிந்திரனுலகினொடுபோர்செய்வாநெழுமலையாமெனப்போர்செய், தந்தரமேசுற்றிரவிபுரவிகள்பாற்கடாவிடுத்தேயாற்றித்தூற்றி * மந்தரமாமெனக்குவித்துவழங்குகினுந்தொலையாநென்மருதவேலி *

(இதன்பொருள்.)

எப்பொழுதும் உழுவோர்கள்பதம்பார்த்து அறுத்தஅரிகளைசுமையாகவாரித் தேவேந்திரனுலகத்தோடு சண்டைசெய்ய எழுந்தமலையென்றுசொல்லும்படியாகப் போர்போட்டு ஆகாயவழியாக வருகிறசூரியனுடையகுதிரைகள்போலும் கடாக்களை விட்டு அடித்துவைக்கோல்களைத்தூற்றி மந்திரகிரிபோலக்குவியல்செய்துசர்வமனிதர்களுக்குங்கொடுத்தாலும் நெல்குறையாதுமருதநிலத்தில்—எ-று. (௪௰௨)

வயலினிடைமன்றுழத்தியர்தங் கண்ணிழலைக்கண்டுகருங்கயல்வந்தேறு *
மயலினில்வர்கொம்பருவநிழலினைக்கண் டஞ்சிலையென்றஞ்சிமீளும் ... *
மயலுந்தவுமரவதனத்தாமரைப்போதெனமருவிவண்டுசேரும் ... ... *
வியனுமவர்நாசிநிழல் சண்பகப்போதெனவெருவியிரியப்போகும் *

(இதன்பொருள்.)

வயலிற்களையெடுக்கிறபள்ளத்திகளுடையகண்ணிழலைக்கண்டுசேற் றென்னடைகன் கயல்மீன்களென்று வந்துசேரும் பின்பு அருகிலே அவர் களுடைய புருவநிழலைப்பார்த்து வில்லென்று பயப்பட்டோடும் ஆ சையாகத் தொங்கும் அவர்களுடைய முகத்தைத் தாமரைப்பூவென்று நினைத்து வண்டுகள் வந்துசேரும் அதன்பின் அவர்களுடைய நாசியினி ழலைப்பார்த்துச் சண்பகப்பூவென்று ஓடிப்போகும்—எ-று. (௪௩)

பெரும்பழனத்துழத்தியர்தங்கணைக்காலைவராலெனப்போய்ப்பிடி த்துமள்ளர்திரும்பவுமங்கவர்புறக்கால்கமடமெனப்பிடிமருதத்திணை க்கோறங்குருந்தைபெறு முலைசசியர்கண் முகத்தினுக்கும் விழியி னுக்குந்தோற்றோமென்று கருப்பினுடல்குழைவனபோற்றாமரையு க்குவளையுந்தேன்சொரியுந்தானே ... ... *

(இதன்பொருள்.)

பெரியவயல்களிற்களையெடுக்கிறபள்ளத்திகளுடையகணைக்காலை வரால்மீனென்று பள்ளர்பிடித்து வெட்கத்தையடைந்து மறுபடியு மந்தப்பெண்களுடைய புறங்காலை ஆமையென்றுபிடிக்கு மருதநி லந்தோறும் தென்னங்குரும்பைபோன்றமுலைகளையுடையபெண்கள து முகத்திற்கும் கண்ணுக்குந்தோற்றுப்போனோமென்று வண்டுட னேசொல்லியழுகிறதுபோல் தாமரைப்பூவும் நீலோற்பலமும்தேனை ச்சொரியும்—எ-று. (௪௪)

வேறு.

நிழலைபஞ்சாழிக்குமேழுநெடும்பனைக்குடையவன்ன ... ... *
மழலைவண்டானத்தோமருதவண்டானத்தோடு ... ... *
மழலவிர்மணிப்பூண்மள்ளரரிகிணைக்கிசையவூதுங் ... ... *
குழலிசையறுகான்மாதர்குழலிசையறுகாற்கூட்டம் ... *

(இதன்பொருள்.)

எருமைநீரிலேபோய் விழுந்துகலக்க அன்னம்இளமையாகியநா ரையுடனே மருதநிலத்தில்வளப்பொருந்திய தானத்தையுடைய சோ லையில் ஒளிப் பிரகாசம்பொருந்திய ரத்நாபரணங்களையுடைய பள்ள ர்கள் அடிக்கின்ற அரிகிணையென்னும் வாத்தியத்திற்கு இசையும்படி யாக ஊதுகின்ற புல்லாங்குழலிசை இல்லாதபோதும் பெண்களுடைய கூந்தலிற்பொருந்தியவண்டுகள் இசைப்படியாக ஊதும்—எ - று

மூசுவண்டினங்களெல்லா முடித்தசங்கிலிகளாகக் ... *
காசுநெற்கதிர்களெல்லாங் கன்னசாமரைகள்காட்டத் ... *
தேசுவாய்க்கவளம்பெற்றுத் தேறுகட்பாகைச்சிந்தி ... *
வாசவன்களிறுபோல மருதம்வீற்றிருந்தமாதோ ... *

(இதன்பொருள்.)

ஒழுங்காய்மொய்த்துக்கொண்டிருக்கிற வண்டுக்கூட்டங்கள் சங்கிலிபோலவும், ரத்தினம்போலுநெற்கதிர்கள் சாமரைபோன்றனவாகவும் பிரகாசம்பொருந்த வளப்பம்பெற்று எங்கிற பொருளைச் சிலேடையாகக் கொடுக்கும் அழகிய வாயினாலே கவளம்பெறுதலாலும், பருவங்கொண்ட தேனாகிய அமிர்தத்தைச் சிந்தியென்னும் பொருளைக்கொடுக்கும் தேறித்தன்கண்ணிருக்கின்ற பாகனைத்தள்ளிக்கொல்லுதலாலும், தேவேந்திரன் ஏறுகின்ற அயிராவதமென்னும் யானைபோல் மருதநிலம் வீற்றிருந்தது—என்றவாறு. (௬௬)

(கலிவிருத்தம்.)

பண்ணூர்கமலப் பழனப்பதிநீங்கி ... ... *
மண்ணோர்போற்றும் வடவீதியிற்குறுகி ... *
பண்ணவமலையா னடிக்கமலஞ் சென்றுதொழ ... *
விண்ணூர்கொடிநெடுந்தேர் வீதிகளின்மேவினாள் ... *

(இதன்பொருள்.)

வண்டுகளிசைபாடாநின்ற தாமரைத்தடாகங்களுடைய மருதநிலத்தூரை விட்டுநீங்கிப் பூலோகத்தார் வணங்குகின்ற வடக்குவீதியிலெழுந்தருளி அருணாசலேசருடைய பாதாரவிந்தத்தைத்தப்போய் வணங்க ஆகாயத்தை அளாவியகொடிகளையுடைய தேர்களிருக்கும் கிழக்குவீதியில்வந்தாள் பார்ப்பதி—என்றவாறு. (௬௭)

[வேறு-கலிவிருத்தம்.]

நச்சுகோபுரத் துச்சிமேவிலோர் ... ... *
வச்சிரத்தினன் மதியின்மாசுபோம் ... ... *
வச்சமாமணி செம்மையாலினன் ... ... *
பச்சைமாவெலாம் பவளமாகுமே ... ... *

(இதன்பொருள்.)

யாவரும் விரும்பப்பட்ட கோபுரத்தினது சிகரத்தினருகில் சந்திரன் வரும்போது அக்கோபுரத்தி லிழைக்கப்பட்டிருக்கிற ஒப்பற்ற வச்சிரங்களினொளியினாலே தனதுகளங்கத்தை நீங்குவான். இன்னும் அக்கோபுரத்தி லிழைத்திராநின்ற மாணிக்கங்களுடையசிவந்தவொளியினாலே அதனருகில் வரும்போது சூரியன் இரதத்திற் கட்டிய பச்சைக்குதிரைகளெல்லாம் பவளக்குதிரைகளாகத்தோன்றும்—எ-று. (௬௮)

[illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *

(இதன்பொருள்.)

[illegible] (௪௯)

[illegible] ... *
[illegible] ... ... *
[illegible] ... *
[illegible] ... *

(இதன்பொருள்.)

[illegible] (௫௰)

(கலித்துறை.)

[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... ... *
[illegible] ... *

(இதன்பொருள்.)

[illegible] அருணாசலத்தில் [illegible] (௫௧)

[illegible] ... *
[illegible] ... ... *
[illegible] ... *
[illegible] ... *

(இதன்பொருள்.)

[illegible]

[illegible] கோடாகோடியென்றது [illegible] —என்றவாறு. ([illegible])

[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *
[illegible] கோடாகோடியே ... *

(இதன்பொருள்.)

[illegible] —என்றவாறு. ([illegible])

[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *
[illegible] கோடாகோடியே ... ... *

(இதன்பொருள்.)

[illegible] கோடாகோடி—எ-று. (௯௪)

[illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] கோடாகோடியே ... *

(இதன்பொருள்.)

[illegible] —என்றவாறு. ([illegible])

[illegible] ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *

(இதன்பொருள்.)

[illegible]

ளையும் பார்த்துச்சிறப்பையடைந்து அவ்விடத்தில் இராநின்ற கௌதமருடைய ஆசிரமத்தில் அம்மன்சேர்ந்தாள்—என்றவாறு. (௫௬)

அந்தவிடத்துமையாள்செல்லவகலிகையு ... ... *
மைந்தனும் வந்தேத்தினர் வாழ்த்திமறைக்கோதமனார் *
முந்துமுனியெவ்விடத்தேயென்றான்முனிபுதல்வன் *
தந்தைமலர்தருப்பைக்கொய்தியதுஞ்சாற்றினன் ... *

(இதன்பொருள்.)

அந்தக்கௌதமருடைய இடத்துக்கு அம்மன்போன உடனே அவருடைய பெண்சாதி அகலிகையும், பிள்ளையாகிய சதானந்தரும்வந்துபணிந்தார்கள். அம்மன் ஆசீர்வதித்துவேதங்களையுணர்ந்த முதன்மையான கௌதமரிஷி யெங்கேயிருக்கிறாரென்றுகேட்கச் சதானந்தனானவர் தர்ப்பைகொண்டுவருகிறதற்காகப் போனாரென்று சொன்னர்—என்றவாறு. (௫௭)

பின்னுமவனுரைப்பான்பேதமையேன்புன்குடில்வி .. *
கன்னன்முதே கணப்போ திருந்தருளி ... ... *
லன்னவனைக்கொணர்வேனென்றேபடிதொழுது...... *
வன்னையளித்தவன்பாற்சென்றான்சதானந்தன் ... *

(இதன்பொருள்.)

மறுபடியும் பார்ப்பதியைப்பார்த்துக்கரும்பஞ்சாறுபோன்றபார்வதியம்மையே அறியாமையுடையஎன்குடிசைவீட்டில் க்ஷணப்போது இருந்தால் என்தகப்பனாரைக்கொண்டுவந்து சேருகிறேன் என்று பாதங்களைத்தொழுது தன்னைப்பெற்றகௌதமரிடத்துக்குப்போனார் சதானந்தர்—என்றவாறு. (௫௮)

இங்கிவன்செல்போதிலிளந்தருப்பைகொய்துமுனி .. *
புங்கவர்கள்சூழ்ந்துவருமுனிவன்பூத்தலர்ந்து ... *
துங்கவனங்கற்பகம்போற்றோன்றுதலாலிந்தவனந் ... *
தங்கள்வனமல்லவென்றுசங்கையுற்றுநோக்கினான் ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் சதானந்தர் போகிறபோது இளமையாகிய தருப்பையைக்கொய்து அநேகமுனிவர்கள்சூழக் கௌதமர்வருகிறதுக்குமுன்னே இந்தஇடத்தில் எல்லாவிருட்சங்களும் புஷ்பித்துக் கற்பகவிருட்சம்போலக் காணுகிறபடியினாலே நம்முடையவனமல்லவே இதுயாருடையதோவென்று சந்தேகப்பட்டுப்பார்த்தார்—எ-று. (௫௯)

இத்தலத்தில்வந்தவராரொன்றுரைத்துமாதவற்குப் ... *
பத்துருவந்தந்தமுனியும்பராசானு ... ... *
மத்திரியுமப்புதுமை யாராயுமெல்லையிற்றன் ... *
புத்திரனைக்கண்டு வரவென்ன புகலென்றான் ... *

(இதன்பொருள்.)

இந்த இடத்தில்வந்தபெரியோர்கள் யாரென்று விஷ்ணுவுக்குப்பத்து தரம் பிறக்கச்சாபங்கொடுத்த பிருகுரிஷியும்- பராசரரும்- அத்திரி யென்பவரும் - அப்பு துமைவிசாரிக்குமிடத்தில் தம்முடையபிள்ளை சதானந்தனைக்கண்டு இவ்விடத்திலுண்டாகிய விசேஷம் என்னவென் றுகேட்டார்கெளதமர்—என்றவாறு. (௬௰)

(கலிவிருத்தம்.)

தாதையிவ்வகேளிறைவர் தங்களையளிக்குந் ... ... *
சோதியிவணெய்தின ளெனத்தொழுது சொன்னான் ...*
ஓதமறைதேடுமவ னைக்குடிலின்மேவற் ... ... *
கேதுதவமேதுதவ மேதுதவமென்றான் ... ... *

(இதன்பொருள்.)

சதானந்தரானவர் தன்தகப்பனாராகிய - கெளதமரைப்பார்த்து ஐயா, பிர்மாமுதலாகிய ஐவரையுந் தன்னிடத்திலுண்டாகிய தேஜோ மயமாகிய பராசத்தி யிவ்விடத்தில் வந்திருக்கிறாளென்று வணங்கிச் சொல்ல, நாதசொரூபமாகிய வேதங்கள்தேடுதற்கரிய அம்மை நம்மு டைய குடிசையில்வர என்னதவம்என்னதவம் செய்தோமென்றார் கௌதமர்—என்றவாறு. (௬௧)

ஓடினனணைத்துமக னுச்சியைமுகந்தா ... ... *
ஆடினன்மகிழ்ச்சியெனு மாழ்கடல்புகுந்தான் ... ...*
பாடினனெடுத்தகுசை பார்மிசையெறிந்தான் ... ... *
வீடினதுநந்தம்வினை வேரினுடனென்றான் ... ... *

(இ-ள்.) கௌதமர் இத்தவார்த்தையைச்சொன்ன சதானந்தரைக்கட் டியணைத்து உச்சிமுகந்துஓடினார், திருக்கூத்தாடினார், சந்தோஷமெ ன்கிற சமுத்திரத்திலாழ்ந்தார், பாடினார், தர்ப்பையைப் பூமியிலேயெ றிந்துவிட்டார். என்னுடையபாவம் வேருடனே கெட்டுப்போயிற்று என்றுசொன்னார்—என்றவாறு. (௬௨)

அத்திரிமுதற்றலைமை யந்தணர்களெல்லாங் ... ... *
கைத்தலமெடுத்தனர் நடித்தனர்களிப்பால் ... ... *
வித்தகியிருக்குமிட மேவியெதிர்கண்டார் ... ...*
பத்திவலையிற்படு பதங்களில்விழுந்தார் ... ... *

(இதன்பொருள்.)

அத்திரி ரிஷிமுதலாகத்தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம்இரண்டுகை களையுந் தலைமேல்வைத்துக்கூத்தாடினார்கள், சந்தோஷத்துடனேபார் ப்பதியிருக்கிற இடத்தைஅடைந்து எதிரேகண்டு பத்தியாகியவலையி லே அகப்பட்டுக்கொள்ளுகிற பார்ப்பதியினுடைய பாதத்தில்விழுந் து நமஸ்கரித்தார்—என்றவாறு. (௬௩)

நின்னிலைமைகன்னியிறை நீள்பிரமசாரி .. .. *
யென்னுமறையன்றுமுத லின்றுவரையெல்லா... ...*
முன்னிடையுதித்துல குயிர்த்தொகைகளெல்லார் ... *
மன்னையெனுமுன் பெருமை யாரறியவல்லார்... ...*

(இதன்பொருள்.)

தாயே நீயோகன்னிகை, சுவாமியோ நித்தியபிரமசாரி, என்றுசிருஷ்டி தொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாஞ் சொலலிக்கொண்டிருக்கின்றதுகள், அப்படியிருக்க - உன்னிடத்தில உலகங்களிலிருக்கின்ற எல்லாவுயிர்களுந்தோன்றித் தாயேயென்றுசொல்லும் அப்படிப்பட்ட உன்பெருமையை-யாரறியப்போகிறார்கள். எ-று. (௬௪)

நித்தனைமுதற்றருவை நித்தனதிடத்தே .. .. *
சத்தியெனநீவருவை சத்திசிவமென்றே... ... .. *
யித்தகைமைகொண்டுயிர்கள் யாவையுமளிப்பா ... *
யதுவிதமாகுமுனை யாரறியவல்லார்... ... ... *

(இதன்பொருள்.)

நித்தியமாகஇருக்கிற சிவனைஉண்டாக்குவாய், அந்தச்சிவனிடத்திலே சத்தியாகவருவாய், சத்திசிவமென்கிறதன்மையைக்கொண்டு உயிர்களையெல்லாம்பெறுவாய், அத்துவித சொரூபமாகிய உன்னை யாரறியப்போகிறார்கள்—எ-று. (௬௫)

மெய்ப்பொருண்மகேசனரன் வேதனரியாலும் ... *
மைப்பருமகேசியுமை வாணிதிருவாவை... ... ...*
யிப்படியுமன்றியவ னெப்படியெடுத்தா ... ... *
னப்படியுமாவையுனை யாரறியவல்லார்... ... ...*

(இதன்பொருள்.)

பரமசிவனானவர், மகேசுரர், ருத்திரர், பிர்ம்மா, விஷ்ணு, ஆதல்-நீமகேசுவரி, ரௌத்திரி, சரஸ்வதி, லட்சுமியாகிய சத்திகளாவாய்-இப்படியுமல்லாமல்- அந்தச்சிவன் எப்படிப்பட்ட உருவங்கொண்டாரோ-அதற்குத்தகுந்த உருவங்கொள்வாய் உன்பெருமையை யாரறியவல்லவர்கள்—என்றவாறு. (௬௬)

நெஞ்சுருகிமாதவர்க ணின்றிவைபுகழ்ந்தார்... ... *
வஞ்சியிடைகோதமனும் வந்தனன்வரும்போ... ...*
தஞ்சலிபுரிந்தண னதற்குமுனமேமின் ... ... , *
கஞ்சமலரொன்னவிரு கால்களில்விழுந்தான்... ... *

(இதன்பொருள்.)

மகாதவத்தையுடைய ரிஷிகளெல்லாம்- நெஞ்சமுருகிநின்று இப்படி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அந்தச்சமயத்தில் பார்ப்பதி சமீபத்தில் கௌதமர்வரும்போதே இரண்டுகைகளையுந்தலையிலேவைத்

துக்கூப்பித் தாமரைமலரையொத்த அம்மனது இரண்டுபாதத்தில் நமஸ்கரித்தார்—எ-று. (௬௭)

அன்பிலுயர்கோதமனு மன்னையைவணங்கி ... ... *
யின்புறவுரைப்பனய னெண்டிசைபுரப்போர் ... *
தன்சுரமிதிக்கரிய தாளிணைகளின்றென் ... ... *
புன்குடின்மிதிக்கவென புண்ணியமுடித்தேன்... *

(இதன்பொருள்.)

பத்தியினாலேஉயர்ந்த கௌதமரிஷியும் பார்ப்பதியம்மனை வணங்கிச்சொல்வார். பிர்ம்மா-அஷ்டதிக்குப்பாலகர் சிரசிலே கூடவைத்தற்கு அருமையானபாதமிரண்டும் அடியேனுடைய புன்மைபொருந்திய சிறுவீட்டில் மிதிக்க என்னபுண்ணியஞ்செய்தேன் எ-று.(௬௮)

இந்தமொழிசொற்றலு மிளங்கொடியும்வேலன் ... *
றந்தியிடைசென்றிடுவ னங்கதுதவிர்த்தால் ... ...*
சிந்தைமகிழுன்னிடையில் வந்துகுறைதீர்வேன் ... *
மைந்தனெனவோதினன் மறுத்துமிவைசொல்வாள்... *

(இதன்பொருள்.)

இந்தவார்த்தையைச் சொன்னஅளவில் இளமையாகியகொடிபோன்ற அம்மையும், பிள்ளையாகிய கௌதமனே? எனக்கோர்குறைவந்தால் சுப்பிரமணியனிடத்திலும், கணபதியிடத்திலும்போய்த் தீர்த்துக்கொள்வேன். அவ்விடம்விட்டால் என்பேரில் அன்புவைத்த உன்னிடத்தில்வந்து தீர்த்துக்கொள்வேன் என்றுசொல்லி மறுபடியுஞ் சொல்வாள்—எ-று. (௬௯)

நாயகன்மொழிந்திட நடந்தபடியெல்லாம் ... ...*
பாயிரமெனும்படி பகர்ந்தனளெவர்க்குந் ... ... *
தாயிவைமொழிந்தள வினிற்சதமகற்கன்... ... *
றாயிரம்விழித்திர ளளித்தமுனிசொல்வான் ... .. *

(இதன்பொருள்.)

பரமசிவனவர் சொன்னபடி பூமியில்வந்து தானடந்தசமாசாரமெல்லாம் பாயிரத்தோடுகூடிய நூல்போல முறையாகவிரித்து எவருக்குந்தாயாகிய பார்ப்பதி சொன்னபோது முன்காலத்தில் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்ணுண்டாகச்செய்த கௌதமர்சொல்வார்—எ-று. (எ௰)

இத்தலமுதற்றல மிதன்பெயர்தலேச்ச... ... *
முத்தமமிதிற்றரும மொன்றுபலவாகும்... ... *
மெய்த்தவமியற்றதனில் வெள்விடையின்மேல்வந் .. *
தத்தனுமிடப்புற மளித்தருளுமென்றான்... ... *

(இ-ள்.)இந்தத்தலம் முதன்மையானஸ்தலம்-இதனுடையபேர்தலேச்சுரம்-இதுமிகவுமுத்தமமான து இதில்ஒருபுண்ணியத்தைச்செய்தால்

ஒன்றுபலவாய் விருத்தியாகும், இதிலிருந்துகொண்டு நீமெய்மையா கிய தவசுசெய்தால் வெண்மைபொருந்தியரிஷபவாகனத்தின்மேலெ ழுந்தருளியபரமசிவன்உனக்குஇடப்பாகங்கொடுப்பாரென்றார்கௌ தமர்—எ-று. (எக)

மாலயன்வசுக்கண்மக வான்முனிசணத்தோர்... ...*
சாலேகள்சமைத்ததில் தனித்தவமுடித்தார் ... *
காலமிடனன்றுசெயல் கைப்பலமிதென்றான்... *
மூலமுதல்வல்லியு முடிப்பணிதும்வன்றாள்... *

(இ-ள்.) வாராய் அம்மையே?விஷ்ணு-பிர்ம்மா-அஷ்டவசுக்கள், தே வேந்திரன் அநேகமுனிவர்கள் அவரவர்கள் இடஞ்செய்துகொண்டுஒ ப்பற்ற தவஞ்செய்து நினைத்தகாரிய முடித்துக்கொண்டார்கள். நீவந் தகாலமு மிடமு நன்மையாகும், இவ்விடத்தில் நீ தவஞ்செய்தால் கைப்பலமாகிமுடியுமென்று கௌதமர்சொல்ல, எல்லாப்பொருளுக் குமூலமாகியஅம்மனும் தவசுசெய்து என்கருத்லைத முடித்துக்கொள் ளுகிறேனென்றாள்—எ-று. (எஉ)

(எண்சீரடியாசிரியவிருத்தம்.)

கோதமனேமுதலாயமுனிவர்க்கெல்லாங்குளிர்ந்தமொழிபகர்ந்து விடைகொடுத்துச்சோண, பூதரமாமதன்குணபாற்பன்னசாலே புதித மைப்பித்தகமகிழ்ந்துபுறம்புகாக்க,மாதரொழுவனாயமைத்துநாலுபா லின் வாயிலேயெண்வயிரவர்கண்மகிழ்ந்துகாக்க, வாதரவினிறுத்திமை ந்தர்மருங்குகாக்க வந்தரியுட்புறங்காக்கவமைத்தாண்மன்னே ... *

(இதன்பொருள்.)

கௌதமர்முதலான முனிவர்களுக்கெல்லாம் பிரியவசனஞ்சொ ல்லி உத்தரவுகொடுத்து அருணாசலஸ்தலத்துக்குக்கிழக்குப்பக்கத்தில் பன்னகசாலே புதிதாகச்செய்வித்து மனங்களித்துச் சத்தமாதர்களேப் புறக்காவலாகவைத்து நான்குவாசலேயும்-எட்டுவயிரவர்கள்காக்கவும்,வி நாயகர் சுப்பிரமணியர் தன்இரண்டுபக்கமுங்காக்கவும், துர்க்கைஉட்ப க்கங்காக்கவும், செய்தாள்பார்ப்பதி—எ-று. (எா)

கொந்தளகஞ்சடைபிடித்துவிரித்துப்பொற்றோட் குழைகழுத்திற் கண்டிகையின்குப்பைபூட்டி, யந்துமரவுரிநிகர்பட்டாலட நீக்கி யுரித் தமர வுரிசாத்தியுத்துளத்தால், விந்தைதிருநீறணிந்துகனத்துட்காய்ந் துவிளங்கு மூசியினெருகால்விரலேயூன்றி,அந்திபகலிறைபதத்தின்ம னதையூன்றியரியபெருந்தவம்புரிந்தாளகிலமீன்றாள்................*

(இதன்பொருள்.)

புஷ்பங்களேத்தரிக்கின்ற கூந்தலேச்சடைசெய்து விரித்துத்தோ ள், கழுத்துகாதுகளில் ருத்திராட்ச மாலேகளேத் தரித்து - ஆடைஇன்து

பாம்புரிபோலிருக்கிற பட்டாடையுடுத்துகிறதுவிட்டு மரவுரிதரித்து ஜெயத்தைக்கொடுக்கின்ற விபூதியைச்சர்வாங்கமுந்தரித்து-நெருப்பி லேகாய்ந்து பளபளவென்று பிரகாசிக்குமூசியிலொருகாற் பெருவிரலை யூன்றிக்கொண்டு இராப்பகலாக மனதிலே பரமசிவனைத்தியானமாகநிறுத்தி- அரிதாகிய பெரியதவத்தைச் செய்தாள் உலகத்தைப்பெற்ற பார்ப்பதியம்மன்—எ-று. (எச)

இளைத்தகொடி மருங்குவளைந்தெரியிருப்ப வினியதவ மியற்றுதல்கண் டிளைத்துவாடிக், களைத்துமனந்துடித்துவிழி புதைத்துவாணி கண்ணீரின் மூழ்கினின்றாள் கமலத்தாளு, முளைத்துமனந் தளர்ந்தழுதுவிழுந்தாண்மற்றை யுயிர்களெல்லாங் கரைந்துகரைந்துருகாநின்ற, வளைத்துவளைத் துரைப்பதென்றாய் வருந்துமாறுல் வயிற்றினுள்ள கருப்பமெல்லாம் வருந்திடாதோ... ... ...*

(இதன்பொருள்.)

மிகவுஞ்சிறிதாகிய கொடிபோன்ற இடையானதுவளைந்து அக்கினிமத்தியிலே இனிமையானதவத்தைச் செய்கிறதைப்பார்த்து இளைத்து வாட்டத்தையடைந்து களைத்து மனதுதுடித்து இரண்டு கண்களையு மூடிக்கொண்டு சரஸ்வதியானவள் கண்ணீரால் உடம்பெல்லா மூழ்கினாள், லட்சுமியானவள் மனதுவருந்திச் சஞ்சலப்பட்டு அழுதுவிழுந்தாள், மற்றச்சீவராசிகளெல்லாம் மனங்கரைந்துகரைந்து உருகியதுகள், நானிதைப் பிரித்துச்சொல்வதனால் என்னபயன். தாயானவள் வருந்துவளாயின் வயிற்றிலுள்ளகருவாகிய சீவனெல்லாம் வருத்தத்தையடையாதோ—எ-று. (எரு)

முன்பனியிற் கருகுபடாக் கமலம்போல முகந்தோன்றப் பனிக்கயத்துண் மூழ்கிநிற்கும், பின்பனியிலதிசீத விடத்திற்சேரும் பெருமழைக்குண் மீனெனப்பேணிநிற்கு, மன்பனிடம்பெறுமளவுமதுபோல்வேண்டு மரியதவப்புரிந்தனளவ் விடத்துவேதன், வன்பணியிற்றுயினெடுமான் முதலாந்தேவர் மறைபுகுந்த தவச்சாலை மருங்கிற்சார்ந்தார். ... ... *

(இதன்பொருள்.)

முன்பனிக்காலத்திலே கருகிப்போகாத தாமரைப்பூப்போல்முகமாத்திரந்தெரியக் குளிச்சிபொருந்திய தடாகங்களிலேநின்றும்- பின்பனிக்காலத்திலே அதிகசீதளம்பொருந்திய இடத்திலேயிருந்து மழைபெய்கிறபோது அதில்ஒருமீன்போலச் சஞ்சலப்படாதுநின்றும் பரமசிவ னிடப்பாகத்தைப் பெறுகிறவரைக்கும் வேண்டியதவத்தைச்செய்தாள். அந்தவிடத்தில்பிரம்மதேவனும் வலியசர்ப்பத்தில்நித்திரைசெய்கின்ற விஷ்ணுமுதலாகிய தேவர்களும் வேதகோஷிடம் பொருந்திய தவச்சாலையவர்த்து அடைந்தார்கள்—எ-று. (எசு)

அந்தரியுமாயவனூர் முதலாந்தேவ ரனைவருக்குமுபசார மளித்து நீங்கள், வந்தவரவியம்புமென மகிடனாலே வருந்தியதுந் தளர்ந்ததுவும் வகுத்துச்சொன்னார், சுந்தரியுங்குமரியுடன் சுடரும்வாளாற் செருடுதளத்தின்மகிடனுரந் தொலைப்பாயென்றாள், விந்தையது புரிவனெனப் பணிந்தாளன்னை விளம்புதல்கண் டகமகிழ்ந்து விடைகொண்டாரே. ... ... *

(இதன்பொருள்.)

பார்ப்பதியானவள் விஷ்ணுமுதலாகியதேவர்கள் எல்லாருக்கும் உபசாரஞ்சொல்லி நீங்களிவிடத்துக்கு வந்தவகைசொல்லுங்களென்று கேட்க, அவர்கள் மகிடாசுரனாலே தாங்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சியடைந்தவகை விவரமாகச் சொன்னார்கள். அதற்குப் பார்ப்பதியானவள் துர்க்கையைக்கூப்பிட்டுநீ-கத்தியினாலே யுத்தகளத்திலேமகிடாசுரனை வல்லமைகெடக்கொன்றுவிடென்றுசொன்னாள், அதற்குத் துர்க்கை அப்படியேசெய்வேனென்று பணிந்தாள், தாயாகிய பார்ப்பதி இந்தவார்த்தையைச்சொன்ன அளவில் விஷ்ணு முதலானவர்கள்சந்தோஷித்தையடைந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டார்கள்—என்றவாறு. (எஎ)

(கலிவிருத்தம்.)

கோதமாச்சிர மந்தனிற்கோல்வளை ... ... *
தீதிலாத்தவஞ் செய்ததுசெப்பினேன் ... ... *
மோதிமாமுகற் காய்ந்ததும்வெள்விடைச் ... ... *
சோதிபாகமடைந்ததுஞ் சொல்லுவேன் ... ... *

(இதன்பொருள்.)


சத்திதேவியானவள் கௌதமருடைய ஆசிரமத்தில் குறைவில்லாத தவத்தைச்செய்ததும் சொன்னேன்-பிற்பாடு மகிடாசுரனைக்கொன்றதும்- ரிஷபவாகனத்தையுடைய சிவனுடைய இடப்பாகத்தை யடைந்ததுஞ் சொலவேன்—என்றவாறு. (எஅ)

நான்காவது

திருக்கண்புதைத்தசருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம்—௩௱௩௰



சிவமயம்.

பாகம்பெற்றசருக்கம்.

(அறுசீரடி ஆசிரிய விருத்தம்.)

அஞ்சனக்கிரியில்வாழு மசுரன்றன்னோர்க்குந்தீர……… *
னஞ்சமேயனையானந்தநமனுக்குநமனாய்வந்தோன் …*
செஞ்சிகையெரியைத்தீக்குந் தீமையானளகைநாட்டின் *
விஞ்சையான்வருந்தவுள்ள வளமெலாங்கவர்ந்தவீரன் *

(இ-ள்.) நீலகிரியில்வாசஞ்செய்துகொண்டிருக்கிற அசுரனானவனெல்லாரிலும்அதிகபராக்கிரமத்தையுடையவன், விஷத்தினுக்குச் சமானமானவன், அந்த-யமனுக்கும் யமனானவன், சிவப்பாகி மேலேயெழுகின்ற கொழுந்தையுடைய நெருப்பைச்சுடத்தகுந்த தீமையையுடையவன், அளகாபுரியில் குபேரன் தரித்திரத்தையுடைய அங்கேயிருக்கிற வளங்களெல்லாம் கொள்ளையிட்டவன்—என்றவாறு. (க)

தாமரைக்கண்ணன்றாங்கு மரவினைத்தலைவால்கூட்டி … …*
மாமணிக்கவண்போற்கொள்வன் வன்னிவாகனத்தைவாங்கி
வேழமிற்குஞ்சிமைந்தர்க் குதவுவன்விமானத்தோடே
சோமனைப்பிடித்துக்கையாற் பிழிந்தமுதருந்துஞ்சூரன் … *

(இதன்பொருள்.)

விஷ்ணு நித்திரைசெய்கின்ற ஆதிசேடனைத் தலையையும்-வாலையும்-ஒருகையினாலேசேர்த்துப்பிடித்துக் கவணாக அந்தவிஷ்ணுவைக் கல்லாக்கித் தூரத்தேயெறிந்து விளையாடுவான், அக்கினியைத்தள்ளிவிட்டு அவனேறுகின்ற ஆட்டை நெருப்பைப்போலச் சிவப்புமயிரையுடைய தன்பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப்பான், சந்திரனை அவனேறுகின்ற விமானத்தோடே கையினாலே பிடித்துப்பிழிந்து அவன் உடம்பிலிருந்துவருகிற தேவாமிர்தத்தைப் பானம்பண்ணுகிற சூரன்—என்றவாறு. (உ)

கருதீபமகவான்வெள்ளைக் களிற்றின்மேற்றிரிவன்பின்னைப் · *
பரிதிதேரகனிற்பச்சைப் பரிசெலப்பவனிபோவா ..... *
னிருதியைச்சுமக்கும்பாளி யேறுவனினத்திற்றூக்கிக் ... *
குருதிகொப்பளிக்கும்வாளொன்றெடுத்துயிரனைத்துங்கொல்வான்

(இதன்பொருள்.)

உயர்வாகநினைக்கப்பட்ட தேவேந்திரனுடைய வெள்ளையானைமே லேறுவான், சூரியனுடையதேரிலேறிக்கொண்டு பச்சைக்குதிரைகளை யும்நடக்கப் பவனியாகப்போவான், நிருதியைச்சுமக்கின்ற பேய்வா கனத்தி லேறிக்கொள்வான், நிணங்களாலேமூடப்பட்டு ரத்தங்களை க்கொப்பளிக்கும் ஒரு வாளாயுதமெடுத்துச் சர்வத்திர சீவன்களையுங் கொல்வான்—என்றவாறு. (௩)

அன்னவன்மகிடமான வாற்றினலஞ்சிக்காலத் ... ... *
தென்னவன் மகிடமேறான் காலினாற் றிரிந்தானென்றா ... *
லென்னவன் கொடுமைநம்மா லியம்பலா மிலங்குஞ்சோதி *
மன்னவன்கிரியைச்சாய்த்தான் மீனுக்காவாரிதூர்த்தான் ...*

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட அசுரன் எருமைமாட்டுமுகத்தையுடையவனானப டியினாலே தெற்குத்திக்குலிருக்கின்ற யமனானவன் எருமைக்கடாவி லேறாமற் காலினால் நடந்துதிரிந்தானென்றால், அந்தமகிடாசுரனுடை ய கொடுமைநம்மாலெப்படிச் சொல்லக்கூடும், சோதிசொரூபமாகி ய சிவனிருக்கின்றகயிலாயத்தையுஞ் சாயச்செய்தான், மீன்வேண்டி யதற்காகச் சமுத்திரத்தையுந்தூர்த்தான்—என்றவாறு. (௪)

மயனெனுந் தச்சன்செய்த மகிடமாபுரத்திலன்ன ... *
னயனறுகரிசிநல்க விருக்குநாளவனுக்காய ... ... *
பயனுறு நுகர்ச்சிவேண்டி யாயிரம்படைக்கையாளர்...*
கயமுதல்விலங்கைநாடி வேட்டையாக்கானிற்சென்றார் *

(இதன்பொருள்.)

மயனென்கிறதேவதச்சனால்ரத்நகசிதமாகச்செய்யப்பட்ட மகிடபு ரத்தில் அந்தஅசுரன் பிரம்மாவானவர்நித்தியம், அறுகும், அட்சதையுங் கொடுக்க- வாழ்ந்துகொண்டிருக்கிறநாளையில்-அந்தஅசுரன் தின்னு கிறமாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம்பேர்கள்-யானைமுத லான மிருகங்களைத்தேடி வேட்டைமார்க்கமாகக் காட்டுக்குப்போனார் கள்—என்றவாறு. (௫)

தானவர்சென்றுவந்தேசி தவஞ்செய்கானகத்தைச்சூழ ... *
வானவர்பணியுமட்டவயிரவர்தொலைத்தாராவி ... ... *
போனவரழிந்தவாறும் புரிகுழறவமுந்தூத ... ... *
தானவரவுணர்கோவுக் கடிபணிந் தறிவித்தார்கள் ... *

(இதன்பொருள்.)

அப்படி வேட்டையாக ஆயிரமசுரர்களும் பார்ப்பதிதவஞ்செய்து கொண்டிருக்கிற வனத்தைச்சுற்றிக்கொள்ள அதைக்கண்டுதேவர்கள்பணிகின்ற காவலாக இருந்த அஷ்டவயிரவர்களும் அந்த ஆயிரம்பேர்களையுங் கொன்றார்கள். அவர்கள் இறந்துபோனதும் அம்மன்தவசுபண்ணுகிறதும் பாதத்தைவணங்கித் தூதர்கள்மகிடாசுரனுக்குத்தெரிவித்தார்கள்—எ-று. (௬)

போற்றியங்கவர்கள்சொல்லப்புகைநகைபிறந்ததங்கி ... ... *
தூற்றியவிருகணண்டகோளமுஞ்சுழன்றதங்கே ... ... *
நாற்றிசையின்வேழநடுங்கியதிமையோர்கூட்டம் ... ...*
கூற்றமுங்கரந்ததாலகாலனுங்குளிர்ந்ததன்றே ... ... *

(இதன்பொருள்.)

தூதர்கள்வணங்கித் தெரிவித்த அளவில் புகையுண்டாகும்படி கோபநகையுண்டானது. இரண்டுகண்களும் நெருப்புக்களைப் பறக்க வீசினதுகள். அண்டகோளமும் கிறுகிறென்றுசுழன்றது. அஷ்டதிக்கிலிருக்கின்றயானைகளும் தலையைத் தொங்கப்போட்டதுகள் தேவர் கூட்டம் நடுக்கத்தை யடைந்தது. யமனும் ஒளித்துக் கொண்டான். ஆலகாலவிஷமும்குளிர்ச்சியை யடைந்தது—எ-று. (௭)

அப்படிமகிடன்சீறுமளவினிலிரும்பனென்போன் ... ... *
செப்பிடுமுனதுகோபம்பொறுப்பமோசிறியரொன்றே... ... *
முப்புடையிளநீரொன்னுமுலைச்சிவாழ்வனத்துளாளைக் ... *
கைப்படையதனாற்கொல்வேனெனச்சொலிக்கடிதுபோனான் ... *

(இதன்பொருள்.)

அந்தப்பிரகாரம் மகிடாசுரன் கோபிக்குமளவில் நிரும்பாசுரனென்கிற படைத்தலைவன் வாருமையாராஜனே, உம்முடையகோபத்தை அற்பமாகியவர்களா பொறுப்பார்கள் என்று சொல்லித் தென்னிளநீர்ஒத்த தனத்தையுடைய பார்ப்பதிதவஞ்செய்கின்ற வனத்திலிருப்போளைக் கையிலிருக்கிறவாளால் கொன்றுவருகிறேனென்று சீக்கிரத்தில்புறப்பட்டுப்போனான்—எ-று. (௮)

குடதிசைக்கடலைச்சீறிக்குணதிசைக்கடல்சென்றென்ன ... ...*
நெடியதேர்கரிமாசேனையெழுந்தனநிரும்பனென்போன்... *
வடகிரிதனக்குங்கும்பமாமுனிமலைக்கும்நேரோ ... ... *
இடையொருகரியமேருவெழுந்ததாமென்னச்சென்றான் ... *

(இதன்பொருள்.)

மேற்குச் சமுத்திரத்தின்மேற் கோபித்துக் கிழக்குக்கடல் சண்டைசெய்யப் புறப்பட்டதுபோல் பெரியதேர்களும் யானைகளும் குதிரைகளுங் காலாள்களும் புறப்பட்டதுகள் நிரும்பாசுரனென உன்ம

காமேநவுக்கும் அகஸ்தியரிருக்கின்ற பொதியமாமலைக்கு மத்தியிலே நிறைந்த ஒருபெரியமேகப்பெழுந்ததென்றுசொல்லும்படியாகப்போனான்—எ-று. (௯)

(வேறு-அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

எழுந்தவனுமரகதநேர்துரகதமாயிரம்பூண்டவிரதமேறி, வழிந்தக
ரிமதக்கடலையெழுந்ததுகளடக்கவைவனத்திற்சென்றான், கொழுந்து
விடுங்கனலனையார்வரவுகண்டுபலகோடிகுன்றம்வீசித், தழைந்தபடை
த்தாக்கணங்குநோக்கணங்கும்பொருதெதிரேதடுத்தாரன்றே... ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் நிசும்பாசுரன் பச்சைக்குதிரை யாயிரம் கட்டிய தேரிலேறிக்கொண்டு அப்பொழுது எழும்பிய சிறுஅணுக்கள்முன் போகாநின்றயானைகளின் மதசலம் சமுத்திரமாகத் தேங்கியிருப்பதை வற்றச்செய்ய- பார்ப்பதிதவஞ்செய்யும் வனத்திற்சேர்ப்போனான். கொழுந்துவிட்டெரிய நெருப்பொத்த அசுரப்படைகள் அநேகமலைகள் விட்டெறிய இவர்கள்வருகிறதுகண்டு அம்மனிடத்தி லிருக்கிற தாக்கணங்கு நோக்கணங்கு என்னுமிருவரும் ஆயுதபாணிகளாகப்போய் எதிரேதடுத்தார்கள் — எ-று. (௰)

சண்டனுருத்திரன்சோமன்கபாலிநிகர்சங்கரன்கோதண்டன்வீத *
னெண்டரியசித்திராங்கதனென் னும் வயிரவர்களிருநால்வோரு ...*
மண்டமுகபடையநகைத்தானைகளைத்தொலைத்திட்டவரிகள்போலக் [ர்
கண்டகனுஞ்சாரதியுந்தேருமன்றிச்சேனையெல்லாங்கணத்திற்சாய்த்தா

(இதன்பொருள்.)

சண்டன், ருத்திரன், சோமன், கபாலி, தனக்குத்தானே ஒத்த- சங்கரன், கோதண்டன், வீதன், சித்திராங்கதன், இந்தஎட்டுவயிரவர்களும் அண்டகோளமுடைய யானைகளைக்கொல்லுகின்றசிங்கங்கள்போலக்கர்ச்சித்து நிசும்பாசுரனும் அவனுடையசாரதியும் தேருந்தவிரமற்றைச் சேனைகளையெல்லாம் நொடிப்பொழுதிலே கொன்றார்கள்— என்றவாறு. (௰௧)

அட்டவயிரவர்படையாலனங்குகளாற்றனதுபடையழிதனோக்கி. *
வட்டநெறிந் தேர்முடுக்கித் தாக்கணங்கின்முகத்திலெண்ணி னிவ்வாளி
கோத்தான், விட்டகணைகளைவிலங்கித்தேருருட்டுஞ் சாரதியைவீழ்த்தி
வாளி, தொட்டகரங் களைப்பிடுங்கி யவனுயிரைக் குடித்த தந்தச் சூர
மாது. ... ... *

(இதன்பொருள்.)

எட்டுவயிரவர்களுடையஆயுதங்களினாலும்இரண்டுபெண்களாலும் தன்னுடைய படைமுழுதும் இறந்து போகின்றதைப் பார்த்து

நிருப்பாசுரன் வட்டமாகிய நெடியதேரைவிட்டுக்கொண்டு தாக்கணா ங்கென்பவனுடைய முகத்திலேகணக்கில்லாத பாணங்களை விட்டான். அந்தப்பாணங்களை விலக்கித் தேர்நடத்துகிற சாரதியைக்கொன்று அம்புதொடுத்த கைகளை அறுத்து அவனுடைய தலையையறுத்துக்கொன்றான் தாக்கணாங்கு—எ-று. (௰௨)

ஓடினசெங்குருதிநதி யுடலிழந்துவிடுமவுணருயிர்கள்போல, வாடினவெங்குறைத்தலைகளனுதினமுமருந்துகின்ற வலகைபோலச், சூடினர்கள்வயிரவருந் தாக்கணாங்குநோக்கணாங்குந் துப்பைவாகை, வீடினர்களவுணரெனமகிடமுகற்குரைத்தனர்போய் விரைந்துதூதர் *

(இதன்பொருள்.)

வயிரவர்களாலும் இந்த இரண்டுபேர்களாலும் தேகமறுபட்டுச் சீக்கிரத்திற்போகும் அசுரருயிர்போய் ரத்தநதியாணது ஓடியது, கவந்தங்கள் கூத்தாடியதுகள், நித்தியம் மாமிசத்தைத்தின்றுகூத்தாடுகிறபேய்ப்போல வயிரவர் முதலாகியவர்கள் தும்பை வாகைமாலை சூடிக்கொண்டார்கள், அசுரர்களிறந்துபோனார்களென்று மகிடாசுரனுக்குத்தூதர் சீக்கிரத்திற்போய்ச்சொன்னார்கள்—என்றவாறு. (௰௩)

கேட்டளவின்மகிடமுகன் கயிடவன்றன்முகநோக்கிக் கிளர்த்துவானேர், காட்டிலுறைசிறும்பயுங் கணங்களுநம்பெரும்படையைக் கடிந்தவென்றால, நாட்டனுதலபனரியு மெனக்கினிமேற் றிரைகொடுக்க நாணுவாரென், நீட்டிநகைபுரிந்தெழுந்தா னெறிணுயிரங்களிறுபூண்ட, தமீதில... ... ... *

(இதன்பொருள்.)

மகிடாசுரன் இந்தவார்த்தையைக்கேட்ட அளவில் தன்னருகிலிருக்கும் கயிடவன்முகத்தைப் பார்த்துச் சொல்வான், ஒருகாட்டிற் சஞ்சரிக்கின்ற சிறியபேய்களுங்கணங்களும், நம்முடைய பெரியசேனைகளைக் கொன்றதுகளென்றால், சிவன், பிரம்மா, விஷ்ணு, முதலானவர்கள் சொன்னபடி கேட்பார்களென்று அதிகமாகிய நகைகொண்டு எழுந்திருந்து ஆயிரம்யானைகளைக்கட்டிய தேரிலேறிக்கொண்டான் - எ-று.

(அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

பதினொருகோடியானைப்பலத்தராங்காந்தனீலன் ... ...*
முதுகரன்குருதியண்டனீசகஞ்சண்டன்மூண்டவ... *
மதுகயிடவன்றீக்கண்ணன்புகைக்கணன்மாலயன்றூந் *
துதிகொளாதிரண்டுபேருந் தேர்களைத்தூண்டிச்சென்றார்.

(இதன்பொருள்.)

மகிடாசுரன் தேரிலேறினவுடனே பதினொருகோடி யானைப்பலத்தையுடையவராகிய- நீலன், மூதுகரன், குருதி, அண்டன், நீசகன், சண்டன், முண்டன், மது, கபிடவன், தீக்கண்ணன், புகைக்கண்ணன், மாலியென்று துதிக்கப்பட்ட பன்னிருவரும் தங்கள் தங்கள்ரதங்களை நடத்திக்கொண்டு போனார்கள்—எ-று. (௰௫)

கரிமுகத்தவர்நிவாதகவசர்கள்காலகேயர் … … *
பரிமுகத்தவுணர்மேதிப் பணைமுகத்தவர்கள்பற்றி …*
எரிமுகத்தவுணர்சீறியெழூஉப்புலிமுகத்துக்கள்வ … *
ரரிமுகத்தவுணர்வெள்ளவாயிரஞ் சென்றவன்றே … *

(இதன்பொருள்.)

யானைமுகத்தையுடையவர்கள்-நிவாதகவசர்கள்-காலகேயர்களுள்-திரைமுகத்தையுடையவர்கள்-எருமைமாட்டுமுகத்தையுடையவர்கள்-நெருப்பெரிந்துகொண்டிருக்கிற முகத்தையுடையவர்கள். புலிமுகத்தையுடையவர்கள்-சிங்கமுகத்தையுடையவர்களாகிய அசுரர்கூடிய ஆயிரம்வெள்ளம் நடந்ததுகள்—எ-று. (௰௬)

பாய்பதியதனிற்பாதி பரிகளிற்கரிகள்பாதி … … *
சாய்மரியதனிற்பாதி கடும்பரிக்கொடுந்தேர்செல்லப்…*
பேய்கருங்கொடிகளாடப் பிணங்கிவெண்கொடிகளாட *
வேய்களப்பறைகளார்ப்பக் குறுகினன்விந்தைகானில்.. *

(இதன்பொருள்.)

அப்படி ஆயிரம்வெள்ளம் காலாள்புறப்பட்டவுடனே ஐந்நூறுவெள்ளம் குதிரையும் இருநூற்றைம்பதுவெள்ளம்யானையும் நூற்றிருபத்தைந்துவெள்ளம் தேரும்நடக்கப் பேய்களும் காக்கைக் கூட்டமும் விருந்தகப்படுமென்றுகளிக்கத் துவண்டுகொண்டு வெள்ளைக்கொடிகளாடப் புள்ளாங்குழல் பேரிகை முதலானதுகள் முழங்க மகிடாசுரன் அம்மனிருக்கிற காட்டில்வந்துசேர்ந்தான்—எ-று. (௰௭)

அடலவன்வரக்கண்டஞ்சி யடைந்துமக்கபயமென்று…*
படருறுமுனிவர்கூற வுமையவள்பயங்கடீர்த்து … *
விடலுடனருகுநின்ற விந்தையை விருப்பிநோக்கித்… *
கடகங்கொண்டடுவாயென்றுள்விடைகொடுபெயர்ந்தாள்கன்னி

(இதன்பொருள்.)

வல்லமைபொருந்திய மகிடாசுரன் வரப்பார்த்துப் பயப்பட்டு ஓடிவந்து பார்ப்பதிக்கு அபயமென்று முனிவர்கள் முறையிட்டுச்சொல்ல, அம்மனானவள் அவர்களுடையபயங்களைத்தீர்த்துபெருமைபொருந்திய தன்சமீபத்தில்நின்ற துர்க்கையைப்பார்த்து உன்னுடைய கத்தியினாலே அந்த அசுரனைக்கொன்றுவிடென்றுசொல்ல உத்தரவுபெற்றுப் புறப்பட்டாள். துர்க்கை—என்றவாறு. (௰௮)

யாளிமேற் கன்னிசெல்ல வருணை நாயகிமுன் செல்லக் ... *
காளி துந்துமிபின் செல்லச் சுந்தரிகணங்கள் செல்ல... ... *
ஞாளிமேல் வடுகர்செல்ல நான்முகிமுதலாமாதர் ... ...*
தூளிமேற்செல்லத்தங்கள் விடையின்மேற்றூசிச்சென்றார் ... *

(இதன்பொருள்.)

துர்க்கையானவள் யாளிவாகனத்திலேறிக்கொண்டுபோக, அருணை நாயகியென்பவள் முன்னேபோகவும், காளி, துந்துமி என்கிற இருவரும் பின்னேபோகவும், பார்ப்பதியினது கணங்களும் - சுவானவாகனத்தில் வயிரவரும்போகவும், அபிராமிமுதலாகிய மாதரெழுவரும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிக்கொண்டு தூசிப்படையாகத் துகளெழும்பப் போனார்கள் — என்றவாறு. (௰௯)

சென்றுதோமரத்திற்குன்றிற் சிலைகளிற்படையிற்கையிற் ... *
கன்றியமகிடன்சேனைபாதியைக் கணத்திற்சாய்த்தார் ... *
வன்றிறன்மகிடன்சேனைத் தலைவருமகிடன்றானுங் ... ...*
குன்றெனவெதிர்ந்துகன்னி படையெலாந்துரத்திச்சென்றார் ... *

(இதன்பொருள்.)

இப்படித் துர்க்கைசேனைகள் போனவுடனே உலக்கையினாலும், மலைகளாலும், வில்முதலாகிய ஆயுதங்களாலும், கைகளினாலும், கோபத்துடனே போர்செய்கிற மகிடாசுரனுடைய பாதிச்சேனையை ஒருநொடிப்பொழுதிலே கொன்றுவிட்டார்கள், மகிடாசுரனும் அவனுடைய சேனைத்தலைவர்களும் மலைபோலெதிர்த்து துர்க்கையின்சேனைகளையெல்லாந் துரத்தினார்கள் — என்றவாறு. (௨௰)

துந்துமிமுதலா நாலவ ரிடைந்தனர்சூலிநீலக்... ... ... *
கண்டிவராகியாறுமுகத்தவ டிகிரிக்கையா... ... ...*
ளிந்திராமறையாமென்னு மெழுவருமறைந்தார்ஞாளி ... *
யூர்தினரிடைந்தார்கன்னி மனந்தளர்ந்துமையையென்றாள் · *

(இதன்பொருள்.)

அசுரனதுபடைகள் எதிர்த்து யுத்தஞ்செய்கஅளவில் துந்துமி, காளி, மதங்கி, சண்டி என்கிற நால்சத்திகளும் தோற்றார்கள். சூலி, நீலகண்டி, வராகி, சண்முகி, திகிரிக்கையாள், இந்திராணி, மறையாள் என்கிற எழுமாதரும் யுத்தஞ்செய்யமாட்டாமற் காட்டிலொளித்தார்கள். சுவானவாகனத்தையுடைய வயிரவர்களும் தோற்றார்கள், துர்க்கையானவள் மனதுதளர்ந்து உமாதேவியையென்று தியானித்துநின்றாள் — என்றவாறு. (௨௧)

உறுதுணையுமையேயென்னும் பொழுதில்யோகினிகள்வானி ..... *
லறுபதுநாலுகோடி யதிர்த்தெழுந்தழலின்மாரி... ... ... *
இறுதியாயுருளச்சேனை யிடிமழைசொரிகையாலே ... .. *
குறுகியமகிடன்சேனைத் தலைவருங்கொதித்துச்சென்றார் ... ...*

(இதன்பொருள்)

தூர்க்கையானவள் அம்மனை துணையென்றபோது அறுபத்துநான்கு கோடி யோகினிகள் ஆகாயத்திலார்ப்பரித்தெழுந்து நெருப்புமழையையும் - இடிமழையையும் சொரிந்தபடியினாலே மகிடாசுரனுடைய சேனைகளெரிந்தும்பானதுகள், அப்பொழுது சேனைத்தலைவர்கள்கோபித்துச் சண்டைசெய்தார்கள் —என்றவாறு. (௨௨)

(கலிவிருத்தம்.)

அருசிகன்றனைச் சென்றனளாரணி ... ... *
மருவுகாந்தனை மாய்த்தனள்வாரணி... ... ...*
கரனைவென்றனள் வேலுடைக்காரணி... ... ... *
நரகனுருயிருண்டனள்நாரணி... ... ... *

(இ-ள்.) அப்படிமகிடாசுரனுடையசேனைத்தலைவர்கள் எதிர்த்தவுடனே அபிராமி யென்பவள் அருசிகனென்பவனைக் கொன்றாள், வாரணியென்பவள் காந்தனென்பவனைக் கொன்றாள், சண்முகியென்பவள் கரனென்னும் அசுரனைக் கொன்றாள், நாரணி நரகனென்னும் அசுரனைக்கொன்றாள்—என்றவாறு. (௨௩)

சூலபாணிதொலைத்தனள் பிண்டனைக் ... . *
கோலமாமுகிசண்டனைக் கொன்றனள் ... ... *
ளாலவுணிமதுவை யழித்தனள் ... ... *
ணீலனுருயிரிந்திரை நீக்கினாள் ... ... *

(இதன்பொருள்.)

சூலக்கையாளென்பவள் - பிண்டனென்பவனையும், வராகிசண்டனென்பவனையும், நீலகண்டி மதுவென்னு மசுரனையும், இந்திரைநீலனென்பவனையும், கொன்றார்கள்—எ-று. (௨௪)

துந்துமிக்கொடி சோணிதனுனனைக்... ... ... *
கந்துமிக்கும் படிக்கதைகாட்டினாள் ... .*
நந்துமிக்கநிகர்த்தருணாசலை ... ... *
வந்துமிக்கெரிக் கண்ணனைவாட்டினாள்... ... ...*

(இதன்பொருள்.)

துந்துமிக் கொடியையுடையவள் - சோணிதனுனனென்பவனைத் தலையறும்படி தண்டாயுதத்தாலடித்தாள், சங்கத்தைக் கையிலேதரித்த அருணாசலையென்கிறசக்தி அக்கினிக் கண்ணனைக் கொன்றாள்—என்றவாறு. (௨௫)

கயிடவன்புதைக் கண்ணனிருவருஞ்... ... . *
செயிரின்மானுறச் சிந்தினள்சுந்தரி ... ... *
நெயிநிமிர்க்க நிணயிடுவேலினன் ... ... *
மயிடவன்முகங் கண்டெதிர்வந்தனள்... ... ... *

(இதன்பொருள்.)

சுந்தரி யென்கிறசத்தி கபிடவனையும், புகைக்கண்ணனையும், யுத்தத்தி லேகொன்றாள். நெட்டையப்பொழிகின்ற நிணங்கள்பொருந்திய வேல யுதத்தையேந்திய துர்க்கையானவள் மகிடாசுரனைக்கண்டு எதிர்த்துவந்தாள்—எ-று. (உரு)

வெங்கடாமுகன் மேவலுமாதர்கள் ... *
தங்களாயுதங்கொண்டு தடுத்தனர் ... ... *
சிங்கவூர்தி யவனெதிர்சென்றுகைச் ... ... *
சங்கையூதினண்மேருசலிக்கவே ... *

(இதன்பொருள்.)

வெப்பம்பொருந்திய எருமைக்கடா முகத்தையுடைய அசுரன் யுத்தத்துக்கு நேரிட்ட அளவில் சத்தமாதர்களும் தங்களாயுதங்களினாலே அவன்விட்ட ஆயுதங்கள் விலக்கினார்கள். அவ்வேளையில் சிங்கவாகனத்திலேறிவந்த துர்க்கையானவள் அவனுக்கெதிரே போய்த் தன் கையிலிருக்கிற சங்கத்தைமகாமேரு அசையும்படி வாயிலவைத்து ஊதினாள்—என்றவாறு. (உஎ)

செருவிலங்கவள் சங்கொலிசெய்திட ... *
ஒருவரின்றி யவுணருறங்கினர் ... *
பெருவரங்களிற் பெற்றசரங்களை ... *
யிருவருஞ்சொரிந் தார்மழையென்னவே .. *

(இதன்பொருள்.)

வல்லமைபொருந்தியசிங்கவாகனத்தையுடைய துர்க்கைசங்கத்தொனிசெய்ய அசுரர்களி லொருவராவது இல்லாமல் மயக்கத்தையடைந்தார்கள்-அருமையாகியவரத்தினாலேபெற்றுக்கொண்டபாணங்களை இரண்டுபேரும் மழைபோலச் சொரிந்தார்கள்—என்றவாறு. (உஅ)

எந்தவெந்தக்கணையிவளேவினும் ... ... *
அந்தவந்தக்கணையாலறுத்தனன் ... ... *
பிந்தைபீண்டிருவெம்பிறைவாய்க்கணை ... *
சிந்தினாளறன் சென்னியழுந்தவே ... ... *

(இதன்பொருள்.)

எந்த எந்தபாணங்களைத் துர்க்கையானவள் விட்டாலும் அதுகளை அந்தந்தபாணங்களினாலேமகிடாசுரன் அறுத்துத்தள்ளினான்- அதன்பிறகு இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடைய சிரசில் அழுந்தும்படியாக விட்டாள்—என்றவாறு. (உகூ)

வெம்புசெம்புனல் வெள்ளமுருக்கிய ... ... *
செம்புபோலச்சிதறவிடுங்கணை ... ... *
யம்புபோல்விருக்கினுமாங்கவன் ... ... *
கொம்புபோலவிளங்கினகோடியே ... ... *

(இதன்பொருள்.)

ரத்தவெள்ளமானது உருக்கின செம்புபோல் சிதறிவிழவிட்ட அர்த்தசந்திரபாணங்கள் அப்பாக இருந்தாலும் அசுரன்தலையிலேமுளைத்திருந்தகொம்பிரண்டுபோல் தலையிலேதைத்துஅழுந்திவளைந்துதோன்றினதுகள்—என்றவாறு. (கூ௰)

வெற்றிகொண்டவள்வில்லைமுறித்தன் ... ... *
னுற்றவம்பிற்சிலைநுதலூன்றினாள் ... ... *
கொற்றவம்பின்குலங்கள்விடுத்தவ ... ... *
னெற்றியிற்கண்ணழலினிமிர்த்ததே ... *

(இதன்பொருள்.)

ஜெயங்கொண்டவளாகிய துர்க்கை கையிலிருந்தவில்லை இரண்டாகமுறித்தான், அந்தவில்லினாலே அசுரனுடையநெற்றியிலே அடித்தாள், அநேகம்பலம்பொருந்திய அம்புகளைவிட்டவனாகிய அந்தமகிடாசுர னெற்றியிலேசுவாமியினுடையகண்ணக்கினிபோல சுருக்கெனறுதாக்கியது—என்றவாறு. (கூக)

சாபவெஞ்சிலைபோகத்தரிப்பளோ ... *
கோபம்விஞ்சிக்கொதித்தெழுகூற்றத்திற் ... *
றீபமென்னத்திகிரியொன்றேவிய ... ...*
பாபகாரிதலைவிழப்பண்ணினாள் ... ... *

(இதன்பொருள்.)

துர்க்கையானவள் விலலொடிந்ததைப்பொறுக்காமல் அதிகோபங்கொண்டு கொதித்தெழும்பாநின்ற யமன்போல்பிரகாசிக்கின்ற ஒருசக்கராயுதத்தைவிட்டுப் பாவியாகிய மகிடாசுரனுடைய தலையறும்படிசெய்தாள்—என்றவாறு. (கூஉ)

கன்னியாழியெறியக்கடாமுகன் ... ... *
சின்னபின்னங்களாயுஞ் சிதைந்திலன் ... *
முன்னைமாதவத்துண்மையின்மும்மதந் ... *
துன்னுமால்கரியாயெதிர்தோன்றினான் ... *

(இதன்பொருள்.)

துர்க்கையானவள் சக்கிராயுதத்தை விட்டெறிய மகிடாசுரன் தேகஞ்சின்னபின்னமாகியுஞ் சாகாதவனாகிப் பூர்வகாலத்திலேசெய்ததபோபலத்தினாலே மும்மதங்களைப் பொழிபாநின்ற பெரியயானையுருவங்கொண்டு எதிராகவந்தெதிர்த்தான்—என்றவாறு. (கூங)

யாளியேறுசென்றங்கவனுச்சியின் ... *
மூளைவாரிமுகர்ந்தறுமொய்ம்பினன் ... *
மீளவுங்கதைகொண்டெதிர்வீசினான் ... *
கூளிநாயகிகூரவேலேவினான் ... ... *

(இதன்பொருள்.)

அப்படி யானைரூபங்கொண்டெதிர்த்த அளவில் துர்க்கை எறிகிற யாளியானதும்பாய் அந்தயானை உச்சியிலிருக்கின்ற மூளையைக் கையினாலே அறைந்து தோண்டிஎடுத்துத்தின்றது, அதனாலேயுஞ்சாகாமற் கையினாலேதிரும்பியுந்- தண்டாயுதங்கொண்டெறிந்தான். பேய்களுக்கதிகாரியாயிருக்கின்ற துர்க்கை கூர்மைபொருந்திய வேலாயுதத்தைவிட்டாள்—என்றவாறு. (௫௪)

விடந்ததும்பிய வேல்பட வெஞ்சமர்க் ... ...*
கிடைந்ததும்பி முகனுமிறந்தனன்... ... ... *
னடைந்ததும்பிக ளாயிரமாயிரங் ... ... *
குடைந்ததும்பி மரமெனக்குன்றியே... ... ... *

(இதன்பொருள்.)

விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கிற வேலாயுதம் பாய்ந்தவுடனே யுத்தத்தில அசைச்சயிக்க மாட்டாமல் இறந்துவிட்டான். அனேகம்ஆயிரம் வண்டுகள் குடைய உள்ளேபொன்றுமில்லாமற் றுளையோடிகூடிய அத்திமரம்போல—என்றவாறு. (௫௫)

வீழ்ந்தபின்பரி வேட்டமதாயெதிர்... ... . *
யோர்ந்து வெங்கதை கொண்டுடைத்தனன்... ... *
சேர்ந்தவன்கதை யும்மவன்சென்னியு ... . *
நேர்ந்தங்கொண் டறுத்தனளாரணி. ... ... *

(இதன்பொருள்.)

அப்படி வீழ்ந்திறந்துபோனவுடனே குதிரைமுக அசுரனாகி யெதிர்த்து தண்டாயுதத்தினாலே அடித்தான், அடித்ததண்டாயுதத்தையும்- அந்த அசுரனுடைய தலையையும், கத்தியினாலே அறுத்துத்தள்ளினாள் துர்க்கை—என்றவாறு. (௫௬)

அங்கதன்பி னழலுருவாயினன் ... ...*
கங்கையாயினன் காரிருளாயினன் ... ... *
பங்கயாசன னாயினன்பங்கய ... ...*
மங்கைநாயக னாயினன்மாயையால்... ... ... *

(இ-ள்.) அதின்பின்பு அசுரன் நெருப்புரூபங்கொண்டுவந்தான்; அதின்பின்பு சலப்பிரளயரூபங்கொண்டும்- அந்தகாரமாகியும்- தாமரைப்புஷ்பத்திலிருக்கிற பிர்ம்மாவாகியும் - லட்சுமிபுருஷனாகிய விஷ்ணுவாகியும்- எதிர்த்தான் மாயையினாலே—எ-று. (௫௭)

ஈதுகண்டவ ளென்செய்வன்மாயையால் .. .. *
வாதைசெய்தன னென்றுதளர்ந்துமை ... ... *
பாதநெஞ்சினிற் பற்றினள்பற்றிய... ... ...*
போதிலார்மொழி விண்ணிற்புகன்றதே... ... .. *

(இதன்பொருள்.)

அப்படிஅசுரன் பலபலரூபங்கொண்டவுடனே பார்த்து மாயையினாலே துன்பப்படுத்துகிறான், என்னவுபாயஞ்செய்தாலுஞ் சாகிறதில்லை- இதற்கென்னசெய்வேனென்று துர்க்கையானவள் பார்ப்பதிதேவியினுடைய இரண்டுபாதத்தையும் மனதினாலே தியானித்தாள். அப்படித் தியானித்தவுடனே ஆகாயத்தில்நின்றும் அசரீரி ஒருவாக்கியஞ் சொல்லியது—என்றவாறு. (௫௮)

மாயவேடங்க ளன்றிமகிட்மே ... ...*
யாயபோதி லவன்றலைதள்ளியே ... ... *
தூயதாளின் மிதிக்கத்தொலைந்திடும் ... ... *
தீயமாயை யெனச்சொலத்தேறினாள் ... ... *

(இதன்பொருள்.)

அநேகவிதமான மாயவேஷங்களால் சுபாவமான எருமைமுகரூபங் கொண்டபோது அவன்தலையையறுத்துக் கீழேதள்ளி உன்னுடைய பரிசுத்தமாகிய காலினாலேமிதித்தால் தீமைபொருந்திய மாயை தொலைந்துபோ மென்றுசொல்லத் துர்க்கையம்மன் தேறினாள் — என்றவாறு. (௫௯)

மட்டின்மாயை வடிவின்மலைந்தபின் ... ... *
னெட்டிலைதலைச் சூலத்தினீக்கினாள் ... ... *
துட்டன்மேதிய தாய்ப்படைதொட்டனன் ... ...*
வெட்டிவீழ்த்தி யடியின்மிதித்தனள் ... ... *

(இதன்பொருள்.)

அளவில்லாத மாயரூபங்கொண்டுவர, நெடுமைபொருந்திய வலையுடைய சூலத்தினாலே குத்திக்கொன்றாள், பின்பு அந்தத்துஷ்டன் பழைய எருமைக்கடாமுகத்தை யுடையவனாகி ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்தஅளவில் அதுகளைவிலக்கிவாளாயுதத்தால் தலையைவெட்டித்தள்ளிக் காலினாலே மிதித்துக்கொன்றாள்- துர்க்காதேவி—எ-று. (௬௰)

ஒப்பிலாப்பத மூன்றிமிதித்திடில் ... ...*
தப்பின்மாயை தவிர்ப்பதுபாரமோ ... ... *
வப்பதத்தை நினைக்கினுமாணவஞ் ... ... *
செப்புகாமிய மாயையுந்தீர்க்குமே ... ...*

(இதன்பொருள்.)

துர்க்கையம்மன் பாதத்தை நினைத்தாலும், அதை நினைத்தவருடைய ஆணவ-மாயை-காமியமென்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும்- அப்படிப்பட்ட ஒப்பில்லாதபாதம் பரிசமாகும்படி ஊன்றிமிதித்தால் பொய்யாகிய மாயையைமாத்திரந் தவிர்ப்பதுபெரிதோ—எ - று.

போதவானவர்பூமழைபெய்தனர் ... ... *
மேதிமாமுகன்மெய்க்கதியுற்றனன் ... ... *
தீதிலாவவன் செங்களந்தன்னிலோர் ... ... *
சோதிலிங்கமிருந்ததுதோன்றவே .. ..*

(இதன்பொருள்.)

தேவர்கள்மிகவும் புஷ்பவருஷம் பொழிந்தார்கள், மகிடாசுரனும் அம்மன் கையினாலிறந்ததனாலே மெய்ம்மையான மோட்சத்தைச் சேர்ந்தான், யாதொருகுற்றமில்லாத அவனது சிவப்பாகிய கண்டத்திலே ஒருபடிகலிங்கமிருந்தது — என்றவாறு. (சஉ)

கண்டமட்டிலக் கைக்கொளக்கார்நவ ... ... *
கண்டமட்டிற் புரந்தகடாமுகன் ... ...*
கண்டமட்டி லிருந்தகடவுளைக் ... ... *
கண்டமட்டி லெடுத்தனள்கன்னியே ... ... *

(இதன்பொருள்.)

நவகண்டமட்டும் ஆண்ட மகிடாசுரனுடையகழுத்தை இலக்காகவைத்துத் துர்க்காதேவி அறுக்க அந்தக்கழுத்தி லிருந்த படிகலிங்கத்தைக்கண்டபோதே கையினாலெடுத்தாள் — என்றவாறு. (சா)

கொண்டுசென்றுமை கோகனகப்பதங் ... .*
கண்டுபோற்றிக் கடவுளையீந்தனள் ... ... *
வண்டுவார்குழல் வாங்கினள்செங்கையை ... ... *
அண்டர்நாயகன் விட்டிலனாசையால் ... ... *

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட படிகலிங்கத்தை யெடுத்துக்கொண்டுபோய் உமாதேவியினது பாதங்களைத்தொழுது நடந்தகாரியமெல்லாஞ்சொல்லிச் சுவாமியைக்கொடுத்தாள். வண்டுகள்சூழ்ந்திருக்கிற கூந்தலையுடைய பார்ப்பதியுங்கையினாலேவாங்கினாள், தேவர்களுக்கெல்லாம்நாதராகவிருக்கின்ற சுவாமியும் அம்மன்மேல் வைத்திருக்கிற ஆசையினாலே கையைவிடாமற் கெட்டியாக இருந்தார் — எ-று. (சச)

தாயுமங்கதுகண்டுமகிழ்ந்திறை ... ... *
எயவென்கரம்பற்றியதேதெனை ... ... *
வாயையாங்கைபுதைத்துமகபதிக் ... ... *
காயிரங்கண்ணளித்தவன்கூறுவான் ... ... *

(இதன்பொருள்.)

பார்ப்பதியானவள் அந்த ஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து சுவாமியானவர் என்கையை விடாமலிருந்தது எதனாலே என்று கேட்கத் தேவேந்திரனுக்குஆயிரங்கண்கொடுத்த கௌதமரானவர்வாயைக்கையினாலே பொத்திக்கொண்டு அம்மனுக்குச் சொல்லத்தொடங்கினார் — என்றவாறு. (சரு)

[அறுசீரடியாசிரிய விருத்தம்.]

முன்னமகத்தியன்முதலாமுனிவர்களைம்பதின்மர்வர முனிபாற்செல்ல, வன்னவன்றன்றவமதிப்பா லவமதிப்பாயிருந்திடவு மவனைநோக்கிப், பொன்னனைபதவமுனிவர் வெகுண்டுரைப்பாரெமையிகழ்ந்த புன்மையாலே, யுன்னரியகருங்கடவா யினிப்பிறக்கக் கடவாயென்றுரையச்சொன்னார் ... ... *

(இதன்பொருள்.)

முற்காலத்திலே அகஸ்தியர் முதலான ஐம்பதுரிஷிகள்கூடி வரமுனியென்பவருடைய ஆசிரமத்திற்குப் போனார்கள், அந்தவரமுனியானவர் தம்முடைய தபோபலத்தினாலேமரியாதையாக உபசாரஞ்செய்யாமலிருந்தார், அப்போது அவரைப்பார்த்துப் பொன்போலும்அரிய தவத்தையுடையஎல்லாமுனிவர்களுங்கோபித்து எங்களுக்குஅவமரியாதை செய்தபடியினாலே யாவராலுங்குறைவுசொல்லப்பட்ட கரிய எருமைக்கடாவாகப் பிறப்பாயென்று அவர்கள் வருந்தச் சபித்தார்கள்—என்றவாறு. (௬௬)

அருந்தவரைம்பதின்மருமன்றுரைத்தமொழிக்கொடுமையைக்கண்டச்சமாகி, யிருந்தவனுமெழுந்துபணிந்தெனதுபிழை பொறுத்தருள்வீரென்றனந்தப், பெருந்தவரன்புடனுரைப்பார் மகிடமுகத் தவுணனெனப் பிறந்துபின்னர், திருந்தவரனிடப்பேவண்டித்தவம்புரியுமுமைகணத்திற் றீர்ப்பாளென்றார் ... ...*

(இதன்பொருள்.)

அரியதவத்தினையுடைய ஐம்பதுமுனிவர்களும் அன்றுசொல்லிய சாபத்தின் குரூரத்தைக்கேட்டுப் பயப்பட்டுப்பெருமைபொருந்திய தவஞ்செய்தவரமுனியும் எழுந்துவந்தனஞ்செய்து முனிவர்களே? தெரியாமல் நான்செய்த பிழைபொறுத்துக்கொள்ளுங்களென்றார், அதற்குமுனிவர்கள் நீர் எருமைமுகம்பொருந்திய அசுரனாகி அரசாளுங் காலத்தில் சுவாமி இடப்பாகத்தைப் பெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்கிற அம்மனானவள் உம்முடையசாபத்தை நொடிப்பொழுதில் தீர்ப்பாளென்றுசொன்னார்கள்—என்றவாறு. (௬௭)

ஆங்கவர்சொற்படியிலவனசுரர்பெருங்குலத்திலுதித்தரசனாகி, யோங்கியபேர்மகிடனெனக் கொடுங்கோன்மைபுரிகுதலுமொருநாள்வேட்டைத், திங்குசெயவனத்திலடைந் தழற்றசியாலிளைத்தோடித்திரிந்தானாங்கே, நீங்கரியவஞ்சனைசெய் மன்னதமனென்றொருமுனிவ னேர்ப்பட்டானே. ... ... *

(இதன்பொருள்.)

அந்தமுனிவர்கள் சொன்னப்பிரகாரம்வரமுனிஅசுரகுலத்திற் பிறந்து ராஜாவாகி மகிடாசுரனென்கிற பேரையடைந்து கொடுங்கோலரசு செய்துகொண்டு வருகையில் ஒருநாள் வேட்டையாடும்படியாக

வனத்தில்வந்து மிகுந்தபசியினாலே இரையொன்றும் அகப்படாமல்
ஓடித்திரிந்துகொண்டிருந்தான், அவ்விடத்தில் நீங்குதற்கரியதவஞ்செ
ய்கின்ற மன்னதரிஷியென்கிறவன் எதிர்ப்பட்டான்—எ-று. (௪௮)

மன்னருமவனையிவன்கரத்திலிங்கத்துடன்விழுங்கி பசிதீர்ந்துபோ
னன், பின்னைஅவன்மிடற்றில் சிவனுருவமிருந்ததந்தப்பெருமை
யாலேமுன்னதமாயினன்சிவனு முருத்தரித்த வுடலுமிறை யுருவம
ன்றோ, வன்னதனால் வினையடைந்ததுவிரும்பி நவதீர்த்தமாடியென்
றே... ... ... *

(இதன்பொருள்.)

எதிர்ப்பட்ட அந்தமன்னதனென்கிற ரிஷியைக் கையிலிருக்கும்லி
ங்கத்தோடே இந்தமகிடாசுரன் எடுத்துவிழுங்கிவிட்டுப்போனான். பி
ன்பு அவன்கண்டத்திற்சிக்கிக்கொண்டபடிசலிங்கமிருந்தபடியினாலே
மிகுந்தபெருமையையடைந்தான், அந்தலிங்க மிருந்தகண்டத்தை யு
டையவனும் சிவசொரூபமன்றோ, அவனைக் கொன்றபடியினாலே பா
வம் சம்பவித்தது நீ நவதீர்த்தங்களாடினால் அந்தப் பாவம்போகுமெ
ன்றார்கௌதமர்—எ-று. (௪௯)

அம்புருனி யுரைப்பளவி லொருமொழியந் தரத்திலெழுந்ததரி
யதீர்த்த, மொன்பதுமிவ்விடத்திவருமவைவருமாறியற்றுபெனவுமெ
யுட்சிந்தை, தம்பதுமமுகநோக்கி யுனதுகைவா ளெறிந்துகங்கைத
ருவாயென்றாள், வன்பணிலமேந்திதாளுந் தொழுதுகைவாளிலத்தெ
றிந்துவாங்கும்போதில்... ... ... *

(இதன்பொருள்.)

மிகவும்பத்தியுடைய கௌதமர் இந்தப்பிரகாரம்சொன்ன அளவி
ல் பாவந்தீர ஆடுதற்கு ஒன்பது தீர்த்தமும் இவ்விடத்தில் வரும்படி
செய்யென்று ஆகாயத்திலிருந்து ஒருவார்த்தைபிறந்தது- அதைக்கே
ட்டுப்பார்ப்பதியும் துர்க்கையினது மலர்போன்றமுகத்தைப்பார்த்து
உன்னுடைய கையிலிருக்கிற வாளினாலே பூமியைப்பிளந்து கங்கைவ
ரும்படி செய்யென்றுசொல்ல,ஜயசங்கை கையிற்றரித்த துர்க்கையும்
வணங்கி வாளாயுதத்தால் பூமியின்மேல்வீசியெடுத்தபோது—எ-று. (௫௰)

நவநதியும்பிறவுளநன்னதிகளுமச்சோகந்தீர்நல்லதான ... ...*
சுவையதிகமுதவுபுலதடங்களுமங்கெழுந்தவந்தச்சுனையினூடே ...*
பவமகலவொருமாதமுழுகியிருந்தாட்கரத்தைப்பற்றிநீங்காச் .. .. *
சிவவடிவுமகன்றதுதன்னுளமகிழ்ந்துகரையில்வந்தாட்டவர்போற்ற*

(இதன்பொருள்.)

ஒன்பது தீர்த்தங்களும்-மற்றுமுள்ள நதிகளும்- விடாயாறும்ப
உதவிசெய்யும் நல்லருசியைக்கொடுக்கின்ற அமுதம்போலதடாகங்களும்..
உண்டானதுகள், அந்த நதிகளில் ஒருமாதமட்டுக்கும் அம்மன் முற்ற

நீங்கும்படி ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தாள்- கையைப்பற்றிக்கொண்டுவிடாமலிருந்தலிங்கமும்நீங்கியது-அப்போதுதேவர்கள்போற்றும்படிமனதுசந்தோஷித்துஅம்மன்கரையில்வந்துசேர்ந்தாள்—எ-று.

உருவுருவா மொருசிவனை யதன்கரைமேற்புறத்திருத்தி யருச்சித்தாணம், மிருவினையுந் தவிப்பானுக் கெம்பாவந்தீர்த்தானெனப் பிய ற்பேரிட்டாள், திருமருவும் பெருஞ்சுனைக்குமினியகட்கதீர்த்தமென த் திருப்பேரிட்டாள், குருமணியை யருணகிரிப் பெருமானைத் தொழக்கனகக் கோயில்சார்ந்தாள்... ... ... *

(இதன்பொருள்.)

அருவமாகியும், உருவமாகியும், விளங்குகின்ற ஒப்பற்றசிவனை அந்தநதிக்கரையின்மேல எழுந்தருளச்செய்து அர்ச்சனைசெய்தாள். நம்முடைய நல்வினைதீவினையிரண்டையும் நீக்குகின்ற சுவாமிக்கு எம்பாவந்தீர்த்தானென்று பெயரைத்தரித்து அழகுபொருந்திய இந்தச்சுனைக்குக்கட்கதீர்த்தமென்றுபெயரிட்டாள், நிறம்பொருந்தியமணியையொத்தவரை அருணாசலத்தில்எழுந்தருளியிருக்கின்றபரமசிவனைவணங்கும்படியாகப் பொன்மயமாகிய கோயிலுக்குப்போனாள்—எ-று. (௫௨)

மருவுமல ரயன்றடத்திற் படிந்துவெண்ணீ றணிந்துசெங்கை முடியிற்கூப்பி, யருகுவருங் கோதமன்சொற்படிதொழுதுட் புகுந்துதன்னு ரமுதைக்கண்ணுற், பருகிநில முறவிழுந்து பணிந்தெழுந்து பரவசமாய்ப்பாடியாடி, யுருகியுவந் தழுதுயிர்த்து வலம்புரிந்து தனதுகுறையுரைத்துப்போற்றி... ... ...*

(இதன்பொருள்.)

வாசனைபொருந்திய தாமரைமலரிலிருக்கிற பிர்ம்மாவினுடையதீர்த்தத்திலமுழுகி விபூதிதரித்துச்சிவந்தகைகளைச்சிரசில்வைத்துக் கும்பிட்டுத் தன்னருகேவருகின்ற கௌதமர்சொன்ன பிரகாரம் உள்ளே போய்க் குளிர்ச்சிபொருந்திய அமிர்தம்போன்ற சுவாமியைக் கண்ணாலேதரிசித்துப் பூமியின்மேல்தேகம்பொருந்தநமஸ்காரஞ்செய்துஎழுந்திருந்து பரவசமாகிப்பாடியாடி உருக்கமடைந்துகளித்து ஆனந்தக்கண்ணீர்பெருகிப் பெருமூச்செறிந்து வலமாகவந்து தன்னுடையகுறையைச்சொல்லி வணங்கினாள்—எ-று. (௫௩)

கார்த்திகைத்திங்களிற்றிருநாளாகமத்தின் படிநடத்திக்கனற்கண்ணனைத், தோத்திரப்பண்ணுதலுமொருசுடர்மன்மேலெழுந்ததந்தசசுடரினூடே, எத்தியபலகோடி யிரவியெனவொருசோதி யெழுந்துமின்னே, வாய்த்தமலை வலமாகநடத்தியென வுரைத்துடனே மறைந்ததன்றே... ... ... *

(இதன்பொருள்.)

கார்த்திகைமாதத்தில்ஆகமப்பிரகாரம் திருநாள்செய்து நெருப்புக்கண்களையுடைய சிவனைப்பணிந்த அளவில் மலைமேலேஒருபிரகாசமுண்டாகி அதிலேசொல்லுசற்கரியபலகோடி சூரியப்பிரகாசமாய்ச் சுவாமியெழுந்து பெண்ணே! இந்தமலைவலமாக நடந்துவாவென்று சொல்லிமறைந்துவிட்டார்—எ-று. (௫௪)

நாரிசனைச்சிலையாக்குமுனிவனுமப்படிவலமாநடத்தியென்றான்... *
வாரியெனமறைபுகழக்காரிகைபநடந்தனடன்மலர்க்கைகூப்பிப் *
பேரிகையுங்காகளமுஞ்சல்லரியுமல்லரியும்பெரியவானிற் ... *
றூரியமுந்துந்துபியுமத்தளமுங்குடமுழவுந்துவைத்தவன்றே... *

(இதன்பொருள்.)

அகலிகையாகியபெண்ணைக்கல்லாக்கிய கௌதமரிஷியும்அம்மா அப்படியே வலமாகப்போவென்றுசொல்லச் சமுத்திரம்போல் வேதகோஷிடமுழங்கவும்,பேரிகை,காகளம்,சல்லரி,மல்லரி,ஆகாயத்தில்-முரசு, துந்துபி, மத்தளம், குடமுழா, முதலான வாத்தியங்கள்முழங்கவும், பார்ப்பதி இரண்டுகையுங் கூப்பிக்கொண்டு நடந்தாள் —என்றவாறு. (௫௫)

அரம்பையுருப்பசிமுதலா மகபதிநாட்டரிவயர்களாடல்காட்டக், குரும்பையெனநெருங்குமுலை வளையரபங்கையர் மலரின் குப்பைகூட்டிக், கரும்புகனிந்தனையமொழிப் புனலரமங் கையரிரட்டுங் கவரிநாட்ட, விரும்புருகநகைபுரியு மரவமின்னார் மணிவிளக்க மெடுத்துநீட்ட... ... ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் பார்ப்பதிவலம்வரும்போது,ரம்பை,ஊர்வசி,முதலாகியதெய்வலோகத்துப்பெண்கள் நாட்டியமாடத் தென்னங்குரும்பையொத்த தனத்தையுடைய மலைபரமகளிர் அம்மன் நடந்துவரும்போது பாதம்பூமியிலேபட்டு உறுத்தாம லிருக்கப்-புஷ்பங்களைக்குப்பையாகக்கொட்டக்- கறுப்பஞ்சாறுபோலும் வார்த்தையையுடைய நீரரமங்கையர்சாமரமெடுத்துவீச,இரும்புகூடவுருகும்படி நகைசெய்கின்றநாகலோகத்துப்பெண்கள் ரத்தினதீபங்கையிலெடுத்துக் கொண்டுவர—எ-று. (௫௬)

முண்டகமண்டபம்பயிலும்புலோமிசையுநறுந்தவளமுளரிமானுங் *
கண்டகமும்வழியாலுமொழித்துவர நிலமகடன்கைகணீட்ட... ...*
அண்டர்குலமடந்தையருமுனிவர்குலவனிதயருமருவிப்பூந்தேன் *
வண்டபிமிஞ்சேறகற்றமலரினறுந்துகள்சொரிந்து வழிகளாக . ...*

(இதன்பொருள்.)

தாமரைப்புஷ்பமாகியமண்டபத்திலிருக்கிற லட்சுமியும்,இந்திராணியும், வெண்தாமரைப் பூவிலிருக்கிற சரஸ்வதியும், மேற்கூறவழியி

விருக்கிற முள்ளுகளையும்-கல்லுகளையும்-தள்ளிக்கொண்டுவர, பூமிதே விகைகள் நீட்டிச் சாக்கிரதையாகத்தாங்கத், தேவஸ்திரீகளும்-முனிவர் களுடையஸ்திரீகளும்-புஷ்பத்திலிருக்கிற தேனருவியின்மேல வழிஞ்ச ருக்கிக் கிடந்ததைப் புஷ்பத்துக்குள்ளே யிருக்கிற பராகப்பொடிக ளாக்கொட்டி நல்லவழியாகச்செய்ய—என்றவாறு. (௫௭)

குன்றினதுன்னிருசரணம் பொறுத்தருள்வா யென்னிங்கை கங் கைகூப்பி, மன்றனகத்திசையணுகி யழற்கிரியை யெதிர்முகமா வண ங்கிப்போற்ற, தென்றிசையு நிருதிபெருந் திசையினையுங் கடந்துகு ட திசையிற்சென்றாள் - குன்றிய புகழரணுமழுவிடைமீ தினிற்கா ட்சி கொடுத்துப்போனான் ... ... *

(இதன்பொருள்.)

கந்[illegible]ணவள் அம்மை பார்ப்பதி உன்பாத மிரண்டும்பூமியிலேப ட்டு[illegible]ன்றிப்போய்விட்டது, பொறுக்கவேண்டுமென்று இரண்டுகையு ங்கூப்பி, அந்நிய அக்கினிதிசையிலேவந்து அக்கினிமலையை யெதிர் முகமாகத்தொழுது தெற்குத்திக்கும்நிருதிமூலையுந்தாண்டி மேற்கு த்திக்கிற்போனாள், குறைவில்லாதகீர்த்தியையுடையசுவாமியும் இளமை தங்கிய ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்து தரிசனங்கொடுத்து நட ந்தார்—எ-று. (௫அ)

நாற்றிசையும்போற்றிசையும் புகழணிபண்ணவைபா ணடத்தா ள்போற்றி, மேற்றிசையுங் காற்றிசையுங் கடந்துவடதிசையணுகி வி ரும்பியேந்தி- எற்றிசையமிறைதிசையு மகிழ்ந்துகுண திசையடைந் தா ளிமையவெற்பிற், சேற்றிகையுமணவழலைவலம்புரிந்த செயல்போ லச்செறிந்ததன்றே ... ... *

(இதன்பொருள்.)

நாலுதிக்கும் வணங்குகின்ற- கீர்த்தியையுடைய அருணசலேசுரரு டைய [illegible]தைக்கொல்கின்ற பாதத்தை வணங்கி மேற்குத்திக்கும்- வாயுதிக்குந்தாண்டி வடதிசையில்மறுபடியுந்தொழுது எருதிலேறுகி ன்ற ஈசானனுடைய திக்கைக்கடந்து கிழக்குத்திசைக்குவந்தாள். அப் படிவந்தது- இமவற்பருவதத்தில் சுவாமிகலியாணஞ் செய்தபோது இ மாக்கினியைவலம்வந்ததுபோலிருந்தது—எ-று. (௫௯)

(கலிவிருத்தம்.)

பானுகம்பர்கைச்சங்கொலிநெடியமால்பணிதல் ... *
தானகம்பலநாரதர்வீணையினரவம் ... ... *
வானதுந்துபிகம்பலதிசையெலாமறைத்த ... ... *
தேனிறைந்திடு மலர்மழையிமையவர்சிதற ... ... *

(இதன்பொருள்.)

பானுகம்பனென்பவன்-தன்னுடைய ஆயிரங்கைகளிலுஞ்சங் கத்தைவைத்து ஊதுகிறஒலியும், விஷ்ணு வானவர் - தமதுசங்கத்தை

வாயில்வைத்து ஊதுகிற சத்தமும்- நாரதர்வீணை வாசிக்கிற சத்தமும்- ஆகாயதுந்துமியினுடைய சத்தமும் - திக்குகளெல்லாஞ்செவிடுபடச் செய்தனுமகள்.தேனிறைந்த புஷ்பவருஷங்களைத் தேவர்கள்சொரிய—என்றவாறு. (௬௰)

கற்றைவார்சடையிளம்பிறை நெடுநிலாக்கமழப் ... *
புற்றராமணியிளவெயில் விரித்திடப்புவியைப் ... *
பெற்றமாதினுக்கொருபுறமளித்திடப்பிடித்த ... *
வெற்றுநூலெனப்புரிமுநூன் மார்பகத்திலங்க ... *

(இதன்பொருள்.)

கற்றையாகிய நீண்டசடையில் தரிக்கப்பட்ட இளமையாகியபிறையினது நெடுமைபொருந்திய சந்திரிகை பிரகாசிக்கவும்,ஆபரணமாகிய புற்றிலிருக்கின்ற சர்ப்பத்தின் தலையிலிருக்கிற மணிகாந்தியை விரிக்கவும், உலகமாதாவாகிய பார்ப்பதிக்குப் பாதிசரீரத்தைக்கொடுக்கிறதற்காக மத்தியாகப்பிடித்த எற்றுநூல்போல்புரியாகியபூணூலானது மார்பிற்பிரகாசிக்கவும்—என்றவாறு. (௬௧)

பிறப்பிலாமூதன்மறையெலாமளவிடாப்பெரியோ ... *
னிறப்பிலாவிறைவிடையின்மேலினிதெழுந்தருள ... *
வனத்திறைபகியடிபணிந்திறைஞ்சினளனைத்துந் ... *
துறக்குமண்ணனுமவளுடனிவையினைசொல்லும் ... *

(இதன்பொருள்.)

பிறப்பில்லாதமூர்த்திஅனேகவேதங்களாலும்,அறியப்படாதவர் இறப்பில்லாத பரமசிவன் ரிஷபவாகனத்திலெழுந்தருளத் தர்மம் வளர்க்கிற பார்ப்பதி அந்தச் சுவாமிபாதத்தைத் தொழுதுவணங்கினாள். எல்லாவற்றையும் நீங்கிய கடவுளானவர் அந்த அம்மனோடு சொல்வார்—என்றவாறு. (௬௨)

பெண்ணுமாணுமாயுலகுயிர்ப்பொருளெலாம்பிரித்தோ*
மண்ணிதாகியபீடமு மிலிங்கமுமானோ ... ... *
மென்னுநீயென நாமெனவிரண்டிலைமரமு ... *
முண்ணிலாவியவயிரமு நிகர்த்துடனுறைவோம் ... *

(இதன்பொருள்.)

வாரா யுமையே,நீயும் நாமும் பெண்ணுமாணுமாகி உலகத்தில்அனேகம் சீவராசிகளை வேறுவேறு உண்டாக்கினோம், சமீபமாய் ஆவிடையாரும் லிங்கமுமானோம், நீயென்று நாமென்றும் வேறும்பதமில்லை,மரமும் அதற்குள்ளே யிருக்கிற வயிரமும் போல் ஒன்றாய்ச் சேர்ந்திருப்போம்—என்றவாறு. (௬௩)

அங்கம்யாவுநம்பொருட்டுவிட் டிமையவெற்படைந்த *
யிங்குநாமுனக்கொருபுற மளிப்பதேயியற்கை ... *

மங்கையேநமதிடப்புறத்துறையெனமகிழ்வுத் ... *
றங்கையாலணைத்தருளினனுருகியொன்றுனார் ... *

(இதன்பொருள்.)

தேகத்தைவிட்டு நம்பொருட்டாக இமவற்பர்வதத்திலே வந்து பிறந்தாய் இவ்விடத்தில்நாம் உனக்கு ஒருபாகங்கொடுப்பதுசுபாவமே பெண்ணே நம்முடைய இடப்பாகத்திற்சேர்ந்திருவென்று சந்தோஷித்தை யடைந்து கையினாலே அணைத்துக் கொண்டார். இரண்டுதேகமும் உருகி ஒருதேகமானார்கள் அம்மனும் சுவாமியும்—எ-று. (௯௪)

அடுத்தசெஞ்சடையொருபுறமொருபுறமளகந் ... *
தொடுத்தகோனறைமோர்புறமொருபுறநறுந்தொடைபல்
வடித்தசூலமோர் புறமொரு புறமலர்க்குவளை ... *
திடத்திலார்கழ லொருபுறமொருபுறஞ்சிலம்பு ... *

(இ-ள்.) அப்படியிருவரும்உருகிச்சுவாமியினுடையபாதியும், அம்மனுடையபாதியும், ஒருதேகமானபோது- ஒருபக்கத்திற்சிவந்தசடையும், ஒருபக்கம் கூந்தலும், ஒருபக்கம் கொன்றைமாலையும், ஒருபக்கம் புஷ்பமாலையும், ஒருபக்கம் சூலமும், ஒருபக்கம் நீலோற்பலபுஷ்பமும், ஒருபக்கம் வீரகண்டாமணியும், ஒருபக்கம் சிலம்பும், தோன்றியதுகள்—என்றவாறு. (௯௫)

பச்சைவன்னவற்றொருபறமொருபுறம்பவளங் ... *
கச்சுலாமுலையொருபுறமொருபுறங்கவின்மா ... *
ரச்சநீக்கியவரதமொன்றபயமொன்றங்கை ... ... *
யிச்சையாமிவருறுதல்கண்டிறைஞ்சினாரிமையோர் ... *

(இதன்பொருள்.)

ஒருபுறம் பச்சைநிறமும், ஒருபுறம்பவளநிறமும், ஒருபுறம்ரவிக்கையணிந்த ஸ்தனமும், ஒருபுறம் அழகுபொருந்தியமார்பும், ஒருபுறம் அபயமும், ஒருபுறம்வரதமுமாகிய ஆசையோடு இருவரும்பொருந்துதலைப்பார்த்துத் தேவரும்வணங்கினார்கள்—என்றவாறு. (௯௬)

இந்தமாக்கதைபடித்தவர் செவிகளிற்கேட்டோர் ... *
சந்தனாசலமுனியினிற் றமிழ்க்கடல்கடப்பார் ... *
மைந்தரோமுதற்கிளையுடனுலகினில்வாழ்வார் ... *
பந்தபாசமற் றழிவிலாப்பரகதிபெறுவார் ... ... *

(இதன்பொருள்.)

இந்தக்கதையைப்படித்தவர்களும், காதினாலேகேட்டவர்களும், சந்தன விருட்சங்கள் சூழ்ந்த பொதியமா மலையிலிருக்கின்றஅகத்தியர் போல் தமிழ்க்கடல்கடப்பார்கள். சந்தானபாக்கியத்தோடும், சுற்றத்தாரோடும், உலகத்தில் வாழ்வார்கள். தங்களைப் பந்தமாகச் சூழ்ந்துகொண்டிருக்கிற தீவினையைத்தள்ளிமோட்சம்பெறுவார்கள்—எ-று.

முனிவனேயென்னைப்பயந்தவ னுரைத்ததிம்முறையென் *
றனையமாமுனிக்குரைத்தலு மவனெழுந்திறைஞ்சிக்... *
கனகவச்சிராங்கதனுயர் கதிபெறுங்கதையை ....*
வினவினன்முனிவினவலு மகிழ்ந்திவைவிளம்பும்......*

(இதன்பொருள்.)


நந்திகேசுரர் மார்க்கண்டேயரைப்பார்த்து என்னைப்பெற்ற பரமசிவன் சொன்னசரித்திரத்தின்முறைஇதுவென்று அவருக்குச்சொல்ல அந்தமார்க்கண்டேயரிஷிஎழுந்து தெண்டஞ்செய்துபின்பு சுவாமி, வச்சிராங்கதபாண்டியன்உயர்வாகியமோட்சம் அடைந்தகதையைச்சொல்லுங்களென்றுகேட்க- நந்திகேசுரர் சந்தோஷத்தையடைந்துசொல்லத்தொடங்கினர்—என்றவாறு. (௰௮)

ஐந்தாவது

பாகம்பெற்றசருக்கம்

முற்றுப்பெற்றது.

அ- திருவிருத்தம்-சா.



சிவமயம்.

வச்சிராங்கதபாண்டியன்

சருக்கம்.

(கலிவிருத்தம்.)

தோடுகமழ்சந்தன வனத்திடை துளைந்தே... ... ...*
நீடுதமிழின்சுவை யளைந்துநெடுநாளா .. .. *
யாடுமயிலன்னவர்க ளன்னநடைபோலே .. ..*
வாடைமிசைதென்றல்புகும் வையையவளநாடு... ... ... *

(இ-ள்.) புஷ்பவிதழ்மணக்கும் சந்தனவனத்தின்மத்தியிலேசஞ்சரித்து நீட்சியாகியதமிழினது மாதுரியத்தைஅளைந்துநெடுநாளாகஆடாநின்ற மயில்போன்ற பெண்களுடைய நடைபோல வாடைக்காற்றில் சம்பந்தமாக தென்றற்காற்று வாராநின்ற வையையாறு பொருந்திய பாண்டிநாடு—என்றவாறு. (க)

வெவ்விழியினாரிடையை மின்னெனமருண்டே... ...*
செவ்விபெறுங்கைதை செறிந்தலருநாடு ... ... *
நவ்வியனையாரளக நள்ளிருளதென்றே... ... ..*
மவ்வலருங்கையலரும் வையைவளநாடு... ... ... *

(இ-ள்.) வெப்பமதைச்செய்யுங் கண்களையுடைய பெண்களிடையைப் பார்த்துமின்னலென்றுமயங்கி அழகுபொருந்தியதாழைகள்புஷ்பிக்கும்நாடு,மான்போன்றமாதர்கள்கூந்தலைப்பார்த்து-இருளென்றுநினைத்து முல்லைச்செடிகள் கனாயிலே புஷ்பிக்கும் வையைவளம்பொருந்திய பாண்டிநாடு—என்றவாறு. (உ)

அந்தவளநாடர்பெரு மானரசர்கோமா... ... ... *
னிந்திரன்முடிக்கிடை யெறிந்தவளைவீர... ... ..*
னிந்தையறுதென்கயிலை நெற்றிவிழிபோலே... ... *
முந்தியதிசைக்கரி முகத்தெழுதிவைத்தோன்... ... *

(இதன்பொருள்.)

அத்தன்மையாகிய பாண்டிநாட்டாருக்கு ராஜன் அரசர்க்கரசனானவன் தேவேந்திரன்முடிசிதறும்படியாகவளையென்னும் ஆயுதத்தைப்பிரயோகித்தவன்குற்றமற்ற தென்கைலாசத்துக்கு நெற்றிக்கண்போல அஷ்டதிக்கிலு மிருக்கிறயானைகள் முகத்திலே தன்னுடைய மீனக்கொடியையெழுதிவைத்தவன்—எ-று. (௫)

(கலிவிருத்தம்.)

ஆகமாதி மதனி னழகினன் ... ...*
னாகமாதி தெளிந்த வறிவினான்... ... *
பாகநாரியர் பத்தியினன்மொழிப் ... ...*
பாகநாரியர் பற்றியதோளினான் ... *

(இதன்பொருள்.)

தேகத்தினுதியந்தமாக மன்மதன்போல அழகுள்ளவன், ஆகமமுழுவதுந்தெரிந்த விவேகத்தையுடையவன், பக்கத்திலே பார்ப்பதியையுடைய சிவன்மேல் பக்தியுடையவன், பாகும்போல மதுரமாகிய சொற்களையுடைய ஸ்திரீகள் விரும்பாநின்ற தோளையுடையவன்—எ-று.

வானகத்திலு மண்ணிலு மெண்ணிம ... ... *
வானகத்திலும் வைத்தபுகழினான்... ... *
கானகத்தொளி யார்சடைக்கண்ணிதன்... ... *
கானகத்தொளி யாமனைக்காப்பவன் ... ...*

(இதன்பொருள்.)

தெய்வலோகத்திலும், பூமியிலும், எண்ணைப்பொருந்திய இமவந்தபர்வதத்தினிடத்திலும், தன்கீர்த்தியை நாட்டினவன், சுவாமிதரிக்கின்ற சடைக்காட்டினிடத்திற்பிரகாசிக்கின்ற ஆத்திமாலையினது வாசனையைத்தன்மனதிலே நினைத்துக்கொண்டு பூமியைக் காக்கின்றவன்—எ-று.

தங்கணாய கனைத் தலைசூடிய .. .. *
வெங்கணாக ரடித்தலை யேத்தினான்... ... *
பொங்கு நன்றி யறிந்தது போற்றுவா... ... *
ரிங்கிவற்கிணையாவரு மில்லையே... ... *

(இதன்பொருள்.)

தங்கள்குலத்துக்குத் தலைவனாகிய சந்திரனைச்சிரசிற்றரித்த எங்கள் நாதரது பாதங்களைத் தலையினாலே வணங்கினவன், மிகுந்த நன்றியையறிந்து அதைப்பாதுக்காகின்றவர்களில் இவனுக்குச்சமானமொருவருமில்லை—எ-று. (௬)

பத்து வார்திசை மீதும் படர்புகழ்... ... ...*
வித்து வாரி யிறைக்கின்ற மேன்மைபோ... ... *

னத்து வாரியில் வாரினர் நல்கிடு... ... ...*
முத்துவாரி யிறைத்திடு முன்றிலான்... ... *

(இதன்பொருள்.)

நீண்டபத்துத்திக்கிலும்பரவக்கீர்த்தியாகியவினையைவாரியிறைக்கின்ற தன்மைபோல் சங்கங்கள்தவாழநின்ற சமுத்திரத்தில்குளித்து வாரிவந்தவர்கள்கொடுத்த முத்துக்கள் இறைந்து கிடக்காநின்ற முற்றத்தையுடையவன்—எ-று. (எ)

ஆடலூர்ந்த வரசன் புகழ்க் கடற் ... ... *
கோடுகின்ற கலங்கதிரோட்டுதேர் ... ... *
கூடு செக்கர் பவளக்கொடிகளே... ... *
நீடுதிக்கினர் நீரின்மணிதரோ... ... ... *

(இதன்பொருள்.)

வெற்றிபொருந்திய அரசனதுகீர்த்தியாகிய சமுத்திரத்திலோடுகின்றகப்பல- சூரியனோடுகிறதேர்- அக்கடலிற்படர்ந்தபவளக்கொடிகளே செக்கர்வானம் அந்தக்கப்பலி லிருக்கிறவர்கள் எட்டுத்திக்கிலுமுள்ள மனிதர்களாம்-இதினால் திக்கெட்டிலும் அவனதுபுகழ்விளங்குகின்றது—எ-று. (அ)

எச்சராசர முங்களிப் பெய்தவே... ... ... *
நச்சராவுலகாளுநலத்தினான் ... ... *
கச்சராவு கழற்பொலி காலினன் ... ... *
வச்சிராங்கத னென்றொரு மன்னவன் ... *

(இதன்பொருள்.)

அசையும்பொருள் அசையாப்பொருள் களாகிய எவையும் சந்தோஷித்தையடைய ஆதிசேஷன்தாங்கிய வுலகத்தை ஆளுகின்ற நன்மையுடையவன், கச்சாக அராவிய வீரகண்டாமணியைத் தரித்தகாலையுடையவன், வச்சிராங்கத பாண்டியனென்றொருவனிருந்தான்எ-று.

படையிற் றோற்ற வரசரைப் பல்சிறை ... ... *
யிடையிற் போட்டன னென்கை வியப்பதோ ... *
கொடையிற் றோற்றிடுங் கொண்டலை யுஞ்சிறை ... *
யிடையிற் போட்டனனென்ப திருக்கவே ... *

(இதன்பொருள்.)

அவன்யுத்தத்திலே தோற்ற ராஜாக்களைச் சிறையிலேபோட்டானென்கிறதென்ன ஆச்சரியம்! தன்கொடைக்குத் தோற்றமேகத்தையுஞ் சிறையிற் போட்டானென்பதிருக்கும்போது—எ-று. (௯)

நாட்டுமவ்வர சன்றொரு நாளிலே ... ... *
வேட்டையாட விரும்பின னாகியே ... *
மூட்டுசேனை கரிபரிமொய்த்திட ... ... *
ஓட்டினன்பத யுத்தரதிக்கிலே... ... *

(இதன்பொருள்.)

இப்படிச்செயத்தைநாட்டிய வச்சிராங்கத பாண்டியன் ஒருநாள் வேட்டையாடும்படியாக மனதிலெண்ணி, யானை,குதிரை, சேனைகள்சூழக்குதிரையைநடத்திக்கொண்டு உத்திரதிக்கில்நடத்தான்—எ-று.

துங்கவாம்பரிமீதிவன்றோன்றலு ... ... *
மங்கைவேழமகன்றகல்றோடின ... *
திங்களின்குலச்செல்வனென்றஞ்சியே ... *
யென்கும்மாடிமிருட்கணமென்னவே .... *

(இதன்பொருள்)

சந்திரவமிசத்திலேபிறந்த ராஜாவென்றுபயப்பட்டு ஓடும் இருட்கூட்டம்போலத் தாவாநின்ற குதிரைமேல் ஏறிவந்ததும், தும்பிக்கையையுடையயானைக்கூட்டங்கள் ஓடிப்போனதுகள்—எ-று. (௰௨)

வீறுமம்புலியின்குலமேன்மையான் ... ... *
வீறுமம்புலியின்குலவீட்டினு ... ... *
ஆறிலொன்றுகடமைகொண்டாள்பவ ... ... *
ஆறிலொன்றுகடமைகொண்டானரோ ... ... *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய அம்புலியென்னும் பேருடைய சந்திரகுலத்திற்பிறந்தமேன்மையினாலே அம்புலியென்கிற அழகியபுலிகளைக்கொன்றான். ஆறிலொன்று கடமை வாங்கிக்கொண்டு ஆள்கிறவன். மார்க்கத்தில நேரிட்டகடமை மிருகங்களைக்கொன்றான்—எ-று. (௰௩)

சேரமானினந் தன்னைச்சிதைப்பவன் ... ... *
சேரமானினந்தன்னைச்சிதைத்தனன் ... ... *
வாரமாய்கலைச்சங்கம்வளர்த்தவன் ... ... *
வாரமாய்கலைச்சங்கம்வளைத்திட்டான் ... ... *

(இதன்பொருள்.)

சேரமானென்னும் பேரையுடைய சேரனது சேனையைசெயித்தவன், ஒருமிக்கமானினங்களைக்கொன்றான், அன்போடு ஆராய்கின்ற வித்தியாசங்கத்தை வளர்த்தவன். அனேக கலைமான் கூட்டங்களை வளைத்துக்கொண்டான்—என்றவாறு. (௰௪)

சோலைபோன்மதமாரிசொரிந்திடும் ... ... *
யானைதேர்பரியாண்முதலாகிய ... ... *
தானைபின்னிடத்தான்றனிவாகிமேற் ... *
கானநாவியைக்கண்டுதொடர்ந்தனன் ... ... *

(இதன்பொருள்.)

சோலைவருஷம்போல் மதத்தைச்சொரிகின்ற யானை,தேர்,குதிரை, ஆள், இவர்கள் பின்னிட்டுப் போகத் தானொருவனாகக் குதிரைமேற்கொண்டவனாகி ஒருபுழுகுபூனையைத் தொடர்ந்தான்—எ-று.

அந்தநாவியகல் அருணாசலத் ... ... *
துந்தியேவல்பா விரைந்தோடலு ... ... *
முந்திவாசியதல்லிப் புடிக்கிறான் ... ... *
கந்தநாவிவிழுந்த துகலைமுன்னே ... ... *

(இதன்பொருள்.)

அப்படிராஜாவாலே தூரத்தப்பட்ட புழுகுபூனையானது சீக்கிரத்திலே அருணாசலத்தை வலமாகச் சுற்றிம்பாடின அளவில், வேகத்தோடு குதிரையைநடத்தினான். அந்தப் புழுகுபூனைவந்துகண்முன்னேவிழுந்தது—எ-று. (௰௬)

பச்சைநாவிபருகினர்போல்விழுந் ... ... *
தச்சநாவிதன்றேகப்விடுத்தெழில் ... *
விச்சைவேந்தர் துதிக்கவிமானமே ... ... *
லிச்சைமேனிகொண்டெழுந்ததே ... *

(இதன்பொருள்.)

நாபியாகிய விஷத்தைச்சாப்பிட்டவர்கள்போல் விழுந்துபயத்தையுடைய புழுகுபூனை தன்தேகத்தைவிட்டு வித்தியாதரர் முதலானவர்கள் துதிக்க விமானத்தின்மேல் திவ்வியதேகத்தைப் பெற்றுக்கொண்டெழுந்தது—என்றவாறு. (௰௭)

மேவுமந்தவரசன்விழுந்திட ... ... *
மாவும்வீழ்ந்துவடிவுதனைத்தறந் ... ... *
தோவியர்க்கெழுதாவுருக்கொண்டொரு ... ... *
பூவிமானமதேறிப்பொலிந்ததே ... ... *

(இதன்பொருள்.)

எதிரராஜன்விழக் குதிரையானது இடறிவிழுந்தது, தன்தேகத்தைவிட்டுச் சித்திரகாரருக் கெழுதக்கூடாத திவ்விய ரூபத்தைப்பெற்று ஒருபுஷ்பவிமானமேறிப்பிரகாசித்து—என்றவாறு. (௰௮)

கைவிலங்கனையான்பரிக்காலின்வீழ்ந் ... *
தவ்விலங்கையரசனைப்போலவே ... ... *
செவ்விலங்கவடிவினிற்றேம்பினான் ... ... *
வெவ்விலங்குட்டோடில்வீழார்களோ ... ... *

(இதன்பொருள்.)

யானைபோன்ற வச்சிராங்கத பாண்டியன் குதிரைக்காலின்ருகில் விழுந்து அந்த இலங்காபுரிராவணன்போல அருணாசலத்தி னடியில் வருந்தினான். மிருகத்தின்பின் ஓடினால் யார்தான் விழார்கள்—எ-று.

பாய்ந்தநாவிபரிப்பெயர்ம்பாய்ப்பழுங் ... ... *
காந்திகாலிகலாதரப்பேர்படைத் ... ... *

தாய்ந்தநண்போ டருவிப்கண்ணராய் ... ... *
மோந்தணைந்துமகிழ்ச்சியின் மூழ்கினார் ... ... *
(இதன்பொருள்.)

பாய்ந்து செல்லாநின்ற, குதிரை, நாவிளனென்கிற பேர்போய்ப் பழைய காந்திச்சாலி கலாதரனென்கிற பெயரைப் படைத்தவராகி யிருந்த சிநேகராய்- அருவிபோலக் கண்ணிலிருந்து ஜலம்வர-ஒருவருக்கொருவர் கட்டியணைந்து மோந்து சந்தோஷத்தில் முழுகினார்கள்—என்றவாறு. (உ௰)

அன்னவீரர்க ளவ்விடைநின்றுழி... ... ... *
பொன்னலார்க்கு முருத்துயருற்றிடும் ... ... *
மன்னர்மன்னவன் மற்றிதுவந்தவா... ... ... *
லென்னவென்னவென் றேங்கியிரங்கினன் ... ... *
(இதன்பொருள்.)

அந்தவீரர்கள் அவ்விடத்தில் நின்றபோது தன்சத்துருக்களுக்குவந்த துக்கத்திலும் அதிகமாய் வருந்துகின்ற பாண்டியன் இதுவந்தவகையென்னவென்று இரங்கி வருத்தமுற்றான்—எ-று. (உக)

விஞ்சைமன்னர் விமானத்தராகியே ... ... *
தஞ்சமில்லவன் றன்புடைசூழ்ந்துநீ ... ...*
யஞ்சலஞ்சலென் றங்கையமைத்தனர்... ... ... *
பஞ்சவன்மகிழ் வோடும்பகருவான் ... ... *
(இதன்பொருள்.)

வித்தியாதரர்களாகிய, அவ்விருவரும்-விமானத்திலேறிக்கொண்டு தஞ்சமில்லாத பாண்டியனிடத்தில்வந்து நீ பயப்படாதே - பயப்படாதே என்று கையமர்த்தினார்கள். அப்போது பாண்டியன் மிகவும் சந்தோஷத்தோடு சொல்வான்—என்றவாறு. (உஉ)

நீதியாய்வரு நீரேவரித்துயர்க் ... ... *
காதிகாரண மேதிவ்வருந்துயர் ... ... *
போதுமாறெது போதியுமென்றவ... ... ...*
னோதமோதக் கலாதரனோதுவான் ... ... *

(இ-ள்.) நீதிபொருந்திய நீங்களிருவரும்பார்- உங்களுக்கு இப்படிவந்த துக்கத்திற்குக் காரணமென்ன-அதுபோனது எந்தவிதத்திலே சொல்லுங்களென்று கேட்கக், கலாதரனென்பவன் சொல்வான்—என்றவாறு. (உரு)

வாய்ந்தசாலி மதுரையின்மன்னனே... ... ...*
எய்ந்தவிஞ்சையர் யாங்களிவன்பெயர்... ... *
காந்திசாலி கலாதர னென்பெயர்... ... ... *
ஆய்ந்தநன்பின ராய்விளையாடினேம். ... ...*

(இதன்பொருள்.)

நெல்விளையாநின்ற மதுரைக்குஅரசனே! நாங்கள் ஒப்பற்றவித்தியாதரர்கள்- இவன்பெயர் காந்திசாலி, என்பெயர் கலாதரன், நாங்களிருவரும் மிகுந்த சிநேகராய் விளையாடிக் கொண்டிருந்தோம்—என்றவாறு. (உச)

மாரவேளும் வசந்தனும்போலவே ... ...*
யாரவேபிரியா துறைநாளிலே ... ... *
சேரவூழ்வினை சென்றுதொடர்ந்திட ... ...*
மேருமால்வரைச் சாரலின்மேவினேம் ... .. *

(இதன்பொருள்.)

மன்மதனும் - அவன் சிநேகனாகிய வசந்தனும்போல் ஒருவற்கொருவர் பிரியாமல் வாசஞ்செய்கின்ற நாளையிலே முன்செய்த ஊழ்வினை வந்தடைய மகாமேருவின் சாரலிலே போய்ச் சேர்ந்தோம்—என்றவாறு. (உரு)

[வேறு - கலிவிருத்தம்.]

மாற்கரியமிக்கதுரு வாசமுனிவாழு ... *
மாச்சிரமமேலருகி லந்தமுனிகாமனை ... ...*
நீர்ச்சொரியநெஞ்சுருகி நின்றமரமெல்லாம் ... ... *
பூச்சொரியுநந்தவன மீதினிடைபுக்கோம் ... *

(இதன்பொருள்.)

கோபமிகுந்த துருவாசரிஷி வாழாநின்ற ஆசிரமத்தினருகிலே அந்தரிஷி மனமுருகித் தண்ணீர் சொரிய வளர்ந்த விருட்சங்களெல்லாம் புஷ்பங்களைச் சொரிகின்ற நந்தவனத்திற் புகுந்தோம்—என்றவாறு. (உசா)

புக்கவனத்திற்சிறு புதற்களைமிதித்தான் ... ...*
மிக்கவினையேனுமதின் மென்மலர்பறித்தேன் ... *
அக்கணமுணர்ந்துமுனி யங்கியிழியாலே ... ... *
தக்கவொளிமிக்கசடை கட்டவிழவந்தான் ... *

(இதன்பொருள்.)

அப்படிப்புகுந்த வனத்திற் சிறுபுதல்களை இந்தக்காந்திசாலி மிதித்தான், மிகுந்த வினையையுடைய நானும் அதுகளிலிருக்கிற மென்மையாகிய புஷ்பங்களைப் பறித்தேன் - அந்தக்ஷணத்திலே துருவாசரிஷி அறிந்து விழிகாளாலே நெருப்புகளைக் கொட்டிக்கொண்டு சடையவிழ்ந்துவிழக் கோபித்துவந்தார்—என்றவாறு. (உஎ)

முத்துமணியாமென முகத்தினில்வியர்ப்ப ... ... *
வித்துருமம்வைத்தனைய மெலலிதழ்துடிப்ப ... ...*
வுத்தரியப்விழ்வதை யடிக்கடியுயர்த்திச ... ...*
சித்திரவழற்பொறி தெறிக்கவிவைசொன்னான் ... *

(இதன்பொருள்.)

முத்துக்கள்போல் முகத்திில்வேர்வையுண்டாகவும், பவளம்போன் றமென்மையாகிய இதழ் துடிப்பவும், நழுவிப்போகின்றவஸ்திரத்தை அடிக்கடி உயர்த்திக்கொண்டு சித்திரமாகிய அக்கினிப்பொறிதெறிக்க இவைகளைச்சொன்னார்—என்றவாறு. (உஅ)

செந்தபனர்தங்கதி ருருதுசிறுகாலு ... ...*
நந்துமறுகாலுமொரு காலுமிதைநண்ணு ... *
முந்திமலையுதிர்ந்துபல ராதுமுடிவெய்தா... ... *
இந்தவனமீதொருவ ரெய்தவெளிதாமோ... .. *

(இதன்பொருள்.)

சிவப்பாகிய சூரியகிரணமும்-என்னுடையபயத்தினாலே வரமாட் டாது, தென்றற்காற்றும்-வண்டுகளும்-ஒருபோதும் இந்தவனத்தைய டையாதுகள், இலையுதிராது-வாடாது-நாசத்தையடையாது- இந்தவண த்தில் ஒருவர்வருகிறதற்கு எளிதோ—எ-று. (உகூ)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

சேவினார்க்கினியபூசைக் கனிமலர்செலுத்துங்காவில்... ... ...*
பாவிகள்புகுந்தென்கோபக் கனலிடைப்பஞ்சதாவீர் ... ... *
மேவியதுரங்க மாகென் றிவர்க்குறைவிடத்தையீந்தான்... ... *
தாவியாப்பிறப்பாயென்று றண்மலர்பறித்தவென்னை .. ... *

(இதன்பொருள்.)

இடபவாகனராகிய சிவனுக்கு-இனிமையாகியபூசைக்குச் சாத்தும் புஷ்பங்கள்பொருந்தியசோலையில் பாவிகளே, நீங்கள்புகுந்து என்னு டைய கோபமாகிய நெருப்பினிடத்திலே அகப்பட்ட பஞ்சாவீர்கள், குதிரையாய்ப் போங்களென்று விஷம்போல் அந்தக் காந்திசாலிக்குச் சாபத்தைக்கொடுத்தார். புஷ்பம்பறித்த என்னைப் புனுகுபூனையாய்ப் போவென்றுசபித்தார் துருவாசரிஷி—எ-று. (௩0)

கோபமேதவமதாகப் பலித்திடுங்கொடியோனிட்ட... ... *
சாபமேல்வரவேநாங்க ளிருவருந்தளர்ந்துஞானத் ... ... *
தீபமேயருளேயன்பர் செல்வமேயெனச்செங்கேறத்திப் ... ...*
பாபமேலிடுமிச்சாப மொழியுநாள்பகர்தியென்றேம்... ... *

(இதன்பொருள்.)

கோபமே தபசாகப்பலித்த பொல்லாத ரிஷியிட்டசாபம் எங்கள் மேல்வர, நாங்களிருவருந் தளர்ச்சியடைந்து ஞானவிளக்கே-திருவரு ளே- பத்தருடைய செல்வமே-என்றுவணங்கிப் பாவம் உண்டானதினா லே-எங்கள்மேல்வந்தசாபம் ஒழியுநாள் என்றைக்குச் சொல்லுமென் றுகேட்டோம்—என்றவாறு. (௩க)

முனிவதுகவிர்ந்துசாப முனிவனுமொழிவானிந்தத் .. ..*
தனிவருஞ்சாபஞ்சோண சலத்திலேவலஞ்செய்தாற்போ... ... *

மனிசருஞ்சுரரும்போற்று மலைவலம்புரிகைதானு... ... *
மினிமையாம்பாண்டிநாட்டி னிறைவனுமெய்துமென்றார் ... *

(இதன்பொருள்.)

துருவாசரிஷிக்குக் கோபம்நீங்கி நானிட்ட இந்த ஒப்பற்றசாபமானது-திருவண்ணாமலையை வலமாகவந்தாற்போம், மனிசரும்-தேவரும்-வணங்குகின்ற அந்தமலையைப்பிரதட்சணஞ்செய்தால சிறந்தபாண்டிதேயத்து ராஜாவினாலே கிடைக்குமென்றார்—எ-று. (௫௨)

என்றொருகதையுஞ்சொல்வா னெரியழற்கிரியதாக ... ...*
நின்றவெம்மிறைவன்முன்னு னொருவனக்கடவுளீந்த ... ... *
மன்றல்சேர்கனியைத்தன்சே யிருவரும்வருந்திக்கேட்க ... *
னின்றுலகனைத்துஞ்சூழ்ந்தோர்க் களிப்பனென்றிறையுஞ்சொன்னான்.

(இதன்பொருள்.)

இப்படிச்சொல்லி ஒருகதையுஞ்சொல்வார். அக்கினிமலையாகிநின்ற சுவாமியானவர், முன்னேவனக்கடவுள்கொடுத்த வாசனைபொருந்திய மாம்பழத்தைத் தம்முடைய பிள்ளையாகிய விநாயகர்-சுப்பிரமணியர்-இருவரும்வருந்திக்கேட்க, இன்றைக்குள் உலகமுழுதுஞ்சுற்றிவந்தவர்க்கு இந்தப்பழங் கொடுக்கிறேனென்று சொன்னார் — எ-று.

கந்தனுமயிலின்மேலேறிக் கடலுலகனைத்துஞ்சூழ... ... ... *
முந்தினன்கரியவானை முகத்தவனெழுந்தெல்லோர்க்குந் ... ... *
தந்தையார்தனதுதாதை தனைவலம்புரிந்தாற்றந்தை .. .. *
மைந்தனைத்தழுவிவேண்டும் வரத்துடன்கனியுமீந்தான்... ... *

(இதன்பொருள்.)

சுப்பிரமணியரும்-மயில்வாகனத்திலேறிக்கொண்டு சமுத்திரஞ்சூழ்ந்த பூமிமுழுதுஞ்சுற்றிவந்தார். யானைமுகத்தையுடைய விநாயகரெழுந்து [சுவாமிதானே உலகமாகியிருக்கிறார். அவரைச்சுற்றிவருதல்உலகத்தைச் சுற்றிவருதல் ஒக்குமென்று] எல்லார்க்குந் தகப்பனாகிய தன்னுடைய தகப்பனைப் பிரதட்சிணஞ்செய்தார். சுவாமி மகனைத்தழுவிக்கொண்டு வேண்டியவரங்களும் - பழமுங்கொடுத்தார் — எ - று.

மேவினன்கடிதுமேவிக் கனிதரவினவத்தம்மைக் .. .. *
காவினல்வலமாயிந்தக் கரிமுகன்வந்தானேழு... ... ...*
ஞாலமேவலஞ்செய்தாலும் பலபலதவஞ்செய்தாலும்... ... *
பாலகாநமைச்சூழ்தெய்வப் பலத்தினுக்கிணையோபார்க்கில்... .. *

(இதன்பொருள்.)

சுப்பிரமணியர் சீக்கிரத்தில் பூமியைச்சுற்றிவந்து பழங்கேட்கச் சுவாமி, நம்மை விக்கினேசுரன் சுற்றிவந்தான். ஏழுலகத்தை வலஞ்செய்தாலும்- பலபலவாகிய தவத்தைச்செய்தாலும்- மகனே நம்மை சுற்றிவரும் பலனுக்குச்சமானமோ பார்க்குமிடத்தில்—எ-று. (௫௫)

செம்மலையுருவாநம்மைத் தினம்வலம்புரிந்தோர்வேதன் ... ... *
நம்மினுமதிகமாயோன் றனக்குமேசதிகம்பார்க்கி ... ... *
னும்மினுமதிகரிந்த வுமையினுமதிகர்மைந்தா ... ... *
எம்மினுமதிகமென்று லெவர்க்குமேலதிகமானோன் ... ... *

(இதன்பொருள்.)

சிவப்பான மலையுருவாகிய நம்மைத்தினம்வலம்வந்தவர்கள்-பிரமாவிலும் அதிகராவர், விஷ்ணுவிலும்அதிகராவர், பார்க்கில் உம்மிலும் அதிகராவர், பார்ப்பதியிலும் அதிகராவர், மகனே எம்மைப்பார்க்கிலும் அதிகராவரென்றார். எல்லாருக்குமேலாகியசிவன்—எ-று. (௧௬)

மாசிலாநமதுமேனி வரைதனக்கமரர்தாமும் ... ... *
பூசனைபுரியமாட்டா ரதைவலம்புரிந்தபேருக் ... ... *
காசையாயளிக்கும்பூசை நமக்கினிதளிக்கும்பூசை ... ... *
கூசுமாறிழைத்ததீங்கு நமைச்செயுங்கொடுமையாகும் ... ... *

(இதன்பொருள்.)

குற்றமில்லாத நமது உருவாகிய இந்தமலைக்குத்தேவர்களும்-பூசை பண்ணமாட்டார்கள், அதைவலமாகச்சுற்றிவந்தவருக்கு ஆசையுடனே செய்கிற பூசைநமக்கு இனிதாகச்செய்கிறபூசையேயாகும், அவர்களுக்குக் கூசும்படி செய்ததீமை நமக்குச்செய்ததீமையேயாகுமென்று சுவாமி சுப்பிரமணியருக்கு அருளினார்—என்றவாறு. (௧௭)

என்பதுமொழிந்தாலத்த னெனச்சொலிமுனிவன்போனான் ... *
பின்பதன்படியேநாவி புரவியாப்பிறந்தோமென்று ... ... *
தென்புவியடையாய்நின்னாற் றிருமலைவலமும்பெற்றே ... ... *
மின்பொலிபழையகோலம் படைத்தெழில்விமானத்தானோம் ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் சுவாமிசொன்னாரென்று துருவாசரிஷி சொல்லிவிட்டுப்போனார், பின்பு அந்தப்படி குதிரையாகவும்-நாவியாகவும்-பிறந்தோம், இன்றைக்குப்பாண்டியதேசத்தையுடைய அரசனே, உன்னால் திருமலையைப்பிரதட்சிணஞ்செய்தோம், மின்னலைப்போலப்பிரகாசியாநின்ற பழைய உருவைப்பெற்று விமானத்தில் ஏறினவர்களானோம்—என்றவாறு. (௧௮)

எங்கடம்வரவிதுன்பா லிங்கண்வந்தடைந்ததிந்த ... ... *
வெங்கனல்வரையைமாவின் மிசைவலம்வருகையாலே ... ... *
பொங்கியசதுவும்பூசை புரிந்திடிற்போமென்றோதித் ... ... *
தங்களூர்புகுந்தார்காந்தி சாலியுந்தரனுமாக ... ... *

(இதன்பொருள்.)

எங்களுடையசரித்திரம்இது-அக்கினிசொரூபமாகிய இந்தமலையைக் காலினால் வலஞ்செய்யாமல் குதிரையின்மேலேறி வலஞ்செய்தபடியினா

லே உனக்குத்துன்பம்வந்து சம்பவித்தது-அதுவும் சுவாமியைப் பூ
சைசெய்தாற்போமென்று சொல்லிக் காந்திசாலியும் கலாதரனும் தங்
களூர்க்குப் போனார்கள்—என்றவாறு. (௩௯)

வேழமும்பரியுந்தேரும் வீரருஞ்சுவடுநாடிச் ... ... *
சூழமந்திரிகளோடுஞ் சூழ்ந்தனர் துயரந்தீர்ந்தான் ... *
தாழையிற்கமுகின்காடுந் தவளவாய்கதிரைத்தீண்டும் ... ... *
வாழையிற்கரும்பின்சாற்றின் வளர்ந்திடும்வையைநாடன் ... *

(இதன்பொருள்.)

அதன்பின்பு யானையுங்-குதிரையும்-தேரும்-காலாள்களும்-அடிபற்
றிக்கொண்டு மந்திரிகளுடனே ராஜாவைச் சுற்றிக்கொண்டார்கள், அ
ப்பொழுது விசனம்நீங்கினான், தென்னமரங்களும்-கமுகவனமும்-ச
ந்திரனைத்தொடவும், வாழைமரங்களும்-கரும்பின்சாற்றினாலே வளர்த்தி
டும் பாண்டிநாட்டரசனாகிய வச்சிராங்கதபாண்டியன்—எ-று. (௪௰)

அரதனங்கதனைமைந்தன் றனைக்கடிகழைப்பித்சாதி ... ... *
பரதனைமனவிப்பாரைப் புரவெனப்பகர்ந்தான்சீல ... ... *
விரதனுங்கதனைக்கேளா வதன்முனம்விடைபெற்றானை ... *
யிரதநான்மருங்குஞ்சூழப் பதிபுகுந்திறைமைசெய்தான் ... *

(இதன்பொருள்.)

வச்சிராங்கதபாண்டியன் தன்பிள்ளையாகிய ரத்தினங்கதபாண்டிய
னைச்சீக்கிரத்தில்வரவழைத்து முன்னாள் நமதுவமிசத்திற் பிரபலனாகி
யிருந்தபரதன்போல்ராச்சியத்தைக் காப்பாற்றென்று சொன்னான்-அ
ந்தவார்த்தையைக்கேட்பதற்குமுன்னே விடைபெற்றுக்கொண்டு மக
னானவன்-யானை-தேர்-முதலாகியசேனைகள்சூழ மதுரைக்குப்போய்ரா
ச்சியபாரஞ்செய்தான்—என்றவாறு. (௪௧)

முறையினிறையின்வந்த கனகமுமுத்துந்தெவ்வர் ... ... *
திறையினாலளந்தபொன்னுந் தினந்தொறுங்களிற்றின்மேலே ... *
இறைவனுந்தனதாதைக் களித்திடவிறையன்வேணிப் ... *
பிறையினார்க்கினியபூசை திருப்பணிபெரிதுஞ்செய்தான் ... *

(இதன்பொருள்.)

நியாயமாக ஆறிலொருகடமைகொண்ட திரவியமும்-கடலிற்குளி
த்துவாரிவந்த முத்துக்களும்-சத்துருக்கள்திறையிட்ட பொன்னுந்-தி
னந்தோறும், யானையின்மேலேற்றி அரசனாகியதன்தகப்பனுக்கு அ
னுப்பிவிக்க-வச்சிராங்கதபாண்டியன் சடையில் சந்திரனைத்தரித்த சு
வாமிக்கு இனிமையாகியபூசை, திருப்பணிபெரிதாகச்செய்தான்-எ-று.

செய்தபின்தவமதாகிக் கவுதமாச்சிரமத்தோர்பா ... ... *
லெய்தியபன்னசாலை யியற்றிநம்பாவந்தீர்க்கு ... ... *

மைத்தவழ்மிடற்றார்க்கன்பாய் மலைவலஞ்செயுநாளந்தக் ...*
கைதவற்கெதிரேநந்தான் கைதவர்க்கெதிரேவாரான் ... *

(இ-ள்.) அருணசைலசுரர்க்குத்திருப்பணியும்-பூசைமுதலான வைகள்சிறப்பாக நடந்தபின்பு தவசுசெய்கிறதற்கு நினைந்து கௌதமருடைய ஆசிரமத்திலொருபக்கத்திற்சேர்ந்து பன்னகசாலைகட்டி நம்முடையபாவந்தீர்க்காநின்ற நீலகண்டத்தையுடையசுவாமிக்கு அப்பாகக் கிரிபிரதட்சணஞ் செய்கின்றநாளில் கைதவனாகிய பாண்டியனுக்கெதிரேதோன்றினார், வஞ்சம்பொருந்தியமனத்தையுடையவர்க்கெதிரே வராதபரமசிவன்—எ-று. (௪௩)

அஞ்சிறுபிறையும்போதவருள்பொழிவிழியுநீல...... ... ...*
மணிக்கறைமிடறுநாலு புயங்களுமலர்க்கைமானும் ....*
கணிச்சியும்விடையின்மீதிலிருப்பதுங்கண்டென் பாவப்...... ...*
பிணிச்சிறைவிடுப்பதென்றோவெனச்சொலிப்பெருநந்தாழ்ந்தான்.

(இதன்பொருள்.)

அழகுபொருந்திய சிறியசந்திரனையும், மிகவுங் கருணைபொழியாநின்றகண்களையும், நீலமணிபோல-பிரகாசியாநின்ற கண்டத்தையும், நான்குகைகளும்-புஷ்பம்போன்றகையில், மானும், மழுவையும், உடையவராகிய, ரிஷபவாகனத்தின்மேலிருப்பதுபார்த்துஎன்னுடையபாவப்பிணிப்பு என்னைவிடுவது என்றைக்கோ என்றுசொல்லி மிகவும்பாண்டியன்வணங்கினான்—என்றவாறு. (௪௪)

(வேறு- அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

அண்ணாமலையுடையாய்மழவிடையாயணிசடைசேர் ... *
தண்ணுமலையுடையாமையுடைய ய்நுதல்தழுவுங் ...*
கண்ணுமலையுடையாய்வினைகடவாரறிவறிதற் ... ... *
கொண்ணாமலையுடையாயுமையுண்ணாமுலைதலைவா ... *

(இதன்பொருள்.)

அண்ணாமலையென்னும்பெயரையுடையவரே, இளமையாகிய ரிஷபத்தையுடையவரே, அழகுபொருந்தியசடையிலே குளிர்ச்சிபொருந்தியகங்கையையுடையவரே, எங்களையாட்கொள்ளும் உடையவரே, நெற்றியிற்கண்ணையுடையவரே, பாவிகளறியப்படாத கைலாயத்திலிருக்கின்றவரே, உண்ணாமுலையாகிய பார்ப்பதியினது தலைவரே—என்றவாறு. (௪௫)

மைபாகியவினையேனுனையொருமாவினில்வலமாச் ... *
செய்யாததுசெய்தேனிதுதீரொன்றுரைசெய்தான் ... *
பொய்யாதவன்மொழிகின்றதுகண்டேயருள்பொழிவுற்... *
றையானவனுடையான்மழவிடையானிவையருள்வான் ......*

(இ-ள்.) தீவினையையுடையவனாகியநான் உம்மைஒருகுதிரையின்மேலேறி வலமாகவந்து செய்யத்தகாத காரியம் அதை நான் செய்தபடியினு

லேபொறுத்தருளவேண்டுமென்று பொய்யில்லாதபாண்டியன் சொல்ல, அதைக்கேட்டு கிருபையுண்டாகி இளமைபொருந்திய ரிஷபவாகனராகிய ஐந்துதிருமுகத்தையுடைய பரமசிவன் அருளிச்செய்வார்— என்றவாறு. (சுகூ)

மன்னுமகபதிநீயெமைப்பகிபாதொருகுலிச ... *
மந்நாள்விடவுந்றுயகனுமேலநரர்வடிவா ... *
யின்னுதனபெற்றுயினியிமையோரதிபதியாய்ப் ... *
பொன்னுடனையென்றேவரம்பொழிந்தேயிறைமறைந்தார்.

(இதன்பொருள்.)

வச்சிராங்கதபாண்டியனே! நீபூர்வஜென்மத்தில் தேவேந்திரனுகியிருந்தாய், அந்தநாளில் நம்மைஅலட்சியஞ்செய்துவச்சிராயுதத்தைநம்மேல்பிரயோகஞ்செய்தாய், அதனாலே பூமியிலேமனிதனுகப் பிறந்து துன்பத்தையடைந்தாய், அதன்பின்பு நம்மைப்பூசித்து வலம்வந்தபடியினாலே இனிதேவர்களுக்கு அதிபதியாகத்தேவலோகத்துக்குப்போவென்று வரங் கொடுத்துச் சுவாமி மறைந்தார்— என்றவாறு. (சுஎ)

அருணைப்பதிவளமிப்படிய நணுபுரிநினைவோ ... *
மரணத்துகளடையார்சிவன்வடிவாகுவரென்றான் ... *
கருணைக்கொருகடலேபரகதிபெற்றனனென்மே ... *
சரணத்திடைபணிந்தானமன்றனைவாட்டியதவத்தோன் *

(இதன்பொருள்.)

அருணாசலத்தின்வளமிப்படி இந்தஸ்தலத்தைநினைப்பவர்கள்மரணமாகிய துன்பத்தைப்பொருந்தாமல் சிவனுடையரூபம் பெறுவார்களென்று நந்திகேசுரர்சொல்ல, யமனைவாட்டியபடியாகச்செய்த தவத்தையுடைய மார்க்கண்டேயர்கேட்டுக் கிருபாசமுத்திரமானவரே, உம்மாலேபரகதியடைந்தேனென்று பாதத்திலேவணங்கினார்— என்றவாறு.

இக்காதையில்பொருளானதோரெழுத்தாகிலுந்தெளிந்தோர்*
தக்காருடன்படித்தார்சிவசாயுச்சியம்பெறுவார் ... ... *
முக்காலமுமி துகற்றவர் வினைவிப்பொருண்முடிப்பார் ... *
புக்கார்சிவகதியென்பதுபுதுமைப்பொருளன்றே ... *


(இதன்பொருள்.)

இந்தகதையில்ஒருஎழுத்தினதுபொருளாயினும்அறிந்தோர்களும் பெரியோர்களோடுபடித்தவர்களும், சிவசாயுச்சியமடைவர், திரிகாலத்திலும்-இதுகற்றவர்கள் இதின் அர்த்தத்தைக்கேட்டு முடிப்பார்கள்-சிவகதியிற்சேருவார்களென்பதுஆச்சரியமோ— என்றவாறு. (சுஅ)

ஆறுவது

வச்சிராங்கதபாண்டியன் சருக்கம்— முற்றுப்பெற்றது.

ஆ திருவிருத்தம்— சாசுஅ.



சிவமயம்.

தீர்த்தசருக்கம்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.)

சொருமலையுங் களிற்றுமுகப் பிள்ளையிரு பதம்போற்றித் திரையா
ன்முத்தக், கருமலையு மொருமலையுந் தொலைத்தமலைக் கிழவனிருசரண
ம்போற்றிப், பொருமலையு மிரங்கலையுமடியாருக் கொழிக்கவழற்பொ
ருப்பாய் நின்றென், கருமலையுஞ் செய்மலையும் பச்சைமலை மடந்தை
யையுங் கருத்துட் சேர்ப்பாம்... ... ... *

(இதன்பொருள்.)

உயுத்தஞ்செய்யத்தக்கயானையின முகத்தையுடையபிள்ளையாரது இரண்டுபாதத்தையும்வணங்கி அலைகளாலே முத்துக்களைக் கொழிக்குஞ் சமுத்திரத்தையும்,கிரவுஞ்சமென்னுமலையையும், அடக்கியசுப்பிரமணியரது பாதத்தைவணங்கித் துன்பத்தையும், இரங்குதலையும், அடியார்களுக்கு ஒழிக்க அக்கினிமலையாகநின்று என்னுடைய பிறவியைக் கெடுக்குஞ் சிவனையும், மரகதநிறம்பொருந்திய பார்ப்பதியையும் மனதிற் சேர்ப்பாம்—என்றவாறு. (௧)

(கலிவிருத்தம்)

தேங்கு மன்பிற் சிவபுரா ணந்தனி... ... . *
லோங்கு ருத்திர சங்கிதை யோதினேன் ... ... *
பாங்கி லிங்க புராணப் பரப்பினு... ... ... *
மீங்கறிந்த படியு மியம்புவேன்... ... ... *

(இதன்பொருள்.)

பெருகிய அன்பினாலே சிவபுராணத்தில உயர்ந்திருக்கின்றருத்திர சங்கிதையை முன்சொன்னேன்.பெருமையாகிய லிங்கபுராணப் பரப்பிலே நானறிந்த தன்மையையுஞ்சொல்வேன்—எ-று. (௨)

ஆதிவேத னருளச்சனகனும் ... ... *
வேதம் வல்ல வியாதனுக் கீந்தனன் ... ... *
சூதனுக்கவன் சொல்லினன் சூதனு ... ... *
மேதமற்ற விருடியர்க் கீந்தனன் ... ... *

(இதன்பொருள்.)

ஆதியிலேபிர்ம்மாசனகரிஷிக்குச்சொல்ல,சனகர்வேதவியாசருக்குச்சொல்ல, வியாசர் சூதரிஷிக்குச் சொன்னார். சூதரும் குற்றமற்றநைமிசாரணியத்து ரிஷிகளுக்குச்சொன்னார்—எ-று. (௩)

வன்னி மாமலைத் தோற்றமும் வான்மலைக் ... ... *
கன்னி பாகங் கலந்தது முன்னமே ... ... *
சொன்ன தாதலி னங்க தொழித்ததன் ... ... *
பின்னருள்ள கதைசில பேசுவாம் ... ... *

(இதன்பொருள்.)

அக்கினிமலையானது தோன்றினதும், பெருமைபொருந்தியமலைப்பெண்ணான பார்ப்பதிசுவாமியினுடைய பாகம்பெற்றதும், முன்னமேசொன்னபடியினாலே அதைநீக்கிப் பின்னுண்டாகியசிலசரித்திரங்களைச் சொல்லுவோம்—எ-று. (௪)

தீர்த்தமும்மதிற் செய்தருமங்களும் ... ... *
வாய்ந்தவெற்பின் வளமுமிலிங்கமு ... ... *
மேத்திடாதவ ரெய்துமிகழ்ச்சியும் ... ... *
பார்த்தரன்பொருள் கொண்டவர் பாவமும் ... *

(இதன்பொருள்.)

தீர்த்தங்களின் மகிமையும், அதிற்செய்யப்பட்ட தருமங்களும்கிரிப்பிரதட்சணத்தின் மகிமையும், லிங்கமகத்துவமும், சுவாமியைவணங்காதவர் அடையும் இகழ்வும், அவரடைந்த இகழ்ச்சியைப்பார்த்தும், சுவாமியினது பொருளை அபகரித்தவர்களுக்கு வருகின்றபாவமும்—எ-று. (௫)

பந்த மாயறி யாதுசெய் பாவமுஞ் ... ... *
சிந்தை யார வறிந்துசெய் தீமையும் ... ... *
முந்தை யோர்க ளொழித்த முறைமையு ... ... *
மெந்தை நான மகிழ்வு மியம்புவேன் ... ... *

(இதன்பொருள்.)

பந்தவசமாய் அறியாமற்செய்த பாவமும், மனதார அறிந்துசெய்தபாவமும், முற்காலத்திலுள்ளவர்கள் அப்படிவந்த பாவத்தைத்தீர்த்துக்கொண்ட முறைமையும், சுவாமியினால்மகிழ்ச்சியடைந்தபுழுகுபூனையின் செய்கையும் சொலலுகிறேன்—எ-று. (௬)

(வேறு-அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

விருப்பில்கோதமனாீசன் றிருமுனேவேள்விநாட்டத்... ... ... *
திருப்பொலிசடையோன்றன்னாற் செனித்திடுமறையோனங்கு .... *
உருப்பொலிகனலேனென்ன வுதித்தனனவனைநோக்கிப் .. ..*
பொருப்பிறையவனைப்பூசை புரியெனப்புகழ்ந்துசொன்னான் ... *

(இதன்பொருள்.)

உலகத்துஆசையில்லாத கௌதமரிஷி சுவாமியின் சந்நிதிமுன்னே வேள்வியொன்று செய்கிறதற்கு எத்தனித்து அக்கினிவளர்க்க அழகு பொருந்திய சடையையுடைய அந்தச்சுவாமியின் கிர்பையால் முன்னேதோன்றியிருக்கிற சிவப்பிராமணன் அந்தயாகத்தில் அக்கினிசொரூபம்போல் பிறந்தான். அவனைப்பார்த்துக் கிரிரூபமாகிவிளங்கிய அருணாசலேசுரரைப் பூசைசெய்யென்று புகழ்ச்சியாக வுபசாரஞ்சொன்னார்—என்றவாறு. (எ)

மற்றுமெழ்தருப்பைதீயி லிடுதலுமலர்மாதென்னக் .. ..*
கற்றையங்குழலெழ்மின்னா ருதித்தனர்கணிகைமாராய்... ... ...*
நிற்றலுமிறைவர்முன்னே நிருத்தமேபுரியுமென்றா ... ...*
னற்றடம்பலவுங்கண்டு நகரமுஞ்சிறப்புஞ்செய்தார்... ... ...*

(இதன்பொருள்.)

அதன்பின்பு கௌதமர் எழுதர்ப்பையையெடுத்துக் குண்டத்தின் அக்கினியிலே போட்டஅளவில்,லட்சுமிபோலக் கற்றையாயிருக்கின்ற கூந்தலையுடைய எழு பெண்கள் தேவதாசிகளாகப்பிறந்தார்கள். அவர்களைப்பார்த்து நீங்கள் சுவாமியின்சந்நிதியிலே நாட்டியஞ்செய்துவருங்களென்றார், அவர்கள் நன்மையாகிய தடாகங்கள் பலவுண்டாக்கி ஊரைச்சிறப்புசெய்தார்கள்—எ-று. (அ)

மந்திரம்பரவும்வன்னி மலைதனக்கடுத்தகீழ்பா ... ...*
லிந்திரதடமுண்டந்த விந்திரன்முதலேகண்ட ... ... *
தந்தரத்தமரர்தாமு மதிற்றினமுழ்கலாலே ... ... *
சந்தனக்குழம்புநாறு மணக்குமைந்தருவின்மாலை... ... ...*

(இதன்பொருள்.)

தேவர்கள் மந்திரங்களாலே தோத்திரம்பண்ணப்பட்ட அக்கினிமலைக்கு அடுத்த கிழக்குத்திக்கில் இந்திரதடாகமென்றொன்றுண்டு, அதுதேவேந்திரன்முன் உண்டாக்கினது, தேவலோகத்திலுள்ளவர்கள்-அதில் நித்தியமுழுதலாலே சந்தனக்குழம்பின் வாசனையும்,கற்பகபுஷ்பத்தின் மாலையுமணக்கும்—என்றவாறு. (௯)

பரமமாமதிற்றைப்பூசம் படிந்திடிற்பருகிற்கோடி........ .... *
பிரமபாதகம்போமென்றா லதினலம்பேசலாமோ ...., *
சுரர்பதிமுழ்கிமுன்னே தொடர்ந்ததீவினைகடீர்ந்தா....... .. ..*
னிரவியுள்ளளவும்வாழ விமையவருலகம்பெற்றான்... ... ...*

(இதன்பொருள்.)

மேன்மைபொருந்திய அந்தத் தேவேந்திரதீர்த்தத்திலே தைப்பூசத்தில் ஸ்நானஞ்செய்து ஒருகைஜலம் ஆசமனஞ்செய்தால், கோடிபிரமஹத்தி தோஷம்போமென்றால்-அதன்பெருமையைப் பேசக்கூடுமோ தேவேந்திரன்முன்பு அதிலமூழ்கித் தன்னைப்பற்றிய தீவினைகளைத் தீர்த்துக்கொண்டு சூரியனுள்ள அளவும்வாழத் தெய்வலோகத்தலைமையும் பெற்றான்—என்றவாறு. (௰)

அங்கிசன் பெயராந்தீர்த்த மருணைமால்வரைத்தென்கீழ்பால் ... .. *
பொங்கியததனின்மீனத் திங்கட்பூரணையின்மூழ்கிற்........ ......*
செங்கைபற்கருங்கட்செவ்வாய்த் திருந்திழையவரால்வந்து . ... . *
தங்கியவினையுந்தீருந் தருமமுந்தவமுஞ்சாரும்..... ....*

(இதன்பொருள்.)

அருணாசலத்துக்குத் தென்கிழக்கில் அக்கினிதீர்த்தமென்றொன்றுண்டு அதில்பங்குனிமாசப் பௌர்ணிமியில்முழுகினால்- செம்மைபொருந்திய மீன்போன்ற கரியகண்களையும்- சிவப்பாகிய வாயையுமுடைய மாதர்களாலேவந்து பொருந்தியபாவமுந்தீரும், தர்மமும் தவசும் சேரும்—எ-று. (௰௧)

வன்னிமுன்னொருநாளேழு மறைக்குலமுனிவர்காதற்... ... .*
றுன்னியமடந்தைமாரை விரும்பத்தன்சுவாகைபந்தப்............ .. *
பன்னியர்வடிவமாகப் புணர்ந்துமேற்படர்ந்தபாவந்............... *
தன்னைத்தான்கண்டவந்தத் தடத்தினிற்படிந்துசாய்த்தான்... ... ...*

(இதன்பொருள்.)

அக்கினிதேவன் முன்ஒருநாள்வேதமுணர்ந்த எழுமுனிவர்களுடைய பத்தினிகளைவிரும்ப, அதைத்தனது பெண்சாதியாகிய சுவாகாதேவி என்பவளறிந்து அந்தஸ்திரீகள் ரூபத்தைதானெடுக்கப்புணர்ந்துமேலே நினைத்தபாவத்தைத்தீர்க்கத்தன்னாலே உண்டாக்கப்பட்ட அந்தத்தடாகத்தில்ஸ்நானஞ்செய்து பாவத்தைப்போக்கிக்கொண்டான்—எ-று.

தென்றிசைதருமதீர்த்த முளததிற்செறிந்துமூழ்கிற்...... ....*
பொன்றிகழ்வடிவமாகு முடற்பிணிபொடிபட்டோடும்........ ...*
வென்றியிற்காலன்முன்னாள் விதிப்படைதொடரமேனி . ...*
குன்றியசாபந்தீர்த்தா னதனிடைக்குளித்துமாதோ...... ... .*

(இதன்பொருள்.)

பின்னும் அந்தமலைக்குத் தெற்குப்பக்கத்தில் யமதீர்த்தமென்றொன்றுண்டு, அதில் அடைந்துமுழுகினால் உடல்பொன்வடிவாகும், தேகத்திலுள்ள-வியாதிபோம், வெற்றிபொருந்திய பிரம்மாவினது ஆயுதந்தொடர்ந்து தேகங்குன்றினதை யமனானவன் அதில்முழுகித் தீர்த்துக்கொண்டான்—எ-று. (௰௩)

நீங்கருநிருதிதீர்த்த மூளதுமேனிருதிகோணத் ... *
தாங்கதின் மூழுகினோருக் கரும்பகைபனைத்துந்தீரும் ... *
ஓங்குசமத்தடத்தின் முன்னே யுருகியேநிருதிமூழ்கி ... *
வீங்கியகனற்கட்பாழ்வா யலகையின்விசயம்பெற்றான் ... *

(இதன்பொருள்.)

நீங்குதற்கருதாகியநிருதிதீர்த்தமொன்று நிருதிமூலையிலிருக்கின்றது அதில்முழுகினவர்களுக்கு அரியபகைகளெல்லாந் தீரும் உயர்ந்த அந்ததீர்த்தத்தில் முன்னைமுழுகினபலத்தினாலே நிருதியானவன்நெருப்பு நிறம்போன்ற கண்களையும் ஆழமாகிய வாயையுமுடைய பேயைத் தன்வசமாக்கிக்கொண்டான்—என்றவாறு. (௰௪)

வசையறுமலைக்குமேல்பால் வளம்பெறுவருணதீர்த்த ... *
நசைபெறவதனின்மூழ்கிற் கிரகமொன்பானு நன்றாம் ... *
இசைபெறக்கிரகமெல்லா முழுகுமவ்விடத்தில்வாயு ... *
திசையினிற்பவனதீர்த்த முழுகிலெத்துயருந்தீரும் ... *

(இதன்பொருள்.)

குற்றமற்ற அருணகிரிக்கு மேற்குத்திசையில் வளம்பொருந்தியவருணதீர்த்தமென்றொன்றுண்டு ஆசையுண்டாக-அதின்முழுகினால் ஒன்பதுகிரகங்களும் நன்மையைக் கொடுப்பார்கள். முன்அந்த ஒன்பதுபேரும் அதிலதங்களிஷ்டத்தையடையமூழ்குவார்கள். வாயுதிக்கிலே வாயுதீர்த்தமொன்றுண்டு அதில்முழுகினால எல்லாத்துன்பமுந்தீரும்—என்றவாறு. (௰௫)

வடதிசைகுபேரதீர்த்த முழுகினோர்வறுமைபோமத் ... *
தடமதிற்குணபாலீசன் மருத்துவர்சமைத்ததீர்த்தம் ... *
புடைசெறிந்ததனின்மூழ்கிற்புலையறிற்கடையரேனு ... *
மடைவுடன்வருணநான்கி லதிகமாயரனைச்சேர்வார் ... ... *

(இ-ள்.) வடக்குத்திக்கிலே குபேரதீர்த்தமொன்றுண்டு, அதில்முழுகினவர்களுடையதரித்திரம்நீங்கிப்போம், அதற்குக்கிழக்கு ஈசானியதிக்கிலே அசுவினிதேவர்களாலே உண்டாக்கப்பட்ட தீர்த்தம் இருக்கின்றது, அதிலமுழுகினால்நீசரைப்பார்க்கிலும்இழிந்தவராயிருந்தாலும்பெருமையோடு நான்குவருணத்திலும் அதிகமாகிப் பரமசிவனைச் சேருவார்கள்—என்றவாறு. (௰௬)

அந்தகத்தடத்திற்றென்பா லகத்தியத்தடமுண்டங்கே ... ... *
முந்தியகன்னிமாத மூழ்கியுட்கொண்டபேர்கள் ... ... *
சந்திரவதனங்கண்டார் தமிழ்க்கவிக்கரசராவர் ... *
செந்திருமயிலுங்கல்விச் செல்வியுஞ்சேருமன்றே ... *

(இதன்பொருள்.)

முன்தெற்காகச்சொன்ன யமதீர்த்தத்துக்குத் தெற்காக அகத்தியதீர்த்தமென்றொன்றுண்டு, அதிற்புரட்டாசிமாதத்தில்முழுகினொருகை

ஜலம் உட்கொண்ட பேர்களுடைய சந்திரனையொத்த முகத்தைப்பார்த்தவர்கள் சுபிறிற் சிறந்தவராவார்கள். லட்சுமியுஞ்சரஸ்வதியும் அவரிடத்திற் சேர்ந்திருப்பார்கள்—என்றவாறு. (௰௭)

தனபதிதடத்தைச்சேர வதிஷ்டனார்தடமுண்டந்த ... *
முனிவரைப்பசியின்மூழ்கி முனிவரிற்றலைமைபெற்று ... *
ரனையதின்மூழ்கினோர்கட்கங்கமுஞ்செங்கைநெல்லிக் ... *
கனியெனவிளங்கும்பாவக் கடலதுங்கடப்பரன்றே ... *

(இதன்பொருள்.)

முன்சொன்ன குபேரதீர்த்தத்துக்கருகேவதிஷ்டதீர்த்தமென்றொன்றுண்டு, அதில்வதிஷ்டர் ஐப்பசிமாதத்தில் முழுகிமுனிவர்களுக்கெல்லா முதன்மையாயிருக்கப்பெற்றார். அப்படிப்பட்டதில்முழுகினவர்களுக்குச் சாஸ்திரங்களெல்லாம் உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விளங்கும் பாவமாகிய கடலையுந்தாண்டுவார்கள்—என்றவாறு. (௰௮)

கங்கைவேற்குமரனானை முகத்தவன்கதிரோன்வெற்பின் ... ... *
மங்கையோர்வடுகன்கன்னி மதியமெண்வசுக்கள்வெள்ளைப் ... *
பங்கயமடந்தைதேவர் குடைதடம்பலவுஞ்சூழ ... ... *
மங்கதோர்தடத்தின்மேன்மை மறைகளுமறிவுறாதே ... *

(இதன்பொருள்.)

கங்கை-வேலாயுதத்தையேந்திய, சுப்பிரமணியர், விக்கினேசுரர், சூரியன், பார்ப்பதி, வயிரவர், சத்தகன்னிகள், சந்திரன், அஷ்டவசுக்கள், சரஸ்வதி, மற்றுமுள்ள தேவர்கள்முழுகியதீர்த்தங்கள் அநேகமுண்டு, அதுகளில் ஒவ்வொருதீர்த்தத்தின்பெருமையைவேதங்கள்கூடச்சொல்ல அறியாதுகள்—என்றவாறு. (௰௯)

ஒருநதிதானுமொவ்வாத் திருநதிவடபாலாக ... ... *
வருநதிமுழுகிப்பூமான் மாயவனுரத்திற்சேர்ந்தா ... ... *
ளருமறைபரவுஞ்சோணை நன்னதிதென்பாற்றோன்றுஞ் ... *
சுரநதியமுனைபொன்னி படிந்துதந்துயரந்தீர்த்தார் ... *

(இதன்பொருள்.)

ஒருநதியையும் ஒப்புச்சொல்லக்கூடாத திருநதியென்று ஒருநதி அருணாசலத்துக்கு வடக்குப்பக்கத்தில் உண்டு, அதில் லட்சுமி முழுகி விஷ்ணுவினுடையமார்பைச்சேர்ந்தாள். நர்மதாநதிவணங்குஞ்சோணையென்று ஒருநதி அருணாசலத்துக்குத் தென்பாரிசத்திலிருக்கும் அதில் கங்கையமுனை காவேரிமுதலிய நதிகள் முழுகித் தங்கள் துன்பத்தைப்போக்கிக்கொண்டார்கள்—என்றவாறு. (உ௰)

புண்ணியவாறுதெய்வ மலைக்குமேற்றிசையிற்பொங்கு ... *
நண்ணியபுண்ணியாற்று றென்றும்பேர்நகரந்தானும் ... *

எண்ணியநதியின்மூழ்கி யீழனென்னரசன் றீங்காம் ... ... *
பெண்ணியல் வடிவந்தீர்ந்தான் வடிவமும்பேறும்பெற்றான் ... *

(இதன்பொருள்.)

தெய்வீகம் பொருந்திய அந்தமலையின்மேல் [illegible] புண்ணிய நதியென்று ஒன்றுண்டு, அதினருகிலே புண் [illegible] றொரு நகரமுண்டு, அதில்இருந்த ஈழனென் [illegible] கந் தடைந்த பெண்ணுருவத்தை அந்தநதி [illegible] உரு வமும்வேண்டியபேறும்பெற்றான்—எ-று. (௨௧)

திருந்துசேயாறுமுன்சொ றிருநதி வடபாற் [illegible] ... ... *
பொருந்தவேலெறிந்துசெவ்வே ளழைத்தவட் [illegible] ... *
லருந்திகழயிலோன்மூழ்கி யசுரரைத்தொலைக்கு [illegible] ... ... *
மருந்தயிலமரர்சேனுபதியெனும்வரமும்பெற்று [illegible] ... ... *

(இதன்பொருள்.)

அழகியசேயாறு என்னு நதிமுன்சொன்ன தி[illegible]க்குவட பாரி த்திலிருக்கும் அதுமுன் சுப்பிரமணியர்வேலெறிந் [illegible] ழைத் தீர்த் தம்அதில்மிகவும்பிரகாசிக்கின்றவேலையுடைய அந்தசுப்பிரமணியரே மூழ்கி அசுரர்களைக்கொலலும்வரமும் அமிர்தபானஞ்செய்யுந் தேவ ர்களுடையசேனுபதியென்கிறம்பரும்பெற்றார்—எ-று. (௨௨)

நிருத்தராலயத்தினுள்ளேசிவதடமுளதுநித்தங் ... ...*
கருத்தினுனினைத்தால்தெய்வக்கங்கையிற்படித்ததொக்கும் ... *
உருத்திரர்பலருமாசிமகத்திலேயுகந்துமூழ்கி ... ... *
எருத்தினிலிருந்துதேவரெவரினும்மேற்றம்பெற்றார் ... ... *

(இதன்பொருள்.)

சுவாமியினது ஆலயத்தில் சிவகங்கையென்று [illegible] தீர்த்த முளது, அதைத்தினந்தோறும் தன்மனதிலேநினைத்தா [illegible] கையில்மூழ் கினபலனுண்டாகும், அந்நகருத்திரர்கள்மாசிமக [illegible] ஸ்நானஞ்செ ய்துரிஷபவாகனரூடராய் எல்லாத்தேவர்களிலும் [illegible] மைபெற்றார் கள்—எ-று. (௨௩)

சக்கரதீர்த்தமந்தத்தடத்தினிற்குணபாற்முன் [illegible] ... ... *
மைக்கடலனையமேனிவராகமால்படிந்ததாகும் ... ... *
அக்கரைவலமாய்வந்தோர்முழுகினோரருந்தும் [illegible] ... ...*
துக்கசாகரம்விட்டீசன்றுணைப்பதப்பெறுவர [illegible] ... ... *

(இதன்பொருள்.)

சக்கரதீர்த்தமென்றொரு தீர்த்தம்-முன் [illegible] துக்கு க்கிழக்கேயிருக்கின்றது, அதுமுன்னேசமுத்திர [illegible] டொத்த விஷ்ணுவராக அவதாரத்தில் முழுகிப் பேறுபெற்ற [illegible] அந்தத்தீ ர்த்தத்தை வலமாகவந்தவர்களும் அதில்முழுகினவர்களும் அந்தநீரை

உட்கொண்டவர்களும், துன்பச்சமுத்திரத்தில்நின் றும்நீங்கிச்சிவனது
இரண்டுபாதத்தையும் இடமாகப் பெறுவார்கள்—எ-று. (௨௪)

நாயகுனமருங்கோயின் மருங்கினி னளினக்கோயிற் ... ...*
றாயவன்பெயராந்தீர்த்தந் தீயவன் றிசையிற்றேன் றுங்... ... *
காயமத்தடத்திற்றோய்ந்தார் பிறவியாங்கடலிற்றோயா ... ... *
ராயிரஞ்சனனந்தோறு மடைந்ததீவினையுந்தீர்ப்பார்... ... *

(இதன்பொருள்.)

அருணாசலேசுரர் எழுந்தருளியிருக்கிறகோயிலுக்குப்பக்கத்தில் அக்கினிதிசையில் பிர்ம்மதீர்த்தமென்றுஒருதீர்த்தம்உண்டு, அதில்முழுகினவர்கள் பிறவிசமுத்திரத்தில்முழுகார்கள். ஆயிரம்பிறப்புக்கள் தோறுஞ்சேர்ந்ததீவினையைத் தீர்ப்பார்கள்—எ-று. (௨௫)

அத்தடமுழுகிச்செம்பொன் னணுவளவளிப்பாராகிற் ... ... *
சத்தசாகரஞ்சூழிந்தப்புவியெலாந்தனத்தினாலு .. .. *
முத்தணிமணியினாலு நிறைத்ததுமுழுதுமீசன் ... ... *
பத்தர்பாலளிக்குமந்தப் பலத்தினுமதிகமாகும்... ... ...*

(இ-ள்.) அந்தத்தீர்த்தத்திலமுழுகித்தங்கம் ஒருஅணுவளவுகொடுப்பாராகில்சத்தசமுத்திரஞ்சூழ்ந்த இந்தப்பூமியெல்லாம்சொர்ணத்தினாலுமுத்துமுதலாகியரத்தினங்களினாலும் நிறைத்து அவைகளையெல்லாம் சுவாமியினுடைய பத்தரிடத்தில கொடுக்கும் பலனிலுமதிகமாகும்—எ-று. (௨௬)

தேனகுதடத்தின்மூழ்கிச்செய்யவானீந்தோர்வெள்ளைத்... ... *
தானவாரணஞ்சூழ்செம்பொற் சயிலநேர்விமானத்தேறி ... ... *
மேனகைபரம்பைதூய கவரிக ளிரட்டவீவி ... ...*
யானிலோர்மயிற்கோர்கற்ப மரன்பதத்திருப்பரன்றே ... ... *

(இதன்பொருள்.)

தேன்பொருந்தியபுஷ்பங்களையுடைய அந்தத்தீர்த்தத்தில்முழுகிச்சிவப்புப்பசுவைத் தானஞ் செய்தவர்கள் மதங்கொண்டவெள்ளையானைகள்சூழ்ந்து தாங்கப்பட்டமகாமேருபோலுஞ் சொர்ணவிமானத்திலேறிக்கொண்டு மேனகை ரம்பை இருவரும்பரிசுத்தமாகியகவரிவீசப்போய் அப்பசுவினது மயிரொன்றுக்கு ஒருகற்பகாலம் சிவபதத்தில் இருப்பார்கள்—எ-று. (௨௭)

காலமையதனின்மூழ்கிக் கரியவானளித்தோர்கோல ... ...*
நீலமால்வரைபோனீலநெருங்கியவிமானத்தேறி ... ... *
சூலமேபிடித்துப்பூத கணத்தவர்தொடர்ந்துபோற்ற... ... ...*
பாலலோசனர்வாள்கின்ற பரபதத்திருப்பரன்றே .. .. *

(இதன்பொருள்.)

அந்தத்திர்த்தத்தில காலமேமுழுகிக் கறுப்புப்பசுவைத் தானஞ் செய்தவர்கள் அழகுபொருந்திய நீலமலைபோல் நீலரத்தினமிழைத்த

விமானத்திலேறிச் சூலாயுதத்தைப் பிடித்துக்கொண்டு பூதகணங்கள் தொடர்ந்துவணங்கநெற்றிக்கண்ணையுடைய சிவனுடையபரமபதத்தில்இருப்பார்கள்—என்றவாறு. (உஅ)

வெள்ளையானளித்தோர்வெள்ளைவிடைகளாயிரஞ்சூழ் முத்தின்
கொள்ளையாம்விமானத்தேறியிமையவர்குழாங்கொண்டேத்த *
வள்ளலார்பதத்திற்சேர்வர்மழைக்குடைசெருப்புத்தந்தோ... *
ளெள்ளரும்பரிமாவீந்தோரிந்திரபதத்திற்சேர்வார் ... *

(இதன்பொருள்.)

அந்தத்தீர்த்தத்தில்முழுகி வெள்ளைப்பசுவைத் தானங்கொடுத்தவர்கள்ஆயிரம் வெள்ளை ரிஷபங்கள்சூழ்ந்த முத்தினால் அலங்கரிக்கப்பட்ட விமானத்திமேலறிக்கொண்டு தேவர்கள்கூட்டமாகச் சேர்ந்து வணங்கச். சுவாமியினது பதத்தில் சேர்வார்கள், மழைக்குக் குடையும்-பாதரட்சையுங்கொடுத்தவர்கள்-யோக்கியமாகிய, குதிரைகொடுத்தவர்கள் தேவேந்திர பதவியிற் சேர்வார்கள்—என்றவாறு. (உகூ)

கன்னியைத்தானமாயக்கரைதனிலளித்தோர்தேவர் ... *
பொன்னியலுலகிற்போக பூமியிலளகைநாட்டின் ... *
மின்றிகழ்மலரோனாட்டில் விரும்பினநுகர்ந்துதேவர்... ...*
சென்னியால்வணங்கப்போற்றச்சிவபதத்திருப்பாரன்றே .. *

(இதன்பொருள்.)

அந்தத்திர்த்தக்கரையிலேகன்னிகாதானஞ்செய்தவர்கள் தேவலோகத்திலும்- சுவர்க்கலோகத்திலும்- குபேரனுடைய அளகாபுரி பட்டணத்திலும்-பிரகாசம்பொருந்திய பிர்ம்மலோகத்திலும்-சிலசிலநாட்களிருந்து விரும்பினவற்றையெல்லாம் அனுபவித்துத் தேவர்கள்தலையாலேவணங்க அதின்பின்சிவபதவியிற்சேர்வார்கள்—எ-று. (௩௰)

உத்தமதலத்திற்கோடி யருந்தவர்க்குதவுமன்ன ... *
நித்தமாங்காசிமீதோ ரவிழ்ப்பலன்றனக்குநேரா... *
தத்தலத்தனந்தகோடி யருந்தவர்க்குதவுமன்னஞ் ... *
சத்தியவருணைநாட்டி லவிழ்ப்பலன்றனக்கொவ்வாதே...*

(இதன்பொருள்.)

உத்தமமாகிய ஸ்தலங்களில்கோடி அருமையாகியதவசிகளுக்குப் படைத்த அன்னத்தின்பலனானது நித்தியமாயிருக்கிறகாசியில்பெரியோர்களுக்குப்படைத்தஅன்னத்தின் ஒருசோற்றுப்பருக்கைப் பலனுக்கு

ஒவ்வாது, அப்படிப்பட்டகாசியில் அநேககோடி தபசிகளுக்குப்ப டைத்த அன்னத்தின்பலன் உண்மையாகிய அருணாசல ஸ்தலத்தில் ஒருசோற்றுப்பருக்கைப் பலனுக்குக் கூட ஒப்பாகாது — என்ற வாறு. (௬௧)

ஆவடியளவுபூமி யந்தணர்க்களித்தோரீசன் ... *
சேவடிநிழலிற்றங்கள்கிளையுடன்செருக்கிவாழ்வார் .. *
மாவிடையரற் கவிட்டோர்மற்றொருவிடைமேலேறி *
மேவிடுஞ்சிவலோகத்திற்பவனிபோய்வியப்பரன்றே...*

(இதன்பொருள்.)

பசுவின் தளப்படியளவு பூமிபிராமணர்களுக்குத் தானஞ்செய்தவர்கள்-பரமசிவனது பாதநிழலிலேதங்களுடைய சுற்றத்தோடுகளித்து வாழ்வார்கள்- சுவாமிக்குப்பெருமைபொருந்திய ரிஷபங்களைத் தானஞ்செய்தவர்கள் மற்றொருரிஷபவாகனத்தி லேறிக்கொண்டு சிவனது லோகத்தில் பவனியாகப்போய் சந்தோஷித் திருப்பார்கள்—என்ற வாறு. (௬௨)

சாலைகள்சமைத்தோர்நந்தவனஞ்சமைப்பித்தோர்கேணி *
கூலமார்தடங்கள்கண்டோர் குலிசனூர்பதத்திற்சேர்வார் *
ஆலயமெழுகித்தூர்த்து விளக்கிட்டோரலங்கரித்தோர் *
வேலையினடுவிற்பாந்தண்மெத்தையிற் றுயில்வரன்றே *

(இதன்பொருள்.)

அருணாசலத்திலே சாலைவைத்தவர்களும், நந்தவனம்வைத்தவர்களும், கிணறுகள்மணற்குன்றுபொருந்திய குளங்கள் வெட்டினவர்களும்,தேவேந்திரபதவி அடைவார்கள், ஆலயமெழுகிமேடுபள்ளம் நிரவி விளக்கேத்திவைத்தவர்களும், அலங்காரஞ்செய்தவர்களும், விஷ்ணுவாய்திருப்பாற்கடல் மத்தியில் சர்ப்பசயனத்தில் யோகநித்திரை செய்வார்கள்—என்றவாறு. (௬௩)

மழைப்புனலரிதாநாளின்மருவுநீர்ப்பந்தல்வைத்தோர்... .. *
செழிக்குமேற்பதவிதன்னிற் றேவருந்துதிக்கவாழ்வார் ... *
புழைக்கைமாவுரியரன்பர்க்கணிகலைபுனைவித்தோரோ ......*
ரிழைக்களவிறந்தகாலமிறைபதத்திருப்பரன்றே ....*

(இதன்பொருள்.)

ஜலம் அரிதாகியகோடைக்காலத்தின் தண்ணீர்ப்பந்தல்வைத்தவர்கள் செழுமைபொருந்திய மேலாகியபதவியில் தேவர்களும்வணங்க வாழ்

வார்கள். யானையுரிபோர்த்த சிவனுடைய அன்பருக்குவஸ்திரங்கொடு
த்தவர்கள் ஒரு இமைக்கு அளவிறந்தகாலம் சிவபதத்தில் இருப்பார்க
ள்—என்றவாறு. (௫௪)

மடஞ்சமைத்தவர்களந்தமடத்திலோர்துகட்கோர்கற்ப ... *
மிடம்பிடித்தழியாவீட்டிவிருப்பர்வேறிறந்தபேர்க்கும் ... *
விடங்குடித்திறந்தபேர்க்கும் விதியினூறுதிவேள்விக்... *
கடன்கழித்தனரேலந்தக்குலமெலாங்கதியிற்சேரும் ... *

(இதன்பொருள்.)

இந்தஸ்தலத்தில் ஒருமடங்கட்டினவர்கள் அந்தமடத்தி லிருக்கிற ஒருதுகளுக்கு ஒருகற்பகாலம் கெடுதலில்லாத மோட்சத்தில் நிலை பெற்றிருப்பார்கள், பின்னும் அவச்சாவாயிருந்தவர்களுக்கும், விஷங் குடித் திறந்தவர்களுக்கும், விதியாக உறுதிபொருந்திய பிதிர் யாகம் அந்தஸ்தலத்தில் செய்தால்- அவர்கள் குலத்தா ரெல்லாருங் கதியிற் சேருவார்கள்—என்றவாறு. (௫௫)

காகமுன்பலிபீடத்திற்பலிதனைக்கவரும்போதி... ... .. *
லாகமார்சிறையைக்கீழேபடைத்ததாலயத்தினூடே ... *
ஓகையானமதுகோயிலவிளக்கியதெனவுட்கொண்டு... ... *
பாகசாதனனூர்வாழும்பதியினைப்பரமனீந்தான் ... ... *

(இதன்பொருள்.)

ஒருகாக்கையானது அந்தஸ்தலத்துக்கோயிற் பலிபீடத்தில் வைத்திருக்கிற பலியன்னத்தை வாயினாற் கிரகிக்கிற போது தன்னுடையசிறையால் கீழேயடித்து அதைச்சுவாமி பார்த்து ஆலயத்தினுள் பிரிபத்தினால் நம்முடைய கோவிலை விளக்கியதென்று நினைத்துத் தேவேந்திரன் வாழ்கின்ற உலகத்தை அந்தக் காகத்துக்குக் கொடுத்தருளினார்—என்றவாறு. (௫௬)

மூடிகமொன்றுகோயின்முழையினைக்கிளறும்போது... ... .. *
கேடருமணிபோன்றங்கேசிதறிப்போர்விளக்கங்காட்ட ... ... *
வாடியபெருமான்றீபமளித்ததென்றதற்குநல்ல ... .. *
வீடியர்நெறியுங்காட்டிவிரைந்துசாலோகமீந்தான். ... *

(இதன்பொருள்.)

ஒரு பெருச்சாளியானது கோயிலில்வளையுண்டாக்கும்போது தேடுதற்கு அரியமாணிக்க மணியொன்று அங்கேசிதறிச் சந்நிதியிலேவிளக்குப்போலக் காண்பிக்க நடனஞ்செய்தசுவாமியானவர் நமக்குத்

தீபங்கொடுத்த தென்று அதற்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்துச் சாலோக பதவியைக்கொடுத்தார்—என்றவாறு. (௯௭)

சிலந்தியொன்றொருநாளந்தத்திருமலையிடத்துநூலக்... ... *
கலந்துடனிழைக்கவீதுகலைநமக்களித்ததென்று ... ... *
நலந்திகழரசனுக்கியதற்குநல்லறிவுநல்கி ... ... *
புலர்ந்தபின்னெடியமாயனுலகினையுதவினானே ... ... *

(இதன்பொருள்.)

அந்தமலையில் ஒருநாள் ஒருசிலந்திவாயினூலாலே பின்னலிட இந்துவஸ்திரம் நெய்துகொடுத்த தென்று அந்தசசிலந்தியை இராஜாவாகப்பிறப்பித்து நல்லஞானத்தைக் கொடுத்துத் தேக வியோகமான பிற்பாடு விஷ்ணுலோகத்தைக்கொடுத்தார்—என்றவாறு. (௯௮)

ஒருமணலைச்சிவனுருவ மெனநினைத்தவ்விடத்தில்வைத்தோனொருவன்பின்னைப், பரகதிபுக்கடைந்துசிவ னென்னவேற்றுமையகன்ற பதவிசேர்ந்தான், பொருவரியவருணகிரிப் பதிவளமிதெனவுரைத்துப் புண்டரீகத், திருமுகமண் டலமலர்ந்தே யிருந்தனனான்மறைவிகன்ற செல்வன்றானே. ... ... *

(இதன்பொருள்.)

பின்னும் அந்த ஸ்தலத்தில் ஒருவன் மணலைச் சிவனுருவமென்று நினைத்து வைத்ததனல் அவன்மேலாகிய கதியைச்சேர்ந்து சிவனென்றும்- இவனென்றும்- பேதமில்லாமலஇருக்கிற சாரூப்பியபதவியைப்பெற்றான், ஒப்பில்லாத அருணாசலத்தின்வளம் இதுவென்று தாமரைமலர்போன்ற முகமலர்ந்து சொல்லியிருந்தார், நான்குவேதங்களையும் சொன்ன பிர்மமா—என்றவாறு. (௯௯)

ஏழாவது

தீர்த்தசருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ திருவிருத்தம்—௬௱௮௮.

சிவமயம்.

திருமல

வலம்புரிச்சருக்கம்.

[அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.]

கனகமல கனகமலர்த் தடங்களது பெருமையினாற் களித்தேனந்த, வனகமலை வலம்புரியுஞ் செயலினையுந் தெரியவுரைத் தருள்வா யென்று, சனகமுனியெழுந் துபணிந் துரைக்குதலு டனமகிழ்ந்து கிரணக் கோலிற், தினகரனார்திறந்தலடக்குந் திருக்கோயிற் கடவுளிவைசெப் பலானான்... ... ...*

(இதன்பொருள்.)

மேன்மைபொருந்தியபிர்ம்மாவே! பொன்போன்ற நிறத்தையுடைய தாமரைப்புஷ்பங்கள்சூழ்ந்த தீர்த்தங்களின் பெருமையைச்சொல்லக்கேட்டுச் சந்தோஷித்தேன், பாபரகிதமாகிய கிரியைவலஞ்செய்யும் பெருமையையுந்தெரிய அருள்செய்வாயென்று சனகரிஷியானவர்-எழுந்துவணங்கிச் சொன்னஅளவில் மனதுசந்தோஷித்துச் சூரியன்தனதுகிரணமாகிய திறவுகோலாலே திறந்தமூடுந் தாமரை மலராகிய கோயிலில் வாசஞ்செய்கிற பிர்ம்மா சொல்லத்தொடங்கினார்—எ-று.

கற்பமெல்லா மரியதவம் புரிந்தவரு மதின்பெருமை காணமாட்டார், அற்பதவம்புரிந்தவருக் கருணைகிரிவலத்தினல மறியலாமோ, சிற்பரன்றன்புகழ்கேட்கும் விருப்புடையாயெனவுனக்குச் செப்பாநின்றே, னற்புதமிக்கதையமுதைச் செவிவழியே புகட்டவின்ப மருந்தென்றான்... ... ...௨

(இதன்பொருள்.)

கற்பகாலம் அரிதாகிய தவஞ்செய்தவர்களும், அதன்பெருமையை அறியமாட்டார்கள், அற்பமானதவத்தைச் செய்தவர்களுக்கு அருணாசலத்தைவலஞ்செய்யும் பெருமையை அறியக்கூடுமோ, பரமசிவனுடைய புகழைக்கேட்கும்- ஆசையுள்ளவனென்று உனக்குச்சொல்லத்தொடங்கினேம்- அற்புதம்பொருந்திய இந்தக்கதையாகிய அமிர்தத்தையுன்காதாகிய வாய்வழியிலேபுகட்ட இன்பமாகச்சாப்பிடு என்றுசொன்னார் பிர்ம்மா—என்றவாறு. (உ.)

சோணகிரிவலம்புரிதல் பிறவியெனும் பெருங்கடற்குத் தோணி
யாகு, மேணரகக் குழிபுகுதா தரியமுத்தி வழிக்கேற வேணியாகுங்,
காணரிய தவத்தினுக்கு மறத்தினுக்கு மரும்பொருட்குங் காணியாகு
ம், வாணுதன்மின் னிடத்திருக்குங் கண்ணுதலைமணமுருக்கு மகிழ்ச்சி
யாகும்... ... ... *

(இதன்பொருள்.)

அருணாசலத்தை வலஞ்செய்கிறது பிறப்புஎன்கிற பெரியகடலைத் தாண்டுகிறதற்கு ஒருதோணியாகும், ஏழுநரகக்குழியிலும் புகுதாமல் அருமையாகிய முத்திவழிக்கு ஏறுகிறதற்கு ஏணியாகும், காணுதற்கு அரியதவசுக்கும்-தருமத்துக்கும்-சம்பத்துக்கும்- ஒருகாணியாயிருக்கும், ஒளிபொருந்திய நெற்றியையுடைய பார்ப்பதியை இடப்பாகத்தில் வைத்திருக்கின்ற சுவாமியை மனதையுருக்குஞ் சந்தோஷமாகும்—என்றவாறு; (௩)

காசிமுதற்சிறப்புடைய தலங்களிலேயிருந்திறையைக்கற்பகால... *
பூசைசெயுமொருபலமு நெடுங்காலமரியதவம்புரிகைதானும்......*
தேசிகனுரைத்தபடி சமாதியிலேயிருந்துபெறுஞ்சித்திதானு ... *
நேசமுடனருணைகிரி வலம்வருகென்றுரைப்பதற்குநிகரதாமோ ...*

(இதன்பொருள்.)

காசிமுதலாகச்சொல்லப்பட்ட சிறப்புடைய ஸ்தலங்களிலே இருந்து சுவாமியைக் கற்பகாலம் பூசைசெய்தபலமும், அநேககாலம் தவசு செய்தலும், குருசொல்லிய முறைப்படியே சமாதியிலேஇருந்து அடைகின்றசித்திகளும், அருணாசலத்தை வலம்வரவேண்டுமென்றுசொல்லியபலனுக்கு நிகராகுமோஎன்றுசொன்னார்—எ-று. (௪)

அருணைகிரிவலம்வருகென் றுரைப்பளவிலதிகபிரமத்திநீங்கு, ந
ருமதையினளவுமது வருந்துபவம் வருந்தநடு நடுங்கியோடு, மருவு
பெரும் பொருள்கவர்ந்த பழவினையுங் கரங்குவித்து வழிக்கொண்
டேகுங், குருபரற்குத் தவறிழைத்த கொடுவினையும் பயந்துகருக்குலை
யுந்தாமே... ... ...*

(இதன்பொருள்.)

அருணாசலத்தை வலஞ்செய்யென்றுசொல்லும்அளவில் பிர்மத்தியாதகம் போய்விடும், நர்மதையாற்றுநீரளவு மதுவைப்பானம்பண்ணிய பாவமும் வருத்த முற்று நடுநடுங்கி யோடிப் போகும்,

பிறருடைய அநேகம்பொருள்களைக்களவுசெய்த பழமையாகிய பாவமும் கைகுவித்துக்கொண்டு ஓடிப்போகும் குருவாகிய சுவாமிக்குத்தவறுசெய்தபாவமும் பயந்துகர்ப்புங்குலைந்து ஓடிப்போகும்-எ-று.

அந்தவினையுடன்படலும் பெருங்காற்றினெரிசுடர்போலவியாநிற்
குந்; தந்தைபணைக்கடந்தவினை கருடனிற்றவரவெனவே தளர்ந்துமா
யு; மைந்தரையுமகளிரையுந் தொலைத்தவினைக்கடல்சுவறி வறியவாகு;
மெந்தைபொருள் கவர்ந்தவினை தனக்கிருக்கு மிடமேதென்றிசைக்கு
ந்தானே ... ... *

(இதன்பொருள்.)

இறுதியைக்கொடுக்கும்பாவமும் அருணாசலத்தைவலஞ்செய்யவேண்டுமென்று நினைத்தஅளவில் சூறைக்காற்றினெதிராக இருக்குந்தீபம்போல் அவிந்துபோகும் தகப்பனைக்கொன்ற பாவமும், கருடனைக்கண்டபாம்புபோல் நடுக்கத்தையடைந்து ஓடிப்போம் பிள்ளைகளையும் ஸ்திரீகளையுங்கொன்ற பாவமாகியகடலும் வற்றிப்போகும் எம்முடைய சுவாமியினது திரவியத்தைத்திருடின பாவமும் நானிருக்குமிடமெங்கேயென்று ஓடிப்போகும்—என்றவாறு. (௬)

[வேறு-அறுசீரடியாசிரியவிருத்தம்.]

ஓரடிக்கியாகஞ்செய்த பலத்தினையதவாநிற்கு ... *
மீரடியிராசசூய பலந்தருமினியமூன்று ... ... *
நேரடிபரிமேதத்தின் பலத்தினைநிறைக்குநாலு ... *
பாரடியிலெவார்க்கியாகப் பலனெலாம்பலிக்குந்தானே ... *

(இதன்பொருள்.)

அருணாசலத்தை வலஞ்செய்யவேணுமென்று நினைத்து ஓரடிஎடுத்துவைத்தராசசூய யாகபலன்சித்திக்கும், மூன்று அடிக்குஅசுவமேதபலன் உண்டாகும், நான்கடிக்கு எல்லா யாகத்தின்பலனும் சித்திக்கும்—என்றவாறு. (௭)

வலங்கொளோரடியேபூமி வலஞ்செய்யும்பலத்தைநல்கும் ... *
அலங்குமீரடியேதீர்த்த மாடியபலன்களீயுந் ... ... *
தலங்கண்மூன்றடிகளீரொண் டானத்தின்பலத்தைநல்கு ... *
மிலங்குநாலடிக்கியாகத் தெண்வகைப்பலத்தைநல்கும் ... *

(இதன்பொருள்.)

பிரதட்சணஞ்செய்யும்போது தூக்கிவைத்த ஓரடியின்பலன் பூமியைப் பிரதட்சணஞ்செய்த பலனை உண்டாக்கும், இரண்டடியின்பலன் சர்வதீர்த்தமாடியபலன்களைக் கொடுக்கும், மூன்றடியின்பலன்கோடசதானபலனைக்கொடுக்கும், நாலடியின்பலன் அட்டாங்கயோகஞ்செய்த பலனைக்கொடுக்கும்—என்றவாறு. (௮)

வைத்தவோரடியேபூசைப் பலனெலாம்வழங்குமங்கே ... *
உய்த்தவீரடியேலிங்கத் தாபிதவுறுதிநல்கு ... ... *
மெத்தவேயடிமூன்றிட்ட பலன்சொலில்விமானங்கோடி ... *
யெத்தனை தூபிக்கோயில் சமைத்தபேறெல்லாநல்கும் ... *

(இதன்பொருள்.)

அதுவல்லாமலும் வலமாகவைத்த ஓரடிக்குப் பூசாபலன்களெல்லாம் பலிக்கும், இரண்டடிக்கு லிங்கப்பிரதிஷ்டை செய்தபலனைக்கொடுக்கும், மூன்றடிக்குக் கோடிவிமானஸ்தூபிகளையுடைய கோயில்களைக்கட்டிய பேறுகொடுக்கும்—என்றவாறு. (௯)

[வேறு-அறுசீரடிஆசிரியவிருத்தம்.]

நீடருணகிரிவலத்தோரடியிட்டோ ருருத்திரர்வாணிலைக்கொண்டோர், நாடியிரண்டடியிட்டார் மகேசுரர்தம்பதத்தடைந்தார் நதியுஞ்சூடி, ஆடரவம்புனைந்தமலை வலமாகவெழுந்தொருமூன்றடியிட்டார்க்கே, கோடிதலைமுறையவரைச்சிவலோகந் தனிற்கொடுபோய்க்குடிவைத்தாரே ... ... *

(இதன்பொருள்.)

நீண்ட அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று ஓரடிவைத்தவர்கள் ருத்திரபதவியையடைவார்கள், இரண்டடிவைத்தவர்கள்மகேசுரர்பதவியை யடைவார்கள், மூன்றடிவைத்தவர்களுக்குக்கோடிதலைமுறையிலுள்ள மனிதரையும் பதவியிற்கொண்டுபோய்ச்சேர்க்கும்—என்றவாறு. (௰)

நன்றிதருமருணகிரி வலமாகச்சிறிதுவழி நடந்தபேர்க்குத்... *
தூன்றுநெடுங்கிரணவெள்ளிக் கயிலைமலைவழிகடுகித்தொலையாநிற்கு *
மன்றியுமம் மலைவலமாய் நடந்தவழிப்பரலுறுத்துமழற்சியாலே *
கன்றியகாலனைக்காணிற் கன்றியகாலனைப்போலக்காணும்பாவம்... *

(இதன்பொருள்.)

நன்றியைக்கொடுக்கும் அருணாசலத்தை வலமாகக் கொஞ்சதூரம் நடந்தவர்களுக்கு நெருங்கிய கிரணத்தைவீசுகின்ற வெள்ளிமலையாகிய கைலாயத்துக்குப்போகிறவழி சீக்கிரத்தில்தொலையும், அல்லாமலும் அந்தமலையைவலமாகப்போகிறபோது, பருக்கைகல்லுகளாலும் அழற்சியினாலும் கன்றிப்போன காலையுடையவனைக்கண்டால்யமனென்று பயந்து பாவங்கள் ஓடிப்போகும்—என்றவாறு. (௰௧)

வன்னிமலைவலம்புரிந்தோர் பதத்துகளொன் றொருவாயு வசத்தினாலே, புன்னரகமனையவிடம்புகுதிலதுகயிலையெனப்புனிதமாகு, மின்னுமவர்பதத்துகளோர்மனிதருடற் செறியிலவர்பிறப்புநீங்குந், துன்னுமவர்பிறப்பொழியும் வலம்புரிந்தோர் பெருமைகளென் சொல்லுவோமே. ... ... *

(இதன்பொருள்.)

அச்சிவமலையைவலம்வந்தவர்கள் பாதத்திலொட்டிய தூசொன்று காற்றினாலேநரகத்தையொத்தஇடங்களிலேசேர்ந்தால்அதுவுஞ்சுவர்க்கம்போலப்பரிசுத்தமாகும், இன்னும் வலம்வந்தவர்கள் பாதத்தூசு மேலொன்றுமனிதராது தேகத்திற்பட்டால் இறப்பும், அவர்களைப் பற்றிவருகிறபிறப்பும் நீங்கும், அப்படியாகும்போது பிரதக்ஷிணஞ் செய்தவர்களுடைய பெருமைகளை என்ன சொல்வோம்—என்றவாறு. (௫௨)

அந்தமலைவலம்புரிந்தோர் சிவனிருக்குங் கயிலாயகிரி சேரும்போதில், சந்திரன்வெண்குடைபிடிக்க ரவிவிளக்கெடுக்குமன்னவன் திருமகத்தாங்கும், மந்திரமேயிந்திரனார் வழிக்குமலர் பரப்பிடுவா னளகைக்கோமான், வந்தனைசெய் தருகுவருஞ் சந்தமலர் மழைசொரிவர் வசுக்களாமே ௫௩

(இதன்பொருள்.)

அந்தஅருணாசலத்தை வலஞ்செய்தவர்கள், பரமசிவன் வாசஞ்செய்கின்ற கைலாயமலையைச்சேரும்போது சந்திரன்வெள்ளைக்குடைபிடிப்பான், சூரியன்விளக்கெடுப்பான், திருமகத்துவமான மைத்ரங்களையுடைய தேவேந்திரன் வருகிறவழியில் புஷ்பங்களைப்பரப்புவான், குபேரன் தண்டஞ்செய்து சமீபத்தில்வருவான், அஷ்டவசுக்கள் புஷ்பவருஷங்களைப்பொழிவார்கள்—என்றவாறு. (௫௩)

மேனகையும்ரம்பையுட னுருப்பசியுந் திலோத்தமையும் வீணை யார்க்குங், கானநடம்புரிவர்கங்கா நதியுடனே யமுனைநதி கவரிவீசும், போனகமின் னமுதமலைத் துகிலுழகி லெடுத்தெதிரே போதும் போது, நானமுங் கொள் ளலர்மடந்தை நறுங்கருணுண் மேன்மறைபுகழ்ந்து நடக்குந்தாமே ௫௪

(இதன்பொருள்.)

மேனகையும், ரம்பையும், ஊர்வசியும், திலோத்தமையும், வீணை வாத்தியத்துடனே சங்கீதம்பாடி நடனஞ்செய்துகொண்டிருப்பார்கள், கங்கையும், யமுனையும், சாமரம்வீசிக்கொண்டுவருவார்கள், சாப்பிடத்தகுந்த அமிர்தத்தையும், மலையளவுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு எதிரேவரும், லட்சுமி பூவும்கஸ்தூரியும் கொண்டுவரும் முன்னே சதுர்வேதங்களும் புகழ்ந்துகொண்டுவரும்—என்றவாறு.

(வேறு—அறுசீரடி யாசிரியவிருத்தம்.)

சேற்பொதிந் துளசங்கங்கைபடிவதுஞ்சிறந்ததானம் ... ௫௫
பார்ப்பதும்யோகத்தாலேவருதலும்பலவோவாதால் ௫௫
ஆர்ப்பொலிசடையான்சோணசலத்தினைவலமாச்சூழல்
காற்பலமென்றெண்ணுமேதமுற்பலவிகற்பங்களாலே ௫௫

(இதன்பொருள்.)

சேற்றுக்கண்ணையுதித்துவிளையாடுகின்றகங்கைமுதலாகிய தீர்த்தங்களிலாடியபலனும், சிறந்தசிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்த பலனும் யோகஞ்செய்தலினாலேவந்தபலனும் ஒப்பாகாது, ஆத்திமாலையைத் தரித்த சடையையுடைய சிவசொரூபமாகிய அருணாசலத்தை வலஞ்செய்தல் காற்பங்கிமேற்றெண்ணாமல் முழுப்பலமாக நினைக்கும்போது—என்றவாறு. (௰௫)

நிரந்தரமிமையோர்போற்று நெடியமால்வரையைச் சூழ்வோர்
பாந்திநிவ்வழியிற்றோன்றும்பரலினாற்சிவந்தபாதம் ... ...*
வரங்கொளவணங்கும்வானோர் மகுடகோடிகளிற்றைத்து ...*
விரிந்தசெம்மணிகடாக்கி மீளவுஞ்சிவக்குமாதோ ... *

(இதன்பொருள்.)

எப்பொழுதும் தேவர்கள்வணங்கும் பெருமைபொருந்திய அருணாசலத்தை வலஞ்செய்வோர்களுடைய வழியிற்கிடக்கின்ற பரற்கல்லுகளாலிதித்துச்சிவந்தபாதம் பின்பு வரத்தைப்பெறுகிறதற்குவணங்கும் தேவர்களுடைய மகுடகோடிகளிற் பதித்துப்பிரகாசிக்கின்ற ரத்தினங்கள்தாக்கிமறுபடியுஞ்சிவக்கும்—என்றவாறு (௰௬)

காலுடையொழுக்கப்பெற்றென் கரியகண்பெரியபெற்றென்
மானிடைப்பிறவியுற்றென் பலனைலம் புரியாமாந்த ... *
ரூனுடைப்புழுக்கூடேறி நரகிடையுசலாடி ... *
தானிடர்ப்படுவதல்லா லுய்கிலர் சனகவென்றார்... *

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட அருணாசலத்தைவலஞ்செய்யாதவர்கள் கால்நடையுண்டாய் நடந்து திரியப்பெற்றென்ன பிரயோசனம், காணுதவர்களிற் கண்பெற்று என்னபிரயோசனம், அநியமானிடப்பிறப்பாகப் பிறந்தென்னபிரயோசனம், மாமிசந்திரண்ட புழுக்களையுடைய தேகத்திலேசேர்ந்துநரகத்தில்வீழ்ந்து அலைந்து துன்பப்படுவதல்லாமல் பிழைக்கமாட்டார்கள்சனகனேஎன்றார்-பிர்ம்மா-என்றவாறு. (௰௭)

வஞ்சியர்புணர்ச்சிவேண்டின் மன்னர்கைவசமாய்வேண்டி *
லஞ்சியபகையெல்லாமக்கணத்தகற்றவேண்டிற் ... *
பிஞ்சிளமதிபோனல்லபுதல்வரைப்பெறுதல்வேண்டிற் ... *
சஞ்சிதமுதலாமூன்றுகருமமுந்தவிர்க்கவேண்டில் ... *

(இதன்பொருள்.)

அதுவல்லாமலும்நல்லஸ்திரீகளுடைய போகம்வேண்டினால், அரசர்கள் கைவசமாக வேண்டுமானால அஞ்சத்தகுந்த பகையையெல்லாம் அந்தட்சணத்திலேநீக்கவேண்டுமானால், பாலசந்திரன்போல நல்லபிள்ளைகளைப் பெறவேண்டுமானால் ஆகாமிய சஞ்சிதபிராரத்துவமாகிய மும்மலங்களையும் நீக்கவேண்டினார்—என்றவாறு. (௰௮)

மூயலக னலகைபூத கணங்களை மூனியவேண்டிற் ... ... *
றுயருறு பிணியமாகச் சோகமுந் தவிர்க்கவேண்டி ... *
வியலிசை யறிவுவேண்டி லெழுதருங் கோலம்வேண்டின் ... *
மயலறு புகழைவேண்டின் மலைவலம் புரிவார்வல்லார் ... *

(இதன்பொருள்.)

முயலகன்போன்ற ராட்சதனையும், பசாசுகளையும், பூதகூட்டங்களையும், கோபிக்கவேண்டினால துன்பத்தைச்செய்யும், வியாதியையும் தேகத்தில்வரும், சோகத்தையும் நீக்கவேண்டினால், இயலிசைமுதலாகிய கல்வியைவேண்டினால், அழகைவேண்டினால், குற்றமற்ற கீர்த்தியைவேண்டினால் அந்தமலையை வலஞ்செய்வார்கள் பெரியோர்கள் என்றவாறு. (௰௯)

வரந்தரு மருக்கவார மலைவலம்புரிந்தோர் வெய்யோன் ... *
றெரிந்தமண் டலத்தைக்கீறிச் சிவகதி பதியாச்சேர்வார் ... *
திரந்தருஞ் சோமவாரந் திருமலை வலமாய்வந்தோர் ... *
புரந்தர னெனவேழ்பாரும் புரந்தரன் றம்மையாண்பார் ... *

(இதன்பொருள்.)

சிரேஷ்டமாகிய ஆதிவாரத்தில் அந்தமலையை வலஞ்செய்தவர்கள் சூரிய மண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைச்சேர்வார்கள். ஸ்திரமாகிய சோமவாரத்தில வலமாய்வந்தவர்கள் தேவேந்திரன்போல் ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாரூப்பியத்தையடைவார்கள்—எ-று. (௨௰)

மங்கல தினத்திற் சூழ்வோர் கடனுடன் வறுமைநீங்கிச் ... *
சங்கிலித் தொடராமேழு பிறப்பையுந் தவிர்ப்பார்புந்திச் ... *
செங்கணு யகனைச்சூழ்வோ ரிருங்கலை மறைகளெலா ... *
றங்கமுந தெளிந்துமுத்திக் கருகரா யமரராவார் ... ... *

(இதன்பொருள்.)

மங்களவாரத்தில் கிரியைவலஞ் செய்வோர்கள் தங்களுக்குண்டாகிய கடனையும் தரித்திரத்தையும் நீங்கிச் சங்கிலிக்கட்டுப்போல் தம்மைவிடாத ஏழுபிறப்பையு நீக்குவார்கள், புதவாரத்தில சுவாமியைப் பிரதட்சணஞ்செய்வார் நாலுவேதங்களும் ஆறுசாஸ்திரங்களும் அறுபத்துநாலு கலைகளுந்தெரிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள்—என்றவாறு. (௨௧)

மாவிபாழத்திற்செய்ய மணிவரைவலமாச் சூழ்வோர் ... *
மூவரும்புகழத்தேவர் முனிவர்தங் குரவராவர் ... ... *
தாவிலா வெள்ளிவாரந் தனில்வலம் புரிந்தோர்கஞ்சப் ... ... *
பூவையைப் புணரும்பூவைப் புணருமால் புரத்திற்சேர்வார் ... *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய குருவாரத்திலே அந்தமலையை வலமாய்வந்தவர்கள் திருமூர்த்திகளும் புகழும்படியாகத் தேவர்கள் முனிவர்க

ளுக்கு பசுபானராவார்கள். குறைவில்லாத சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் தாமரை மலரிலிருக்கின்ற லட்சுமியைச்சேரும் விஷ்ணுபதத்திற்சேர்வார்கள்—என்றவாறு. (௨௨)

உதயமாம சனிநாட்சூழ்வோர்க் கொன்பது கிரகநன்றாய்ப் ... *
பதிசேரா மிடத்திற்றூய பலன்களைப் பலியாநிற்கு ... *
மதிபுனை சிவனிராவும் வருடம்வந் துதிக்குநாளும் ... ... *
அதிசயமா மதிகமாகு மைப்பசி முதலாமூன்றும் ... ... *

(இதன்பொருள்.)

சனிவார உதயத்தில் பிரதட்சணஞ் செய்வோர்களுக்கு நவக்கிரகங்களும் பதிசேராமிடத்திலிருந்த பலனைக்கொடுப்பார்கள், சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பின்றும், ஐப்பசிமுதலாகிய மூன்றுமாதமும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகபலன் சித்திக்கும்—என்றவாறு. (௨௩)

அயனசங் கிராமமாசி மகத்திலர்த் தோதயத்தில் ... *
வெயிலுறுங் கதிரைப்பாம்பு விழுங்குநாள் விதிபாதத்திற் ... *
பயனுற வலஞ்செய்வார்க்குப் பலன்களிற் கோடியாகும் ... *
அயர்வறத் தினமுஞ்சூழ்வார் பேற்றையா ரறியவல்லார் ... ... *

(இதன்பொருள்.)

உத்தராயணத்திலும், தட்சணாயனத்திலும், மாசிமாதத்திலும், அர்த்தோதயத்திலும், சூரியகிரணகாலத்திலும், விதிபாதத்திலும், இஷ்டசித்தியை அடையவிரும்பி வலஞ்செய்தவர்களுக்குக் கோடிபங்கு அதிகமாகப் பலன் கிடைக்கும். தளர்ச்சியடையாமல் தினந்தோறும் வலஞ்செய்கிறவர்களுக்கு உண்டாகும்பலனை யார் அறிந்துசொல்லுகிறதற்குவல்லவர்—என்றவாறு. (௨௪)

காரிகை யவரையற்றைக் கனவிலும் புணர்ந்திடாம ... *
னீரினின் மூழ்கித்தூய துடுத்துவெண் ணீறுசாத்தி ... *
யாரிடமுறையேதான மளித்துதா னவைகொள்ளாமற் ... *
பாரிடை நடந்துசூழ்ந்த தேவரைப் பணிந்துபோற்றி ... *

(இதன்பொருள்.)

அப்படி அதிகபலனைத் தரப்படாநின்ற அருணாசலத்தை வலஞ்செய்யும்விதம் எப்படியெனில், பிரதட்சணஞ்செய்யும் அன்றைக்குப்பெண்களைச் சொற்பனத்திலு நினையாமல் ஜலத்தில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு விபூதிதரித்து அந்த இடத்திலே தானம் கிரமமாகக்கொடுத்துத் தாம் ஒருவரிடத்தில் தானம்வாங்காமல பூமியிலே காலினாலே நடந்து கிரியைசுற்றி இருக்கிற தேவர்களைப் பணிந்துவணங்கி—என்றவாறு. (௨௫)

கஞ்சுகம் போர்வை நீத்துக் கவிகையுஞ் செருப்பு நீத்தே ... *
யஞ்சுதல் வெகுளிச்சோக மக்கணத் தகற்றிவாசி ... ... *

குஞ்சரம்முதலாயுள்ள வாகனங்குறுகிடாமல் ... ... *
விஞ்சியவடைக்காயுண்டு வழியிடைவெறுப்பதாகி ... ... *

அங்கத்தில்தரிக்குஞ் சட்டையையும் போர்வையும் நீக்கிக் குடைபிடித்துக்கொள்ளாமல்கால்களுக்குச்செருப்புபோட்டுக்கொள்ளாமல்பயமும்கோபமும் சோகமும்நீக்கிக் குதிரை யானைமுதலாகிய வாகனங்களிலேறாமல் தாம்பூலந்தரிக்காமல் போசனத்தையும் வெறுத்து —என்றவாறு. (௨௬)

செங்கைவீசாமற்சோரா துவகையாற்சிரத்திற்கூப்பி ... *
மங்கையார்பதிதர்நீச ருருப்பிலாவடிவுநோக்கா ... ... *
தங்குறுமடியிலோசை செவிப்புகாதரசர்மாதர் ... ... *
திங்களையிரண்டுஞ்சென்று நடந்திடுஞ்செயல்போற்சென்று ... *

(இதன்பொருள்.)

கைகளைவீசிக்கொண்டு போகாமல் சோர்வு இல்லாமல்-சந்தோஷத்தோடு சிரசிற்கைவைத்துக்கூப்பிக்கொண்டு ஸ்திரீகளையும்பாவிகளையும் நீசரையும் அவயவஹீனரையும் பாராமல் நடக்கிறபோது அடியினுடையசத்தம் காதிற்குக்கேட்காமல் மெள்ளராஜஸ்திரீகள் பத்துமாசத்துக்கர்ப்பத்தோடு நடக்கிறதுபோல நடந்து — என்றவாறு. (௨௭)

இருவினையற்றமர்ந்த மலையையெண்டிசையும்வீழ்ந்து ... *
பரவியங்கதனைச்சூழ்ந்த கடவுளர்ப்பணிந்துபோற்றி .. *
யுருவமாய்வலமாஞ்சித்த ரமரரைமனத்தாற்போற்றி ... *
யொருகியங்கவர்மேற்கைகாற் படுமெனவொதுங்கிச்சென்று ... *

(இதன்பொருள்.)

நல்வினைதீவினையாகிய இரண்டையுநீக்கும் அந்தக்கிரியை எட்டுத்திக்கும்வணங்கி, அந்தத்திக்கிலிருக்கிற சுவாமிகளையும்வணங்கி,உருவம்தெரியாமல்வலஞ்செய்துகொண்டுவருகிற சித்தர்களையும் தேவர்களையும்மனதிலேவந்தனஞ்செய்து - அவர்கள்மேலேதங்கள் கைகால்கள்படுமென்றுபயந்து வழியினின்றும் ஒதுங்கிச்சென்று— என்றவாறு. (௨௮)

வானமார்மலையைப்பொன்னிற்படிகநன்மணியாவெண்ணி ...*
மோனமாய்நடக்கவல்லதிறைபுகழ்மொழியைக்கேட்க ... *
வானவிச்செயலின்மேலவலஞ்செய்தாலயத்தினண்ணி .. *
யேனமுன்னறியான்றனைப்பணிந்துதன்னிருக்கையெய்தி ...*

(இதன்பொருள்.)

ஆகாயமட்டும்அளாவிய அந்தமலையைப்பொன்போலவும் படிகம்போலவும்ரத்தினம்போலவும் நினைத்து மௌனமாய்நடக்கவேண்டியது, அல்லது சுவாமியின் ஸ்துதிகளைக் கேட்கவேண்டியது இப்படிப்பட்ட தன்மையாக வலம்வந்து கோயிலுட்சென்று விஷ்ணுவா

ரிய பன்றியறியாக சுவாமியினது பாதங்களைவணங்கித் தாங்களிருக்கும் இடத்துக்குவந்தனர்—என்றவாறு. (௨௯)

குன்றெனுங்குணத்தார்சூழவிருந்துதீங்கனியால்கொள்க ... *
வன்றியேபுல்வுநீத்த வடிவிலையுண்கநீதி ... ... *
நின்றவத்தலத்தோர்செய்பு நிலைமைமீதகிதூரத்திற் ... *
சென்றவர்வருத்தமாயெவ் வகைவலஞ்செயினுஞ்சீராம்... ... *

(இதன்பொருள்.)

மலைபோலுயர்ந்த குணத்தையுடையவராகிய சிவபத்தர்கள்சூழவிருந்து மதுரமாகியபழங்களும் பாலுஞ் சாப்பிடக்கடவர். அப்படியில்லாவிட்டால் மாமிசபதார்த்தம் இல்லாமல் அன்னத்தைப்புசிக்கக்கடவர் இப்படிப்பட்ட செய்கைகளை நீதிபொருந்திய அந்தத்தலத்திலிருக்கிறவர்கள் செய்யவேண்டியது. அதிகதூரத்தில் நின்றும் வந்தவர்கள் தங்களுடைய வருத்தத்தினாலே எவ்விதமாக வலஞ்செய்தாலும் நன்மையாகும்—என்றவாறு. (௩௰)

துண்மீசலிலாதஞானச் சனகவிச்சயிலஞ்சூழ ... ... *
வெண்டிசைபுரப்போர்தப்பே ரினிற்சிவவுருவங்கண்டார் ... *
வண்டிசைபெருகுமோதி மலைமகண்மலையிற்கீழ்பால் ... *
கண்டனள்பவளவெற்பிற் கயிலைவெற்பிறைவன்காட்சி ... *

(இதன்பொருள்.)

கெடிசலில்லாத ஞானத்தையுடைய சனகரிஷிபோ லிந்தமலையினெட்டுத்திக்கிலும் திக்குப்பாலகர் எட்டுப்பேரும் தங்கள்பேரினாலே லிங்கங்களை ஸ்தாபித்துப் பூசித்திருக்கிறார்கள் வண்டுகளினது ஒலிபொருந்திய கூந்தலையுடைய பார்வதியானவள் கிழக்குத்திக்கில பவளமலைம்பால ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசித்தாள்—என்றவாறு. (௩௧)

மணிவரையரியிற்சூழ்ந்தவச்சிராங்கதனப்போது ... *
புணர்பவந்தவிர்க்கத்தென்பால்புழுகணியிறையைக்கண்டான் *
துணிவிலாவினைகணீக்கத்தமியனென்மலையின்மேல்பால் .... *
அணியண்ணாமலையாவென்று மருவுரு விறையைக்கண்டேன் *

(இதன்பொருள்.)

அருணாசலத்திலிடத்தில் குதிரையிலேறிக்கொண்டுவந்தவச்சிராங்கதபாண்டியன் அந்தக்காலத்தில் தன்னையடைந்தபாவத்தை தீர்க்கத்தென்திக்கில் புழுகணியிறைவனென்று ஒருலிங்கத்தைஸ்தாபித்துப்பூசித்தான் தணியாதபாவங்களை நீக்கிக்கொள்ள நானும் அந்தமலையின்மேற்குத்திக்கில் அணியண்ணாமலையானென்கிற பேரிட்டு ஒருலிங்கத்தை ஸ்தாதாபித்துப்பூசைசெய்தேன்—என்றவாறு. (௩௨)

வாலவெங்கதிர்மேற்சோணவரைகடந்தொருநாட்பாய்ந்து ... *
சாலுமத்துபரந்திரத்தனனுபேரிறையைக்கண்டா ... ...*

ஞாலமுழுதுந்தேவ ராவநாட்டுறையோர்சித்தர் ... ... *
சீலமாமுனிவர்கண்ட சிவனுருத்தெரிக்கொணாதே ... ...*

(இதன்பொருள்.)

சூரியனானவன் அருணாசலத்தைத் தாண்டிப்போனதினால் வந்தபாவந்தீரத் தன்பேரிட்டு ஒருலிங்கத்தை ஸ்தாபித்து பூசைசெய்தான், அதுவல்லாமல் அந்தமலையிலிருக்கிற கோயில்கள் முழுதும், தேவர்கள் நாகலோகத்தார், சித்தர்கள், முனிவர்கள், இவர்களாலே ஸ்தாபித்துப் பூசைசெய்யப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது—என்றவாறு. (௬௩)

ஈசனார் வடிவமானவிலிங்கமவ்வெல்லைசூழ ...... *
யோசனைமூன்றுஞ்சேர நெருங்குமீனாங்கள்போலப் ... *
பேசுவதெவனோவந்தத்தலத்தினின்பெருமைமேலன் ... *
றேசுறுங்கவுரியானைமுகத்தனுந்தெரிக்கொணாதே ... ...*

(இதன்பொருள்.)

பரமசிவ ரூபமான அனேக லிங்கங்கள் அந்தஎல்லைசுற்று மூன்றுகாதவழிமட்டும் ஆகாயத்தில் நட்சத்திரங்கள்போல நெருங்கியிருக்கும், அப்படியிருக்கிறபோது அந்தஸ்தலத்தினுடைய பெருமை, என்னத்சொல்லப்படுமோ, சுப்பிரமணியர், பார்ப்பதி, விநாயகர், இவர்களாலேயே சொல்லக்கூடாமலிருக்கிறபோது—என்றவாறு. (௬௪)

தாதவிழ்மலரோனிவ்வாறுரைத்தலுஞ்சனகன்போற்றி .. ... *
வேதனேபிறவிதீர்க்குமவிமலனை விமலனுனை ... ... *
வாதியைப்பழித்தோர்செம்பொன்கவர்ந்தபேரடையுந்தீங்கும் .. *
பாதகந்தவிருமாறும்பகரெனப்பதுமன்கூறும்... ... *

(இதன்பொருள்.)

தாதுவிரிந்த தாமரை மலரிலிருக்கின்ற பிரம்மா இந்தப்பிரகாரஞ்சொன்னதும், சனகரிஷியானவர் வணங்கி வேதமுழுதுங் கற்றுணர்ந்தவரே, பிறப்பைநீக்கும் பரிசுத்தரே, மலரகிதரான சிவனைப்பழித்தவர்களுக்கு வந்தபாவமும், அவர்தனத்தை அபகரித்தவர்கள் அடையப்பாவமும், அவைகள் நீங்கும் வகையும், சொல்லுமென்று கேட்கப் பிரமர்சொல்லுகிறார்—என்றவாறு. (௬௫)

எட்டாவது

திருமலைவலம்புரிச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

௬௫ திருவிருத்தம்—௫௱௨௪.

சிவமயம்.

ஆதித்தசருக்கம்.

(கலிவிருத்தம்.)

அற்றமற்றமுனிவர்சூழுமருணபூதரத்துடன் ... *
மற்றவெற்புமொக்குமென்றிகழ்ந்துரைத்தமனிதர்வாய் ... *
புற்றெழுந்துபுகையெழுந்துபுழுநெளிந்துபுலவுநீர் ... *
சுற்றெழுந்துபெருகுமன்னமிஞ்சோரிமாரிசொரியுமே ... *

(இதன்பொருள்.)

குற்றநீங்கிய முனிவர்கள் சூழ்ந்துவருகின்ற அருணாசல மென்னு மலையோடு மற்றமலைகளையு மொக்குமென்று நிந்தித்துச் சொன்ன மனிதருடைய வாயிலே புற்றுவுண்டாகிப் புகைபுகைந்து புழுக்கள் நெளிந்து புலால்நாற்றம் நாறுகின்றநீர்சுற்றி எழுந்து மிகவும் ரத்த மாரிசொரியும்—என்றவாறு. (௧)

அந்தமைந்தர்தம்மையெற்றியந்தகன்றனேவலாய் ... *
வந்ததூதர்செக்கிலிட்டரைத்தரைத்தெடுப்பர்வாய் ... *
வெந்தவாளினாலறுப்பரெந்தைசோணவெற்பையோ ... *
நிந்தைசெய்வையென்றடித்துநெய்யில்வேகவைப்பரே ... *

(இதன்பொருள்.)

அருணாசலத்தை நிந்தித்த அந்தமனிதர்களைப் பின்பு யமனுடைய ஏவலாய்வந்த தூதர்கள்செக்கில் அநேகந் தரம்போட்டு அரைத்து அரைத்து எடுப்பார்கள். அவர்களுடைய வாய்களை நெருப்பிலேபோட்டுக்காய்ச்சிய கத்தியினால் அறுப்பார்கள். எங்களாண்டவன் மலையையோ நிந்தைசெய்வாயென்று அடித்து நெய்யிலே வேகப்போடுவார்கள்—என்றவாறு. (௨)

பஞ்சிசழத்துவைத்தரக்குருக்கிவாய்பரப்பியே ... *
நஞ்சினைப்புகட்டிவெய்யநரகிலேகிடத்துவார் ... *

அஞ்சிபந்தநரகுதானு மருவருத்தலைத்திடும் ... *
நெஞ்சகத்திலெண்ணினார்தமக்குமீதுநிகழுமே ... *
(இதன்பொருள்.)

பின்னும் அந்தஅருணாசலத்தை நிந்தித்தவர்களை யமதூதர்கள்பஞ்சாகத்துவைத்து அரக்கையுருக்கி வாயிலேவிட்டு நஞ்சைக்குடிப்பித்துத் தீமையாகியநரகிலே தள்ளுவார்கள். அந்நரகமோவென்றால் பயப்பட்டு இவர்களைதாங்குகிறதற்குச்சகிக்காமல் மிகவும் வருத்தும், இப்படிப்பட்ட துன்பம் மனதிலே இந்தமலையைக்குறைவாகஎண்ணினவர்களுக்கும் உண்டாம்—என்றவாறு. (௩)

குருக்கடத்தைதாயராவி கொன்றதீயர்முதலினோ ... *
ரிருக்கும்வெய்யநரகன்மீதிவிட்டபோதிலவர்களும் .. *
பெருக்கநொந்துபாவியொன்றுபேசுவார்கடம்முடன் *
சுருக்கொணாதுதள்ளுமென்று தங்கள்கண்புதைப்பரே *
(இதன்பொருள்.)

ஆசாரியர்களையும் தாய்தகப்பன்மாரையும் பிராணன்வாங்கியதீயபாவிகள்முதலானவர்கள் வாசஞ்செய்யுங்கொடிதாகிய நரகத்திலே இந்த அருணாசலத்தை நிந்தித்தவர்களைப்போட்டபோது இவர்களைமுன்னமே இருக்கிறபாவிகள் மிகவும்வருத்தப்பட்டு சுவாமியைநிந்தித்தபடியினாலே நம்மிலும்பாவிகளென்று சொல்லி நம்மோடே இவர்கள் சரியாயிருக்கக்கூடாது தள்ளிவிடுமென்று தங்கள் கண்களைப் பொத்திக்கொள்வார்கள்—என்றவாறு. (௪)

என்றுரைத்துநானும்வையமேழுமுண்டமாலுமா ... *
யன்றுமின்றுமளவிடாத வருணபூதரத்தையோர் ... *
குன்றமென்றிகழ்ந்துசென்றுகுன்றிமெய்குறைந்துமுன்
கன்றினொருத்தனென்று கதைவிளம்பலாயினான் ... *

(இ-ள்) பிர்ம்மாவானவர் இப்படியென்றுசனகரிஷிக்குச்சொல்லிப்பின்னுஞ்சொல்வார்-நானும்ஏழுலகத்தையுஞ்சாப்பிட்டவிஷ்ணுவுஞ்சேர்ந்து அன்றுமுதலின்றைவரைக்கும் அளவிடப்படாத மகிமையுள்ள அருணாசலத்தைஒருவன் ஒருமலையென்று இகழ்ச்சிசெய்துபோய்க் குன்றுதலடைந்துதேகங்குறைந்து துக்கப்பட்டான். முன்காலத்திலேயென்று அந்தக் கதையைச் சொல்லலத் தொடங்கினார்— என்றவாறு. (௫)

உலவுகின்றசோதியாவுமுள்ளில்வைத்திவ்வுலகிலோர் ...*
மலைபதாகிநின்றதெய்வமலையைமற்றமலைகள்போல் ... *
அலகுபெற்றவிரவியெண்ணியாழியொன்றுவாசியே *
ழிலகுதேரம்மலையினுச்சியெல்லையாய்நடத்தினான் ...*

(இதன்பொருள்.)

நான்குதிக்குஞ்சென்றுவிளங்குகின்ற பிரகாசங்களையெல்லாம் தனதுள்ளிடத்தில்வைத்துக்கொண்டு இந்தப்பூலோகத்தில ஒப்பற்றமலையுருவங்கொண்டதெய்வீகமாகிய அருணாசலத்தை மற்றமலைகள்போல்நினைத்து ஒருசக்கரமும்எழுகுதிரையும்பூண்டதேரை அந்த அருணாசலமலையினுச்சிவழியின் எல்லையாக நடத்தினான் சூரியன்— என்றவாறு. (௬)

முகுந்தர்தேடுமந்தவெற்பின்முடியின்மேவுமுன்னமே *
மிகுத்தசோதியுள்ளினும்வெடிக்கெழுந்து வெம்மையாய்ப்
புகைந்துசெல்லவிரதமூவர்புரமெனப்பொரிந்ததே *
யுகைந்தபச்சைவாசிபோ யலர்ந்தவாசியானதே ... *

(இதன்பொருள்.)

சூரியன்விஷ்ணுவால்தேடப்பட்ட அந்தமலையினது உச்சியிலே போகிறதற்குமுன்னே மிகுந்த பிரகாசமானது மலைவெடித்து அந்தவுள்ளிடத்திலநின்றுஎழுந்து வெப்பங்கொண்டு புகைந்துவரத் தேரானதுதிரிபுரமானதுபரமசிவனது நகையாகியநெருப்பினாலே பொரிந்ததுபோலப் பொரிந்துபோய்விட்டது,நடத்தப்பட்டகுதிரைகளாகிவலியில்லாதகுதிரைகளானதுகள்—என்றவாறு. (௭)

(கலிவிருத்தம்.)

குதிரையுங்கரிகளாகிக்கொடியதேரலகைத்தேராய்க் .. *
கதிரையுந்தனதுபாகன்காலெனவிழந்தபானு ... *
மதியழிந்திருந்தானந்த மலைவலஞ்செய்தானைக் ... *
கதிபெறச்செல்வேன்கண்டு கதிரவற்கிவையுரைத்தேன் *

(இதன்பொருள்.)

அந்தமலையினிடத்தில் நின்றெழுந்த கிரணவெப்பத்தினாலே குதிரைகள்எழும் கரிகளாய்ப்போய்க் கொடியையுடையதேர்கானல்போலத்தோன்றியும்உருவில்லாததாய்த்தன்னுடையபாகனானவன்காலை இழந்ததுபோலக் கிரணங்களெல்லாவற்றையும் தான் இழந்து சூரியன்மதிகெட்டுஇருந்தான். அந்தமலையைவலஞ்செய்துகொண்டு மேலாகிய கதியை அடையும்படியாகப்போகா நின்ற நான் பார்த்து அந்தச்சூரியனுக்கு இந்தவார்த்தைகளைச் சொன்னேன்—என்றவாறு. (௮)

ஐயனைமலையென்றெண்ணி யகந்தையாலிகழ்ந்து வீழ்ந்த
வையமென்னொருகாலத்துங்கதியிலையுனக்கொன்றுலுஞ் *
செய்யுமோர்தொழிலினும்லதீர்க்கலாந்தெளிவுளார்க்கு *
மெய்யனையருணையானை வலஞ்செயென்றுரைத்து மீண்டேன்.

(இதன்பொருள்.)

அருணாசலேசுரனை ஒருமலையென்று நினைத்து அகங்காரத்தினால்நிந்தித்துக் கீழேவிழுந்துகிடக்கின்ற ஆயிரங்கிரணங்களையுடைய

சூரியனே உனக்கு எந்தவகையினாலும் ஒருகாலத்துங்கதிகிடைக்காது அப்படியிருந்தாலும்- ஒருதொழிலினாலே கிடைக்கலாம் அதுயாதெனின் தெளிவுள்ளவர்க்கு மெய்ம்மையாகிய அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டுவாவென்றுசொல்லித் திரும்பினனென்றார் பிர்ம்மா—என்றவாறு. (௯)

போதித்தபடியேசென்று பொன்மலைவலமாய்முன்னஞ் ..... *
சாதித்தவருக்க னசோணா சலத்தினைவலமாய்வந்தான் ... ... *
வாதித்தமழுவினானு மழவிடைமீதிற்கோடி .. .. *
யாதித்தரெனம்வந்தோன்றி யாதித்தற்கருளிப்போனான் ... ...*

(இதன்பொருள்.)

பிர்ம்மாவானவர்- அநுக்கிரகஞ்செய்தபடியே மகாமேருகிரியைமுன்னே வலமாகவருகின்ற சூரியன் அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டுவந்தான், அந்தச்சூரியனுக்கெதிரேவாதித்துச் சத்துருக்களைக்கொல்லுகின்ற மழுவையேந்திய பரமசிவன் இளமையாகிய ரிஷபத்தின்மேலே கோடிசூரியர்போலத்தோன்றி அநுக்கிரகஞ்செய்து, கைலாயத்துக்கு எழுந்தருளினார்—எ-று. (௰)

பன்னிருமாதந்தோறும் பரிதிமுற்பயத்தினாலே... ... .*
வன்னியின்வடிவதான மலையினைவலமாய்ச்செல்வான் . ...*
சென்னியினெல்லைசெல்லா னிடப்புறஞ்செல்லானற்றேர் *
அந்நிலைவரும்போதேத்தி யலர்சொரிந்தாலுமென்றான்......*

(இதன்பொருள்.)


சித்திரைமுதல் பங்குனியீறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டுமாதமும் சூரியன்முன்னே தனக்கு உண்டானபயத்தினாலே அக்கினிச்சொரூபமாகிய மலையைவலஞ்செய்துகொண்டுபோவான், அந்தமலையினுடைய உச்சியின்மேலும்போகான், இடப்புறமாகவும்போகான், அந்தமலைக்குச்சமீபத்தில் வரும்போது ஸ்தோத்திரஞ்செய்து புஷ்பமாரிபொழிந்து செல்வானென்றுசொன்னார் பிர்ம்மா—எ-று. (௰௧)

ஒன்பதாவது

ஆதித்தசருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் — ௫௱௩௪.



சிவமயம்.

பிரதத்தசருக்கம்.

[எழுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.]

அருணைவாழிறைவன் றிரவியமணுமட் டாயினுங்கரந்தபேருட னே, மரணமாய்நமதாட் டழலிலேகுளிப்பர் வச்சிரவுலக்கையான்மறி வ, ரிருணிறைநரக மிருபத்தெண்கோடி யிடத்திலுமடைவிலேயிருப் பர், தரணியிற்புழுவாய்ப் பிறப்பர்களவு தனக்கிசைந்தவருமத் தகையர். ... ... *

(இதன்பொருள்.)

அருணசலேசுரரது திரவியத்தில் அணுவளவாவது திருடினவர்கள் உடனேமரணமடைந்து யமலோகத்திற்போய்அக்கினிக்குழியிலேவி ழுந்து அவஸ்தைபடுவார்கள். வச்சிரத்தினாற்செய்த உலக்கையால்அடி படுவார்கள். இருள்நிறைந்த இருபத்தெட்டுகோடி நரகங்களிலும் அ டைவாகவிழுந்துகிடப்பார்கள்.மறுபடிபூமியிலேவந்து புழுவாய்ப்பி றப்பார்கள். அந்தத்திருட்டுக்குடன்பட்டு இருந்தவர்களும் அப்படி ப்பட்ட துன்பத்தை அடைவார்கள்—என்றவாறு. (க)

ஒங்கியதரையு ளிசைத்தபொன்னெதிரோ யற்றபேருடலையுமொறுக் குந்,தேங்கியகருணையருணைநாயகர்போற் செய்கையப்படியினிற்கரந் து, வாங்கியபெயரைக் கிளையுடன்சிதைக்கு மலையினுங்கடலினுமொ ளித்து, நீங்கியபொழுதுந் தொடர்ந்திடும்விடுமோ நிழலெனத்தொ டருமெந்நிலத்தும். ... ... *

(இதன்பொருள்.)

திருவடிப்பூமியினுள் ஒளித்துவைக்கப்பட்ட பொன்னனது அந்த இடத்தின்மேல வந்தவருடையதேகத்தையுங் கண்டிக்கும்,அப்படிச் செய்வது மிகுந்த கிருபையுடைய அருணசலேசுரருடைய திரவிய தினது செய்தியாம், அந்தப் பூமியில ஒளித்துவைத்து எடுத்துக்

கொண்டவனாயோவென்றால், அவர்களுறவோடுகெடுக்கும், மலையிலுங்கடலிலு மொளித்துக்கொண்டபொழுதுந் தொடர்ந்து வருத்தும் விடமாட்டாது எவ்விடத்திற்போனாலும் நிழல்போலத்தொடரும்—என்றவாறு. (உ)

கடிக்கலாஞ்சிலையை விழுங்கலாநெருப்பைக் கடுவிடக்குழைத்திழைத்தெடுத்து, குடிக்கலாமிரும்பையருந்தலாங்கடும்பாற்கொள்ளலா மருந்தினற்குணத்தால், முடிக்கலாம்பகையை யருணைநாயகர்போன் விழுங்கினன் மிடற்றிலேபிடிக்கும், உடற்குளேகனலும் புகையுமவ் வளதோ வுயிரையுமுளத்தையுமொறுக்கும் ... ... *

(இதன்பொருள்.)

பின்னுஞ்சொல்வார் பிர்ம்மாகல்லைக்கடிக்கலாம், நெருப்பையெடுத்துவிழுங்கிவிடலாம், விஷத்தோடு கொல்லும்படியான வஸ்துக்களைச் சேர்த்துக்குழைத்தெடுத்துச்சாப்பிடலாம், இரும்பைப்புசிக்கலாம், கள்ளிப்பால்முதலியவற்றையுங்குடிக்கலாம், இவைகள் உபத்திரவஞ்செய்யவொட்டாமல் நல்ல மருந்துகளாலே நிவர்த்திபண்ணிக் கொள்ளலாம், அருணாசலேசுரர் திரவியத்தைச்சாப்பிட்டவுடனே தொண்டையைப்பிடித்துக்கொள்ளும், தேகத்துக்குள்ளேநெருப்பாகக்கனற்றும்புகையுண்டாகும், அவ்வளவுதான்செய்யுமோவென்றால், அவர்களுயிரையுங்கொன்று உள்ளத்தையுங்கெடுக்கும்—எ-று. (௩)

முக்கணான்பொருளைக் கவர்ந்தபேரிருக்க முயன்றபேர்நினைத்தபேர்முதலா, யக்கணத்தழிவரவர்களுமிருக்கவடியவர்பொருட்கவர்ந்தலைக்கத், தக்கதுநினைத்தார்கெடுவரொன்றுணர்த்துச்சத்தியம்பலபலசாற்றிச், செக்கருங்கருகவொளிவிடுமணிப்பூட்டிசைமுகனொருகதைசெப்பும் .. .. *

(இதன்பொருள்)

மூன்றுகண்களையுடைய அருணாசலேசுரரது திரவியத்தைத் திருடினவர்கள் படுகின்றதுன்பம் இப்படிப்பட்டது. அது இருக்கட்டும் அந்தப்பொருளைத் திருடுகிறதற்கு முயற்சிசெய்தவர்கள் திருடநினைத்தவர்கள் இவர்கள்அந்தட்சணத்திலேயழிவார்கள். அவர்களுமிருக்கட்டும், சிவபத்தர்களுடைய பொருளைத்திருடி அவர்களைத் துன்பப்படுத்த நினைத்தபேர்களும் கெடுவர்கள். என்றுபலபலசத்தியத்தோடுசொல்லிச் செவ்வானமும் கருகும்படி ஒளிவிடுகின்ற ரத்தினாபரணங்களைத்தரித்தபிர்ம்மாவானவர்ஒருகதைசொல்லத்தொடங்கினார்—எ-று. (௪)

முன்னமேயொருநாள் வடதிசைக்கிறைவன் முழுமணிக்கங்கைநீர்த்துறைவன், இந்நிலத்திழிந்த விந்திரனையாளுண்டசைமுருகவேணிகர்வான், மன்னவர்நிரைத்த மகுடகோடிகளின் வயிரநாயகங்களாற்

றேய்ந்த, பொன்னவிர்க்கழலான் றருமமூங்கழலான் புகழ்ப்பெயர்பிர
தத்தனென்பான். ... ... *

(இதன்பொருள்.)

பிர்ம்மாசொல்லுகிறார் முன்காலத்தில் ஒருநாள் வடதேசத்துக்கு ராஜாவாயிருக்கிறவன் வில்லுயர்ந்த முத்துக்களுக் கிருப்பிடமாகிய கங்காநதித்துறையையுடையவன் தெய்வலோகத்தினின்றும் பூமியிலிறங்கிய மகேந்திரன்போன்றவன், ஆண்மைக்குணத்தில் சுப்பிரமணியருக்குச் சமானமானவன், ராஜாக்கள் பணியும்போது அவர்களாலே நிரைநிரையாகத் தாழ்த்தப்பட்ட கிரீடகோடிகளில் இழைக்கப்பட்டிருக்கிற உயர்ந்தவயிரங்களாலே தேய்வுற்றபொன்னாற்செய்யப்பட்ட வீரகண்டையைத் தரித்தவன் தருமமென்பதை இடைவிடாது செய்கிறவன் கீர்த்திபொருந்திய பிரதத்தனென்னும்பெயரையுடையவன் — எ - று.

காலமேனர்விழியார் முகமெனவிளங்கிக் களங்குடைத்தொழுக்கிய
மதிபோல், நீலமாமணிக்காம் பிழைத்தவெண்கவிகை நெடுநிலாப்பர
ப்பெலாநிகழ்த்தச், சாலவேபணியாவரசர்களிவன்பொற் சரணமேயடை
ந்துயிர்பெறுமென், றேலவேயழைக்குந் தருமதேவதைபோ லி
ரண்டுசாமரைகளாத்திடவே ... ... *

(இதன்பொருள்.)

மயன்போலக்கொடுமையைச்செய்கின்றகண்களையுடைய பெண்களுடைய முகம்போலவிளங்கிக் களங்கத்தையுடைத்து ஒழுகவிட்ட சந்திரன்போல நீலரத்நமிழைத்திருக்கிற காம்பையுடைய வெள்ளைக்குடையானது நீண்டசந்திரிகையைப் பூமியின்பரப்பெல்லாம்நிகழ்த்தவும், மிகுந்தமரியாதையோடு பணியாத சத்துருராஜாக்களைப்பார்த்து இந்த ராஜனுடைய அழகியபாதங்களைவணங்கி உங்களுயிரை இறக்காமல்பெற்றுக்கொள்ளுங்களென்று பொருந்த அழைக்குந்தருமதேவதைபோல இரண்டுசாமரங்கள்வீசவும் — எ - று. (௯)

வருணமண்டலத்திற்பரவிபோற்கிளர்ந்தமரகதக்குரகதம்வயங்க, அ
ருணமண்டலத்தையளாவிடுங்கொடித்தேரடவிகள்புவியையடைப்ப,
கிரணசிந்துரத்துப் புகர்முகமருப்பிற் கிம்புரிக்கரிதிசைபிளரத், தர
ணிபர்நடுங்கமந்திரிகளைத்தொடெழுந்தனன் றன்னடையாத்திரையே *

(இதன்பொருள்.)

வருணமண்டலத்தில் விளங்குங் குதிரைகள்போல் உயர்வாகிய மரகதநிறத்தையுடைய குதிரைகள்பிரகாசிக்கவும், சூரியமண்டலத்தை அளாவிய கொடிகள்கட்டிய தேர்க்காடுகள் பூமியையடைக்கவும், கிரணம் பொருந்திய சிந்தூரத்திட்டிய புள்ளிகளையுடைய முகத்தை

வம் பூண்கட்டியதந்தங்களையுமுடைய யானைகள்திசைகள்தோறும்பிர
காசிக்கவும், சத்துருமன்னர்பயப்பட மந்திரிகூட்டத்தோடும்சேனை
களோடும் பிரயாணப்பட்டான் யாத்திரையாகப் பிரதத்தராஜன்—என்
றவாறு. (௭)

அங்கர்பற்றேறப்பவனர்வெற்படைய வவந்தியர்வில்லின்னாணெகை
வச், சங்கலித்தொடக்காட்பற்றமன்னவிகர் சம்பிறைதாங்களை சுமக்க
ச், சிங்கமேவெனவேசோழநாடணைவான் றிருநதிகடந்து சென்றருணை
க், கங்கைவாழ்சடையான்கோயிலிற்புகுந்தான் கங்கையுங்காசிடம் புர
ப்பான்.. ... ... *

(இதன்பொருள்.)

இந்தப்பிரதத்தராஜன் பிரயாணப்பட்டபோது அங்கதேசத்தரசர்
பயந்துபுற்றிலேறிக்கொள்ளவும், யவனதேசத்து ராஜாக்கள் மலையி
லொளித்துக்கொள்ளவும், அவந்திதேசத்தார் வில்லிலிருக்கிற நாணி
யைக் கவ்விக்கொள்ளவும், மற்றைத்தேசத்து ராஜாக்கள்சங்கிலிபோல
த்தொடர்ந்து நின்று தாங்கள்கட்டவேண்டியசப்படங்களைத்தாங்களைசு
மந்துவரவும், ஆண்சிங்கம்போலச் சோழநாட்டுக்குட்போகும்படியா
கப் புறப்பட்டுத் திருநதியைத்தாண்டி அழகிய அருணாசலத்தலத்துக்கு
வந்துகங்கையைத்தரித்த சடையையுடைய பரமசிவனுங்கோயிலிற்
புகுந்தான், கங்காநதியையும் காசிதேசத்தையும் ஆளுகிறபிரதத்தரா
ஜன்—என்றவாறு. (௮)

அரும்பவிழ்மலர்கொண் டருச்சனைபுரிய வருணைநாயகர்திருக்கோ
யில், விருப்பிபுடபுகுந்து பண்புமவ்விடத்தில் விடத்தினுங் கொடிய
கூர்விழியாள், இரும்பையுமுருகத் திசையிலொருத்தி யிலங்கிழை
யாருடனிறையால், கரும்பினு மொழியாற் பாடுதல்கேட்டான்கண்ட
னன்வளைத்தவேள்கரும்பை... ... ... *

(இதன்பொருள்.)

காசிதேசத்துராஜாவாகியபிரதத்தன், அரும்புகள் மலர்ந்த புஷ்பங்க
ளைக்கொண்டு அர்ச்சனைபண்ணுகிறதற்காக அருணாசலேசுரர்வீற்றிரு
க்குந்திருக்கோயிலுள் பத்தியோடும்போய் வந்தனஞ்செய்யும்போது
அவ்விடத்தில் விஷத்திலுங் கொடுமைசெய்கின்ற கூர்மையாகியகண்
களையுடையவள் இரும்புகூட உருகும்படி செய்யும் சங்கீதவித்தையை
யுடையவளாகிய ஒருதாசிப்பெண் பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத்
தரித்தசிலபெண்களோடுநின்றுசுவைநிறைந்தபாலும் கரும்பின்ரசமு
ம்போன்ற மொழியினாலே பாடுகிறதைக் கேட்டான். அந்தட்சணத்தி
லேதானேமன்மதன்வளைத்தகருப்புவில்லையுங் கண்டான். காமவிகாரங்
கொண்டுபிரதத்தராஜன்—என்றவாறு. (௯)

அன்னமோகிளியோ வமிர்தமோ திருவோ வமிர்தமன் றமாருக்
களித்த, வன்னமோ கிளியோ விரதமோ பிரமன் மனத்திலும் வந்த

தமேனகைபோல், என்னமோகமதாய்த் தனதுநாட்டினிற்கொண் டே
குவா னினைந்தனனதற்கு, முன்னமேகுரங்கு முகமதாயிருந்தான் மூ
வறுலாயினதேவர்முகமும்... ... ... *

(இதன்பொருள்.)

காசிதேயத்துப்பிரதத்தராஜனானவன் அந்தத்தாசிப்பெண்ணைப் பார்த்துச்சொல்வான். இவள் அன்னமோ, கிளியோ, தேவாமிர்தமோ, லட்சுமியோ அசுரரைக்கென்று அமிர்தத்தைமுன்காலத்தில் தேவருக்குக் கொடுத்த அழகாகிய மோகினியோ, ரதிதேவியோ, பிர்ப்பதேவன்மனதினால்சிருஷ்டித்தமேனகையோஎன்றுநினைத்து மோகத்தோடுதன்னுடைய தேயத்துக்கு அந்தப்பெண்ணைக் கொண்டுபோகிறதற்கு நினைத்தான். அந்தநினைப்புஉண்டாகுமுன்னமேதானே குரங்கு முகத்தையுடையவனாயிருந்தான்அதைக்கண்டுஎல்லாரும் நகைத்தார்கள்— என்றவாறு. (௰)

மந்திரிக்கிழவ ராஜனைவினவி மன்னவாநினைத்தவாறதனால், வந்தவித்
துயரந் தவிர்ந்திடமலைமேன்மருந்தினைப்பணியென வவனுஞ்சிந்து
ரக்குவடுங் கவனமாம் பரியுஞ் செழுமணிச் சிவிகையுந் தேரும், சந்த
னமணியுந் தனத்தினர்பலருந் தமணியக்கோயின்முன் விடுத்தான்.

(இதன்பொருள்.)

மந்திரிமார்கள்பிரதத்தராஜனைப்பார்த்துக் குரங்குமுகம்வந்ததற்குக் காரணங்கேட்டறிந்துகொண்டு அரசனேதீமையாகிய உனதுநினைப்பினால்அடைந்தஇத்துன்பம்நீங்கும்படி மலைமேல் மருந்தாகிய அருணாசலேசுரரைவணங்கென்றுசொல்ல-அந்தராஜனும் மலையையொத்த யானைகளையும்-வேகமாகத்தாவுகின்றகுதிரைகளையும்-நல்ல ரத்தினங்களால் இழைக்கப்பட்டிருக்கிறபல்லக்குகளையும்-தேர்களையும், சந்தனக்குழம்பைப் பூசுகின்ற ஸ்தனங்களையுடைய பெண்களையும் பொற்பிரகாசம் பொருந்திய அந்தக்கோயிலுக்குமுன் காணிக்கையாகக்கொடுத்துவிட்டான்—எ-று. (௰௧)

பன்னருமனந்தம் பூசனைபுரிந்தான் பரமனுமவற்கருள்புரிந்தான்,
கின்னரமொழிபாள்விருப்பினாலடைந்த கிலேசவானரமுகமொழிந்தா
ன், நன்னரமுகம்பெற்றிறைபுநாடணைந்தா னதலாலரன்பொருட்கவர,
வுன்னியபாவம்பதின்மடங்கரும்பொன் னுதவினுற்றவிருமென்றுரைத்
தான்... ... ... *

(இதன்பொருள்.)

பிரதத்தராஜன் சுவாமிக்குச் சொல்லுதற்கரிய அனந்தம் அருமையான பூசைகள் செய்தான். அப்பொழுது சுவாமியும் அந்தராஜனுக்

குக் கிருபைசெய்தார், வீணையினிசைபோலும், வார்த்தையையுடையபெண்மேற்கொண்ட ஆசையினால் அடைந்ததுன்பம் பொருந்தியகுரங்குமுகத்தை யொழிந்தான், நல்லமானிடமுகத்தையடைந்து அந்தராஜன் தன்னுடைய நாட்டுக்குப்போய்ச்சேர்ந்தான்-ஆனபடியினாலே அருணாசலேசுரருடைய பொருளைத்திருட நினைத்ததனாலுண்டாகியபாவம் அப்பொருளுக்குப் பதின்மடங்கு திரவியங்கொடுத்தாலேதீருமென்று சொன்னார் பிர்ம்மா — என்றவாறு. (௰௨)

[அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.]

மாதவனேயருணைகிரி வளமிதுதானெனத்திருவாய் மலர்ந்தானந்தப், போதனையங்கடிபணிந்தான் போதனையான்மகிழ்ந்தனனிப் புவியின்மீதே, ஏதமுடனறிந்துசெய்த பவந்தவிருங்கதையினையுங் கூறுகென்றான், மூதறிவாயினனாலு முகத்தினுமாயிரமுகமாய் மொழியலுற்றான். ... ... *

(இதன்பொருள்.)

மகத்தாகிய தவத்தையுடையசனகரிஷியே அருணாசலத்தினது வளம் இதுதானென்றுசொன்னார் அந்தப்பிர்ம்மாவை அவ்விடத்தில் சனகரிஷியானவர் வந்தனஞ்செய்து உம்முடைய போதனையினாலே ஆனந்தத்தையடைந்தேன், இந்தலோகத்தில் குற்றமாக அறிந்து செய்தபாவம்நீங்கும்படியானகதையையும், அருள்செய்யவேண்டுமென்றார், பேரறிவுகொண்ட பிர்ம்மாவானவர் தம்முடையவாய்நான்கும் ஆயிரம்வாயாகச் சொல்லத்தொடங்கினார்—என்றவாறு. (௰௩)

பத்தாவது

பிரதத்தசருக்கம்

முற்றிற்று

ஆக திருவிருத்தம்—௬௩௭.

சிவமயம்.

பாவந்தீர்த்தசருக்கம்.

(கலிவிருத்தம்.)

வாக்கினால்வடிவினான் மனத்தினால்பவந்... ... .*
தாக்கினாருணைமாசயிலநோக்கினா... ... ...*
நீக்கினனென்பதுநிகழ்த்திநாம்மறை......... *
தேக்கினான்சிலகதைசெப்பலாயினான்... ... .*

(இதன்பொருள்.)

வாக்கினாலும், தேகத்தினாலும், மனத்தினாலும், துர்விஷயங்களைச்சொல்லியும், செய்தும் நினைத்தும் பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணாமலையைத் தரிசனஞ்செய்தால் அப்பொழுதே தங்கள்பாவத்தை நீக்குவார்களென்று சொல்லிநான்குவேதங்களையுந்தன்னிடத்திலுடையபிரம்மாவானவர் சிலகதைகளைச் சொல்லத்தொடங்கினார்—எ-று.(க)

(அறுசீரடிஆசிரியவிருத்தம்.)

எம்பெரியசபையிடத்திலிருநாலுவசுக்களும்வந்திருந்தார்முன்னே*
தம்பெரியதவத்தினையும்புகழினையும்வியந்துரைத்தகைமைநோக்கிக்*
கும்பமுனிமுதலவர்களிடையினுமைவியந்துரைத்தகொடுமையாலே*
அம்புவியிலிழைத்ததவமனைத்தினையுமவமாக்கியகற்றுமென்றேன் *

(இதன்பொருள்.)

என்னுடையபெரியசபையினிடத்தில் அட்டவசுக்களும் முன்னொருகாலத்தில் வந்திருந்தார்கள், அப்பொழுது அவர்கள் தங்களுடைய தபசின்பெருமையையும், அதனால்வந்தகீர்த்தியையும் கொண்டாடிச் சந்தோஷித்தார்கள். அதைப்பார்த்து அகஸ்தியர் முதலான ரிஷிகள் மத்தியிலே உங்களை நீங்களேபுகழ்ந்துசொல்லிய கெறுவத்தினாலே அக்குற்றம் பூமியில்செய்த தவமெல்லாம்அவமாகச்செய்துவிடுமென்று சொன்னேன்—எ-று. (உ)

உற்றபெருந் தவத்தினையுந் தமதறத்தி னலத்தினையு முரைத்தபே
று, மற்றொருவர் தமையிகழ்ந்த வருந்துயரக் கடல்மூழ்கி மறிவரெ
ன்றேன், சிற்றறிவா யவசுக்க ளனைவர்களு நடுங்கியிது தீருங்காலஞ்,
சொற்றருளு கெனவுரைத்தா ரரனருளாற்றீருமுங்க ளுயர்தானென்
றேன்... ... ... *

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய தம்முடையதவத்தையும், செய்ததருமத்தை
யும், சொன்னவர்களும், மற்றொருவரை யிகழ்ந்து பேசினவர்களும்,
துக்கசமுத்திரத்தில முழுகி மறிபட்டுக் கிடப்பார்களென்றேன். சி
ற்றறிவையுடைய அட்டவசுக்களும் அந்தவார்த்தையைக் கேட்டு நடுங்
கி இந்தச்சாபம் எந்தக்காலத்தில தீரும் அருள்செய்யவேண்டுமென்
று கேட்டார்கள், பரமசிவன் கிருபை உங்களுக்கு என்றைக்குக்கிடை
க்கின்றதோ அன்றைக்குத் தீருமென்றேன் — எ-று. (௩)

சொல்லுதலும் வசுக்களெலா மெனையகன்று நெடியகங்கைத் து
றையிலேகி, எல்லையிலா நெடுங்கால மிறையைநினைந் தரியதவ மியற்
றினர்கள், வல்லிடபக் கொருநாளின் மழவிடைமே லடைந்துதவய்வ
ரமேதென்றான், அல்லிமல ரவன்கொடுத்த கொடுஞ்சாபக்கடலிலெடு
த் தருளுகென்றார்... ... ... *

(இதன்பொருள்.)

அப்படிச்சொன்னவுடனேவசுக்களெல்லாரும் என்னுடையசபை
யைவிட்டு நெடுந்தூரஞ்செல்லுகின்றகங்காநதியினது துறையிற்போ
ய் அளவில்லாதகாலம் பரமசிவனை நினைத்து அரிதாகியதவத்தைச்செ
ய்தார்கள். பார்ப்பதியைவாமபாகத்தில் வைத்துக்கொண்ட அந்தச்சு
வாமியானவர் ஒருநாள் இளமையுற்ற ரிஷபவாகனத்தில் எழுந்தருளி
வந்து நாம் உங்களுக்குக் கொடுக்கவேண்டியவரமென்னவென்றுங்கே
ட்டருள்செய்தார். அந்தவசுக்கள் அகவிதழினையுடைய தாமரைமலரிலி
ருக்கிற பிர்ம்மாவானவர்கொடுத்த கொடியசாபமாகிய கடலிலநின்று
ப், எங்களை எடுத்தருளவேண்டுமென்றார்கள் — எ-று. (௪)

கருணைமுகின் முகமலர்ந்து வசுக்களுட னுமதுபவங் கடக்கவே
ண்டில், தரணியிலே யொருநகரந் தலேச்சுரமென் றிலங்குமந்தத் த
லத்தின்மீத, அருணகிரியெனுமலையா யிருக்குமந்தப் பதியணுகிய
சலஞ்சூழ்ந்த, வருணதிசைதொடங்கியெட்டுத்திசைகளினுமிருந்துத
வ மியற்றுமென்றார்... ... ... *

(இதன்பொருள்.)

கிருபாவருஷித்தைப்பொழிகிற மேகமாகிய பரமசிவனானவர் திரு
முகமலர்ந்து அந்தவசுக்களைப்பார்த்து உங்களுடையபாவத்தைநீங்கள்,

கடக்கவேண்டினால் பூமியில் தலேச்சரமென்று ஒருதிவ்விய ஸ்தலம் விளங்குகின்றது. அந்தஸ்தலத்தில் அருணாசலமென்று ஒருமலையிருக்கும், அந்தஸ்தலத்தையடைந்து அந்தமலையைச்சூழ்ந்த கிழக்குத்திக்குத்தொடங்கி எட்டுத்திக்குகளிலு மிருந்து தவசுசெய்யுங்களென்றருளிச்செய்தார்—எ-று. (௫)

அன்னவயலருணையில்சீ ரரியதவமியற்றிடுமவ்வளவேயுங்கள்முன்
னரழற்கிரியுமெட்டு முகமாதவிளங்கியட்டமூர்த்தியாகு, மன்னுமுங்
களரும்பவமுந் தவிருமென வுரைத்துவெள்ளி மலையிற்சேர்ந்தான்,
தன்னையடைந் தவர்களெலாந்தனைப்போலவிருக்கவரந்தருகுவானே.

(இதன்பொருள்.)

அன்னப்பட்சிகள்தங்கிய வயல்சூழ்ந்த அருணாசல ஸ்தலத்திற்குப் போய் நீங்கள் அரியதவத்தைச்செய்யுங்கள் அப்படிச்செய்த அளவிலே அக்கினிஸ்வரூபமாய் விளங்கிய ஒப்பற்ற அந்தமலையானது உங்களுக்கு முன்பாக எட்டுமுகமாய்க் காட்சிகொடுக்கும், அப்போது நிலைபெற்ற உங்களுடையபாவமும் நீங்குமென்று திருவாய் மலர்ந்து கைலாயத்துக்கு எழுந்தருளினர், தம்மிடத்திலடைந்தவர்களெல்லாரையும் தம்மைப்போல உருவத்தை யடைந்திருக்க வரமருளிச்செய்கிறபரமசிவன்—எ-று. (௬)

முந்தவசுரரையுமவர் புரத்தினையுமெரித்தபிரான்மொழிந்தவாறே
அந்தவசுவனைவருஞ்சென் றருணையிலேயரியதவமியற்றினர்க ... *
ளிந்தவசுமதிதழைக்கவழற்கிரியெட்டுருவாகியிருந்ததங்கே... .. *
தந்தவசுநிலைபுகழ்ந்தகொடுஞ்சாபக்கிரிகளெலாந்தள்ளினார்கள் .. *

(இதன்பொருள்.)

முன்பு அசுரர்களையும், அவர்கள் வாசஞ்செய்து கொண்டிருந்ததிரிபுரங்களையும் நகைத்தெரித்த சுவாமியானவர் அருளிச்செய்தபிரகாரமே அந்த எட்டுவசுக்களும்போய் அருணாசலத்தில் அருமையாகிய தவத்தைச்செய்தார்கள். இந்தப்பூமியானது தழைக்கும்படி அக்கினிமலை எட்டுமுகமாய்விளங்கியிருந்தது, முன்னே தங்களுடையதவத்தைப் புகழ்ந்துசொல்லியதனால்வந்தகொடியசாபமென்று சொல்லப்பட்டமலையைத்தாண்டிவிட்டார்கள் அவ்விடத்தில்—எ-று. (௭)

பூதரஞ்சூழ் திசைகளெலா மிருந்தஷ்டமூர்த்திதனைப்பூசித்தா
ர்க, ளாதலினாற் பழையபடி தமதுபதவிகளையடைந் தருள்பெற்றார்
க, ளேதமறும்படிக்கரியமறைப்பயனெட்டுருவாகியிருந்தபோதுஞ்,
சீதரனும்பதங்கிரமத் துடனறியான்முடியெனக்குந்தெரிந்ததன்றே.

(இதன்பொருள்.)

அந்தமலையைச்சூழ்ந்த எட்டுத்திக்குகளிலுமிருந்து வசுக்கள்-அஷ்டமூர்த்தமாகிய சுவாமியைப்பூசித்தபடியினாலே பழையபடியே தமது பதவிகளைப்பெற்றுக்கொண்டு சுவாமியினது கிருபையும்பெற்றார்கள், குற்றநீங்கும்படி அருமையான வேதப்பொருளாகிய அந்தச்சுவாமியானவர் எட்டுமுகமாயிருந்தபோதும்- விஷ்ணுவும்திருவடியைக் கிரமத்துடனே அறியாமற்போனார். எனக்கும் முடிதெரியவில்லை —என்றவாறு. (அ)

சண்முகனையளித்தவைந்து முகத்தவனெண் வசுக்கள்செயுந் தவத்தினாலே, எண்முகமாயிருந்ததுகண் டொருமுகமா யிமையவர்வாழ்த் தெடுத்தாரொன்று, தண்முகநான்குடையபிரான் சனகமுனிக்குரைத்தருளச்சயிலத்தூடே, பண்முகயா ழனையமொழித் திலோத்தமைசேர்கதியினையும் பகரலுற்றான் ... . *

(இதன்பொருள்.)

சுப்பிரமணியரைப்பெற்ற பரமசிவனானவர், எட்டுவசுக்களுஞ்செய்த தபோபலத்தினாலே எட்டுமுகமாயிருந்ததைப்பார்த்துத் தேவர்களெல்லாரும் ஒன்றாய்க்கூடிவணங்கிப் பல்லாண்டுகூறினார்களென்று கருணைபொருந்திய நான்குமுகங்களையுடைய பிர்ம்மாவானவர்-சனகரிஷிக்குச்சொல்லி அருள்புரிகின்ற அந்தத்திருமலையில் யாழினது இசைபோன்றவார்த்தையையுடைய திலோத்தமையென்பவள் அடைந்த கதியையுஞ் சொல்லத் தொடங்கினார்—எ-று. (கூ)

(கலிவிருத்தம்.)

தேவர்கோன்முன்னமென் னிடத்திற்சேர்ந்துதன் ... *
பாவனமானதன் பதவிவேண்டியே... ... ... *
யாவருமருந்தவ மியற்றினாரவற்... ... ... *
காவதுசெய்யென வறைந்துபோயினான்... ... .. *

(இதன்பொருள்.)

பிர்ம்மாசொல்வார்-தேவேந்திரன் முன்னேயென்னிடத்தில்வந்து தன்னுடைய பரிசுத்தமான பதவியையிச்சித்து எல்லாரும் அருமையான தவத்தைச்செய்கிறார்கள். அந்தத்தவம் நிறைவேறுகிறபடிக்கு ஏதாவது ஒருவிக்கினத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனான் — என்றவாறு. (ய)

இந்திரன்போனபின் னியக்கமங்கைய... ... ... *
ரந்தரமங்கைய ரரவநாட்டவர்.. ... ... *
சுந்தரக்கடற்புவித் தோகைமார்வரா... ... ... *
மந்தரமுலைச்சிய ரழகுவாரியே ... ... *

(இதன்பொருள்.)

தேவேந்திரன் போனபிற்பாடு- யட்சலோகத்துப்பெண்கள், தெய்வலோகத்துப்பெண்கள், நாகலோகத்துப்பெண்கள், அழகுபொருந்திய கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ளபெண்கள் - மந்தரகிரிபோன்ற முலைகளையுடைய வரையரமகளிர் இவர்களுடையஅழகுளெடுத்துக்கொண்டு—என்றவாறு. (௯௧)

வகுத்தனன்றிலோத்தமை யென்னும்வஞ்சியை ... *
யுகுத்தனன்வலியைநன் மதியையோட்டினன்... ...*
மிகுத்ததோர்விஞ்சையிற் புவியின்வேட்டுவ .. ... *
னகத்துடலழித்துட னளிப்பதென்னவே... ... ...*

(இ-ள்.)குளவியானது தன்னிடத்திலுள்ள ஒருசாமர்த்தியவிசேஷத்தினாலே புழுவினது உடலைக்கெடுத்து-அதற்குவேறொருதேகத்தைக்கொடுப்பதுபோலத் திலோத்தமையென்னும் பெண்ணை உண்டாக்கினேன்- அப்பொழுதே அவள்மேற்கொண்ட ஆசையால் என்னுடைய வல்லமையை இழந்தேன் ஞாபகத்திற்செல்லுகின்ற என்னுடைய புத்தியையுந் துரத்திவிட்டேன்—எ-று. (௯௨)

மன்மதன்கணையினான் மயங்கிவாடுமென்... ... ...*
றன்மையையறிந்துநான் றனக்குத்தாதையென் ... *
றென்மனம்பொருந்திலா தெனதுகைபுகாள்... ...*
முன்பினிலொளிக்கநான் முகமுந்தேடினேன் ... *

(இதன்பொருள்.)

மன்மதனுடைய பாணத்தினாலே மயக்கத்தையடைந்து வாடுகின்றஎன்னுடைய இயல்பையறிந்து நான்தனக்குத் தகப்பனென்று என்கருத்துக்கு ஒவ்வாதவளாகியும், நான்பிடிக்கும்போது என்கைக்கு அகப்படாதவளாகியும், எனக்குமுன்னின்றும்- ஓரிடத்தில்தானறியாதபடி ஒளித்துக்கொள்ள, நான்குபக்கங்களிலும்-அவளைத்தேடினேன்—என்றவாறு. (௯௩)

(அறுசீரடி ஆசிரியவிருத்தம்.)

கன்னிமானாகச்சென்றாள் கலையதாய்த்தொடர்ந்தேன்பேட்டு... ...*
வன்னிபாய்ப்பறந்தாள்சேவல் வடிவமாய்த்தொடர்ந்தேன்மங்கை *
பின்னையோர்கதியுங்காணாள் பிறங்கலாமருணைநாதன்...............*
றன்னையேதாரக்கண்டாள் சரணமென்றுரைத்துச்சார்ந்தாள்......*

(இதன்பொருள்.)

அப்படிநான்தேடி அவளைக்கண்டு பிடிக்கும்போது பிடிக்கிறதற்குமுன்னே பெண்மானாகி ஓடினாள். நான் கலைமானாகித் தொடர்ந்தேன், அதன்பின் பெண்கிளியாய்ப்பறந்தாள். நான் ஆண்கிளியாய்ப் பறந்து தொடர்ந்தேன்- அந்தத்திலோத்தமையானவள் பிற்பாடு என் கையிலகப்படாமலிருக்கிறதற்குவேறொருகதியுங்காணாமல்வருந்தும்

போது மலையுருவமாகிய அருணாசலேசுரரைக் கொஞ்சதூரத்திற் கண்டு நீ சேதஞ்சமென்றுசொல்லி அடைந்தாள்—என்றவாறு. (௰௪)

மாயமால்விடையிற் பாகர் வழுவிலாவிடையிற் பாகர் ... ... *
காயழலானமெய்யர் கானகத்தாடுமையர் ... ... *
ஆயமாரணத்தின்சோதி யடைக்கலமென்றனையன் ... *
சேயிளமழலைபோலத் திருச்செவிசாத்தினளே ... ... *

(இதன்பொருள்.)

மாயஞ்செய்கின்ற விஷ்ணுவாகியரிஷபத்தின்மேல் வருகின்றவரோ, கொஞ்சமாவது இடுப்பில்லாத பார்ப்பதியைப்பாகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறவரோ, தகிக்கின்றநெருப்புநிறமா[illegible]யுடையவரோ, திருவாலங்காட்டினிடத்தில் நட[illegible]ரா ய்ந்துதேடுகிற வேதத்தையுடைய சோதியோ, [illegible]என்றுச கலமையும் ஆளுகின்ற பரமசிவனது திருச்செ[illegible]ட்டிக் குழந்தையினது இளமையாகிய மழலைச்சொல்லைப்போலச்சொன்னாள் —என்றவாறு. (௰௫)

மருமலர்க்குழலினுடன் முறையிடுமுறைக்கென்னையன் ... *
திருவுருவனைத்துந்தூய செவிகளாயிருந்தபோது ... ... *
விரைவின்மால்வரையைக்கீறி வேட்டுவனாகிநாலு ... ... *
சுருதியுஞ்ஞமலியாகத் தோன்றினன்மங்கைபாகன் ... *

(இதன்பொருள்.)

வாசனைபொருந்திய புஷ்பமாலையையணிந்த கூந்தலையுடைய திலோத்தமையினது முறையிடுதலுக்கு என்சுவாமியினது அழகியஉருவமெல்லாம் செவிகளாயிருந்தன. அதிசீக்கிரத்தில்மலையைக்கீறிஅதில் நின்றும்-தாம்வேடரூபமாகவும்-நாலுவேதங்களும் நாய்களாகவுந்தோன்றினார், பார்ப்பதியை யிடப்பாகத்தில்வைத்துக்கொண்டபரமசிவன்—என்றவாறு. (௰௬)

சூடகச்செங்கைபாகன் சிலையொடுதோன்றும்போதில் ... *
வாடியமருங்குலாண்மேன்மயக்கமும்வருத்தந்தீர்ந்தே ... ... *
ஆடியபெருமானம்மைமுனியுமென்றஞ்சித்தாழ்ந்தேன் ... *
வேடனைப்பறவைகண்டால்வெருவுமோவெருவுறாதோ ... .. *

(இதன்பொருள்.)

வளையலையணிந்த கையையுடைய பார்ப்பதியை ஒருபக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிற பரமசிவன்- வேடனாகி, வில்லைக்கையிலேயேந்திக்கொண்டுதோன்றியபோது முன்னேநடனஞ்செய்த சுவாமியானவர் என்னைக்கோபித்துக் கொள்வாரென்று பயந்து வளைகின்ற இடுப்பினையுடையதிலோத்தமையின் மேலுண்டாகிய மையலையும்-அதனாலுண்டாகிய வருத்தமுந் தீர்த்து அந்தச் சுவாமியை வணங்கினன்-வேடனைப்பட்சிகண்டால் பயப்படுமோபயப்படாதோ— எ-று. (௰௭)

வெற்பெனுருவமலையாடன்னைவிதித்துநீவிரும்புந்தீமை ... *
கற்பகோடியிலுந்தீராதாயினுங்கருணையாமித் ... ... *
தற்பரமலைகண்டாயேயாதலாற்றவிர்த்தோம்போவென் ... ...*
றற்புதன்மொழிந்துமீளப்புகுந்தனனருணைவெற்பில்... ... *

(இதன்பொருள்.)

மலைக்குதிகராகிய ஸ்தனத்தை யுடைய திலோத்தமையைப் படைத்து நீயே விரும்புதலா லுண்டாகிய பாவமானது கற்பகோடிகாலத்திலுந்தீரமாட்டாது ஆனாலும் அருணருவ மாகியுந் தானேபரமாகியுமுள்ள இந்தமலையைத்தரிசித்தாயாதலான் அப்படிப்பட்டபாவத்தைத்தீர்ந்துவிட்டோம்,உன்னிடத்திற்குப் போவென்று திருவாய்மலர்ந்து அம்மலைக்குள்சுவாமியானவர்மறைந்துவிட்டார்—எ-று. (௰அ)

(கலிவிருத்தப்.)

தன்னையறியாமல்வினை சாருமுடனுநீ... ... ...*
தென்னருணைசேரிலது தீருவதுதின்னை ... ... *
மின்னல்வினையற்றதனி லெண்ணியதுபெற்றார்... ... *
முன்னமுளவொன்றயன் முனிக்குமொழிகின்றான் ... .. *

(இதன்பொருள்.)

ஒருவனுக்கு அபத்திபூர்வமாகவந்த பாவமானது அவன் அழகுபொருந்திய அருணாசலத்தையடைந்தால் தீரும் அது நிச்சயமேமுற்காலத்திலும் அனேகர் தங்களுடையவினைகளை நீங்கி அந்தஸ்தலத்தில் தாங்கள் நினைத்தவரத்தைப் பெற்றுக்கொண்டார்களென்று பிரம்மாவானவர் சனகரிஷிக்கு ஒருகதைசொல்லுகிறார்—என்றவாறு. (௰௯)

கற்பமுடிவாயிருள் பெயர்ந்தபுலர்காலத் ... ... *
தற்பவிருளில்றதுமுன் றனிறையினுலே ... ... *
சொற்பரவைமாயனுணராதுதுயில்கொள்ளச் ... *
சிற்பரமயோகியர்கள் செம்மலைநினைந்தார் ... ... *

(இதன்பொருள்.)

முன்காலத்தில் பரமசிவனுடையதிருவிளையாட்டினாலே கற்பகாலமானது முடிவுற்ற மகத்தாகிய அந்தகாரமானது நீங்கி, வெளிச்சமுண்டாகிறகாலத்தில் அந்த அந்தகாரத்திற்கொஞ்சம் நின்றது. அக்காலத்தில் இதனையறியாமல்விஷ்ணுவானவர் சமுத்திரத்தில்நித்திரைசெய்துகொண்டிருக்க, மேன்மைபொருந்திய சின்மயமாகிய யோகியர்கள் பரமசிவனை நினைத்தார்கள்—என்றவாறு. (௨௰)

அத்தனடியார்கடம தாணவமறுக்குஞ் ... ... *
சுத்தனழலானதொரு சோதிவடிவாமே ... ... *

னெத்தலமுமெத்திசையு மெங்கும்வெளியானே ... *
னுய்த்தபொறிதம்மிலுளவாயவுலகெல்லாம் ... *

(இ-ள்.) எல்லாச்சீவராசிகளுக்கும்பிதாவாயும், தமதடியார்களுடைய ஆணவமலத்தைக்கெடுக்கின்ற சுத்தராகியுமிருக்கின்றபரமசிவன் நெருப்புமயமாகிய ஒருசோதிரூபத்தையடைந்தார். எந்தஸ்தலங்களிலும் எந்தத்திக்குகளிலும் மற்றஎந்தவிடங்களிலும் ஆகாயமேதமக்கு உருவமாகிய அந்தச்சுவாமியானவர் அப்போது சிந்தியபொறிகளாலே உலகமெல்லாம்உண்டானதுகள்—என்றவாறு. (உக)

ஊழிமுடிவாயிருள்புலர்ந்துமுணராதே ... *
யாழிமிசையிற்றுயிலு மச்சுதனையெய்தி ... *
வாழியெனயோகிய ரெழுப்புதலுமாயன் ... *
பாழியிலுநின்றதிபயத்துடனெழுந்தான் ... *

(இ-ள்.) ஊழிகாலமுடிந்து மகத்தாகிய அந்தகாரம்நீங்கியும், அறியாமல் சமுத்திரத்தில் நித்திரைசெய்கின்ற விஷ்ணுவினிடத்தில்வந்து வாழியென்று சொல்லியோகியர்களெழுப்புதலும் அந்தவிஷ்ணுவானவர் சர்ப்பசயனத்தில்நின்றும் அதிகபயத்துடனெழுந்திருந்தார்—எ-று.

வையகமளிக்கமலரோனையுதவாதே ... *
பையரவின்மிக்கதுயில்கொண்டபரிசாலே ... *
வெய்யபுன்வினைத்தொழில் விளைத்தனனெனத்தன்... *
னையுணர்வுமஞ்சியெனதையனைநினைந்தான் ... ...*

(இதன்பொருள்.)

உலகத்தையுண்டாக்கும்பொருட்டு பிர்ம்மாவைச்சிருஷ்டிக்காமல்படத்தையுடையபாம்பின்மேல்நித்திரைசெய்த தன்மையாலேவெம்மையாகிய புல்லியதீவினையைச் சம்பாதித்துக் கொண்டேனென்று ஐம்பொறியுங்கலங்கி என்னுடையஆண்டவனாகிய சுவாமியை நினைத்தார்.

அன்பர்கருதிற்கடிமையாகியெதிர்வந்தே ... *
துன்பமகல்விக்குமதுதூயதொழிலானோன் ... *
வன்படிகவெற்புமிசைமன்னுசுடர்போலே ... *
மின்படருமேனியுடன்வெள்விடையில்வந்தான் ... *

(இதன்பொருள்.)

அடியார்கள்நினைத்தால் சீக்கிரத்தில்தானேஅவர்களுக்கு எதிராகத்தோன்றித் துன்பத்தைநீக்குவதேதமக்குப்பரிசுத்தமாகிய தொழிலாகக்கொண்டபரமசிவனானவர்வலிமையாகிய ஸ்படிகமலையின்மேல்விளங்குகின்றசோதிபோலவெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மின்போன்றநிறத்தோடெழுந்தருளிவந்தார்—என்றவாறு. (உச)

பெருக்கெனவெழுந்தடிபணிந்தருள்புகழ்ந்தே ... *
யருக்கியமுதற்புரியருச்சனையினாலே ... *

யுருக்கியென்வினைத்தொடரொழித்தருடியென்று ... *
னெருக்கணிகுவானிவையெடுத்துமொழிகின்றான் ... *

(இதன்பொருள்.)

அப்படிப்பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்தவுடனே விஷ்ணுவானவர்சீக்கிரத்தில்எழுந்து திருவடிக்கமலங்களுக்குவந்தனஞ்செய்து அவருடையதிவ்வியகிருபையைப்புகழ்ந்து அர்க்கியமுதலியபூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து எனக்குநித்திரையினால்வந்தவினையைநீக்கி அருள்செய்ய வேண்டுமென்றார் எருக்கம்பூமாலையைத்தரிக்கின்ற சுவாமியாலவர்இவைகளைச்சொல்லத்தொடங்கினார்—என்றவாறு. (உரு)

வாசிமகமேமுதன்மகம்பலசெய்தாலும் ... ... *
பாசமகலாதவினைபற்றறுதலெண்ணித் ... ... *
தேசுமிகுதென்றிசைசெறிந்தருணைதன்னிற் ... *
பூசைபுரிவிட்டுவினைபோகுமுனையென்றான் ... *

(இதன்பொருள்.)

ஒருவன்றனக்குண்டாகியபாசவினையைநீக்கும்படியாகநினைத்துஅசுவமேதமுதலியபல்யாகங்களைச்செய்தாலும் அதுபோகாது, ஆனபடியினாலேசோதிமயமாகியதெற்குத்திசையில் விளங்காநின்றஅருணாசலத்திற்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினையானதுபோகும் என்றார்பரமசிவன்—என்றவாறு. (உசு)

நாறுபொழிலந்நகருநாமும்வடிவொன்றே ... ... *
வேறலவதன்பெருமைவேதமுணராதால் ... ... *
நீறுபுனையோகியர்களீவிர்பலர்தொண்ணூற்... ... *
றாறுபிரமாவதிலருச்சனைபுரிந்தீர் ... ... *

(இதன்பொருள்.)

வாசனையுடையசோலைகள்சூழ்ந்த அந்தஅருணாசலத்திற்கும் எமக்கும்வடிவும்ஒன்றுதான்பேதமன்று. அதனுடையபெருமையை வேதங்கள்கூட அறியாதுகள் விபூதியைமுக்கியமாகத்தரிக்கின்ற யோகியர்களும் விஷ்ணுக்களாகிய நீங்கள்பலரும்தொண்ணூற்றாறு பிரமாக்களும் அந்தஸ்தலத்தில்பூசைசெய்தீர்கள்—என்றவாறு. (உஎ)

மூற்றிழையுரோகணிமுலைக்கிடையின்மூழ்கா ... *
மற்றவிருபத்தறுவர்வாழ்வையுமறந்தான் ... ... *
கற்றைமதிதக்கனுடல்கன்றுறச்சபித்தான் ... ... *
அற்றமதியப்பதியிலத்துயரொழித்தான் ... ... *

(இதன்பொருள்.)

சந்திரனானவன் நன்றாகவேலைதீர்ந்த ஆபரணங்களையுடைய ரோகணியினது ஸ்தனங்களினுடைய போகத்தை விரும்பி மற்றை இருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளை மறந்து விட்டான்,

அதை முன்சொன்ன இருபத்தேழு பெண்களுக்கும் தகப்பனாகிய தக்கன்கேள்விப்பட்டு எல்லா நாயகிகளின்மீதும் விருப்பம் வைக்காது ஒருத்திமேல் மாத்திரம் வைத்ததனால் அவனுடல் குன்றிப்போகக்கடவதென்று சபித்தான், அந்தச்சாபத்தையடைந்த சந்திரன் அந்த அருணாசலத்தில்வந்து அந்தத்துன்பத்தை நீக்கிக்கொண்டான் — எ-று. (௨௮)

நினைப்பளவின்முத்தி தருநீணகாதிற்போய் ... *
மனக்குறை தவிர்த்திடுதியென்றிறைமறைந்தா ... *
னனற்கிரியைநாடியரியத்திசையிணண்ணிச் ... *
சுனைக்கமலவாசமிகுசோணகிரிகண்டான் ... *

(இதன்பொருள்.)

நினைத்தமாத்திரத்தில் முத்தியைக்கொடுக்கின்ற அருணாசலமென்கிற அந்தஸ்தலத்திற்குப்போய் மனக்குறையை நீக்கிக்கொள்ளென்று சுவாமிமறைந்தார். விஷ்ணுவானவர் அக்கினிவடிவாகிய மலையைத்தியானஞ்செய்து அதுவிளங்குந் தெற்குத்திசையை யடைந்து சுனையிலிருக்கிற தாமரைப்புட்பத்தினது வாசனைமிகுந்த அந்த ஸ்தலத்தைக்கண்டார் — என்றவாறு. (௨௯)

ஈசர்வடிவானமலைகண்டினிதிறைஞ்சித் ... *
தேசுமிகுநன்னகர்செறிந்துமகிழ்வாகி ... *
வாசவதடத்திடைபடிந்துவலமாகிப் ... *
பூசனைபுரிந்துவினைபோயமலனானான் ... *

(இதன்பொருள்.)

மலையுருவமாகியசுவாமியைத்தரிசித்து அஃபோடெணிந்து பிரகாசம்பொருந்திய அந்தஸ்தலத்திற்குப்போய்ச் சந்தோஷத்தையடைந்து இந்திரதீர்த்தத்தில முழுகிக் கிரிபிரதட்சணஞ்செய்து பூசைசெய்து கொண்டுவர, தம்முடையவினைநீங்கி விஷ்ணுவானவர் பரிசுத்தரானார்.

மேவியருணைப்பதியின் மிக்கபுகழ்மாயன் ... *
பாவமகல்வித்திடுபலத்தினையுரைத்துத் ... ... *
தாவியயில்பாகமுறைசோணகிரிநாத ... ... *
னாவியின்மகிழ்ச்சியையு நான்முகனுரைப்பான் ... *

(இதன்பொருள்.)

மிகுந்தபுகழையுடைய விஷ்ணுவானவர் அருணாசலத்திற்குப்போய்த்தம்முடைய பாவத்தை நீக்கி அவர் அடைந்தபலத்தைப் பிரம்மாவானவர் சனகரிஷிக்குச்சொல்லிப் பார்ப்பதியானவள் ஒருபுறத்தில்வாசஞ்செய்கின்ற அருணாசலேசுரர் புழுகுபூனையினாலே அடைந்த சந்தோஷத்தையும் சொல்லத்தொடங்கினார் — என்றவாறு. (௩௰)

பதினோராவது
பாவந்தீர்த்தசருக்கம் — முற்றுப்பெற்றது.
ஆ திருவிருத்தம் — ௬௱௭௮.

சிவமயம்.

புளகாதிபசருக்கம்.

(எழுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.)

உருவுபலவேறுபுனை புளகனெனு மோரசுர னொருபொழுதி னாவிவடிவாம், அருணகிரிமீதுலவி யரியபுழுகேசிதறி யதிகபலமாய வனியோர், வெருவவிமையோர்முனிவ ரொருவரொழியாதழிய வினை புரிகையாலவரெலாம், கருணைமலைபாலிமைய மலையமலை பாகருறை கயிலைமலை மேவிமொழிவார்... ... ... ✻

(இதன்பொருள்.)

நினைத்தபடி வெவ்வேறே உருவங்களைஎடுத்துக்கொள்ள வல்லமை பொருந்திய புளகனென்னும் ஓரசுரன் ஒருநாள் புழுகுபூனைஉருவத் தையடைந்து செவ்வியநிறத்தையுடையஅந்தமலையின்மேல் உலாவிக் கொண்டு புழுகைசிதறியபடியால் சுவாமியினாலே அதிகபலத்தைப் பெற்றுப்பூமியிலுள்ளவர்கள்பயப்படவும், தேவர்கள்முனிவர்களெல் லாரும் துன்பப்படவும், துன்கிர்த்தியம் செய்வதினாலே அவர்களெ ல்லாரும் இமவற்பருவதராஜனுடைய புத்திரியாகிய பார்ப்பதியை ஒருபாகத்தில்வைத்தருளிய கருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்த ருளியிருக்கின்ற கைலாயகிரிக்குப்போய்ச் சொல்வார்கள்—எ-று.(க)

புளகனெனுமோரசுரன்மிருகவடிவாகிவதை புரியவுலகேழுமுறை போய், விளைதுயரமாயினர்களெனவுரைசெய் தாரவர்கள் விமலன வனோமிபுகல்வா, னளவின்மணமானபுழு கருணைகிரிமீதுதவியதிகப லமாய்மருவினா, னெளிதிலழி யானவனு மினியகதியேறவுமை யிடா லையிலேறவிடுவோம்... ... ... ✻

(இதன்பொருள்.)

புளகனென்னும் ஒருஅசுரனானவன் புழுகுபூனைவடிவங்கொண்டு ஏழுலகங்களிலும்முறையேபுகுந்து சீவராசிகளையும் வதைசெய்ய, அ தனாலேஎல்லாரும்துன்பத்தைஅடைந்தார்களென்று வந்தவர்கள்சொ ல்லிக்கொள்ளப் பரமசிவனானவர் அவர்களோடுதிருவாய்மலர்ந்தருளு வார். மணம்வீசுகின்ற அளவில்லாதபுழுகைநமதுருவமாகியஅருணாச லத்தில்சிதறியதனாலேஅதிகபலத்தையடைந்திருக்கிறான். அப்படிப்ப ட்டவன் எளிதில் அழியமாட்டான். ஆனபடியினாலே அவனைமோட்ச த்தில் அடைவித்து உங்களைத்துக்கசமுத்திரத்தில் நின்றும் கரையே ற்றுவோம்—என்றவாறு. (உ)

மேவுமெனவோதியருளோடுபுளகாதிபனைவேதமுதல்கூறியவுணா, நாவிவடிவாகியவு னைவிடுவோமெனவு நாவிவடிவான்மொழிகுவான், பாவையொருபாகரரு ளையபுராதன பராபரவிலோசனகுளா, ஏவ லெளியேன்மொழியுமாறுதவேனுவிலறவனீரடியின்மீதுதொழுதே.

(இ-ள்.) நீங்கள் உங்களிடத்திற்குப்போய்ச் சேருங்களென்று விடைகொடுத்தருளி, மிகுந்தகிருபையோடு புளகனென்னும்அந்தஅசுரனை வேதமுதலாகிய பரமசிவன்அழைத்து அசுரனே புழுகுபூனைவடிவத்தைக்கொண்ட உன்பிராணனைவிடுவென்று சொல்லியஅளவில் அந்தஅசுரன்சொல்லுவான், பார்ப்பதியையொருபாகத்திற்கொண்டருளியவரே, கிருபைக்குஇடமாயிருக்கிறவரே, பழைமையானவரே, பராபரமாகியவரே, நெற்றிக்கண்களையுடையவரே, உமக்கு ஏவல்செய்தற்குரிய எளிமையன்கேட்டுக்கொள்ளுகிற வரத்தைக்கொடுத்தருளுமென்று சுவாமியினுடைய இரண்டுதிருவடிகளுக்கும் வந்தனஞ்செய்துசொல்லுவான்—என்றவாறு. (௩)

எனதுகிளையாமிருக முனதுதிருமேனிபுக வினியபுழுகாலுமொருபேர், புனைகவெனவேபரவியுயிர்விடலுநாவிகதி புகுதவிறையோனருளினன், மனமுருகியேமுனிவ ரிமையவர்கண் மானிடர்கண்மதிமுடியின்மேலணியவே, அன்வரதமான்மதமுமிமசலமுமாலயம தருவியெனவேபெருகுமே... ... ... *

(இ-ள்.) நானெடுத்த உருவமாகிய புழுகுபூனையினதுமரபினால் உண்டாகின்ற புழுகானது உம்முடையதிருமேனி ஏற்றுக்கொள்ளவும், அதனால் புழுகணியிறைவனென்று ஒருநாமத்தைநீர்தரித்துக்கொள்ளவும், அருள்செய்யவேண்டுமென்றுவணங்கி, நாவியுயிர்விட்டவுடனே அந்தஅசுரன் கதிசேரும்படி சுவாமி அனுக்கிரகஞ்செய்தார். அப்படி அவனைரக்ஷித்ததுகண்டு முனிவர்களும், தேவர்களும், மனிதர்களும், மனவுருக்கத்தையடைந்து சந்திரனைத்தரித்தசுவாமியினது சிரசில் புழுகுகாப்புச்சாத்த எப்போதும் அந்தப்புழுகு கரைந்துபனிநீரோடு சுவாமியினுடைய ஆலயமானது அருவியையுடையதாகப் பெருகிஓடும்—என்றவாறு. (௪)

புழுகுபனிநீர்களப மணுவளவதேனுமிறை புனையும்வகையாலுதவினோர், விழிகுளிரநாடியர னிணையடிகளேபரவி வினவினர்கள் வீடுபெறுவா, ருழைமருவுபாணியினர் சரிதமிதுவாகுமென வுவகையுடனேயுரைசெய்தான், மொழியுமலராலனைய முனிவருடனேசனகமுனிபுகழ்விேனாடுதொழுதான்... ... ... *

(இ-ள்.) புழுகும்பனிநீரும்கூட்டுவர்க்கச்சந்தனமுமாகிய இவைகளில் அணுவளவாவதுசுவாமியானவர்ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்களும் கண்கள்களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமியினது திருவடிகளைவணங்கி அவர்சரித்திரத்தைக் கேட்டவர்களும் மோட்சத்தையடைவார்கள். மானைக்கரத்தில்வைத்தருளிய பரமசிவனுடைய திவ்வியசரிதமிது வாகுமென்று சந்தோஷமாய் அந்தப்பிர்ம்மாவானவர்சொன்னார், அப்படிச்சொல்லிய பிர்ம்மாவைச சனகரிஷியானவர் முனிவர்களோடு ஸ்தோத்திரஞ்செய்துவணங்கினார்—என்றவாறு. (௫)

(கலிவிருத்தம்.)

அஞ்செழுத்தும்வாழிவாழி யருணைவாழியருணையான் *
கஞ்சமுற்றசரணம்வாழி கருணைவாழிகருணைபோன்...*
மஞ்சுபெற்றவானம்வாழி வையம்வாழிவையமேற் ... *
றஞ்சமுற்றநீறும்வாழி சைவம்வாழிவாழியே... .. ...*

(இ-ள்.) பாவங்களைப்போக்குகிறதற்குக்காரணமாயிருக்கிற பஞ்சாட்சரமானது வாழ்கவாழ்க, —அருணாசல ஸ்தலம்வாழ்க,—அருணாசலேசுரருடைய தாமரைமலர்போன்ற திருவடிகள்வாழ்க,—அந்தச்சுவாமியினுடைய கிருபையானதுவாழ்க, — அக்கருணைபோன்ற அழகாகிய மேகவருஷிம்வாழ்க,—பூலோகம்வாழ்க,—பூமியில் உயிர்களுக்குப்பற்றுக்கோடாகிய திருநீறும்வாழ்க,—சைவசமயமானது வாழ்கவாழ்க,—என்றவாறு. (௬)

ஞானம்வாழிநன்மைவாழி நாமராஜநீதிசீர்... ....*
தானம்வாழிதர்ம்மம்வாழி சரதவேதமாகமங்............*
கானம்வாழிகல்விவாழி கற்றறிந்தகேள்வியன்... ......*
யானபேர்கள்வாழிமீச னடியர்வாழிவாழியே ....*

(இ-ள்.) ஞானம்வாழ்க,— நன்மையானதுவாழ்க,— நாடும்இராஜனும் அவனுக்குரியநீதியும்கீர்த்தியும்தானமும்வாழ்க,—தருமம்வாழ்க,— உண்மையாகியவேதமும் ஆகமங்களும்வாழ்க,— சங்கீதம்வாழ்க,—மற்றவித்தைகளும்வாழ்க,—அவைகளைக்கற்றறிந்தும் கேள்விப்பட்டும்யாவரிடத்தும் அன்புஉண்டானவர்கள்வாழ்க,— பரமசிவனது அடியார்கள் வாழ்கவாழ்க,—என்றவாறு. (௭)

[அறுசீரடி ஆசிரியவிருத்தம்.]

இக்கதைபடித்தோர்கேட்டோரெழுதினோரெழுதிவைத்தோர்*
மைக்கடல்சூழ்ந்தவிந்த வையகமுழுதுங்காத்துத்............*
தக்கசந்தானபோகசௌவுக்கியந்தழையவாழ்ந்து............*
திக்கருணேசரன்பாற் சிவபதம்பெறுவர்தாமே ....*

(இ-ள்.) இந்தஅருணாசலத்தின் மாஹாத்மியத்தைப் படித்தவர்களும், கேட்டவர்களும், எழுதினவர்களும், எழுதிவைத்துக்கொண்டவர்களும், கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும்காத்துத் தகுந்தபுத்திரசம்பத்தும், போகசவுக்கியமும் தழையும்படியாகவாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசுரர்கிருபையினாலே சிவபதம்அடைவார்கள்—என்றவாறு. (௮)

பன்னிரண்டாவது
புளகாதிபசருக்கம்—முற்றுப்பெற்றது.
ஆக திருவிருத்தம்—௫௱௮௬.

அருணாசலபுராணம்—முற்றுப்பெற்றது.

பெகாமணிய ம செரு ஷிநிய

விருரும [illegible] நப டாருபபக

ளரெகளூதன் பொசுக கடமக

கஞசாவூர திலலா கிரு

ஷைவயாறரஜகாமூாகுா அழுவா

சிகலவட குரெதநவிவிருரு மமு

துருமாபணடாரி கலனெ

ஜமபுமபெருசபுண பாககாக

புமயிபபபுமவிபடிலசக

ருடபுசெலுதிஅலபுகிலமெசிரி

மாதிசைய ஙகளைபகுயெமுதி

அனுபயிவிகமயபவைபுயதிர

அருணாசல + ராா

ணமஉ

யிதநா